1929

JL
Y59211Pm211,
N22PR.
N29.8
212722

செப்பனிடுபவர் பெயர் K. ...

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் செப்டம்பர் '97

செப்பனிட்டு முடித்த நாள் 1/97

சரிபார்க்கும் ஆராய்ச்சி

மு. பணி உதவியாளர்

கையொப்பம் கையொப்பம்

3/2/97

JL
Y5924.P m21, N22PR
N29.8.5

997

REGD. NO. M. 2146

OFFICE OF THE REG... No. 19 FEB 1929

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

"திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது"

Vol. VIII.] ஜனுவரி 1929 [இலக்கம் 9

## பஞ்சாங்கம்.

1929 | விபவ௵ மார்கழி௴ | ஜனுவரி௴ | விபவ௵ தை௴ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 மார்கழி. 19 | 2 20 | 3 21 | 4 22 | 5 23 |
| 6 24 | 7 25 | 8 26 | 9 27 | 10 ● அமா. 28 | 11 29 | 12 1 |
| 13 2 | 14 3 | 15 4 | 16 5 | 17 6 | 18 7 | 19 8 |
| 20 ✻ கார். 9 | 21 10 | 22 11 | 23 12 | 24 ○ பௌர். 13 | 25 14 | 26 15 |
| 27 16 | 28 17 | 29 18 | 30 19 | 31 20 | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## பத்திராதிபர் குறிப்புகள்.

நமது பத்திரிகை அன்பரான சகலருக்கும் புதுவருஷ வாழ்த்துதல் அனுப்புகிறோம். இப் புதுவருஷம் சகல விதத்திலும் பாக்கியமுள்ள வருஷமாயிருப்பதாக.

இப்பத்திரிகைக்கு இதை எழுதும்போது நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி இன்னும் சுகவீனமாயிருப்பதாக அறிகிறோம். ஆனால் சுகமடைந்து வருவதற்கேற்ற பல குறிப்புகள் காணப்படுவதாக வைத்தியர்கள் கூறுகின்றார்கள். மகாராஜாவைச் சுகப்படுத்த எடுத்துவரும் முயற்சிகள் கொஞ்சமல்ல. உலகத்தில் பிரபல வைத்தியர்களும் தேவையான மருந்து எந்த வகையிலும் எந்த தேசத்திலிருந்தாலும் அவையெல்லாம் அனுப்பப்பட்டு கையாடி வருகின்றனர். 12 வைத்தியர்களுக்கு மேலே அவரைக் கவனித்துவருகிறார்கள். ராஜகுமாரரும், பல தேசங்களிலிருந்து வந்து சேர்ந்தனர். இன்னும் ராஜா சுகமாகி எழுந்து நடமாட பலநாட்கள் செல்லும் உலக முழுவதும் ராஜாவை நினைத்து செய்த ஜெபங்களை கடவுள் பார்த்து இதுவரை சுகமளித்தார். இப்புதுவருஷத்தில் ராஜா சீக்கிரம் சுகமடைந்துவர இன்னும் கடவுளை வேண்டிக்கொள்ளுவோம்.

கடந்த மாதத்தில் கல்கத்தாவில் காங்கிரஸ் மகாநாடு கூடி பல தீர்மானங்களைச் செய்தார்கள்.

சைமன் கமிஷன் இன்னும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுய ஆளுகையைப்பற்றிய பேச்சு அதிகம் நடக்கின்றது. ஆனால் எந்தவகையில் அதைக் கேட்பது என்பது நமது தேசத்தலைவர்களுக்கு இன்னும் சரியாய்ப் புலப்படவில்லை. அதினால் பல கட்சிகளும் ஏற்பட்டுவருகிறது. சுயராஜ்யம் நமக்கு அவசியம்தான். ஆனால் அதற்கு கூடேயுள்ள அறிவின்மை, சாதிவேற்றுமைகளை ஒழிக்க நமது தேசத்தின் தலைவர்கள் முதலாவது முயற்சிப்பது நன்மை.

நமது பத்திரிகைக்கு புதுவருஷ வாழ்த்துதல் அனுப்பியிருக்கும் மகா-ா-ா ஸ்ரீ ராவ்பகதூர் K. P. ஜனார்த்தனராவ் சூப்பிரண்டு துரையவர்களுக்கும்; நமது நாட்டின் நண்பரும் நமது பத்திரிகையை ஆதியில் துவக்கினவருமான சங்கை லார்பீயர் துரையவர்களுக்கும், நமது பத்திரிகையின் மானேஜரவர்களுக்கும் எமது அன்பார்ந்த வந்தனமளிக்கின்றோம்.

புது வருஷத்தில் நமது நாட்டில் புதுக்காரியங்களை எதிர்பார்ப்போம். முன்னில்லாதபடி பள்ளிக்கூடங்களில் அதிகமான ஆண்களும் பெண்களும் படிக்கும்படி பிரயாசப்படுவோம். பஞ்சாயத்தாரும் உபாத்திமாரும் அதிக சிரத்தை எடுத்துவருவோம். அதிகாரிகளும் இது பஞ்சாயத்தார் உபாத்திமார்மட்டும் கவலைப் படட்டும் என்று விட்டுவிடாமல் பல இடங்களில் அவர்களுக்கிருக்கும் கஷ்டங்களை அறிந்து தங்களால் இலகுவில் செய்யக்கூடிய காரியங்களைக் கையாடினால் பள்ளிக்கூடங்கள் இன்னும் அதிகம் விருத்தியடைந்துவரும் என்று தெளிவாகக் கூறலாம். ஆகவே எல்லாரும் ஒருமித்து நமக்குக்கிடைத்த பெரிய சிலாக்கியத்தை இழந்துபோகாமல் பிரயோஜனப் படுத்த கடவுள் புத்தியையும், பெலனையும் உற்சாகத்தையும் தந்து வழிநடத்துவாராக.

---

## சங்கை L. L. லார்பீயர் துரை அனுப்பும் புதுவருஷ செய்தி

கள்ளர் நாட்டிலுள்ள பிரிய சிநேகிதரே,

பள்ளிக்கூட மாணாக்கர் தங்கள் சிலேட்டுப் பலகைகளை சுத்தப்படுத்துவதுபோல புதுவருஷத்தில் நாமும் புதிய ஜீவியம் துவக்கவேண்டும். புதிதாக சிலேட்டுப் பலகைகளில் எழுதுவதை நினைக்கும்போது ஒரு பெரிய குருவின் வார்த்தைகள் என் மனதிற்குவருகிறது. "நீங்கள் சிறுபிள்ளைகளைப் போலாகாவிட்டால் முக்தி ராஜ்யத்தில் நுழைய முடியாது" என்பதே.

சிறுபிள்ளைகள் தினந்தோறும் வளருகிறார்கள். கள்ளர்நாட்டில் படிப்புவிஷயத்தில் நல்ல வளர்ச்சியைப் பார்க்கிறோம். அதைப்போலவே ஆத்தும வளர்ச்சிக்குரிய உண்மை, யோக்கியம், பிறருக்குதவி புரிதல் முதலிய காரியங்களிலும் வளரவேண்டும்.

சிறுபிள்ளைகளுக்கு சாதிவேற்றுமை கிடையாது. அவர்கள் எல்லாப்பிள்ளைகளோடும் விளையாட ஆயத்தமாயிருக்கிறார்கள். நமது நாடும் ஒரே ஐக்கியமுள்ள பெரிய குடும்பமாயிருப்பதாக. பிரிவினை உண்டாக்கும் காரியங்களையும், சாதிக்குரிய சண்டைகளையும் நீக்க முயலுவோம்.

சிறுபிள்ளைகள் சில சமயங்களில் சிறு சண்டைகள் போட்டுக்கொண்டாலும் உடனே அவைகளை மறந்து மறுபடியும் விளையாட்டுத் தோழர்களாகிவிடுவார்கள்.

நமது நாட்டிலுள்ள பெரியவர்களும், முந்தினவருஷத் தவறுதல்களையும், பகைகளையும் சுத்தப்படுத்தி புதுவருஷத்தில் புதுமனதோடு துவக்குவார்களாக.

சிறுபிள்ளைகள் தங்கள் பெற்றோரை நம்புவார்கள். தங்கள் தாய், தகப்பன் கையிலிருக்கும்போது அவர்களுக்கு பயம் தெரிகிறதில்லை. அதுபோலவே பெரியவர்களாகிய நாமும் பயப்படாதபடி இருக்க நமது பரம தகப்பனை கடவுளின் பாதுகாக்கும் கரத்தை நம்புவோம்.

நாம் சிறுபிள்ளைகளை நமது வீடுகளில் பாதுகாத்து படிப்பித்துவருகையில் அவர்களும் நாம் நல்ல சிநேகிதரும், பகையை மறக்கிறவர்களும், கடவுளாகிய பரம தகப்பனை நம்புகிறவர்களுமாயிருக்க நமக்குப் படிப்பிப்பார்களாக.

இப்புதுவருஷத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்வதினால் வரும் சந்தோஷத்தால் நீங்கள் ஒவ்வொருவரும் நிறைந்திருப்பீர்களாக.

உங்கள் சிநேகிதன்,

யல். யல். லார்பீயர்,

திண்டுக்கல்.

---

## மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் K. P. ஜனார்த்தனராவ் அவர்களின் வாழ்த்துதல்.

இந்திரகுலத் தேவமார்களே,

எட்டாவது தடவையாக உங்களுக்குப் புதுவருஷ வாழ்த்துதல் அனுப்புவது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத்தருகிறது.

உங்களுடைய சீர்திருத்தத்திற்காக உழைக்கும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்ததைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். மேலும் இராஜாங்கத்தார் உங்கள் முன்னேற்றத்திற்காக எடுத்துக் கொள்ளும் பிரயாசங்களில் நீங்கள் பெரும்பாலும் ஒத்துழைப்பது அதிலும் அதிக சந்தோஷத்தைத் தருகிறது. நீங்கள் சீர்திருத்திக் கொள்ளாத இன்னும் சில காரியங்கள் உண்டு. அக்குறைகளை நீக்கி, பஞ்சாயத்தார் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு கடைசியாக ஒழுங்குள்ள பிரஜைகளாகும்படி முயற்சிப்பது உங்களுடைய கடமையாகும்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளின் படிப்பு விஷயமாய் இன்னும் அதிகமான சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். இதர ஜாதியார் கட்டாய கல்விக்கு சர்க்கார் உதவிக்காக அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போது, அக்கல்வி உங்களுக்குக் கொடுக்கப்பட்டது. உங்கள் அதிர்ஷ்டமல்லவா? இப்படியிருக்க ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காய் போகிறார்களா இல்லையா என்று சில பஞ்சாயத்தார் கவனியாமலிருப்பது மிகவும் விசனமான காரியம். இது விஷயமாய்ப் பெற்றோர்களுக்குப் பாடங் கற்பிக்க வேண்டி, சில பஞ்சாயத்தார்கள் அபராதம் விதித்திருக்கிறார்கள். இக்காரியம் திரும்பவும் செய்யப்படக் காரணமிராதென்று நம்புகிறேன்.

சென்ற எட்டு வருஷங்களாக நன்றாய் காரியங்களை நடப்பித்து அரசாங்கத்தாரையும் பொது ஜனங்களையும் உங்களுடைய உத்தம குணங்களால் திருப்தி செய்து வந்திருக்கிறீர்கள். இதேவிதமாக நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து எல்லாரையும் திருப்தி செய்வீர்களென்று நம்புகிறேன்.

நீங்கள் செய்யும் எல்லாக் காரியங்களிலும் சித்தியடையும்படி உங்களை மறுபடியும் மனமார வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

K. P. Janarthana Rao,
Supdt Kallar Reclamation,
Madura.

---

## நமது பத்திரிகையின் மானேஜர் சங்கை R. A. டட்லிதுரை அனுப்பும் புதுவருஷ செய்தி.

இவ்வருஷத்தில் கள்ளர் நாட்டோடு சம்பந்தப்பட்டிருக்கிற நம்மெல்லாருக்கும் நமது நாட்டிலூடே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ரயில் பாதைக்காக நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். அதோடு நமது நாட்டின் சில பாகத்தில் நல்ல வெள்ளாமைக்குரிய அடையாளங்கள் காணப்படுவதற்காகவும் நன்றியாயிருக்கவேண்டும்.

கள்ளர் நாட்டு இன்னவர்கள் தங்களைச் சுற்றிலுமுள்ள வகுப்பாரைப்போலவும் அதற்கு அதிகமாகவும் சகல விதத்திலும் முன்னேற்றமடையவேண்டுமென்பதே என் பெரிய வாஞ்சை.

உங்கள் பெண்பிள்ளைகளுடைய படிப்பைப் பற்றி நான் அதிகக் கவலையுடையவனாயிருக்கிறேன். பெண்பிள்ளைகள் படிப்புக்காக ஏற்படுத்தியிருக்கும் பாடசாலையை அதிகமாக உபயோகப்படுத்தி வருவீர்களென்று நம்புகிறேன். இதுவே உங்கள் முன்னேற்றத்திற்கு பெரிய அடையாளம். 1929 வருஷம் முந்தின வருஷங்களைக்காட்டிலும் கள்ளநாட்டிற்கு அதிக நல்ல வருஷமாயிருப்பதாக.

R. A. டட்லி,
திருமங்கலம்.

---

# நோட்டீஸ்.

"போதனாமுறை பரீட்சை எல்லா கிரேடுகளுக்கும் 1929-ம் ௵ மார்ச்சு ௴ 25-ம் ௳ நடக்கும். கவர்ன்மெண்டார் முன் குறித்த 1929-ம் ௵ மார்ச்சு ௴ 19-ம் ௳யை மாற்றி 1929-ம் ௵ மார்ச்சு ௴ 25-ம் ௳ என்று குறித்திருக்கின்றார்கள். இந்த மாறுதலைக் கவனிக்கவும்."

R. MICHAEL,
Head Master.

---

## உத்தமபாளையம் ஸ்டேஷன் வாய்க்கால்பட்டி இந்திரகுலத்தேவமார் புதுப்பாடசாலை திறப்பு விழாவின் கொண்டாட்டம்.

1928-௵ ஆகஸ்டு ௴ 26-௳ ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கனம் பொருந்திய மதராஸ் லேபர் கமிஷனர் S. H. சிலேட்டர் C.M.G., C.I.E., I.C.S. துரையவர்கள் வாய்க்கால்பட்டிக்கு வருவதாய் அறிவிக்கப்பட்டிருந்தது. பாதைகளெல்லாம் செப்பனிடப்பட்டு பள்ளிக்கூடத்தின் முன்னிலையில் சிங்காரக் கொட்டகைகள் போடப்பட்டு, பற்பல தோரணங்கள் பச்சை இலைகளால் ஜோடிக்கப்பட்டிருந்தது. அவருக்கென்று சிங்கார மேடையொன்று பலவித வர்ணக்காகிதத்தாலும், கதப்பனைச் சரங்களாலும், பேரீஞ்சுகளாலும், பாக்குச் சரங்களாலும், தேங்காய் குலைகளாலும், வாழை மரங்களாலும் வெகு விமரிசையுடன் ஜோடிக்கப்பட்டு பார்த்தவர் மனதைக் கவரத்தக்கதாய் இருந்தது. பற்பல இடங்களிலிருந்தும் ஆண், பெண், பிள்ளைகளோடு பற்பல பள்ளிக்கூடப் பிள்ளைகளும், உபாத்திமார்களும் வந்து, பொழுது விடிய ஆவலாய்க் காத்திருந்தார்கள். குறித்த நேரத்தில் உத்தமபாளையத்தை விட்டு கனம் லேபர் கமிஷனர் துரையவர்கள், நமது கனம் சூப்பிரண்டெண்டு துரையவர்களோடு புறப்பட்டு வழியிலே எதிர்கொண்டிருந்த பள்ளிக்கூடப் பிள்ளைகளையும், ஜனங்களையும் பார்த்து அதிகச் சந்தோஷப்பட்டுக்கொண்டார். மேளதாளத்துடன் அழைத்து வந்து அவருக்கென்று அமைத்திருந்த சிங்கார மேடையில் கனம் லேபர் கமிஷனர் துரையவர்களும், நமது கனம் சூப்பிரண்டெண்டு துரையவர்களும், ஆசனத்தில் அகமகிழ்ச்சியோடு அமர்ந்தனர். இன்னும் பற்பல இடங்களினின்றும் அநேக உத்தியோகஸ்தர்களும் வந்து இறங்கினார்கள். அவருக்கென்று தயாரித்த பூமாலைகளும், ஜரிகைமாலையும், பஞ்சாயத்தார்களிடம் அதிக ஆவலுடன் வரவேற்றுக்கொண்டார்கள். பின்பு வாய்க்கால்பட்டி கள்ளர்ஸ்கூல் பையன்களால், கடவுள் வாழ்த்துப்பாடி 2—வது, சீர்திருத்தத்தைப் பற்றி ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் தயார்செய்த பாட்டைப் பாடினார்கள். 3வது ராயப்பன்பட்டி கள்ளர் பெண் பாடசாலைப்பிள்ளைகள் கும்மி, கோலாட்டம், வெகு விமரிசையுடன் அடித்துக்காட்டினார்கள். 4வது ஷை பள்ளிக்கூட விஷயத்தைப் பற்றியும், புதுக்கட்டிட செலவு விஷயத்தைப்பற்றியும், ஷை பள்ளிக்கூடத்தை திறந்து, பிள்ளைகளுக்கும், கட்டிடத்திற்கும் ஒத்தாசை செய்யும்படியாக, பஞ்சாயத்துமெம்பரான து. நல்லுத்தேவரால் அட்ரெஸ் வாசிக்கப்பட்டது. 5வது, கனம் லேபர் கமிஷனர் துரையவர்கள் எழுந்து புதுப்பள்ளிக்கூடத்தை திறந்து பார்த்து அதிகச்சந்தோஷப்பட்டு, ஷை யூர் பள்ளிக்கூடத்திற்கும் மற்றுமுள்ள பிரமலைத் தேவமார்களுக்கும் இன்னும் கூடிய மட்டில் ஒத்தாசை செய்வதாக வாக்களித்தார். 6வது, ஷை பள்ளிக்கூடப்பிள்ளைகளால் ராஜ வாழ்த்துப்பாடி கூட்டம் முடிவு பெற்றது.



கனம் லேபர் கமிஷனர் துரையவர்கள் இங்கு வர நமக்கு இத்தனை பெரிய சிலாக்கியமளித்ததற்கும், பிரமலைத் தேவமார்களுக்காக தளரா முயற்சியுள்ள கனம் சூப்பிரண்டெண்டு துரையவர்களுக்கும் எங்கள் கிராமம் முழுமையும் கைகூப்பி நமஸ்கரிக்கின்றது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

R. Alagarsamy Naidu,
Head Master,
Kallar Elementary School,
Vaikalpatti, Uttamapalayam Range.

---

## சரீரசுகம்.

நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுது கேட்கும் முதற்கேள்வி "க்ஷேமமா?" என்பதே. எவர்க்கேனும் கடிதம் எழுதும்போதும் நம் க்ஷேமத்தை அவர்களுக்கு அறிவிக்கவும் அவர்கள் க்ஷேமத்தை நாம் அறியவும் விரும்புகிறோமன்றோ? உபசாரத்தின் பொருட்டோ, கவலையின் நிமித்தமோ, நாம் இவ்வாறு இன்னும் செய்து வருகிறோம். க்ஷேமம் விசாரிப்பது பெரும்பாலும் வழக்கத்தையும் உபசாரத்தையும் பொருத்த விஷயமாக இருக்கிறது. இவ்விசாரணையால் தேகசௌக்யம் எவ்வளவு முக்கியமும் அவசியமும் அருமையுமானது என்பது நன்குவிளங்கும்.

தேக ஆரோக்கியமே நன்னடக்கைக்குக் காரணமாக இருக்கிறது. திடசரீரமுள்ளவனுக்கே தெளிந்த புத்தி, பெருந்தன்மை, தைரியம், சந்துஷ்டி, யோக்கியம் முதலியன உண்டு. அன்றியும் அவனே விடாமுயற்சியை ஆதாரமாகக்கொண்டு எடுத்த காரியத்தை முடிக்க வல்லவன். தேக வலி இல்லாதவனுக்கோ ஊக்கம் குறைந்து ஏக்கம் மிகுந்து, தீராச் சந்தேகியும் சந்துஷ்டி இல்லாதவனுமாகி, அற்ப காரியங்களிற் பிரவேசிப்பான்.

நோயாளிக்கு இடம், பொருள், ஏவலாகிய எவ்வளவு இருப்பினும் அவற்றால் உண்டாகும் இன்பத்தை அநுபவிக்க அவனால் முடியாதனால், அவன் உடையோனாயினும் வறியனே ஆவன். சுக சரீரமுடையவனே தன் சொந்த வேலையைச் செய்யவும், பிறர்க்கு உதவிபுரியவும் கூடும். நோயற்ற வாழ்வினும் பெரும் பேறு வேறொன்றுமில்லை. ஆயினும், நிழலின் அருமை வெயிலில் சென்றபின்பே நன்குணர்வோர்போன்று, அநேகர், தன் சுகம் குன்றிய காலத்தில்தான், ஆரோக்கியத்தின் அருமையை அறிந்துணர்கின்றனர்.

சிலர் வியாதிகளைப் பிதிரார்ஜிதமாகவும், மாதிரார்ஜிதமாகவும் (அதாவது பெற்றோர் வழிப்) பெறுவதுண்டு. இப்பெற்றோரும் பால்யத்தில் கெட்டழிந்தே வியாதி சம்பாதித்தவர்கள் என்றறிக.

செல்வவான்கள் சோம்பேறித்தனத்தினாலும் பணமிகுதியினாலும், ஏழைகள் வறுமையினாலும், அதனால் நேரும் முட்டுப்பாட்டாலும் கண்டகண்ட இடங்களில் குடியிருந்தும், தகாத அன்னங்களைப் புசித்தும், உரிய காலத்தில் நித்திரைசெய்யாமலும், எண்ணெய் தேய்த்துக் கொள்ளாமலும், க்ஷௌரம்பண்ணிக்கொள்ளாமலும், பேதிமருந்து, வாந்திமருந்து, அம்மை குத்திக்கொள்ளல் முதலிய சரீர சௌக்யத்திற்கேற்ற விதிகளைக் கவனியாமலும் வியாதியில் வீழ்கின்றனர்.

சுகாதார விதிகளை மீறிநடப்பதே நோயுறுவதற்கு முக்கிய காரணம். வெள்ளம் வருவதற்கு முன்னரே அணை கோலிவையாமல் அது பெருகியபின்பு அணைபோடப் பிரயத்தனம் செய்வது அறிவீனமன்றோ? சுகமற்றுத் துன்புறுவதற்கு உண்மைக்காரணம் தெரியாமல் அது விதிவசத்தால் வந்ததென்றும், கண்கெட்ட பாழான தெய்வத்தின் குரூரச் செய்கையென்றும் கூறுகின்றனர், இது முற்றிலும் தவறு. தம்முயற்சிக்கே தெய்வம் துணைசெய்யும். மனிதர்கள் தம் மதிக்குறைவாலும் சொந்தத் தவறுதல்களாலுமே நோயால் பிடிக்கப்படுகின்றனர்.

எல்லா நோய்களையும் அண்டவொட்டாமல் தடுக்க எவராலும் இயலாதெனினும், தேக சௌக்யத்தைக் காப்பாற்றிக்கொள்ளுதற்குத் தகுதியான பலவகையை யாவரும் தெரிந்துகொண்டால் நம்மாலியன்றவரை நோய்களைத் தடுக்கலாமன்றோ? இவ்வாறு தடுக்கப் பலவழிகள் உண்டு. அவற்றுள் சில வருமாறு:—

(1) தரைமட்டத்திற்குத் தாழ்வாயிராததும், தண்ணீர் ஊறித் தங்காததும், காற்றோட்டமுள்ளதும், அசுத்தமாகிய குப்பை முதலியவற்றால் சூழப்படாததும், வருஷத்திற்கிருமுறை வெள்ளையடிக்கப் பட்டதும், தரைகளையும் செங்கல்தரைகளையும் பசுவின் சாணங்களைக்கொண்டு மெழுகியதுமான வீட்டை வசிப்பிடமாகக் கொளளல்வேண்டும்.

(2) தேசத்திற்கும், காலத்திற்கும் ஏற்ற ஜீரணிக்கத்தக்க சுத்தபோஜனத்தையும் அழுக்கில்லாத தெளிந்த நீரையும் அருந்தவேண்டும்.

(3) திரேகத்தில் அழுக்கேறாதபடி தேய்த்துக் குளித்தும், மாசிலா உடைதரித்தும், தீண்டத்தகாத பொருள்களைத் தீண்டாமலுமிருக்கவேண்டும்.

(4) பகற்பொழுதும், அந்திப்பொழுதும், தூங்காமல் ஜாமத்துறங்கி வைகறையிற் றுயிலெழவேண்டும்.

(5) ஜீரணக்கருவிகள் தத்தம் வேலையைச் சரிவரச் செய்யுமாறு உடம்பு வேர்த்துக் களைக்க வேலைசெய்யவும், சுத்த வாயு உள்ள இடத்தில் ஓடி விளையாடவும் வேண்டும்.

(6) ஆறுமாதத்திற்கு ஒரு முறை வாந்தியாகும்படியும் நான்கு மாதத்திற்கொருமுறை பேதியாகும்படியும் மருந்துண்ண வேண்டும்.

மேற்கூறியபடி தம்மாலியன்றளவு வியாதிகளைத் தடுத்தும், நோயணுகுமாறுலும், அஜாக்கிரதையினாலும், அறியாமையினாலும் தாமே வலியத் தேடிக்கொண்ட நோயாலும், உடனே நோயாளிகள் நோயின் நிலைமையைச் சிறிதும் ஒளியாமல் உள்ளபடியே வைத்தியருக்குக் கூறி அவர் விதிக்கும் பத்தியத்தையும், ஔஷதத்தையும் விசுவாசத்துடன் உள்கொண்டு நோய்களை விலக்கவேண்டும், இவ்வாறு ஒழுகினால் சுகசரீரியாக வாழலாமென்பது திண்ணம். நோய்க்கிடங்கொடேல், என்னும் முதுமொழி நோக்கத்தக்கது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், என்பதனால் நோயுற்றவர் வாழ்வு நிறையுற்றதாயினும் குறைவுற்றதே யென்பதும், நோயற்ற வாழ்வு வறுமையுற்றதெனினும் அதுவே குறைவில்லாத பெருஞ் செல்வ வாழ்க்கையாமென்பதும் நன்குவிளங்கும். சுபம்.

T. பழனிக்குமாரு உபாத்தியாயர்,
பெருமாள் கவண்டன்பட்டி.

## சாந்தம்.

இப்பூவுலகின்கண் மகாத்மாக்களிடத்தில் மேன்மையும் தாழ்மையும் ஒன்றோடொன்று வெகு இங்கிதமாய் கலந்திருப்பதை நாம் வெகு சுலபமாய்க் காணலாம். எப்படி எனில், இவ்வுலகில் சாந்தகுணமுள்ளவர்கள் அநேகர் உண்டு. அவர்கள் எல்லோரினும் மேலானவர் நமது இயேசு ஒருவரே.

எப்படியென்றால், நமது இரக்ஷகர் இப்பூவுலகில் அவதாரபுருஷனாய் வந்திருந்தபோது, சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று (மத். 5-ல்) அவர் திருவாய் மலர்ந்ததும், அதன்படியே மகா தாழ்மையும் சாந்தமும் உள்ளவராய் பூலோக செல்வம் அனைத்தும் அவர் கால்மாட்டில் இருந்தும், வான சேனைகள் அனைத்தும் அவர் சொற்படி செய்ய தயாராய் இருந்தும், ஒருதரம் அவருடைய சிஷர்களாகியயாக்கோபும் யோவானும் சமாரியா நாடொன்றில் தீப்பிடிக்க விரும்பினபோது அதைத் தடுத்தும், தான் சத்துருக்களால் பிடிபடும்போது தன் சிஷனாகிய பேதுரு ஒருவனை காதற வெட்டினபோது அதைத் தடுத்து அச்சத்துருவின் காதைசொஸ்தமாக்கினதும், சத்துருக்கள் தன்னைச் சூழ்ந்துநின்று தன்னை நிந்தித்தபோது மௌனமாய் இருந்ததற்கும் காரணம் யாதெனில், இப்பூவுலகிலுள்ள யாவரும் அப்பாதையைப் பின்பற்றும் காரணத்திற்காகத்தான் அவர் சாந்தம் என்னும் சமுத்திரத்தில் மூழ்கினவராக மௌனமாய் இருந்தார்.

தொட்ட வழக்கை விடாதே, வழக்கிழந்து மானம் கெடாதே. குற்றம்செய்து குட்டுப்பட்டால் குறையேயல்ல. பொறுத்துக்கொள்க என்றும் உலகம் சொல்லும். ஆனால் நமது இரட்சகர் சொல்வது அப்படியல்ல. நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு என்றும், நீங்கள் தீமைசெய்து பாடுபடாமல் நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரியமாய் இருக்கும் என்கிறார்.

சகோதரர்களே, சாந்தம் சமுத்திரத்திலும் பெரிது என்று சொன்ன பிரகாரம் நாமும் தேவனுடைய பார்வையில் சாந்தத்தையும் தாழ்



மையையும் போர்வையாக அணிந்துகொள்ளக் கடவோம். அப்படியில்லாமல்சிற்றின்பஉல்லாசங்களில் பிரியம்கொண்டு பெருமையென்னும் இறக்கைதட்டி உயரப்பறக்க விரும்புவோமானால் நாம் நம்பின் எண்ணத்திற்குமாறாக கீழான பாதாள அக்கினி லோகம் அடைவோமென்பது திண்ணம்.

ஆகையால் கடவுள் நம்மை எந்த நிலைமையில் வைத்திருக்கிறாரோ அதுவே மேலான நிலைமை என்று நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறவர்களாய் இருக்கக்கடவோம். நாம் ஒவ்வொருவரும் நமக்குத் தாழ்ந்தவர்களை தயவாய் நடத்துவதும், அவர்களுக்கு இன்சொல் சொல்பவர்களாயும் இருப்பதே சாந்தகுணமுள்ளவர்களின் முக்கிய லக்ஷணம். ஆனால் களவு கிடையாவிட்டால் இன்னொருவர் பொருள் வேண்டாமென்று சொல்லுவது போல ஆண்மையில்லாதபடியால் சாந்தமாய் இருக்கிறான் என்று உலகத்தவர் சொல்லுவார்கள்.

ஆனால் சாந்தனான ஒருவனுக்கு மற்றவர்கள் துன்பம் வருவித்தாலும் அவனுடைய குணம் கெடுகிறதுமில்லை, மற்றவர்கள் கிரியையேனும் நடத்தையேனும் அவன் கெடுத்து உரைப்பதுமில்லை, தன்னை நிந்திப்பவர்களுக்கும் கூட மெதுவாய் மறுமொழி சொல்லி, அவர்களையும் சமாதானப்படுத்துவான்.

ஒரு பறவை, உயரப்பறப்பதற்கு அதற்கு இறக்கை எவ்வளவு தேவையோ அதுபோலவும், ஒரு மரம் செழித்து ஓங்கி வளர்வதற்கும் பூமியில் அம்மரம் அனேக நாள் நீடித்திருப்பதற்கும் அதற்குவேர் எவ்வளவு தேவையோ, அதுபோலவும்,

ஒரு மனிதன் உத்தமனாகி இம்மையில் இன்பத்தையும் மனச்சமாதானத்தையும் மறுமையில் மோக்ஷத்தையும் அடைவதற்குக் காரணம் தாழ்மை என்னும் சமுத்திரத்தில் மூழ்கி, அன்பென்னும் போர்வையால் மூடி, சாந்தம் என்னும் இறக்கைதட்டி உயரப் பறக்கவேண்டும்.

சாந்தனான கிறிஸ்தவனுக்குச் சமானமான பாக்கியம் இவ்வுலகில் வேறு யாது உளதோ? சகோதரர்களே, இதை வாசித்து கவனிக்கும்போது, நமது நெஞ்சம் பிளந்து, நமது இருதயம் சாந்தம் என்னும் சமுத்திரத்தில் மூழ்கினவர்களாய் இவ்வுலகத்தில் வசித்து இருக்கும்படி, தேவன் நமக்குக் கிருபைசெய்வாராக.

நாம் எல்லோரும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாக அணிந்துகொள்ளக்கடவோம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

P. John Periaprumal Thevar,
Kallar School teacher,
Thamminaiakanpatty.

---

## நமது காருண்ய கவர்ன்மெண்டார் நீடூழிவாழ்க

## சூது விரும்பேல்

முதறிவாளர் சில விளையாட்டுக்களை சூதென வகுத்து அதை விலக்காக கொண்டிருக்கின்றனர். அவற்றுள் சூதாட்டம் ஒன்று. சூது என்பது வஞ்சகம். அது பிறரை வஞ்சிக்கும் நெஞ்சங் கொண்டு ஆடும் விளையாடல்களில் அனைத்திற்கும் பொதுப் பெயராய் வழங்குகிறது.

சூதாடுவோன் பிறரை வஞ்சித்து, அவன் பொருளைக்கவர ஆவலுடையவனாகிறான். சூதாடுவோன் பெரும்பாலும் மற்ற துர்க்குணங்களுக்கும் ஆளாவான்.

சூதாடுவோன் தன் சொந்தக்காரியம் இருந்தாலும் விட்டு விட்டு சோம்பித்திரிவான். சூதாடி, நளன் நாடு நகரங்களையும் மனைவி மக்களையும் பிரிந்து போக நேரிட்டதல்லவா? நாம் அதைப் படித்திருக்கிறோமல்லவா? மேலும் பஞ்சபாண்டவர் காட்டிற்கு பன்னிரண்டு வருஷம் சென்று பின் வந்ததாக நாம் படித்திருக்கிறோமல்லவா?

நமது காருண்ய கவர்ன்மெண்டார் மூன்று அல்லது நான்கு வீட்டிற்கொரு பள்ளிக்கூடங்களை கட்டிவைத்தும், நமது இந்திரகுல மக்களை சரிவர அனுப்பமுடியவில்லையே, மற்றைய ஜாதிப்பிள்ளைகளுக்கு நமக்குச் செய்த உபகாரம் செய்தால் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கும். கடக்கென்று மாதாமாதம் நண்பன் ஒருவன் ஊரெங்கும் உலாவிவருகிறான். அதை கவனித்து இனியாவது நம் பெண்மக்களையும் ஆண்மக்களையும் தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புமாறு கோருகிறேன்.

எல்லாம் வல்ல இறைவன் துணை.

K. Kuthalam Pillai,
Kallar school master,
Kadirnarasingapuram.

## 1929-வருஷத்திற்கு கள்ளர் ஸ்கூல்களின் விடுமுறை நாட்களின் ஜாபிதா.

| விபரம். | நாட்கள். | தேதி. |
|---|---|---|
| பொங்கல் .... | 1 | 14—1—1929 |
| மஹா சிவராத்திரி ... | 1 | 9—3—29 |
| தெலுங்கு வருஷப்பிறப்பு... | 1 | 10—4—29 |
| தமிழ் வருஷப்பிறப்பு | 1 | 13—4—29 |
| ஸ்ரீ ராம நவமி .... | 1 | 18—4—29 |
| ஈஸ்டர் விடுமுறை | 6 | 28—3—29 முதல் 2—4—29 முடிய |
| சூரிய கிரஹணம் ... | 1 | 9—5—29 |
| சக்கரவர்த்தி பிறந்த நாள் | 1 | 3—6—29 |
| ஆவணி அவிட்டம் | 2 | 20, 21—8—29 |
| கோகுலாஷ்டமி .... | 1 | 28—8—29 |
| மஹாளய அமாவாசை | 1 | 2—10—29 |
| சரஸ்வதி பூஜை உள்பட தசரா விடுமுறை | 9 | 5 to 13/October 29 |
| தீபாவளி .... | 1 | 31—10—29 |
| தர்பார் தினமும் வைகுண்ட ஏகாதசியும் | 1 | 12—12—29 |
| ஆருத்ரா தரிசனம் | 1 | 17—12—29 |
| கிறிஸ்மஸ், புதுவருஷப் பிறப்பு—விடுமுறை | 10 | 24—12—29 முதல் 2—1—1930 முடிய. |
| உள்ளூர் பண்டிகைகள் .... | 5 | |
| சனிக்கிழமைகள் .... | 52 | |
| ஞாயிற்றுக் கிழமைகள் .... | 50 | |

குறிப்பு.—அடியிற்கண்ட விசேஷ நாட்கள். சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் வருகிறபடியால் அவைகள் மேலே குறிக்கப்படவில்லை.

போகி—பொங்கல் பண்டிகைகள்—12 & 13 ஜனுவரி 1929—சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை.

தை அமாவாசை 9—2—29—சனிக்கிழமை.
பங்குனி உத்திரம் 24—3—29—ஞாயிற்றுக்கிழமை.
விநாயக சதுர்த்தி 7—9—29—சனிக்கிழமை.
தர்பார் தினமும், வைகுண்ட ஏகாதசியும் ஒரேநாளில் வருவதால் (12—12—29) ஒருநாள்தான் லீவு விடப்பட்டிருக்கிறது.

உள்ளூர் பண்டிகைகளுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சூப்பிரிண்டெண்டெண்ட் துரையவர்களிடம் முன்னமேயே உத்தரவு வாங்னபின்தான் பள்ளிக்கூடம் மூடவேண்டும். அப்படி வாங்கின உத்தரவை மேர்பார்க்கும் அதிகாரிகள் கேட்கும்போது காண்பிக்கவேண்டும்.

2 நாட்களுக்கு மேற்பட்டு பள்ளிக்கூடம் மூடப்பட்டதையும் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டதையும் குறிக்கும் வழக்கமான ரிப்போர்ட்டுகளை மகா-ள-ள-ஸ்ரீ சூப்பிரிண்டெண்டெண்ட் துரையவர்களுக்கும், சம்பந்தப்பட்ட மேற்பார்க்கும் உத்தியோகஸ்தருக்கும் அனுப்பவேண்டும்.

(Sd.) K. P. Janardhana Rao,
சூப்பிரண்டெண்டெண்ட், கள்ளர் ரிக்ளமேஷன்.

அமெரிக்கன் மிஷன் "லிஙக்ஸ்" பிரஸ், பசுமலை, 1929.

1454

REG. NO.-M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

" கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப்பிரியம்."

10 MAR 1929

Vol. VIII. ] பெப்ருவரிமீ 1929 [ இலக்கம் 10

## பஞ்சாங்கம்.

1929 | விபவஞு தைமீ — பெப்ருவரிமீ — விபவஞு மாசிமீ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 தை 21 | 2 22 |
| 3 23 | 4 24 | 5 25 | 6 26 | 7 27 | 8 28 | 9 ● அமா. 29 |
| 10 1 | 11 2 | 12 3 | 13 4 | 14 5 | 15 6 | 16 ※ கார். 7 |
| 17 8 | 18 9 | 19 10 | 20 11 | 21 12 | 22 13 | 23 ○ பௌர் 14 |
| 24 15 | 25 16 | 26 17 | 27 18 | 28 19 | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். எ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ சையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## சுகத்தைக் காப்பாற்றும் வழிகள்.

1. சுகமான வழக்கங்களை உண்டாக்கிக் கொள், சுகமில்லாத வழக்கங்களைத் தள்ளு.

2. தேக சௌக்கியம், பெரும் பாக்கியம்.

3. சுகமில்லாத வழக்கங்கள், கடவுள் கொடுத்த பாக்கியத்தைக் கெடுக்கும்.

4. ஜலம் தேகத்தைச் சுத்தி செய்யும், சுவாசாசயத்தைக் காற்று சுத்திசெய்யும் ஆனதால் நல்ல காற்று சுவாசி.

5. வெளிச்சமும் காற்றுமுள்ள வீடுகளில் குடியிரு, உன்முகம் மலர்போல் பிரகாசிக்கும்.

6. குப்பை அழுகிய வஸ்துக்கள் இல்லாமல் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள், சுக்கவின் உபத்திரவமிராது.

7. காற்றுள்ள இடத்தில் தூங்கு. சுத்தமான காற்று சுவாசிப்பதால் நோயின்றி வாழ்வாய்.

8. நீடித்து சுவாசி, உன் வாழ்நாள் பெருகும். நல்ல ரத்தம் உண்டாகும். ஆகாரம் நன்ருய் ஜீரணிக்கும்.

9. சுத்தமான தண்ணீர் குடி. அல்லது கொதிக்கவைத்துக்குடி.

10. தூங்கி எழுந்தவுடனும், படுக்கைக்குப் போகுமுன்னும் ஒரு டம்ளர் ஜலம்குடி.

11. சாப்பிடுமுன் ஜலம் குடி, ஆகாரம் உட்கொள்ள.

12. நன்ருய் சமைத்த ஆகாரம் சாப்பிடு, உன் யந்திரங்கள் தயாராயிருக்கும்.

13. அதிகமாயாவது, குறையாகவாவது சாப்பிடாதே, இவ்விரண்டும் நோயுண்டாக்கும்.

14. மிதமாக சாப்பிடு.

15. விசனத்துடன் சாப்பிடாதே.

16. வேளை தவறி சாப்பிடாதே.

17. ஒரு ஆகாரம் சாப்பிட்டு மறு ஆகாரம் சாப்பிடும்வரை இடையில் சிற்றுண்டி சாப்பிடாதே. அதிக வேலையால் ஜீரணக்கருவி கெடும்.

18. குளிர்ச்சியான ஆகாரம் சாப்பிடாதே.

19. நன்ருய் மென்று சாப்பிடு, விழுங்குமுன் ஆகாரத்தை ருசிபார்த்து சாப்பிட்டால், நீ சாப்பிட்டதையே எப்பத்தால் ருசி பார்க்க நேரிடாது.

20. கால், கை, வாய், நன்ருகக் கழுவி, பின் சாப்பிடு, நோய் அணுகாது.

21. டீ, காபி, கோகோ ஆகாரமில்லை, சூடாகவும், மிதமாகவும் குடி, மிதமிஞ்சினுல் நோயுண்டாகும்.

22. தேகாப்பியாசம் செய், தலை நிமிர்த்து, அடி வயிறு உள் தள்ளியும் வேகமாய் நட, ரத்தம் ஓடி சுத்தமாக்கும்.

23. இரவில் 8-மணி நேரம்தூங்கு. குறைந்த தூக்கமும், தூக்கமின்மையும் நோயுண்டாகும்.

24. அறை மூலையில் தலைவைத்துத்தூங்காதே. சுவாசித்த கெட்ட காற்றை திரும்ப சுவாசிக்கும்படி முகத்தை மூடித்தூங்காதே. அப்படி செய்தால் தலைவலி, மயக்கம், ஜலதோஷம் உண்டாகும்.

25. மதியம் சாப்பிட்டபின் தூங்காதே. மிதமிஞ்சின ஆகாரத்தாலும், அசௌக்கியத்தாலும் ஏற்படுகிறதென்று காட்டும் குறி தெரிந்து நட.

26. தேகம், வஸ்திரம் சுத்தமாக வைத்துக் கொள்.

27. பிறர் கட்டிய வஸ்திரம் கட்டாதே.

28. தெருக்களிலும், நடபாதைகளிலும், மலஜலபாதைக்கு இராதே.

29. ஜனங்கள் உபயோகிக்கும் தண்ணீரை கால் கழுவி அசுத்தம் செய்யாதே.

30. தெருக்களிலும், பாதைகளிலும் துப்பாதே.

31. வெளியில் போய், வீட்டிற்குள் வரும் போது கை, கால், முகம் கழுவி வீட்டிற்குள் போ. இவ்வழக்கம் அநேக நோயைத்தடுக்கும்.

ஜில்லா சுகாதார ஆபீஸ், மதுரை.

15—1—29

---



## வெறிநாய் கடி.

வெறிபிடித்த நாய் கடித்தால் அதன்மூலம் மிகவும் பயங்கரமான வியாதி சம்பவிக்கும். அதற்கு வைத்தியமே கிடையாது. அது வந்தால் கஷ்டப்பட்டு மடியவேண்டியதைத்தவிர தப்ப வழி இல்லை. ஆனல் நாய் கடித்தாலும் கூட அந்த வியாதி உண்டாகாமல் தடுத்துக் கொள்ள சுலபமான வழி இருக்கிறது. நாய் கடித்த உடனேயே தாமதியாமல் ஆஸ்பத்திரிக்குப்போய் தக்கபடி சிகிச்சை செய்துகொண்டால் இவ்வியாதி வராமல் தப்பலாம்.

நாய் கடித்தவுடன் வைத்தியம் செய்துகொள்ள குன்னூருக்கு போகவேண்டிய அவசியமில்லை. ஜில்லா பிரதான ஆஸ்பத்திரியிலும் இன்னும் மற்ற பெரிய ஆஸ்பத்திரியிலும் இந்த வைத்தியம் செய்யப்படும். ஏழைகளுக்கு இந்த ஆஸ்பத்திரிக்குப்போய் வைத்தியம் செய்துகொள்ள ரயில் சார்ஜும் வண்டி வாடகையும் இனமாக கொடுக்கப்படும். அருகிலிருக்கும் சர்க்கார் டாக்டரிடமாவது அல்லது வேறு சர்க்கார் உத்தியோகஸ்தரிடமாவது இவ்வுதவியைப் பெற்றுக்கொள்ளலாம். வைத்தியமும் இனமாக செய்யப்படும்.

### நாய் கடித்தால் செய்ய வேண்டியவை.

1. நாய்க்கு வெறி பிடித்தால்தான் தானுகவே நம்மை கடிக்கும். அப்படி கடித்தால் உடனே தக்க வைத்தியம் செய்துகொள்ள வேண்டும். தவறினுல் அந்த விஷவியாதியால் உயிரிழக்கநேரிடும்.

2. கடித்தது வீட்டில் பழகிய நாயானல் அதைப் பிடித்துக் கொல்லாமல் வீட்டிலேயே கட்டிவைக்கவேண்டும். அது பத்து நாட்கள் வரை இறக்காமல் சௌக்கியமாயிருந்தால் அது வெறி பிடித்த நாய் அல்ல. கடிபட்டவர் வைத்தியம் செய்துகொள்ளவேண்டிய அவசியமுமில்லை.

3. பத்து நாட்களுக்குள் நாய் இறந்துவிட்டால் சற்றும் தாமதியாமல் வைத்தியம் செய்துகொள்ளவேண்டும்.

4. நாய் ஓடிப்போய்விட்டாலும், அல்லது அதை கட்டிவைத்து பார்க்க முடியாவிட்டாலும் கடிபட்டவுடன் வைத்தியம் செய்துகொள்வது நலம்.

5. உடனே அருகிலிருக்கும் டாக்டரிடம் கடித்த புண்ணுக்கு வேண்டிய சிகிச்சையை செய்துகொண்டு பிறகு பெரிய ஆஸ்பத்திரிக்குப்போய் இந்த விஷநோய் வராமல் தடுக்க வேண்டிய வைத்தியத்தை செய்துகொள்ள வேண்டும்.

6. அருகில் டாக்டரில்லாவிட்டால், புண்ணை சுத்தமாய் கழுவி, பழுக்கக்காய்ச்சிய இரும்பால் சுட்டு, சுத்தமான துணியால் கட்டி விட்டு பிறகு பெரிய ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்.

### வெறிநாய் கடி நோய் வராமலிக்க வைத்தியம் செய்யப்படுமிடங்கள்.

1. குன்னூர் நாய்கடி ஆஸ்பத்திரி.
2. மதராஸ் ஜெனரல் ஆஸ்பத்திரி.
3. எல்லா ஜில்லாக்களிலும் தலைநகரிலுள்ள தலைமை ஆஸ்பத்திரிகள்.
4. நாகபட்டணம், தலைச்சேரி, கொச்சி இவ்விடங்களிலுள்ள முனிசிபல் ஆஸ்பத்திரிகள்.

---

## ஈ க் க ள்.

### நான் யார்?

எல்லா பூச்சிகளிலும் கொடியவன் நான்! மலத்திலே பிறந்து, மலத்திலே வளர்ந்து, மலத்தை உட்கொண்டு, என்கூடவே மலத்தையும் எடுத்துப்போகிறேன். நான் விருத்தியாகுமிடங்கள் கக்கூஸும், குப்பைமேடுகளுமே.

எங்கும் தாராளமாய் சென்று ஆகாரத்தில் மொய்த்து அத்துடன் மலத்தைக் கலந்துவிட்டு வருகிறேன். அந்த ஆகாரத்தை உட்கொண்டால் உங்களுக்கு வியாதியும் சாவும் சம்பவிக்கின்றன.

ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்களை இப்படி காலரா முதலிய பேதி நோய்களுக்கு நான் இரையாக்குகிறேன்.

நான் கொல்வதில் ஏழை, பணக்காரன் என்று பார்ப்பதில்லை. சிறுவர், பெரியோர் என்றும் வித்தியாசம் செய்வதில்லை.

நான்தான் ஈ.

## இவன் கொடிய சத்துரு, ஜாக்கிரதை!

ஆகாரத்தை நன்றாய் மூடிவையுங்கள்!

ஈ மொய்த்த உணவை உட்கொள்ளாதீர்கள்.

ஈக்களைக்கொன்றுவிடுங்கள்.

## இதைவிட மேலானது!

ஈக்களை விருத்தியடைய விடாதேயுங்கள்!

ஈயின் பிறப்பிடம், குப்பைமேடும், சாணிக்குழியும். அது விருத்தியாவது மலத்தில்தான்.

வீட்டிற்கருகில் குப்பை, சாணி, எரு ஒன்றையும் சேரவிடாதீர்கள்.

குப்பையைக் கொளுத்திவிடுங்கள்!

சாணியைப் புதைத்துவிடுங்கள்!

கக்கூஸ்களைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுங்கள்!

---

## அம்மை குத்திக்கொள்ளுதல்.
## நாம் செய்யவேண்டியதும், அம்மைபலிக்கும் விதமும்.

### 7 நாள் அம்மைக்கொப்புளம்.

இச்சிருமுத்தையும் வைசூரியால் உண்டாகும் கோரத்தையும் சற்று ஒப்பிட்டுப்பார்!

---

### நாம் செய்யவேண்டியது.

உடனே அம்மை குத்திக்கொள்.

குத்திக்கொண்டதும் அவசரமாய் வெய்யிலில் வீட்டிற்கு ஓடாதே.

குழந்தையை 15 நிமிஷமாவது நிழலில் வைத்திரு.

குழந்தை கையிலிருந்து அம்மைப்பால் அழிந்துபோகாமல் பார்த்துக்கொள்.

அம்மை குத்தியதால் குழந்தைக்கு ஒருவித அபாயமுமில்லை யென்பதும், அதற்காக பிரத்தியேக வைத்தியம் எதுவும் தேவை இல்லை யென்பதும் ஞாபகமிருக்கட்டும்.

அம்மைகுத்திய நாலாம் நாள் குழந்தைக்கு ஸ்நானம் செய்தலை.

அவசியமானால் 5-ம் நாள் குழந்தைக்கு விளக்கெண்ணை கொடுக்கலாம்.

அம்மை குத்தியயிடத்தை குழந்தை சொறிந்துவிடாமல் கவனித்துக்கொள்ளுதல் அவசியம்.

கையின்மேல் சுத்தமான வெள்ளைத்துணியை மேலாக கட்டி வைக்கலாம். வேறு எவ்வித மருந்தும், கட்டும் வேண்டியதில்லை.

குத்துக்கள் கொப்பளிக்கும் பொழுது கொப்பளம் உடையாமல் பாதுகாக்கவேண்டும்.

அதன்மேல் சாணியாவது, சாம்பலாவது, வேப்பிலையாவது வேறு அசுத்த பதார்த்தங்களையாவது போடக்கூடாது.

மேலே பொருக்குதட்டும்பொழுது அதை பிடுங்கி விடக்கூடாது. அது தானாகவே உலர்ந்து கீழேவிழவேண்டும்.

கொப்புளம் உடைந்து புண் பெரிதானால் கொஞ்சம் களிம்பாவது, போரிக் ஆஸிட் (Boric Acid) என்னும் பொடியாவது, போடலாம் டாக்டரிடம் காண்பிப்பது நலம். தேங்காயெண்ணெயை நன்றாய்க் காச்சி ஆறினபிறகு தடவி வைததாலும் போதுமானது.

அம்மை குத்தியவிடம் எப்பொழுதும் சுத்தமாகவும் ஈரம்படாமலுமிருக்கவேண்டும்.

குழந்தைக்கு கொஞ்சம் ஜுரம்வந்து, கைவீங்கி நெரிகட்டினால் அதற்காக பயப்படாதே. கொஞ்சநாளில் தானாகவே குணமாகிவிடும்.

அம்மை பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர் வரும்பொழுது குழந்தைக்கு அம்மை நன்றாய் பலித்திருப்பதை அவரிடம் காண்பி.

### அம்மைமுத்து கிளம்பும் விதம்.

மேற்கூறியபடி செய்தால் பின்வருமாறு அம்மை பலிக்கும்.—

2-ம் நாள்—அம்மைகுத்தியவிடம் கடுகுபோல் தடிப்பாய் காணப்படும்.

3-ம் நாள்—சிவப்பு முத்துக்கள் சிறியதாய்க்கிளம்ப ஆரம்பிக்கும்.

5-ம் நாள்—முத்துக்கள் பெரிதாகி நீர்சுரந்து கொப்பளிக்கும். கொப்பளம் நடுவில் குழிந்திருக்கும்.

8-ம் நாள்—கொப்பளம் மிகவும் பெரிதாகிவிடும். அதைச்சுற்றி தோல் சிவந்திருக்கும்.

11-ம் நாள்—கொப்புளத்துள்ளிருக்கும் ஊத்தண் மஞ்சளாகி சிழாகமாறும்.

15-ம் நாள்—கொப்புளம் வற்றி பொருக்குதட்டி விடும். பொருக்கை எடுத்துவிடாமலிருந்தால் புண் தானாகவே ஆறி உதிர்ந்துவிடும்.

20-ம் நாள்—பொருக்கு விழுந்து நேர்த்தியான தழும்பு காணப்படும்.

குழந்தைக்கு அம்மை பலித்துவிட்டது.



இனி வைசூரியால் பயமில்லை!

வைசூரிவராமல் தடுக்க அம்மைகுத்திக்கொள்வதைத்தவிர வேறுவழியில்லை.

---

## கொக்கிப்புழு வியாதி.

இந்த வியாதி உண்டாவதற்குக் காரணமும், அதைக் கண்டறியும் விதமும், அதற்கு சிகிச்சையும், அது வராமல் தடுப்பதும்.

1. வினா.—கொக்கிப்புழுக்கள் என்றால் என்ன?

விடை.—அவை சிறு புழுக்கள். அவை சுமார் அரை அங்குல நீளமுள்ளவையாயும், நூலவ்வளவு பருமம் உள்ளவையாயும் இருக்கும். சாதாரணமாய் அவை சற்று மங்கலான வெளுப்பு நிறமுடையவை. ஆனால், ரத்தம் குடித்த பிறகு கறுப்பாகவும் இருக்கக்கூடும். தலை அனேகமாய் கொக்கி வடிவமுள்ளதாக இருக்கிறது. பெண் புழு ஆண் புழுவைக்காட்டிலும் பெரிது.

2. வினா.—கொக்கிப்புழுக்கள் எங்கே வசிக்கின்றன?

விடை.—நன்றாய் வளர்ந்த கொக்கிப்புழுக்கள் மனிதர்களின் குடலில் வசிக்கின்றன. கொக்கிப்புழு குஞ்சுகள் தரையில் வாசம் செய்கின்றன.

3. வினா.—கொக்கிப் புழுக்களினால் ஏதாவது தீங்கு உண்டாகிறதா?

விடை.—ஆம், பெருத்த தீங்கு உண்டாகிறது. இந்த புழுக்கள் எந்த மனிதனுடைய தேகத்தில் இருக்கின்றனவோ அந்த மனிதன் உண்ணும் உணவைத்தின்று ஜீவிக்கின்றன. கொக்கிப்புழுக்களோ குடலின் உட்புறத்தைத் தொளைக்கடித்து இரத்தத்தை உறிஞ்சிவிடுகின்றன. இது மாத்திரமல்ல. அவை தேகத்துக்குள் விஷத்தை செலுத்தி, கொக்கிப்புழு வியாதியை உண்டாக்குகின்றன.

4. வினா.—கொக்கிப்புழு வியாதி என்றால் என்ன?

விடை.—இந்த வியாதியினால் ஜனங்கள் பலஹீனப்பட்டு சோம்பேறிகளாய் விடுகிறார்கள். அவர்களுக்கு வேலை செய்ய சக்தியிருப்பதுமில்லை, விருப்பமிருப்பதுமில்லை. இந்த வியாதி கண்ட குழந்தைகள் நன்றாய் வளருகிறதில்லை. அந்த குழந்தைகள் தங்களுடைய வயதுக்குத் தகுந்த வளர்த்தியின்றி செவ்வையாய் ஆகாரம் உட்கொள்ளாமல் மெலிந்துபோகின்றன. இந்த வியாதியினால் ஒவ்வொரு வருஷமும் இந்தியாவில் ஜனங்கள் ஆயிரக்கணக்காய் இறந்துபோகிறார்கள். அவர்களுக்கு இந்த வியாதி கண்டிராவிட்டால், அவர்கள் இன்னும் அனேக வருஷகாலம் உபயோகமுள்ள குடி ஜனங்களாக ஜீவித்திருந்திருப்பார்கள். இந்த வியாதி நூற்றுக்கணக்கான வருஷங்களாய் இருந்திருக்கிறது. ஆனால் சில வருஷங்களுக்கு முன்புதான் அதற்கு சிகிச்சை இன்னதென்று தெரிந்தது. இந்தியா உட்பட, இவ்வுலகத்தின் பற்பல பாகங்களில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு சமீபகாலத்திலே இந்த வியாதிக்காக சிகிச்சை செய்யப்பட்டது.

5. வினா.—இந்தியாவில் அனேகருக்குக் கொக்கிப்புழு வியாதி கண்டிருக்கிறதா?

விடை.—ஆம் அது இந்தியாவில் வெகு சாதாரணமாய்க் காணுகிறது. அதனால் அதிக துன்பமும் தரித்திரமும் உண்டாகின்றன. தென் இந்தியாவிலே காலுக்குப் பாதரட்சையில்லாமல் நடக்கும் ஜனங்களில் நூற்றுக்கு 95 பேர் கொக்கிப்புழுக்களினால் வருந்துவதாக தோற்றுகிறது. அனேகமாய் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இந்த வியாதி காணுகிறது. பல பாடசாலைகளில் சகல மாணவர்களுக்கும் சகல உபாத்தியாயர்களுக்கும் இந்த வியாதி இருப்பதாக தெரியவருகிறது. கொக்கிப்புழுக்கள் வயது வந்தவர்களையும், குழந்தைகளையும் வாதிக்கின்றன. வாஸ்தவத்தில் இந்தியாவில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த வியாதி உண்டாகக்கூடும்.

6. வினா.—இதர தேசங்களிலுள்ள ஜனங்களுக்கு கொக்கிப்புழு வியாதி காணுகிறதா?

விடை.—ஆம் ஸிலோன், சைனா, பெடரேடெட் மலே நாடுகள் (Federated Malay States), எகிப்து, தென் சமுத்திரத்தீவுகள் (South Sea Islands), கிழக்கு இந்தியத் தீவு (East Indies), மேற்கு இந்தியத் தீவு (West Indies), ஆகிய நாடுகளில் இது வெகு சாதாரணமாய்க் காணுகிறது. ஜப்பான், ஆஸ்திரேலியா, மெக்ஸிகோ, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, தென் ஐரோப்பா ஆகிய நாடுகளிலும்கூட இது சாதாரணமாய்க் காணுகிறது.

7. வினா.—ஜனங்களுக்கு இந்த வியாதி எப்படி உண்டாகிறது?

விடை.—(a) சாதாரணமாய், இந்த வியாதிகண்ட மனிதர்களின் மலத்தினால் அசுத்தமாக்கப்பட்டிருக்கும் பூமியில் பாதரட்சை இல்லாமல் நடப்பதனாலும்,

(b) சில வேளைகளில், பச்சையாயிருக்கும் அல்லது சமைக்கப்படாமலிருக்கும் உணவைப் புசிப்பதனாலும்,

(c) சில வேளைகளில் கொக்கிப்புழு குஞ்சுகள் உள்ள தண்ணீரை குடிப்பதனாலும் இந்த வியாதி உண்டாகிறது.

8. வினா.—இந்த புழுக்கள் எப்படி மண்ணில் வந்து சேருகின்றன?

விடை.—நன்றாய் வளர்ந்த கொக்கிப்புழுக்கள் மனிதர்களுடைய குடலில் வசிக்கின்றன. பெண் புழுக்கள் அங்கே முட்டையிடுகின்றன. முட்டைகள் குடலுக்குள் இருக்கும்போது குஞ்சுபொரிக்கமுடியாது. ஆனால், மனிதர்கள் ஒவ்வொரு தடவை மலம் கழிக்கும்போதும் அந்த முட்டைகள் வெளியே தரையில் வந்து சேருகின்றன. தரை அதிக குளிர்ச்சியாயும் ஈரமாயும் நிழலுள்ளதாயும் இருந்தால், 12 மணி நேரமுதல் 60 மணி நேரத்துக்குள்ளாக முட்டையிலிருந்து சிறு புழுக்குஞ்சுகள் வெளிப்படுகின்றன. அதிநுட்பமாயும் கண்ணுக்குத் தெரியாமலும் இருக்கும் இந்த புழுக்குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்ட இடத்திலுள்ள மண்ணிலும் புல்லிலும் இலைக

ளிலும் வாசம் செய்கின்றன. வயது வந்தவர்களும் குழந்தைகளும் இந்த தரையின்மேலும் புல்லின்மேலும் இலைகளின்மேலும் நடக்கும்போது, இந்த சிறிய குஞ்சுகளின் மேலும் காலை வைத்து நடக்கிறார்கள். அப்போது அந்த புழுக்கள் பாதத்தில் ஒட்டிக்கொண்டு தோலைத் துளைத்துக்கொண்டு உள்ளே போகின்றன. அந்தப்படி துளைத்துக்கொண்டு போவதனால் "சேற்றுப்புண்" என்னும் ஒரு வகையான விசேஷ அரிப்பு உண்டாகிறது. இந்த புழுக்கள் முதலில் தோலுக்குள் புகுந்து பிறகு குடலில்போய்ச்சேருகின்றன. அங்கே அவை சுமார் ஆறு வாரகாலத்துக்குள் நன்றாய் வளர்ந்து முட்டையிட ஆரம்பிக்கின்றன.

9. வினா.—இந்த புழுக்கள் ஆகாரத்தில் எப்படி வந்து சேருகின்றன ?

விடை.—சிறு புழுக்கள் அழுக்குபடிந்த தரையில் பயிரிடப்படுகிற அல்லது போட்டுவைக்கப்படுகிற மாம்பழங்கள், சிக்குரு என்னும் கீரை சர்க்கரைவள்ளிக்கிழங்கு, தக்காளிப்பழம் பச்சைக் கரும்பு முதலியவைகளைப்போன்ற காய்கறி வகைகளிலாவது பழங்களிலாவது ஒட்டிக்கொண்டு அவை பச்சையாய்ச் சாப்பிடப்படும்போது தேகத்துக்குள் போய்விடுகின்றன. ஆனால், மேலே சொல்லப்பட்ட வஸ்துக்கள் சமைக்கப்பட்டிருந்தாலும் சுத்தமான நிலத்தில் பயிரிடப்பட்டிருந்தாலும் அவைகளை யாதொரு பயமும் இல்லாமல் சாப்பிடலாம்

10. வினா.—இந்த புழுக்கள் தண்ணீரில் எப்படி வந்து சேருகின்றன?

விடை.—பலத்த மழை பெய்யும்போது இந்த புழுக்கள் கைபிடிசுவர் முதலிய கட்டிடமில்லாத கிணறுகளிலாவது, ஊற்றுகளிலாயினும், தண்ணீர்க் குழிகளிலாயினும் அடித்துக்கொண்டுவந்து சேர்க்கப்படக்கூடும். ஜனங்கள் இந்த தண்ணீரைக் குடிக்கும்போது அந்த புழுக்களையும் விழுங்கிவிடுகிறார்கள்.

11. வினா.—பெரும்பாலும் எந்த வழியாக இந்த வியாதி மனிதர்களுக்குக் காணுகிறது ?

விடை.—தோலின் வழியாகவே இந்த வியாதி பெரும்பாலும் மனிதர்களுக்கு உண்டாகிறது.

12. வினா.—தரையின் மேலாவது தண்ணீரிலாவது ஆகாரத்தின் மேலாவது இந்த முட்டைகளும் சிறுபுழுக் குஞ்சுகளும் இருப்பதை நாம் பார்க்கமுடியுமா?

விடை.—முடியாது. முட்டைகளும் சிறுபுழுக்களும் வெறுங்கண்ணால் பார்க்கமுடியாதபடி அவ்வளவு சிறியவையாகும். ஆயினும், அவைகளை நன்றாய்ப் பெரிதாக்கிக்காட்டும் பூதக்கண்ணாடி மூலமாய் பார்க்கக்கூடும்.

13 வினா.—கொக்கிப்புழுக்கள் குடலில் விருத்தியாகின்றனவா?

விடை.—இல்லை. குடலில் இருக்கும் ஒவ்வொரு கொக்கிப்புழுவும் தோலைத் துளைத்துக்கொண்டு உள்ளே போயிருக்கவேண்டும் அல்லது தண்ணீர் அல்லது ஆகாரத்துடன் விழுங்கப்பட்டிருக்கவேண்டும்.

14. வினா.—கொக்கிப்புழுக்கள் தரையில் விருத்தியாகின்றனவா ?

விடை.—இல்லை. தரையின்மேலுள்ள ஒவ்வொரு சிறு கொக்கிப்புழுவும் குடலிலிருந்து வெளியே வந்த முட்டையினின்றும் பொரிக்கப்பட்டது. இந்தப் புழு மனிதர்களுடைய தேகத்துக்குள் செல்லாவிட்டால்; காலக்கிரமத்தில் இறந்துபோய்விடும். ஆனால் அது தரையில் பல மாதகாலமும் தேகத்தில் பல வருஷகாலமும் ஜீவித்திருக்கும்.

15. வினா.—கொக்கிப்புழு வியாதியின் அடையாளங்கள் என்ன ?

விடை.—(a) வியாதி மும்முரமாயிராதபோது, வெளிப்படையான வியாதி சின்னங்கள் எவையும் இராதிருக்கக்கூடும். ஆனால், புழுக்கள் மிகக்கொஞ்சமாயிருந்தாலுங்கூட, அதனால் கெடுதி உண்டாகும்,

(b) வியாதி மும்முரமாய் இருக்கும்போது, தலைவலி, தலைசுற்றுதல், அஜீரணம், பலஹீனம், வேலை செய்யவோ விளையாடவோ சக்தியில்லாதிருப்பது போன்ற அநேக குறைகள் தோன்றுகின்றன. தோலும் மயிரும் அநேகமாய் உலர்ந்திருக்கும். கண் இமைகளின் உட்புறம் அதிகமாய் வெளுத்திருக்கும். குழந்தைகள் வளருவதில்லை. அவர்கள் பள்ளிக்கூடத்தில் சீக்கிரம் பாடம் கற்றுக்கொள்ள முடிகிறதில்லை அவர்கள் அடிக்கடி குப்பை, கரி, சாம்பல், பச்சரிசி, இறகு முதலிய வஸ்துகளைத் தின்ன மிகவும் பிரியப்படுகின்றனர். வயது வந்தவர்கள் அநேகமாய் வேலைசெய்ய முடியாதவர்களாகி, மற்றவர்கள் தருமத்துக்குக் கொடுப்பதைக்கொண்டு ஜீவிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

(c) இந்த வியாதி அதிக மும்முரமாய் இருக்கும்போது, பெரும்பாலும் நோயாளியின் தேகம் அதிகமாய் வீங்கிவிடுகிறது அல்லது மெலிந்துபோகிறது. இந்தியாவில் இந்த வியாதியினால் அநேக ஜனங்கள் வருஷாவருஷம் இறந்துபோகிறார்கள்.

16. வினா.—ஒருவருக்கு இந்த வியாதி இருக்கிறதா என்று எப்படி அவர் தெரிந்துகொள்ளக்கூடும்?

விடை.—உனக்கு இவ்வியாதி இருக்குமோவென்று சந்தேகமிருந்தால் உனது மலத்தில் கொஞ்சம் எடுத்துப் போய் அருகிலிருக்கும் சர்க்கார் டாக்டரிடம் காண்பித்தால் அவர் அதை பரிசோதித்துப் பார்த்து உனக்கு கொக்கிப்புழு நோய் இருக்கிறதா இல்லையாவென்று சொல்லிவிடுவார்.

இவ்வியாதியைப்பற்றிய விஷயங்களெல்லாம் சென்னை மவுண்டுரோட் 81-வது நம்பர் கொக்கிப்புழு ஆபீஸுக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம். மலத்தைப் பரிசோதித்துச் சொல்ல அருகில் டாக்டரில்லாவிடில் இந்த ஆபீஸுக்கு மலத்தை அனுப்பினால் பரிசோதித்து சொல்லப்படும்.

17. வினா.—இம்மாதிரி பரிக்ஷை செய்வித்துக்கொள்வதற்கு செலவு ஏதாகிலும் உண்டா ?



விடை.—இல்லை. அது முற்றிலும் இலவசமாகவே செய்யப்படும்.

18. வினா.—கொக்கிப்புழு வியாதிக்கு யாராகிலும் சிகிச்சை செய்துகொள்ள முடியுமா ?

விடை.—(a) முடியும். மற்ற வியாதிகளைப் பார்க்கிலும் இந்த வியாதிக்கு சிகிச்சை செய்துகொள்வது மிகவும் சுலபம். இந்த வியாதியை ஒழிக்க முயற்சி செய்யப்பட்டுவரும் ஜில்லாவில் ஒருவர் வாசம் செய்துகொண்டிருந்தால், அவர் கொக்கிப்புழு வியாதிக்காக ஏற்பட்டிருக்கும் டிஸ்பென்ஸரிகளில் (ஔஷதசாலைகளில்) ஒன்றுக்குப் போகவேண்டும். அங்கிருக்கும் டாக்டர் பரிக்ஷை செய்து பார்த்து, மருந்து கொடுக்கவேண்டியிருந்தால் நோயாளி எவ்வளவு மருந்து சாப்பிட வேண்டுமென்பதைச் சொல்வார். டாக்டர் உடனே மருந்து கொடுத்து, அதற்கு அடுத்தாற்போல மருந்து கொடுத்து வருவதற்கு ஏற்பாடும் செய்வார்.

(b) இந்த மருந்து சாப்பிட விரும்புகிறவர்களுக்கெல்லாம் அநேக கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளிலும் டிஸ்பென்ஸரிகளிலும் லோகல்பண்ட் ஆஸ்பத்திரிகளிலும் இலவசமாய் மருந்து கொடுக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறது. ஆகவே, சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குப்போய் அங்கிருக்கும் வைத்திய உத்தியோகஸ்தரிடத்தில் இந்த மருந்து ஏதாகிலும் இருக்கிறதா என்று கேளுங்கள். அவரிடத்தில் இருந்தால், அவர் உமக்கு அதைப் பணம் எதுவும் வாங்காமலே கொடுப்பார்.

19. வினா.—இது என்ன மருந்து ?

விடை.—இப்பொழுது இவ்வியாதிக்கு சாதாரணமாய் மூன்று மருந்துகள் கொடுத்து வருகிறார்கள். அவை, கார்பன் டெட்ராக்ளோரைட் (Carbon tetrachloride), சினோபோடியம் எண்ணை (Oleum chenopodium), டெட்ராக்ளோர் எதிலீன் (Tetra-chlor ethylene) எனப்படுவன.

20 வினா.—இந்த மருந்து இந்தியாவில் அநேக ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

விடை.—ஆம். 1000,000 பேர்களுக்குமேல் இந்த மருந்து சாப்பிட்டு, அதனால் மிகவும் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

21. வினா.—இதர தேசங்களிலுள்ள ஜனங்களும் இந்த மருந்து சாப்பிடுகிறார்களா ?

விடை.—ஆம். இதே மருந்துதான் எங்கும் உபயோகிக்கப்படுகிறது.

22. வினா.—இந்த மருந்து சாப்பிட்டால் எனக்கு நன்மை உண்டாகுமா?

விடை.—உண்டாகும். நீர் இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிக பலசாலியாயிருப்பீர். இப்போது வேலை செய்வதைக்காட்டிலும் அதிக நன்றாய் வேலை செய்ய உமக்கு சக்தியிருக்கும். மேலும், உமக்காகவும் உம்முடைய குடும்பத்துக்காகவும் நீர் இப்போது சம்பாதிப்பதைக்காட்டிலும் அதிகமாய் சம்பாதிக்கக் கூடியவராவீர்.

23. வினா.—ஒருவர் எத்தனை முறை மருந்து சாப்பிட வேண்டும் ?

விடை.—ஆரம்பத்தில் ஒரு முறை சாப்பிட்டால் போதும். சில சமயங்களில், வியாதி மிகவும் மும்முரமாயிருந்தால் இன்னும் பலமுறை சாப்பிடவேண்டியிருக்கும். இதனால் பெருத்த நன்மை அடையும்பொருட்டு, டாக்டர் எவ்வளவு காலம் சாப்பிடவேண்டுமென்று சொல்லுகிறாரோ அத்தனை முறையும் மருந்து சாப்பிடவேண்டும்.

24. வினா.—டாக்டர் வைத்தியம் செய்வதற்காகவாவது மருந்து கொடுப்பதற்காகவாவது நாம் ஏதாகிலும் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறதா ?

விடை.—இல்லை. எவருக்கும் எதுவும் கொடுக்க வேண்டாம். கவர்ன்மெண்டாராலும் ஒரு தரும ஸ்தாபனத்தாராலும் இதற்கு வேண்டிய பணம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தம்முடைய சகோதர ஜனங்களுக்கு உதவிசெய்ய விரும்பும் ஒரு பெரிய தனவான் இந்த தரும ஸ்தாபனத்தை ஆதரித்து வருகிறார்.

25. வினா.—சில புழுக்கள் மாத்திரமேயிருந்து, தேகம் சௌக்கியமாய் வேலைசெய்ய சக்தியிருப்பவர்கள் ஏன் மருந்து சாப்பிடவேண்டும் ?

விடை.—அப்படிப்பட்டவர்கள் ஏன் மருந்து சாப்பிட வேண்டுமென்பதற்கு மூன்று நல்ல காரணங்கள் இருக்கின்றன :—

(a). இந்த வியாதி கடுமையாயிராதபோது அவர்களுக்கு மருந்துகொடுத்து சொஸ்தப்படுத்துவது மிகவும் சுலபம்.

(b) அவர்கள் மருந்து சாப்பிடாவிட்டால், சீக்கிரத்தில் இந்த வியாதி அதிகரித்து கஷ்டப்படுவார்கள்.

(c) அவர்கள் மருந்து சாப்பிடாவிட்டால், வெகு சீக்கிரத்திலோ அல்லது சில தினங்கள் கழித்தோ இந்த வியாதி அவர்கள் மூலமாய் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்கும் தவறாமல் தொத்திக்கொள்ளும்.

26. வினா.—ஒருவருக்கு மருந்துகொடுத்து இவ்வியாதி சொஸ்தமாய்விட்டால், அவருக்கு மறுபடியும் இந்த வியாதி காணுமா ?

விடை.—அவர் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருந்தால் அவருக்கு மறுபடியும் இது வராது.

27. வினா.—தகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருப்பதென்றால் என்ன?

விடை.—சரியான மாதிரி கக்கூஸ் அல்லது கொல்லையைக்கட்டிக்கொள்வதும் அதை உபயோகிப்பதும், சிநேகிதர்களையும் அக்கம் பக்கத்திலிருப்பவர்களையும் அம்மாதிரியே செய்யும்படி தூண்டுவதும், நல்ல பாதரக்ஷை போட்டுக்கொள்வதுமேயாகும்.

28. வினா.—கக்கூஸை உபயோகிப்பதாலும் பாதரக்ஷை போட்டுக்கொள்வதாலும் இவ்வியாதி எப்படி வராமலிருக்கும் ?

விடை.—கிராமத்தில் எல்லோரும் கக்கூஸில் ஒரு குழியில் மலங்கழித்தால் கொக்கிப்புழு முட்டைகளும் அந்த குழியிலேயே விழுந்து குஞ்சு பொரித்தவுடன் குழியைவிட்டு வெளியே வாமுடியாமல் செத்துவிடும். அப்பொழுது வேறு எவருக்கும் இவ்வியாதி வர சந்தர்ப்பமில்லாமல் போகிறது. ஜோடு போட்டுக்கொண்டாலு மப்படியே. தரையில் இருக்கும் கொக்கிப்புழுக் குஞ்சுகள் ஜோட்டை துளைத்துக்கொண்டு உன் தேகத்தில் வாமுடியாது,

29. விஞ.—சரியான மாதிரி கக்கூஸ் எது?

விடை.—செலவில்லாமலும் தொந்தரவில்லாமலும் கக்கூஸ் கட்டும் வழி:—கிணறு, குளங்களுக்கு 150 அடிக்கப்பால் தரையில் சௌக்கியம்போல் 3 அடி முதல் 20 அடிவரை ஒரு குழி தோண்டவேண்டும். இது ஆழமாயிருப்பதாலும், அல்லது அதில் கொஞ்சம் தண்ணீர் தேங்கியிருப்பதாலும் ஒருவித கெடுதலும் கஷ்டமுமில்லை. கொஞ்சம் தண்ணீர் அடியிலிருப்பது நல்லதென்றே சொல்லவேண்டும். இந்தக் குழியின்மேல் எல்லோரும் உட்காருவதற்காக தகுந்த கல் ஒன்று போட்டு இதைச்சுற்றி ஒரு மண்சுவராவது, தட்டியாவது, வைத்துவிட்டால் போதும். இதற்கு தோட்டி வேண்டிய அவசியமேயில்லை. தோட்டிகள் கிடைக்கக்கூடிய விடங்களில் சாதாரண கக்கூஸ்களை உபயோகப்படுத்தலாம். முக்கியமாய் குழந்தைகள் ரோட்டுப் பக்கங்களிலும் கண்டவிடங்களிலும், மலங் கழித்து இவ்வியாதியை பாவச்செய்கிறார்கள். அவர்களுக்குத்தான் முக்கியமாய் கக்கூஸ் வேண்டியதவசியம். குழந்தைகள் கக்கூஸிலேயேபோய் மலஜலங் கழிக்கும்படி நாம் சிறுவயது முதலே பழக்கப்படுத்தவேண்டும்.

எக்தெந்த விடங்களில் எந்த மாதிரி கக்கூஸ் கட்டவேண்டுமென்பதற்கு ஜில்லா சுகாதார ஆபீஸர் வேண்டிய சங்கதிகளைச் சொல்லுவார்.

ஆங்கிலாஸ்டோமையாஸிஸ் என்னும்
வியாதியை ஒழிக்கமுயற்சி செய்யும் சங்கத்தார்,
எப்பிரல், 1928. 81, மவுண்ட் ரோட், சென்னை.

## விளம்பரம்.

விவசாயிகளுக்கு கஷ்டம் நீங்கியது.

தண்ணீர் இறைக்க மாட்டைக்கட்டி இனி கஷ்டப்படவேண்டியதில்லை. வெகு உறுதியும், விலை குறைந்ததும், நீடித்தகாலம் வேலை செய்யக்கூடியதுமான

**விட்டி இஞ்சின் கோல்ட்ஸ் பம்பும்**

இக்கஷ்டத்தை நீக்கும், இஞ்சின் மண்ணெண்ணெயில் ஓடக்கூடியதால் செலவு வெகுசொற்பம். ஒருமணி நேரத்திற்கு சின்ன இஞ்சினுக்கு அணா 3-தான் செலவு.

| | | |
|---|---|---|
| 8 கமலைத்தண்ணீர் அடிக்கும் 6 குதிரைப் பவர் இஞ்சினும் 4" பம்பும் | ரூ. | 820 |
| 5 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" பெரிய பம்பும் | ரூ. | 590 |
| 4 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" சின்ன பம்பும் | ரூ. | 560 |
| 2 கமலைத்தண்ணீர் அடிக்கும் 3 குதிரைப்பவர் இஞ்சினும் 2" பம்பும் | ரூ. | 405 |

பைப்பு, பெல்ட், பிட்டிங் முதலிய செலவுகள் பிரத்தியேகம்.

பசுமலை, அம்மையநாயக்கனூர், திருமங்கலம் முதலிய இடங்களில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கும் இஞ்சின் பம்பை நேரில்வந்து பார்த்து திருப்தியடையுங்கள்.

இத்துடன் வேண்டிய விபரங்களுக்கு எங்களிடம் நேரில் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

நம்மிடம் பாளையங்கோட்டை கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு தயாராகும் நயமான திருநெல்வேலி, கொழும்பு சைப்ஸ் மிதியடிகளும், திண்டுக்கல் [illegible] திணுசுகளும், மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விலை சரசமாய்க் கொடுக்கப்படும்.

பூரண அன் கோ., (பசுமலை.)
261 மேலமாசி வீதி, மதுரை.

அமெரிக்கன் மிஷன் "லினக்ஸ்" பிரஸ், பசுமலை, 1929.

435

OFFICE OF THE REG... No. 22 APR 1929 MADRAS

௯ REG. NO.-M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

"கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப்பிரியம்."

Vol. VIII.] மார்ச்சுமீ 1929 [இலக்கம் 11

## பஞ்சாங்கம்.

1929 | விபவவருடம் மாசிமீ | மார்ச்சுமீ | விபவவருடம் பங்குனிமீ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 18 | | | | | 1 மாசி 18 | 2 19 |
| 3 20 | 4 21 | 5 22 | 6 23 | 7 24 | 8 25 | 9 26 |
| 10 ● அமா. 27 | 11 28 | 12 29 | 13 30 | 14 1 | 15 2 | 16 ❊ கார். 3 |
| 17 4 | 18 5 | 19 6 | 20 7 | 21 8 | 22 9 | 23 10 |
| 24 ○ பௌர். 11 | 25 12 | 26 13 | 27 14 | 28 15 | 29 16 | 30 17 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## பழைய தமிழ் பாடசாலை.

முந்தின தலைமுறையில் தமிழ் பாடசாலையில் போதனைப்பியாசம் எவ்வாறு நடைபெற்றதென அறிய உபாத்திமைத் தொழில் பூண்டவர் அநேகர் விரும்புவார்கள், என்பதில் சந்தேகமில்லை. ஒரு பெரிய கிராமத்திலுள்ள ஓர் பிரசித்தி பெற்ற உபாத்தியாயரிடம் நான் ஒரு வருஷம் படிக்க நேர்ந்தது. ஆகையால் நான் கண்ணாலே கண்ட காதாலே கேட்டவைகளை இங்கு சுருக்கமாக வரைய விரும்பியுள்ளேன். இதனால் வாசகர்கள் முன்னோர் எவ்வகையிலும் குறைந்தோர் என்று ரூபிக்கப் புகுந்ததாக எண்ணாமல் கால சக்கரத்தின் சுழற்சியின் வேகத்தையும் விருத்தியையும் கவனிக்கக்கோருகிறேன். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" என்று ஆன்றோர் கூறியுள்ளார். எத்துறையிலும் இது வாஸ்தவமென்பது கண்கூடு. ஆகவே இத்துறையிலும் இது நடைபெறவேண்டியதே.

"ஆத்திசூடி" என்ற ஒரு நீதிநூல் நம்முடைய மூதாட்டி ஔவைப் பிராட்டியார் இயற்றியதாகச் சொல்லக் கேட்டிருக்கிறோமே. அதிலுள்ள பாடல்களைத் தமிழர் அதிபிரியத்தோடு மேற்கோளாக எடுத்துக்கூறுவதையும் அறிவோமல்லவா? இரத்தினம்போன்ற விலையுயர்ந்த அருமை பெருமை பொருந்திய நீதிவாக்கியங்களை எவ்வாறு நாங்கள் கற்றோம் என்று சொல்லட்டுமா? ஒரு ஓலைச்சுவடியில் இரனடியில் வரும் பாடல்கள் எழுதப்பட்டிருந்தன. பிள்ளைகள் பாடம் சொன்ன விபரம் பின்வருமாறு:—

ஆத்திசூடி அமர்ந்ததேவனை ஏத்தித்தொழுவோம் நாமே. அறஞ்சேவிரும்பு, அருவது சேனை, எழுபது கறவை, ஈவது விளக்கே, உடையது விளம்பே, ஊக்கமது கைவிடே, என்னெழுத்திகழே, எப்பாதுகழ்ச்சி, ஒப்புரவொழுகு, ஓதுவதொழியே, பாம்போடும் பலகை, நம்ம கடைப்பிடி முதலியன.

பையன் மேற்சொன்ன விதமாய் பாடம் சொல்ல உபாத்தியாயர் சந்தோஷப்பட்டுமேல் பாடம் எழுதிப்போட்டுவிட்டுப் போய்விட்டார். என்னுடைய குருவை நான் குற்றம் சொல்லத் துணியேன். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று எண்ணுகிறேன். நானும் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன். தவிர தற்காலத்துப் போதனாமுறை அப்போதிருந்ததில்லை. இப்போது உள்ள கால அட்டவணையும் இவ்வளவு உதவி உபாத்திமார்களும இவ்வளவு மரியாதையான சம்பளமும் கிடையாது. ஆனால் இத்தகைய எல்லா வசதிகளும் அனுகூலங்களுமுள்ள இக்காலத்திலும் போதனைப்பியாசம் இதையடுத்தேயிருக்குமானால் நம்முடைய கடமையைச் சரியாய்ச் செய்தவர்களாவோமா?

பொருள் விளக்காது மனப்பாடம் செய்தலே மேற்சொன்ன ஆசிரியரின் குறையென உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதல்லவா? அத்துடன் எழுத்துப் பிழையும் கவனிக்கவேண்டியதே.

இப்போது திருத்தமாய் எழுதப்பட்டும், துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுமுள்ள அச்சுப்புத்தகங்கள் பிள்ளைகள் கையில் இருக்கின்றன. ஆகையால் அவ்வாக்கியங்களிலுள்ள பிழைகளைக் கவனிப்பது, நாம் பிள்ளைகள் சாதாரணமாய் என்ன பிழை செய்கிறார்கள் என்று அறிய ஏதுவாகும்.

திருத்தாமலிருந்தபடியால் பொருள்களைத் திருத்திக்கூறவும் ஏதுவாகிறது என்பதை உற்றுக் கவனியுங்கள். ஓர் தமிழறிஞர் சொன்னவற்றைச் சொல்லுகிறேன். ஒருவேளை அவர் விகடமாகக் கூறினாரென்றே வைத்துக்கொள்ளுவோம்.

ஆறுவது சேனை என்றால், நாம் கூடிவாழ்ந்தால் நம்முடைய சுற்றத்தார் ஐம்பது அறுபது பேர் நமக்குத் துணையாவார். எழுபது கறவை என்றால், பால் கறக்கும் எழுபது பசுக்கள். ஈவது விளக்கு என்றால், ஒருவருக்கு நாம் ஒன்று கொடுத்தால் அது அவருக்கு விளக்கு ஏற்றிவைத்தது போலாம் முதலியன. ஆசிரியர் அக்கருத்துக்கொண்டாரா என்று பார்க்கில் அது தப்பென்று எவரும் ஒத்துக்கொள்ளுவார்.

ஆகையால் எழுத்துப்பிசகு திருந்தாவிடில் அது எவ்வளவு பெரும்பிழை என்பது வாசகர்கள் நன்குணர்வாரென்று நினைக்கிறேன்.

தவிர பத அர்த்தம் மாத்திரம் சொல்வது போதாது. தகுந்த திருஷ்டாந்தங்கள், கதைகள் மூலம் பொருளை நன்குவிளக்கவேண்டுமென்பதை வற்புறுத்தவே ஆத்திசூடி, நீதிக்கதைகள் என்னும் புஸ்தகங்கள் தோன்றியுள.

தமிழ் பாஷையின் அருமையும் பெருமையும் புலனாறுமாறு போதிக்க இக்கட்டுரை உபாத்திமாரைத் தூண்டுமாயின் என் வேலை பயனுள்ளதே.



## கதை.

### ஓர் உத்தம புத்திரி.

ஒருகாலத்தில் பிரான்சு தேசத்தில் ஒரு அரசன் லூயி, ரேனே, மேரி, என்ற பிள்ளைகளைவிட்டு இறந்துபோனான். அவன் மனைவியாகிய அரசி வெகுநாளாக வியாதிப்பட்டாள். உலகத்திலுள்ள திறமையுள்ள பண்டிதர்களெல்லாரும் வந்து வைத்தியம் செய்தும் அவள் சுகமடையாமல் நாளுக்குநாள் தேகம் நலிந்தவளானாள்.

அத்தருணத்தில் ஒரு பிரயாணி அவ்விடம் வந்தான். அரசியின் வியாதியைப் பற்றிக் கேள்வியுற்று அவளைப் பார்க்க உத்தரவு கேட்டான். அப்படியே உத்தரவு கிடைத்தது. அப்பொழுது அவன் இராணியைப்பார்த்து, வாடைக்காற்றடிக்கும் தேசத்தின் கோயிலிலுள்ள இராட்சதன் வசமிருக்கும் அரும்பொருள் மூன்றுண்டு. அவையாவன: பாடும்மரம், பேசும்பட்சி, தங்கத்தண்ணீர், அவைகள் கிடைத்தால் இராணி சுகமடையலாம்.

பாடும் மரத்தின் இலைகளிலிருந்து உண்டாகும் நாதசுரம் வர்ணிக்கமுடியாது. பேசும்பட்சி ஓர்வித ஊதாவர்ணமான பட்சி. அது இரவும் பகலும் ஆச்சரியமான கதைகள் சொல்லும். தங்கத்தண்ணீர் எவ்விதமான வியாதியையும் குணமாக்கும் சக்திவாய்ந்தது. எந்தமந்திரத்தையும் முறித்துப்போடும்.

யாரையாவது அனுப்பி அவைகளை வசப்படுத்துகிற நிமிஷத்திலேயே தேகசௌக்கியம் ஆரம்பிக்கும். ஆனால் ஒன்று சொல்லுகிறேன் கேள். அவைகள் கிடைப்பது சுலபமல்ல என்று சொன்னான். அந்த இராணி அந்த பிரயாணி கூறிய பரிகாரத்துக்காக நன்றி பாராட்டினாள். அவள் அதிகம் திரவியம் கொடுத்தும் இந்த அருமையான சாமான்களைக்கொண்டுவர அரண்மனை உத்தியோகஸ்தர் ஒருவரும் முன்வரவில்லை.

அப்பொழுது மூத்த குமாரனாகிய லூயி தாயைப்பார்த்து, வேறொருவரும் முன் வராததால் நான் போய் அவைகளைக் கொண்டுவருகிறேன். நான் நாளையத்தினம் புறப்படுவேன். நான் மூன்றுமாதங்களுக்குள் திரும்பிவராவிட்டால் என்பிராணனுக்கு ஆபத்து நேர்ந்ததென்று எண்ணிக்கொள்ளுங்கள் என்றுபுறப்பட்டான்.

அதிக திரவியம் எடுத்துக்கொண்டு நேர்த்தியான குதிரையில் ஏறி அத்தேசத்திற்குப் புறப்பட்டான். ஒருவாரமுடிவில் ஒரு வனாந்தரத்தில் வந்துசேர்ந்தான். மரம் செடி விடுவாசல் மக்கள் மனிதர் ஒருவரையும் காணோம். ஆனால், நீ வந்ததால் என்ன பிரயோஜனம் என்று ஒரு சத்தம் கேட்டது. திரும்பிப் பார்க்கவே பின்னால் இடுப்பளவு தாடி தொங்கிக்கொண்டிருந்த ஒரு கிழவன் வேகமாய் ஒரு குதிரைமேல் ஏறிவருகிற காலடிச்சத்தம் கேட்டது. அவன் இவ்வாலிபனை எங்கே போகிறாய் என்று கேட்டான். அவன் காரியத்தைச் சொல்ல, கிழவன் அவனை எச்சரித்து, நீ செய்ய நினைத்தகாரியம் அசாத்தியமானது. உன்னைப்போல் பிரயாசப்பட்டு முடியாமல் ஏராளமானபேர் கல்லாய்ச் சமைந்து முடியாமல் இதோ இருக்கிறார்கள் பார். நான் சொல்வதைக்கவனி. அந்தப்பாறைகளைச் சந்தித்த உடனே அநேக சத்தங்கள் எழும்பும். நீ ஒன்றுக்கும் பதில் சொல்லாதே. உன் கன்னத்தில் அடி விழும். மூச்சு விடாதே என்று பல புத்திகளைச் சொன்னான். அப்படியே நடந்தது. வெகு நேரம் பொறுமையாயிருந்தான். ஆனால் முடியாமல் கையை ஓங்கி அடிக்கப்போனான். உடனே அந்தக் கிழவன் சொன்னபடி அவனும் குதிரையும் கல்லாய்ச் சமைந்தார்கள்.

தாய் மூன்று மாதம் காத்திருந்தாள், மகன் வரவில்லை, அவன் பிராணனுக்கு ஆபத்து நேரிட்டதென்று துக்கித்தாள். ஆனாலும் தாய் படும் துயரம் தாங்காமல் இரண்டாவது மகன் புறப்பட்டான். தாய் எவ்வளவு வருந்தினாள். நீயும் திரும்பி வராவிட்டால் நான் என்ன செய்வேன் என்று அங்கலாய்த்தாள். அவனும் அவ்விதம் பிரயாணம்பண்ணி அந்தக் கிழவனைச் சந்தித்து அவன் புத்திகளை எல்லாம் கேட்டும் அவனுக்கும் அதே கதிதான் சம்பவித்தது.

ஒரே மகள் மாத்திரம் பாக்கி. அவளும் தாயின் வருத்தம் தாங்காமல் மிகவும் மன்றாடிப்புறப்பட்டாள். அவளுக்கும் அதே சம்பவங்கள் நேரிட்டன. எல்லாச் சங்கடங்களையும் அனுபவித்தாள். இவளோ தாயின் மேலுள்ள நேசத்தால் அவைகளையெல்லாம் பொறுத்தாள். கல்லாய்ச்சமைந்த உருவங்களை எல்லாம் கடந்தாள். மறுபடியும் கிழவன் அவளைச் சந்தித்து அவளை வாழ்த்தினான். இன்

னும் வேண்டிய உதவிபுரிந்தான். அந்த மூன்று சாமான்களும் கிடைத்தன. தன்னிடத்திலுள்ள தங்கத் தண்ணீரைத் தெளிக்கவே கல்லாய்ச் சமைந்த உருவங்களை எல்லாம் கடந்தாள். மறுபடியும் கிழவன் அவளைச் சந்தித்து அவளை வாழ்த்தினன். இன்னும் வேண்டிய உதவிபுரிந்தான். அந்த மூன்று சாமான்களும் கிடைத்தன. தன்னிடத்திலுள்ள தங்கத்தண்ணீரைத் தெளிக்கவே கல்லாய்ச்சமைந்த இராஜ குமாரர்களெல்லாரும் உயிர்பெற்றார்கள். அவளுடைய சகோதரர்களையும் எழுப்பினாள். அவள் தாய்க்கு நல்ல சுகம் கிடைத்தது. முன் கிழவன் வேஷமணிந்த அழகிய இராஜ புத்திரனை மணந்தாள். ஏராளமான திரவியத்தையும் பெற்றாள். அவள் மிகுந்த சந்தோஷமாக வாழ்நாள் கழித்தாள்.

---

## "இரண்டு தாமரை இலைகள்"

ஒருநாள் ஒரு குளத்தில் இரண்டு தாமரை இலைகள் தண்ணீருக்குமேல் மிதந்தன: அவைகளுக்கு மேலாக எழும்பி ஒரு தாமரைப் புஷ்பம் மலர்ந்த முகத்தோடு ஆடிக்கொண்டிருந்தது. ஒரு இலை தண்ணீரோடு தண்ணீராய்ப் படுத்திருந்தது. மற்றொன்று இந்தப் புஷ்பத்தண்டோடே கொஞ்சம் எழும்பி சாய்ந்திருந்தது. படுத்திருந்த இலையின்மேல் அநேக தண்ணீர்த் துளிகள் பாதரசத்தைப்போல் உருண்டோடிப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. மற்ற சாய்ந்த இலையில் ஒரு துளிகூட இல்லை. முதல் இலை இரண்டாவது இலையைப்பார்த்து, "நான் எவ்வளவு அழகாய் இருக்கிறேன் பார். வானவில்லின் ஆறு நிறங்களையும் பிரதிபிம்பிக்கிற வைரக்கற்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறேன். என்னைப் பார்த்து அகமகிழவே எத்தனையோ பேர் இக்குளக்கரைக்கு உலாவவருகிறார்கள், ஆனால் ஒருவராகிலும் உன்னைப் பார்க்கமாட்டார்கள்" என்றது. அதற்கு இரண்டாவது இலை: "அதிகமாய் தற்பெருமை கொள்ளாதே. நீ வைரக்கல் என்று நினைக்கிறவைகள் வெறும் நீர்த்துளிகளே. சூரியன் வரும்போது பறந்துவிடும். காற்றடித்தால் உதிர்ந்துவிடும்" என்றது. அடுத்தநாள் பெருமைபாராட்டின இலையின் மேலெல்லாம் பொட்டரித்துப்போயிருந்தது. ஏனென்றால் அந்த நீர்த்துளிகள் பூதக்கண்ணாடியைப்போல் சூரியவெப்பத்தை இழுத்து இலைக்குக்கொடுத்து, அந்தந்த பாகங்களை வெந்துபோக வைத்தன. ஆனால் அந்த அழகிய தாமரைப் புஷ்பமோ அமைதியாய் அவ்விரு இலைகளுக்குமேல் அசைந்தாடிக்கொண்டிருந்தது.

---

## "ஆரியக்கூத்தாடினலும் காரியத்தின்மேல் கண்ணாயிரு."

இது ஒரு பழமொழியானாலும், எக்காலத்திலும் ஒரு புதுமொழியாகவே இருக்கிறது. இதை ஒரு சுலோகமாக ஒப்புக்கொண்டால் உலகமெல்லாம் ஒப்புக்கொள்ளக்கூடிய ஓர் பொருளமைந்த சுலோகமென்பதை எவரும் மறுக்கார். இவ்வுலக ஜீவியத்தில் ஒவ்வொருவரும் கவனிக்கக்கூடிய பல காரியங்கள் உண்டு. அவைகளை அவரவர் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து தாம் கொண்ட காரியத்தை நிறைவேற்றிக்கொள்வது அவசியம். ஏனென்றால் நம்முடைய வாழ்நாள் சொற்பம். உலக ஜீவியம் அநித்தியமானது. ஆகையால் காரியத்தின்மேல் கண்ணாயிருப்பது முக்கியமானதே. எந்தக்காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும்? உத்தியோகமோ, கல்வியோ, பொருளோ, கனமோ, தொழிலோ, பொதுஜன உழைப்போ இவைகளின்மேல் கண்ணாயிருப்பதில் குற்றமில்லை. தேட வேண்டியதுதான், செய்ய வேண்டியதுதான்; ஆனால் உலகவாழ்வும், மேன்மையும், சம்பாத்தியமும் ஒரு கூத்தாட்டம்போல் சடுதியாய் முடிந்துபோகக்கூடியதால், எக்காலத்திலும் நிலைவரமாய் நிற்கக்கூடிய காரியத்தில் கண்ணாயிருப்பதே இங்கே கவனிக்கவேண்டிய காரியம். அது என்ன காரியம்? அதாவது என்றென்றும் அழியாத ஆத்துமா நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள முயற்சித்தல் என்னும் காரியமே நாம் அநுதினமும் கண்ணாயிருக்கவேண்டிய காரியம். மற்றக்காரியமெல்லாம் இவ்வுலகத்தோடு முடிந்துபோம். மறுமையில் நாம் நித்தியா நித்தியமாய் கர்த்தரோடு சுகித்திருக்க நித்திய ஜீவனை இப்பொழுதே தேடிப்பிடித்துக்கொள்ளுதலே "காரியத்தின்மேல் கண்ணாயிருத்தல்." இவ்வுலகத்தில் அவரவர் செய்யும் சகல வேலையும் இந்தக்காரியத்துக்கு அநுசரணையாய் இருக்கவேண்டுமே தவிர இதற்கு இடையூறாயிருக்கவேகூடாது. மனிதர்களாகிய நமக்கு இக் "காரியத்தின்மேல் கண்ணாயிரு"த்தல் இன்றியமையாத அவசியமல்லவோ? இதற்காக நாம் உலகத்தில் ஜீவிக்கிறோம். நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதன்றிப் பிறரையும் நித்திய ஜீவனுக்கேதுவான வழியில் நடத்துவதும் நாம் கண்ணாயிருக்கவேண்டிய காரியம். இந்தக் காரியத்தில் எதுமுதல் எதுவரைக்கும் கண்ணாயிருக்கவேண்டுமென்று கேட்பாயோ? உனக்கு விபரம் தெரிந்த வயதுமுதல் விபரம் ஒன்றும் தெரியாமற்போகும் மாணத்தருவாய்மட்டும் நித்திய ஜீவனைப்பெற முயற்சிசெய். எக்காரியத்தையிட்டும் இடையிலே இளக்சரிப்பும் சோர்பும் வேண்டாம். நமது சரீரத்துக்கு உணவு எவ்வளவு அவசியமோ அப்படியே ஆத்துமாவுக்கு நித்தியஜீவன் அளவிறந்த அவசியமென்று சிந்தித்து அந்தக் காரியத்தில் கண்ணாயிரு. கண்ணாயிருக்கவேண்டிய இந்த பிரதான காரியத்தை விட்டுவிட்டு மற்ற காரியத்தில் கண்ணாயிருப்பதெல்லாம் கடைசியில் கார்-ஈயம்போல் உன்னைப் பாதாளத்தில் அமிழ்த்திவிடுமே தவிர ஈடேறவொட்டாது. ஆகையால் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும் காரியத்தில் கண்ணாயிரு. அப்போது காரியசித்தியடைவாய், முத்தியடைவாய்.

S. Jos. Benjamin,
Pasumalai.



---

## குழந்தையைப் பாதுகாப்பதற்கவசியமான புத்திமதிகள்

குழந்தை பிறந்தபின் சிலநேரங்களாக அதை உன் மார்பில் அணைத்துக்கொள். குழந்தையை நீ இவ்விதமாக சில நாட்களுக்கு போஷிக்க முடியாதென்று கண்டால் விட்டுவிடாதே. உன் விடா முயற்சிக்கேற்ற பலன் உனக்குக் கிடைக்கும்.

குழந்தைக்கு போஜன வேளைக்கிடையில் குடிக்க போதுமான சுடுஜலம் கொடு. அதற்கு தாகமிருக்கலாம். பால் ஆகாரமேயன்றி, பானமல்ல.

குழந்தைக்கு ஒன்பது மாதம் ஆகும் வரையில் கட்டியான பதார்த்தம் ஒன்றும் கொடுக்கவேண்டாம். வேளைக்கொருதடவை ஆரஞ்சு முதலிய பழங்களின் ரசத்தைக் கொடுப்பது உத்தமம்.

மதுவை எவ்வகையிலும் உட்கொள்ளாதே. இது தாய் குழந்தை இருவருக்கும் கெடுதி செய்யும்.

குழந்தைக்கு சரியான வேளைகளில் ஆகாரங்கொடு; குழந்தை அழும் நேரமெல்லாம் அதற்கு ஆகாரம் கொடுக்காதே.

கூடுமானால், குழந்தையை வெயில்காலத்தில் பால் மறக்கப்பண்ணாதே. அது அதின் ஜீரணக்கருவிகளைக் கெடுத்துப்போடும்.

ஈரமான வீடுகளில் மெத்தை முதலியவைகளை நிரப்பி, அதன்மேல் பிள்ளையை படுக்கப்போடாதே. அதற்கு போதுமான சூரியவெளிச்சமும் நல்ல காற்றும் வரும்படி பார்.

அவைகளுக்கு ஆகாரம் முதலியவை கொடுப்பதில் கையாடவேண்டிய ஒழுங்கும், அவைகளை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருத்தலுமே அவற்றின் தேக சுகத்தைப் பாதுகாக்கக்கூடிய சிறந்த வழிகள்.

பிள்ளைகளுக்கு ஏதாகிலும் நேரிடும்போது வைத்தியனுடைய ஆலோசனையையாவது, அல்லது நீ நம்பக்கூடிய புஸ்தகங்களில் கண்டிருக்கும் ஆலோசனையையாவது தேடு. மற்றப்படி உன் சிநேகிதர் சொல்வதைக் கேளாதே. நீ கேட்கக்கூடிய வார்த்தைகளில் நூற்றுக்கு தொண்ணூறு கட்டுமானங்களடங்கிய வசனமாயிருக்கும்.

## தெய்வ தியானம்.

தியானம்பண்ணாத பேரில்லை. தியானம் என்பது யாதொரு சங்கதியை அல்லது தானே செய்த, செய்யப் போகிற காரியத்தைத் திரும்பத் திரும்பத் தன் மனதுக்குக் கொண்டுவந்து, அங்கே அதைப் பிரட்டி உருட்டி ஆராய்ச்சிபண்ணுவதாம். தியானமாகிய சிந்தனையினாலேயே சரி பிழை என்பதையும், லாப நஷ்டத்தையும்; கூடும் கூடாது என்பதையும் ஒருவாறு திட்டமாய் தெரிந்துகொல்லலாகும்.

ஒரு தோசைக்காரி தோசைசுட்டு விற்றுத் துட்டு எண்ணிக் கணக்குப்பார்க்கையில் இரண்டு அணா குறையக்கண்டு, ஐயையோ இரண்டணாவைக் காணோமென்று மார்பிலடித்துக் கையை பிசைந்துப் புலம்பிக்கொண்டிருந்து, சிறிதுநேரம் ஆழ்ந்த சிந்தையிலானாள். சட்டென்று எழுந்து "ஆகா அமினாப்பிள்ளைக்கு அணா இரண்டுக்குக் கடன்கொடுத்த தொகையை மறந்துவிட்டேன்" என்று சொல்லி, ஆனந்தமடைந்து வீடேகினாள். பெருத்த வியாபாரிகள் வருஷ முடிவில் கணக்குப்புத்தகங்களை எடுத்துக் கண்முன்வைத்து, வருஷஆரம்பத்தில் போட்ட முதலென்ன, சிப்பந்திகளுக்குச் செலவென்ன, கையிருப்பென்ன, முதலுக்குமேல் லாபமென்ன என்று மண்டையை உடைத்துக்கொண்டு ஆகாரத்தையும் தேடாமலே வெகு நாழிகை சிந்தனையில் மூழ்கி, ஏதோ ஓர் முடிவுக்கு வருகிறார்கள். பாடசாலை மாணாக்கன் ஆசிரியர் சொல்லிக்கொடுத்த சூத்திரத்தை மறந்துவிட்டு, தனித்துப்போய் உட்கார்ந்து, தலையைச் சொறிந்து சொறிந்து கண்டுகொண்டேன், கண்டுகொண்டேனென்று குதித்தெழுந்து கும்மாளம் போட்டுக்கொண்டு கல்விச்சாலை செல்கிறான்.

ஞான காரியங்களிலும் தியானம் மிக்க அவசியம். ஓய்வுநாட்களில் ஆராதனைக்குப்போய்ப் பாட்டுப்பாடுகிறோம், ஜெபிக்கிறோம், தேவபிரசங்கம் கேட்கிறோம், முடிந்து வீடுவந்துவிடுகிறோம், அப்பால் நாம் செய்வதென்ன? ஊர் பேச்சுத்தான். "பாவி நான் என்ன செய்வேன் கோவே ஜீவன் நீர் விட்டதற்காய்" என்று பாடிய பாட்டின் பொருளைச் சிந்தித்தோமா? சிந்தித்து மனம் நொறுங்கிக் கண்ணீர் சிந்தினோமா? "உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" என்று சொல்லப்பட்ட வேதவாக்கியம் ஆகிய அம்பு நமது உள்ளத்தை ஊடுருவப்பாய்ந்து காயமுண்டுபண்ணினதா? ஆடுமாடுகள் புலத்தில் மேய்ந்தபின் ஓரிடத்தில் தனித்துப்போய் படுத்து, கொத்தும் குறையுமாய்க் கடித்து விழுங்கினதை, மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து மைப்போல் மென்று கூழாக்கித் தேகபோஷணைக்கு ஏற்றவிதமாக மாற்றிக் கொள்ளுகின்றனவே. ஒருநாளைக்கு அவை அசைபோடாவிட்டாலும் அவை கைகடந்த பொருள் என்று சமுசாரி கலங்குகிறானல்லவோ?

நாம் சமுத்திர தீரத்தில் போய் நிற்கும்போதும் வானத்தை அண்ணாந்து பார்க்கும்போதும், தெய்வமகத்துவத்தையும், அவரது அளவில்லாத வல்லமையையும், அவரது ஜீவகாருண்யத்தையும் சிந்திக்கிறோமா? அதோ, தெருவிலே போகிற பாடையைக்கண்டு, என்னையும் ஓர் நாள் இவ்வாறே கல்லறைக்குச்சுமந்து செல்வார்கள் என்று திகைப்பூண்டை மிதித்தவன்போல் தயங்கித் தத்தளித்தேனா?

உலகில் உதித்த மனுக்கோடிகள் அனைவரிலும் மாமகத்வம் நிறைந்தவரும், தெய்வப்பிறவியானவருமாகிய இயேசுபகவான் இந்த ஏழைப்பூச்சியைக் கரையேற்ற, தாங்கொணா சிலுவை சுமந்துபோய், அந்தச்சிலுவையிலேயே ஆணிகளால் கடாவப்பட்டு உயிர் துறந்ததை என் கண்முன் வைத்துத் தினம்தினம் தியானம் பண்ணுகிறுப்பேனோ? இச்சிலுவைக் காட்சியைக்கண்ணுறும் நாம் அந்த அருள் வள்ளலுக்கு விரோதமாய் மனோவாக்குக் காயங்களில் தவறாய் நடந்துகொண்ட சகல பொல்லாப்புக்களுக்காகவும் உத்தம மனஸ்தாபப்பட்டு, அந்தக் கல்வாரிக்கே போய் அந்தத் திருச்சிலுவையினின்று ஓடிவரும் செந்நீராகிய தேவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பிராயச்சித்தம்பெற்று "தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர்" ஆகக்கடவோம்.

நண்பர்களே, தேவன் தம்மை நம்பியிருக்கிற பக்தர் அனைவோருக்கும் ஆயத்தம்பண்ணியிருக்கிற அந்த பரமராஜ்யத்தை, அந்த ஜீவகிரீடத்தைத் தரிசித்துக் கண்ணாடியாகிய தியானத்தினால் கண்டு களிகூரக்கடவோம். ஈசாக்கு சாயந்திரவேளையிலே தியானம் பண்ணியது போலவும், தாவீது இராச்சாமங்களில் அவரைத் தியானித்ததுபோலவும், மரியாள் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துச் சிந்தனைபண்ணியதுபோலவும் நாமும் தியானத்தைக் கையாடக்கடவோம்.

Y. J. Taylor.



## இரண்டு பையன்களின் கதை.

ஒரு நாள் இரண்டு பையன்கள் தங்கள் ஊருக்குக் கிட்டேயுள்ள ஒருபள்ளிக்கூடத்திற்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு ரஸ்தா ஓரமாய் ஓர் கிழவி கூடைநிறைய மாம்பழம் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்தார்கள். அப்பொழுது ராபி என்னும் பெயருள்ள பையன் தன் சிநேகிதனான அப்பாஜி என்பவனைப்பார்த்து: இப்பொழுது ஒரு விளையாட்டு காண்பிக்கிறேன் பார் என்று சொன்னான். அப்பொழுது அப்பாஜி என்ன விளையாட்டு என்று கேட்டான். ராபி மறுமொழியாக: இப்பொழுது அந்த கிழவியின் பக்கத்தில் கூடை நிரம்ப இருக்கும் பழங்களை தட்டிவிட்டால் அவள் நாலுகால் பாய்ச்சலாய் எல்லா பழங்களையும் சடுதியாய்ப் பொறுக்கிக்கொள்வதைப் பார்க்கலாம்; இதுதான் அந்த விளையாட்டு என்று சொன்னான். அப்பொழுது அப்பாஜியின் கண்கள் இரண்டும் சிவந்தன. அதைப்பார்க்க ராபிக்கு அதிக வெட்கமுண்டாகிவிட்டது.

அப்பாஜி தன் சிநேகிதனைப்பார்த்து: இது என்ன விளையாட்டு! நான் இப்பொழுது ஒரு விளையாட்டு சொல்லப்போகிறேன்; அது உன் விளையாட்டைப் பார்க்கிலும் மேலானது; அவள் நம்முடைய பாட்டியாயில்லாவிட்டாலும் வேறொருவருடைய பாட்டியாயிருப்பாள்; ஆகையால் நாம் இருவரும் அவளிடத்தில் போய் அவள் எங்கே போகிறாள் என்று விசாரித்து அவளுடைய கூடையைச் சுமந்துகொண்டு அவளோடு போகலாம்; இது நீ சொன்ன விளையாட்டை விட மேலான விளையாட்டாய் இருக்கும் என்றான்.

அப்படியே அவர்களிருவரும் அந்தக் கிழவியினிடத்தில் சென்று: 'நீங்கள் எங்கே போகிறீர்கள் அம்மா' என்று விசாரித்தார்கள். அப்பொழுது அந்த முதிர் வயதுள்ள ஸ்திரீ பிள்ளைகளே, 'நான் இன்னும் அரை மைல் தூரம் போகவேண்டும்; அங்கே ஒரு பட்டணம் இருக்கிறது. அங்கே இந்தப் பழங்களைக் கொண்டு போய் விற்கவேண்டும். இப்பொழுது இங்கிருந்து பட்டணத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கிறதோ அதற்கு அதிகமாகவே நடந்து களைப்பாய் இருக்கிறது; ஆகையால் இங்கே சற்று தங்கி இளைப்பாறுகிறேன்' என்று சொன்னாள்.

அப்பொழுது களைத்துப்போயிருந்த அந்த ஏழைக் கிழவியினிடம் இந்த இரண்டு பையன்களும் போய், அவளை நோக்கி: 'நாங்கள் இரண்டுபேரும் இந்தக் கூடையை உங்களுக்காக சுமந்துகொண்டு வரலாமா? நாங்களும் அந்த ஊருக்குத்தான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறோம்' என்றார்கள். அப்பொழுது அந்தக்கிழவி 'எனக்கு தடை ஒன்றுமில்லை; இப்போர்ப்பட்ட வீரமுள்ள பையன்களை நான் நம்பாமற் போய்விடுவேனோ என் பிள்ளைகளே' என்று சொன்னாள். கிழவி இப்பொழுது ஆறுதலடைந்து முகம் மலர்ந்து பையன்களின் உதவியை நாடினாள். அப்பொழுது கூடையை சுமந்து பட்டணத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

இந்தக் கதையில் நாம் பார்க்கிறது என்னவெனில், உண்மையில் ராபி கெட்டபையனல்ல, ஆனால், அவன் புத்தி விளையாட்டின்மேலிருந்தது; அவன் விளையாட்டுப் புத்தியுள்ளவனாயிருந்தான்.

பிரியமானவர்களே, இதிலிருந்து நாம் என்ன பாடத்தைப் படித்துக்கொள்ளுகிறோம்? நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். முக்கியமாய் சக்தியற்றவர்கள், எளியவர்கள், வயோதிபர் இவர்கள் யாவருக்கும் நாம் உதவிசெய்ய வேண்டும். இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு நம்முடைய இனத்தார் அல்லது ஒருவேளை நாமே வயதுள்ளவர்களாகி சக்தியற்றுக் கிடப்போம்; நாம் மற்றவர்களுக்கு இப்பொழுது உதவிசெய்தால் அக்காலத்தில் அவர்களும் நமக்கு உதவிகொடுப்பார்கள். நாம் முதிர் வயதாகி மரித்துப்போனாலும் கடவுள் அதற்கேற்ற பலனை நமக்கு அளிப்பார்.

ஆகையால், சிறு பிள்ளைகளான நாம் முதிர்வயதுள்ளவர்களுக்கு மரியாதைசெலுத்தி, நம்மால் கூடிய உதவியையெல்லாம் அவர்களுக்குப் புரிய நாடுவோமாக.

---

## ஆந்திராக்ஸ் என்னும் கொடுவிஷ ஜுரமும் அது மிருகங்களிடமிருந்து மனிதரைப்பீடிக்கும் விதமும்.

ஆந்திராக்ஸ் என்னும் கொடிய தொத்து வியாதியானது ஏறக்குறைய எல்லா மிருக ஜெந்துக்களையும் பீடிக்கக்கூடியதாயிருக்கிறது. ஆனால் காளை பசுமாடுகளைத்தான் ஜாஸ்தியாய்ப் பீடிக்கிறது. இந்த வியாதியை

உண்டாக்கக்கூடிய பூச்சியானது பூதக்கண்ணுடிமூல மாய்த்தான் கண்டுபிடிக்கலாம். ஜுரம் கண்டிருக்கும் மிருகத்தின் இரத்தத்தைப் பரிட்சைபார்க்கவேண்டும் அல்லது அந்த மிருகத்தின் நாடித்தோலில் தங்கியிருக்கும். ஆனால் அது இரத்த வியாதி என்பதற்கு சந்தேகமே கிடையாது. இந்த வியாதி ஜாஸ்தியாய் பரவுகிறதில்லை. ஆனால் வியாதிகண்ட மிருகம் சிலமணிநேரத்துக்குத்தான் வியாதியின் குணங்களைக்காட்டும். இரவில் நன்ருய் தீனி சாப்பிட்டுக் கொண்டிருந்த மாடு காலையில் இந்த வியாதியினுல் தொழுவில் மாண்டிருக்கிறதைப் பார்க்கலாம். காலையில் மேய்ச்சலுக்குப்போன மாடு சாயந்திரத்துக்குள் இறந்துபோகலாம்.

## வியாதி மிருகங்களுக்குப் பிடிக்கும் விதம்.

இந்தப்பூச்சியின் ஸ்போர் என்னும் முட்டைகள் புல் பூண்டின் அடியிலே அநேக நாட்கள் உயிரோடிருக்கும். ஆனால் மழை விழுந்த உடனே இந்தப்பூச்சிகள் புல் பூண்டுகள் நுனியில் போய்த்தங்கும். அப்பொழுது அந்தப்புல்லை சாப்பிடும் மிருகத்தை உடனே பிடித்து விடுகின்றன. இப்படி வியாதி பிடித்து சில மணிநேரத்தில் இம்மிருகம் இறந்து விடுகிறது. இந்தப்பூச்சியானது காற்றுள்ள இடத்தில்தான் வசிக்கும். இறந்துபோன மிருகங்களின் உடம்பில் வசிக்கிறதில்லை. ஆனால் அந்த இறந்த மிருகங்கள் வாய், ஆசனங்களிலிருந்து வடியும் நீர்களிலும், இரத்தங்களிலும் தங்கி உயிரோடு சிலநாட்களிருக்கும்.

இந்த வியாதிகண்ட மாடுகளுக்கு 106 டிக்கிரி ஜுரமும், மலச்சிக்கலும், மூக்கு வாய்களிலிருந்து நீரும் வடியும். உடம்பு புல்லரித்திருக்கும். தீனியைத் தள்ளிவிடும். உடம்பு நடுக்கம் எடுத்து திடீரென்று இறந்துவிடும். மிருகங்களுக்கு வியாதி வாராதபடி சீரம் அல்லது இனுக்குலேஷன் வெடெனரி டாக்டர்கள் செய்வார்கள்.

## மனிதரைப் பிடிக்கும் விதம்.

சாதாரணமாய் இவ்வியாதியினுல் மரணமடைந்த மாடுகளை அறுக்கும் சக்கிலியர்களைப் பிடிக்கும். எப்படியெனில், செத்த மாட்டை அறுக்கும் மனிதன் கைகளில் காயம்பட்டால் உடனே அவனுக்கு ஜுரமும் வந்து அந்த காயத்தின் பக்கத்தில் ஒரு கட்டி புறப்படும். இந்தக் கட்டியிலிருக்கும் நீரைப் பூதக்கண்ணுடியில் பரிட்சைசெய்து பார்த்தால் ஏராளமான பூச்சிகள்காணப்படும். இவ்விதமாய் செத்த மிருகங்களின் தோலினுலும் அல்லது மிருகத்தின் வால்முடிகளினுலும் செய்யப்பட்ட சாமான்களில் இந்தப்பூச்சியின் முட்டை தங்கியிருக்கும். சாதாரணமாய் சவரம் செய்யும் பிரஷ்கள் குதிரைவாலினுல் செய்யப்பட்டிருக்கிறது. இவைகள் வியாதிகண்ட குதிரைகளின் முடிகளாயிருக்குமாகையால் நாம் சவரம்பண்ணும்போது நம்முடைய கன்னத்திலாவது உடம்பிலாவது ஒருபக்கம் படுமாகையால் அந்த காயத்தினுள்ளே இந்த ஸ்போர் என்னும் முட்டைகள் உள்சென்று அம்மனிதனுக்கு வியாதியை உண்டாக்கும். அந்தக்காயப்பட்ட இடத்தில் ஒரு நீர்க்கட்டி புறப்படும். சிலநாட்களில் இம்மனிதன் இறந்துவிடுவான் என்பதற்கு சந்தேகமில்லை. ஆகையால் இம்மாதிரி முடிகளினுலாவது தோலினுலாவது செய்யப்பட்ட சாமான்களை நாம் பிரயோஜனப்படுத்துமுன்னுல் அதைக் கொதிக்கவைக்கவேண்டும்.

அமெரிக்கன் மிஷன் "லினுக்ஸ்" பிரஸ், பசுமலை, 1929.

821

REG. NO.-M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

"ஞானிகளுக்கு முடி அவர்கள் செல்வம்; மூடரின் மதியீனம் மூடத்தனமே."

OFFICE OF THE ... 14 MAY 1929 MADRAS

Vol. VIII.] எப்பிரல்மீ 1929 [இலக்கம் 12

## பஞ்சாங்கம்.

1929 | விபவ௵ பங்குனிமீ | எப்பிரல்மீ | சுக்கில௵ சித்திரைமீ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 19 | 2 20 | 3 21 | 4 22 | 5 23 | 6 24 |
| 7 25 | 8 26 | 9 ● அமா. 27 | 10 தெ.வ. 28 | 11 29 | 12 ✲ கார். 30 | 13 சித். 1 |
| 14 2 | 15 3 | 16 4 | 17 5 | 18 6 | 19 7 | 20 8 |
| 21 9 | 22 10 | 23 ○ பௌர் 11 | 24 12 | 25 13 | 26 14 | 27 15 |
| 28 16 | 29 17 | 30 18 | | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். எ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணு 14. ஒரு வருஷ வரியொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## தன்னைத்தான் வெறுத்தல்.

சில வருஷங்களுக்கு முன்னே, ஒரு பெரிய பட்டணத்தில் நெருப்புப்பற்றிவிட்டதால், அதை நகரவாசிகளுக்கு அறிவிக்கும் மணி அடிக்கலாயிற்று. அப்பட்டணத்திலுள்ள ஒரு பாகத்தில் கட்டப்பட்டிருந்த வீடுகளெல்லாம் மரத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபடியால், அதிதுரிதத்தில் அக்கினியானது திடீரென்று இந்தவீடுகளைச் சுற்றிக்கொண்டது. அங்குள்ள வீடுகளையெல்லாம் பாதுகாக்க என்ன செய்யக்கூடுமோ அவைகளையெல்லாம் சர்க்காரும் நகரவாசிகளும் ஊக்கமாய்ச் செய்தனர். அக்கினி வளைந்துகொண்ட வீடுகளை இரட்சிக்க எவராலும் கூடாமல் போய்விட்டது. அப்போது அங்கே கூடிநின்ற ஜனக்கூட்டத்தின் வழியாக ஒரு ஸ்திரீ பாய்ந்துசென்று தீப்பற்றி யெரியும் அவ்வைந்து வீடுகளில் ஒன்றிற்குள் ஓடிப்போனாள். அவளுக்கு நேரிடும் ஆபத்தையறிந்தவர்கள் அவளைத் தடுக்கமுயன்றும் அவர்களுக்குக் கூடாமல் போய்விட்டது: அவளைப்பிடித்த எல்லாருடைய கைகளையும் உதறித்தள்ளிவிட்டு, அவைகளில் ஒன்றிற்குள்ளே விரைந்தோடி சற்று நிமிஷங்களுக்குப்பின் ஒரு துணி மூட்டையை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு வெளியே ஓடிவந்தாள். அப்போது அவள் அணிந்திருந்த வஸ்திரங்களும் அவளுடைய கூந்தலும் எரிந்துகொண்டிருந்தது. அவள் அன்புடன் எடுத்து அணைத்துக்கொண்டிருந்த பெரிய துணி மூட்டையும் தீயால் பிடிக்கப்பட்டது. என்றாலும் பிரமித்து நின்றவர்களில் சிலர் உடனே தண்ணீரைக் கொண்டுவந்து அவள்மேல் ஊற்றி தீயை அவித்துப்போட்டார்கள். அவளும் மூர்ச்சையற்றுக் கீழே விழுந்துவிட்டாள்.

அவளைத் தூக்கி யெடுத்து சுமந்துகொண்டுபோகும் பொழுது எரிந்துபோன அவளுடைய வஸ்திரங்கள் துண்டு துண்டாய்க் கீழே விழுந்தன. அவளுடைய முழுச்சரீரமும் காயமாயிருந்தது. விசேஷமாக அவளுடைய முகம் முற்றுமாய் வெந்துபோனதால், அது மனித முகம்போல் தோன்றவில்லை. அவள் வெளியே எடுத்துவந்த மூட்டையை அவிழ்த்துப்பார்த்தபொழுது அதற்குள் 11 வயதுள்ள பலவீனமுள்ள பெண்பிள்ளையொன்று காணப்பட்டது. அதற்கு யாதொரு விபத்தும் நேரிட்டதில்லை. தீப்பற்றி வீடு எரியும்வேளையில் அது வியாதியாய் ஒரு படுக்கையின்மேல் கிடந்தது. அது படுத்திருந்த அறையைத் தாய் பூட்டிவிட்டு வெளியே போயிருந்தமையால், அந்தப் பிள்ளை எழுந்து வெளியே ஓடிப்போகக்கூடாதிருந்தது. அந்த ஏழைப் பெண்பிள்ளை அநேக மாதங்களாய் ஆஸ்பத்திரியில் படுக்கையில் கிடந்து அதன்பின் சுகப்பட்டு வெளியேவந்தாள்.

---

## ஆன்ம ஸ்வதந்தரம்.

மனிதனை, ஏன் மனிதவர்க்கத்தையே ஒரு பேய் பிடித்திருக்கிறது. ஒரு பெருஞ்சாபம் அவனைப்பிடித்திருக்கிறது. அவன் தனது மூடத்தனத்தால் தனது கைகளாலேயே தானே, தனது கண்களை மூடிக்கொண்டு குருடனாகிவிட்டான். ஒரு பெரிய அந்தகாரம் அவனைக்கவிழ்ந்துகொண்டிருக்கிறது. அப்படி இப்படி அசைய முடியாதபடி தன் காலுக்குத்தானே தனது சொந்தக்கைகளாற் செய்த விலங்கை மாட்டிக்கொண்டு விட்டான். தான் ஏற்படுத்திய பழக்கவழக்கக்கோட்டைக்குள் தானே சிறையிலிருக்கிறான். எங்கு பார்த்தாலும் துக்கம், தொல்லை, தோல்வி, வீழ்ச்சி, மோசம், அழிவு முதலிய பெரும் அரக்கர்கள் இவனை விழுங்கிவிட ஆவலாய் வாயைத்திறந்து கொண்டிருக்கின்றனர். இப்பொழுது கதறுகின்றான்! இன்பமெங்கே என்று ஏங்குகின்றான்! வெம்புகின்றான்; புழுங்குகின்றான் வெதும்புகின்றான்; பொருமுகின்றான்; முட்டிக்கொள்கின்றான்; மோதிக்கொள்கின்றான்; தலைவிதி என்று தலையிலடித்துக்கொள்கின்றான்; தெய்வத்தை திக்கிக்கின்றான்; உலகத்தை வெறுக்கின்றான்; பழமையைக் கண்டு போற்றுகின்றான்; புதுமையைக்கண்டு பயந்தோடுகின்றான். சிறிது காலஞ்செல்கின்றது. இம்மனக்கொதிப்பு-அசாத்தியமனப்பசி--இக்கொரகொந்தளிப்பு அதுவும் அடங்கிவிடுகின்றது. பிறகு மலத்திலேயே பிறந்து, மலத்தையே தின்று, மலத்திலேயே புரளும் பன்றியைப் போல், உலகச் சிறு போகங்களிலே-உணவிலே-உறக்கத்திலே-காமத்திலே காலத்தைக் கழிக்கின்றான். பிறகு ஐயோ! இறுதியில் இக்கட்டைப்பிணம் நிஜப்பிணமாகிவிடுகிறது. ஐயோ! மனிதனே-சிருட்டியின் தலைவனே-கடவுளின் ரூபமே (விவிலிய வேதம்) இதுவா உனது தலைவிதி! அந்தோ! பாவம்!

மனிதனே, கொஞ்சநேரம் யோசனை செய்! சிறிது காலம் சிந்தித்துப்பார். உன் வாழ்க்கை சரியானதா? வீணாக கடவுளை வையாதே; உன் மூடத்தனம், உனது ஆசை முதலியவைகளை நிந்தனைசெய்; மற்ற ஜீவராசிகளைப்பார், அவைகள் எப்படி வாழ்கின்றன; நீ எப்படி வாழ்கின்றாய்; ஒப்பிட்டு நோக்கு. பறவைகளுக்குக் கவலைகளுண்டா? விலங்கினம் அழுகின்றதா? மரங்கள் வேலை செய்யக்காணோமே. ஒரு வானம்பாடியை எடுத்துக்கொள்; அது பறந்து, திரிந்து, பாடியாடிக் களித்துக் குதிக்கின்றது. அது சென்றதைப்பற்றி சிந்திப்பதில்லை; வருவதைப்பற்றி வருந்துவதில்லை; இதுவன்றோ வாழ்க்கை இன்பம்; இதுவன்றோ தெய்வலோகம்; அது தன்னை நம்புகின்றது; தனது சக்தியில் நம்புகின்றது; அமுதம் அதன் வாயினின்று வெளிவருகின்றது. ஆனால் நீ யெவ்வாறு வாழ்கின்றாய்? ஐயோ! பாழாய்ப்போன கவலைகளுனக்கு மாத்திரமா? இயற்கைத் தாய்க்கு நீ யாது குற்றம் புரிந்தாய்? ஆனால் நீ வாழ்வது தப்புவழியா? இயற்கைத் தாய்க்கு எதிரிடையாகச் செல்லுகின்றாய். கடவுர் இன்பத்தையே எங்கும் நிறைத்திருக்கிறார். அவர் சிருட்டி முழுவதும் அமுதம் பிலிற்றுகின்றது. ஆனால் அவர் உனக்குக் கொடுத்த பொருள்களை நீ சரியானபடி உபயோகிப்பதில்லை. நீ உன்னை நம்புவதில்லை; உனக்குச் சக்தியில்லை; ஆண்மையில்லை; வீரமில்லை; தீரமில்லை; கடவுள் உன்னுள்ளும் வியாபித்திருக்கிறார். அவரையே நீ நம்புவதில்லை; உனது சக்தியில் உனக்கு நம்பிக்கையில்லை. ஹே! பயங்காளி! என்ன காரியம் செய்யப்புகுந்தாய்? சேற்றில் நெளியும் புழுவைப்போல் சிறுமையிலே, வறுமையிலே, கலியினிலே, கலியினிலே, துன்பத்தில் நசுக்கப்பட்டு அழிகின்றாய்; கண்ணை விழித்துப்பார்; இயற்கையைத் தழுவிக்கொள்; உனக்குள்ளிருக்கும்-புதைந்து கிடக்கும் இரத்தினத்தை வெளிப்படுத்து; மோக்ஷமென்பது விடுதலை.

நீதானே பணத்தை உண்டாக்கினாய்; அதற்கு யார் இப்பொழுது அடிமையாயிருப்பது? அதுவும் நீ தானே, ஜாதி உன்னைக்கட்டுப்படுத்தலாம்; நீ அதைக்கட்டுவையா? சமூக மெய்வழி நீயுமவ்வழியன்றோ? நின்வழியைச் சமூகம் கொள்ளட்டுமே. பணம் உனக்காகவா; நீ பணத்திற்காகவா; ஜாதிக்குள் நீயா; உனக்குள் ஜாதியா? சமூகம் உனதா? நீ சமூகத்தின் சொத்தா? உனக்கு ஒன்றும் சொந்தமில்லை; ஆனால் நீ எல்லாவற்றிற்கும் சொந்தம். உனக்கு ஒன்றின்மேலும் அதிகாரமில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் உன்மேல் அதிகாரமுண்டு. நீ அடிமை, மானமில்லாதவன், வெட்கமில்லாதவன்; எடுப்பார் கைப்பிள்ளையாய், புழுவாய் வாழுகின்றாய். இதைவிட்டுப் பருந்தாய், குயிலாய், ஆண் சிங்கமாய், பெண் புலியாய் ஏன் திரும்பக்கூடாது? சட்டங்களும் கட்டுப்பாடுகளும், உனக்காகவே; நீ அவைகட்காக அல்ல; அவைகளை உதறியெறி. உன் மனச்சாட்சி; உள்ளுணர்வு என் ஒரேவார்த்தையில் உன்னுள் எங்கேயோயிருக்கும் "நீ" உனது அதிகாரத்தை, கம்பீர தொனியை வெளிப்படுத்து. "நானே எனக்குத் தலைவன்" "நானே எனக்குத் தலைவன்" என்று உனது உரத்த சப்தத்தினுச்சியில் கூவி உலகத்திற்கறிவி. புத்தகங்களும் ஆசாரங்களும்; பெரிய வர்க்கத்தினரும், மஹான்களும், உனக்கு வழிகாட்டிகளே; அதிகாரிகளல்ல. உன்னதமானவன் நீயே ஒன்றும் பொருள். மற்றவையிரண்டாந்தரமே.

நீ கோழையாய்-அடிமையாய்ப் பயங்காளியாயிருக்கும் வரையில் உனக்குச் சுகம் கிடையாது. மஹான்கள், பெரியோர்கள், சுவாமிகளென்பவர்களின் வாழ்க்கையைப்பார்; அவர்களும் மனிதர்களே; தேவலோகத்திலிருந்து திடுமென அவர்கள் குதித்துவிடவில்லை. ஆனால் அவர்கள் மனிதர்தேவர்களானதின் காரணம் அவர்களே. கடவுள் உனக்கென்றும் அவர்களுக்கென்றும் தனியான விதிகள் ஏற்படுத்தவில்லை. எல்லோருக்கும் ஏன் எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாய் அவர் ஒரே ஒரு விதி-இயற்கைக்கட்டுப்பாடு ஏற்படுத்தியிருக்கிறார். அவர்கள் அவற்றைக் கடப்பதில்லை; நீ எவற்றைக் கடந்துவிடுகிறாய். மற்றொன்று அவர்கள் அவர்களின் தலைவர்களாயிருக்கின்றனர். புத்தர், இயேசு, மஹமத், சங்கரர் முதலியோரின் வாக்யங்களில் ஒரு அதிகாரத்வனி ஒலிக்கின்றது. அவர்கள் வார்த்தையில் யுக்தி, ஞானம் கிடையாது. அவர்கள் நேருக்கு நேரே தாங்கள் கண்டதை ஆத்மனுக்குக் கூறுகின்றார்கள். நீ, நீயே பயப்படுகின்ற உனது எண்ணத்தை-அது சிலருக்கு எதிராக இருந்தால் ஜாதிக்குப் புறம்பாயிருந்தால்-இம்மாதிரி எவ்வித "ஆணை"க்கட்டுப்பட்டிருந்தாலும்சரி, வெளியில் கூற அஞ்சுகிறாய். அம்மாதிரி நடக்க முயல்வதில்லை. நீ இவ்வாறு வாழும் வரையில் உனக்கு இம்மைச்சுகமும், மறுமைச்சுகமும் கிடையாது. உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. உனக்குச் சக்தியின் அருளில்லை.

ஆதலால் புதல்வா! இன்றுமுதல் ஜாக்கிரதையாயிரு. "தஸ்மாத் ஜாக்ரதா! ஜாக்ரதா" என்பதை ஞாபகத்தின்

வைத்துக்கொள். உன்னை நம்பி உலகப்பொருளை அனுபவி; முதல்முதல் உபதேசம்-பரமார்த்திகார்த்திலாயினுஞ் சரி, வியவகாரத்திலாயினுஞ்சரி, உன்னைநம்பு. இரண்டாவது இயற்கையின் வழியே இயற்கையை அனுபவி, அப்பொழுதே நீ அமரனாகிறாய். உனக்குத் தொல்லையில்லை; தோல்வியில்லை; வீழ்ச்சியில்லை; சாவில்லை.

ஆ-வி.

---

## ஒற்றுமையும், முன்னேற்றமும்.

ஒற்றுமை, முன்னேற்றம் என்னும் இவ்விருவார்த்தைகளும் தொடர் வார்த்தைகளல்லவென்றாலும், ஒன்றுக்கொன்று சம்பந்தமான வார்த்தைகளென்று கூறலாம். ஒற்றுமை உள்ள இடத்தில் முன்னேற்றம் என்னும் இரதம் வெகுநன்றாய்ச் செல்லுமென்பதில் ஐயமில்லை. சமாதானத்துடன் செய்யும் காரியங்கள் யாவும் ஒற்றுமையையே குறிக்கும். சச்சரவென்பது அருவருக்கத்தக்கது, என்பதோடு மாத்திரமல்ல; மிகத் துவேஷமான காரியமாம். இதனால் விளையும் தீமைகளை, எழுதப்புகின் இவ்வேட்டிலடங்கா. சமாதானமின்றி சதா சச்சரவு செய்துகொண்டிருந்து கெட்டுப்போன மனிதர்கள் ஆயிரமாயிரம்; அழிந்துபோன குடும்பங்களோ பதினாயிரம் பதினாயிரம். சகல வலிமைகளும் ஒருங்கே நிறையப்பெற்ற ராஜ்யங்களானபோதிலும், சச்சரவு நேரிடுமாயின் தகர்ந்துபோகின்றதை பிரத்தியக்ஷமாகவும், அநுபவ பூர்வமாகவும் அறிகிறோம். இதனாலன்றோ "போராடின இடம் புலையாடித்திரும்" என ஆன்றோர் கூறியிருக்கின்றனர். எங்கு சச்சரவிருக்கின்றதோ, அங்கு ஒற்றுமையிராது; சமாதானமில்லை; ஆனந்தமில்லை; கண்ணியமில்லை; கண்ணீரும் கம்பலையுந்தான் கதியாகிறது. இவற்றை விடுத்து சமாதானத்துடன் வாழும் குடும்பங்களையும், மனிதர்களையும் கவனிப்போமாயின் என்ன ஆனந்தமாயிருக்கிறது. அவர்கள் மனம் களிகூர்ந்திருக்க முகத்தில் புன்முறுவல் நர்த்தனம் செய்கின்றது இதனாற்றான் கிறிஸ்து பெருமான் மலைப்பிரசங்கத்தில் "சமாதானமுள்ளவர்கள், பாக்கியவான்கள்" எனக்கூறியுள்ளார். சமாதானமுள்ள குடும்பங்களில் அவர்கள் தொடங்கும் எக்காரியங்களிலும் ஜெயலக்ஷ்மியாகிய ஈஸ்வரி தன் கருணைக்கண்ணைத் திருப்புகின்றாள். அங்கு தொட்டதெல்லாம் துலங்குகிறது, ஒற்றுமையாலேயே சேர்ந்து வாழும் வலிமையும் கிடைக்க பல அரிய காரியங்களையும் முடிக்கலாம். கவியாசாரிய சுப்பிரமணிய பாரதியாரும், ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே; நம்முள் ஒற்றுமை நீங்கிலனைவர்க்குந்தாழ்வே; நன்றிது தேர்ந்திடல் வேண்டும், இந்த ஞானம் வந்தாற்பின் வேறென்ன வேண்டும், என வியந்தோதியிருக்கின்றனர்.

தற்காலம் தேசம் இருக்கும் ரீதியைக் கவனியுங்கள். எங்கு பார்ப்பினும் வேற்றுமையும், சச்சரவுமாக இருக்கின்றதேயன்றி நாட்டிற்கு நன்மை பயக்கும் விஷயமொன்றையேனும் கண்டிலேம். இதற்குக் காரணமென்னவென்று நினைக்கிறீர்கள். ஒற்றுமையின்மைதான். வடக்கே ஹிந்து-முஸ்லீம் கலவரமென்றால், தெற்கே பிராமணர்—பிராமணரல்லாதார் சண்டை. இம்மாதிரி சண்டைகளை விடுத்து ஒற்றுமையோடு காரியங்களை நிகழ்த்துவதாயின் பாரத அன்னையின் அடிமை விலங்குகள் தானே தகர்ந்துவிடுமன்றோ?

இனி முன்னேற்றமென்பதைப்பற்றியும் சிறிது கவனிப்போம். எவ்விஷயத்திலும் முன்னேற்றமே இப்போது வேண்டற்பாலது கல்வி, நாகரீகம், ஆசாரம், பாஷை, விவசாயம், குலம், ராஜீயம், மதம் முதலிய யாவற்றிலும் முற்போக்கடைவதுதான் நமது கண்ணோக்கமாயிருக்கவேண்டும். நமது நாட்டிலும் அநேக விஷயங்கள் முன்னேற்றம் பெற்றிருக்கின்றதாலும், அவை மேற்போக்கான முன்னேற்றமெனக் கூறிவிடலாமேயன்றி அடிப்படையான விஷயங்கள் பல முன்னேற்றமடையாமலிருப்பதைக் காணலாம். உலகம் என்னும் கடலில், முன்னேற்றம் என்னும் படகை நன்மையுடன் செலுத்தி உத்திருஷ்டமான பாதைகள் அனைத்திலும் முன்னேற்றமடையவேண்டியதே நமது முதற்கடமையாயிருக்கவேண்டும்.

ஒற்றுமையும் முன்னேற்றமும் எங்கெங்கு ஊங்கொள்ளுகிறதோ அவ்விஷயம் பெரிதானாலும், சிறிதானாலும் ஜெயமாகவே முடிகின்றது. ஓர் குடும்பத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ளுவோம். அவர்களுக்குள் சமாதானம் நிலவுமானால் காரியமும் நன்மையாகவே முடிகின்றது தாய்க்கும் பிள்ளைக்கும், மனைவிக்கும் புருஷனுக்கும், சகோதரர்களுக்குள்ளும் சமாதானமின்மை இருக்குமாயின், தந்தையோர் வழி, தாயார் வேறொருவழி, பிள்ளைகள் மற்றுமொருவழியாகச்செல்ல அவர்களின் நிலைமை



எவ்வாறு இருக்குமென்பதை இங்கு விவரித்துரைக்க வேண்டியதில்லை. இதுபோலவே, ஓர் சங்கத்தை எடுத்துக்கொள்வோம். அவர்களுக்குள் ஒற்றுமையின்றேல், முன்னேற்ற மென்பது கிடைக்கவேமாட்டாது. தலைவர் ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லுவார்; காரியதரிசி அதைக்கவனியாமல் தம் மனம்போல் ஓர் காரியத்தைச் செய்வார். பொக்கிஷதார் யாருக்குப்பணம் கொடுப்பதெனத் திகைப்பார்; மெம்பர்கள் சண்டப்பிரசண்டம் பண்ணுவார்கள். இதனால் அச்சங்கம் என்ன நோக்கத்தைக் குறித்து ஆரம்பிக்கப்பட்டதோ, அந்நோக்கம் சித்திபெறாது, சங்கம் சங்கடத்திலேயே முடிகின்றது. ஒற்றுமையும், முன்னேற்றமும், இணைபிரியாது உறவாடுவதற்கு என்னென்ன சாதனங்களுண்டோ, அவைகளைக் கண்டுபிடித்து அதன் வழி செல்லுதலே புத்திசாலித்தனமென்பதுடன், காரிய அநுகூலத்திற்கும் வழியேற்படும்.

ஆனந்த விஜயன்.

---

## தலைமை உபாத்தியாரும், தமிழ்ப் பண்டிதரும்.

ஆங்கிலக் கலாசாலைகளில் சுதேச பாஷைகளையுங் கற்பித்து வருவது தெரிந்த விஷயம். ஆயினும் உபாத்தியாயர்களும், பிள்ளைகளும், சுயபாஷைப் பயிற்சி செய்வதில் சிரத்தை எடுப்பதில்லை, ஆதலால் பட்டம்பெற்ற தலைமை உபாத்திகளும் சுயபாஷையில் நிரக்ஷரகுக்ஷிகளாயிருப்பதுமன்றி, அதுவே பெருமை என்றுங் கருதுகின்றார்கள். ஒரு ஆங்கிலப் பாடசாலையில் தமிழ்ப் பண்டிதர் ஒருகால் தனக்கு விடுதி வேண்டுமென்று தலைமை உபாத்தியாயருக்குக் கடிதமெழுதினார். அவர் தன் கருத்தை அறியமுடியாமல் பண்டிதரிடமே சென்று வினவ, அவர் அதை விளக்குமாற்றால் விளக்கினார்.

### தமிழ்ப் பண்டிதரின் கடிதம்.

ஐயா,

இன்று என் தலைவிதி வசத்திற்காக ரஜா வேண்டும் உத்தரவை எதிர்பார்க்கிறேன். உழவலன் நமசிவாயம்.

தலைமை உபாத்தியாயர் தலை விதி வச மென்பதன் அர்த்தம் விளங்காமல் பல உபாத்தியாயரிடம் காட்டியும் தெரியமுடியாமல் கடைசியாகத் தமிழ்ப் பண்டிதரிடம் வந்து தலை விதி வசமென்றுலென்ன என்றனர். தமிழ்ப் பண்டிதர், காலஞ்சென்ற என் தலைவிக்கு இன்று திவசம், (சிராத்தம்), ஆகையால் இன்று தலைவி, திவசத்திற்காக என்று எழுதியிருக்கிறேன், வேறு ஒன்றுமில்லை என்றார். இதைச் செவியுற்ற அனைவரும் முறுவலித்துப் பண்டிதரை மெச்சினார்கள்.

"தாய் மொழி மதியான் தலை விதி நோவான்."

---

## குடிவெறி.

கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை இவையைந்தும் பஞ்சமா பாதகம் எனப்படும். கள்ளுண்ணலை இந்தியர் இவ்விதம் எண்ணியிருக்க, தற்பொழுது இந்திய சமுதாயங்களில் மதுபானம் புகுந்து பெருங்கேடு செய்து வருவதை நாம் துக்கத்துடன் கவனிக்கின்றோம்.

[நம்மவரில் பலர் மேற்கத்தியரோடு அதிகமாய்ச் சம்பந்தப் படுவதினாலேயோ, பலர் மலைக்காடுகளுக்கு வேலைகளுக்குப் போய்வருவதினாலேயோ, பலர் கள்ளிறக்குவதினாலேயோ இத்தீமை நம்மவரில் பலரைப் பிடித்தாட்டுகிறதென்று பிரலாபிக்கின்றோம்.]

சற்றே நாம் கண்விழித்து நமது நிலைமையைப் பரிசோதித்தல் நலமாயிருக்கும்.

### குடிவெறியின் தீமைகள் சொல்லாமலே தெளிவாயிருக்கின்றன.

(1) மானிடசரீரம் தேவாலயம்.—இவ்வாலயம் மதுபானத்தினால் தீட்டாகின்றது. குடியன் அசுத்தன். அவனது மூளை மயங்கி, ஈரல் கலங்கி, குடல் புண்படுகின்றது. வேர்வை நாறி, வாயின் வழியும் மூக்கின் வழியும் துர்க்கந்தம் எழும்புகின்றது. பஞ்சபொறிகள் தளர்ந்து, பெலன் குன்றி, பலவித நோய்கள் சூழ்ந்து பிடிக்க, நிர்ப்பந்தனாய்க் காலத்திற்கு முன் தற்கொலைபுரிந்து குழியில் இறங்குகிறான்.

தானியேல் என்னும் ஒருவன் ஊரில் மிகுந்த பெலசாலியான வாலிபன். குடிவெறியில் பழகினான். சொல்லப்பட்ட போதனைகளை அசட்டை செய்தான். தீமை நாளுக்குநாள் பெலனடைந்தது. கள், சாராயம், கஞ்சா, இவற்றிற்கு அடிமையானான். சீக்கிரத்துக்குள் எல்லாம் இழந்து வயிறு பருத்து, நெஞ்சு

உலர்ந்து கைகால் சூம்பி, கண்கள் தள்ளி நடைப்பிணமாய் சில வருடங்கள் கழித்து சாராயம் வாயிலிருக்க 38-ம் வயசில் கல்லறையில் புகுந்தான்! இதுதான் குடியன் முடிவு.

(2) குடியனின் பிள்ளைகளும் குடியாகிறார்கள். பிதாவின் சுகம் பிள்ளைகளுக்குப் பிதிரார்ச்சிதம். ரத்தத்திலும் பழக்கத்திலும் பிள்ளைகளைப் பிடிக்கின்றது. குடியன் பிள்ளைகள் குடியரே. சாமுவேல் என்னும் குடியனுக்கு இரண்டு மக்கள். இருவரும் தகப்பனைவிட ஏழு மடங்கு குடியர். மூன்றும் தலைமுறையாரோ பேரனைவிட பதினறுமடங்கு குடியர். குடும்பம் முழுவதும் மதுபானத்தால் அர்த்தநாசத்தின் கரையிலாயிற்று. பின் சந்ததியை நேசிக்கிறவர்கள் மதுபானம் தீண்டுவார்களா?

(3) குடியனது பங்கு வறுமையே. அவன் வீட்டைப்பார், கூரையில் ஓலை இல்லை; சுவர் இடிந்துவிழுகிறது. மனைவியைப்பார், கந்தைத் துணி; கழுத்தும் காதுகளும் வெறுமை. கண்ணீரும் பெருமூச்சும் அவளது ஓயா அநுபவம். பிள்ளைகளைப்பார், கட்ட கந்தை இல்லை; தலைக்கு எண்ணெய் இல்லை. பாடசாலைக்கோ, கோவிலுக்கோ அனுப்ப எதுவில்லை. காட்டுக் கழுதைக்குட்டிபோல் அலைகிறார்கள். வஸ்துவெல்லாம் ஒவ்வொன்றாய்ப் போயிற்று. இரவு பகலாய் வருந்தி சம்பாதிக்கும் பொருளெல்லாம் பொத்தலான பைகளில் போடப்படுகிறது. நிர்ப்பாக்கியம்!

(4) குடியர் எங்கேயோ அங்கே சண்டை சச்சரவுகளுக்கு குறை இல்லை. ஒரு உபதேசியார் சொன்னதின்படி, ஒரு ஆராதனைக்கு சிலர் வெள்ளைக்குதிரைகளிலும் சிலர் காரிக்குதிரைகளிலும் ஏறிவரவும், வெள்ளை காரிக்கு நேராகவும் காரி வெள்ளைக்கு நேராகவும் சாடி மோதவே பெருங்குழப்பம் உண்டானதாம்.

குடியர் வசிக்கும் வீடுகளிலும், ஊர்களிலும் அந்திமுதல் விடிகிறதுவரை ஓயாத சந்தடியும் அடிபிடியும் சாதாரணமானவை. நாய்களின் உறுமலும், நரிகளின் ஊளையும் இரவு முழுவதும் அங்கே கேட்கப்படும். கிராமங்களில் இந்தக் காட்சியைவிட பயங்கரம் வேறுயாது உளது?

குடிவெறியைத் தடுக்காவிடில் நமது சமுதாயம் தாழ்வடைந்தே போகுமென்பது நிச்சயம். உலக சரித்திரம் இதை விளக்கிக்காட்டும். நாம் சமுதாயமாக உயர்வடையவேண்டுமாயின் இத்தீமை முற்றிலும் நீங்கல்வேண்டும்.

## சிறு கதைகள்.

1. குடியனொருவன் படந்தால்மூட்டு சாராயக்கடையில் உண்ணி அப்பமும் வாங்கிக் கட்டி நிறையக்குடித்துக்கொண்டு ஆடி ஆடிப் புறப்பட்டான். மீதிவந்த உண்ணி அப்பம் மடியில் இருந்தது. சில அடி செல்லுமுன் அவன் எதிரிருந்த கருங்குதிரை அவனை சோட்டங்காலில் பொத்தென்று விழத்தள்ளிற்று. அங்கே கிடந்து புரண்டான். குடித்ததெல்லாம் வாந்தியன்னி தேகமும் துணியும் ஒன்றுபோல் அசுத்தமாயிற்று. தலை உயர்த்தித் திரும்பவும் பொத்தென்று விழுவான். இப்படி அவஸ்தைப்படும் வேளையில் மடியிலிருந்த உண்ணி அப்பம் நினைவில் வந்தது. கையால் அங்கும் மிங்கும் தடவிப்பார்த்தான். காணவில்லை. கடைசியாய் பக்கமெங்கும் தடவிப்பார்க்கும்பொழுது சாடிப்போய்க்கொண்டிருந்த ஒரு சிறு தவளை கைக்குத் தட்டினது. அதைப் பிடித்தான். இதுதான் உண்ணி அப்பம் என்று வாயிலே போட்டான். வாய்க்குள் தவளை வெளியேசாடப் பார்த்தது. அவன் கோபத்தோடே அதைக் கடித்து "இதற்கா உன்னைவிலைகொடுத்து வாங்கினேன்? போகவிடுவேனோ?" என்று சொல்லி தவளையை மென்று தின்றுவிட்டான். குடியன் பயித்தியக்காரனிலும் கேடானவன்.

2. சிதம்பரம்பிள்ளை என்ற தச்சன் ஓர் பெரிய குடியன். வேலை எம்மட்டாயிருந்தாலும் குடிக்கும் சமயம் வந்தவுடன் தளவாடங்களையும் எறிந்துவிட்டு ஒரே பாய்ச்சலாய் சாராயக்கடைக்குப் பாய்ந்து குடித்துப் புரளுவான். ஒருநாள் இவ்விதம் குடித்து பாய்மரம்போல ரோட்டோரமாய் விழுந்துகிடந்தான். உணர்வுமில்லை, அசைவுமில்லை. இப்படி கிடக்கும்போது ஒருநாய், ஒருவேளை இவனை மரக்கட்டையென்று நினைத்ததோ, இவன் அருகே சென்று தேகத்தில் மூத்திரம் பெய்ய ஆரம்பித்தது. தேகத்தில் ஈரம் பட்டதையுணர்ந்து மழை பெய்கிறதென்று நினைத்தான். இப்படி நினைத்துக்கொண்டு, "இந்த மழைக்கும் சிதம்பரம்பிள்ளை அஞ்சுவானு?" என்று



புலம்பிப் புலம்பி அசையாமலும், கண்திறவாமலும் படுத்துக்கொண்டான். குடியன் மரக்கட்டைக்கே நிகர்.

## பள்ளிக்கூட வாழ்வின் மேன்மை.

இந்தியாவில் பள்ளிக்கூட வாழ்வுக்கு நாம் போதுமான முக்கியத்துவமளிக்கவில்லை. நாம் சர்வகலாசாலை மாணவர்களின் பெரிய விஷயத்தில் இது மறையும்படி விட்டுவிடுகிறோம். சர்வகலாசாலை வாழ்வின் முக்கியத்தை நான் குறைக்க விரும்பவில்லை. ஆனால் பள்ளிக்கூட வாழ்வுதான் அதற்கு முன்னதாக ஏற்பட்டு அஸ்திவாரமாயும் இருக்கிறது. சர்வகலாசாலை நல்லதைக் கெடுக்கமுடியும். ஆனால் கெட்டதைநல்லதாக்க முடியாது. வாட்டர் லூயுத்தம் ஈட்டன் பள்ளிக்கூடத்தின் விளையாட்டுஸ்தலத்தில் வெல்லப்பட்டதாக டியூக் ஆப் வெல்லிங்டன் கூறினரேயொழிய ஆக்ஸ்போர்டு அல்லது கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளைக்கூறவில்லை. நெருங்கிய சிநேகம்ஏற்பட்ட விடம் சர்வகலாசாலையாகவிருந்தபோதிலும் பிற்காலத்தில் ஒன்று கூடுவதற்குப் பள்ளிக்கூடமே தகுந்த ஸ்தலமாகவிருக்கிறது. கலாசாலையில் கூடப் படித்தவரைவிடப் பள்ளிக்கூடத்தில் படித்தவருக்கே அதிகச்சலுகை காட்டுவோம். இங்கிலாந்தில் பள்ளிக்கூடம் பலரை ஒன்றுபடுத்தும் பந்தமாக விருக்கிறது. இந்தியாவிலும் இது நன்கு உணரப்படவேண்டுமென்று விரும்புகிறேன். சர்வகலாசாலையில் ஒவ்வொருவருக்கும் தனி உணர்ச்சி அதிகமாகவிருக்கும். பள்ளிக்கூடத்தில் ஒன்றுசேர்ந்த உணர்ச்சிதான் அதிகமாக இருக்கும். ஒரு நல்ல பள்ளிக்கூடத்திற்கு நல்ல ஆசிரியர்களிருக்க வேண்டும். ஆனால் அவர்களே பள்ளிக்கூடத்தை உண்டுபண்ணிவிடமாட்டார்கள். எங்கள் மூளைகளைப் பயிற்சி செய்விக்க நீங்கள் விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அது கல்வியின் ஒரு பாகமே,

ஒரு நல்ல பள்ளிக்கூடத்தைத் தனிமையாக எடுத்துக்காட்டுவது அதன்போக்கே. அந்தப் போக்கு எல்லா மாணவர்களுடையவும் பொதுவான உணர்ச்சியாகும். பள்ளிக்கூடத்தை நல்லதாக்குவதும் கெடுப்பதும் பையன்களே. அது விதிகளின்படி நடப்பது உத்தரவுக்குக் கீழ்ப்படிவது முதலியவை மாத்திரமல்ல. அது பையன்களுக்குள்ளாகவே இயற்கையாக உள்ள சுயமதிப்புணர்ச்சியே. சில விஷயங்கள் பையன்களுக் கேற்றதல்லவென்று நாம் கருதுகிறோம். இது பாரம்பரையாகப் பலப்பட்டுவிடுகிறது. அதை மீறி நடப்பதற்குத் தவறான வழியில் அதிகத் தைரியம்வேண்டும். பையன்களுக்குள் இந்தச் சுயமதிப்பு உணர்ச்சி சரியான வழியிலிருந்தால், பள்ளிக்கூடத்தின் போக்கு நன்றாகவிருக்கும். பிற்காலத்தில் நீங்கள் உங்களுடைய பள்ளிக்கூடத்தின் பெருமையை மறக்கவேமாட்டீர்கள். மாணவர்கள் பள்ளிக்கூடத்திலேயே சாப்பிட்டுக்கொண்டு படிக்குமிடங்களில் இம்முறையேற்படுவது இன்னும் சுலபம். ஏனெனில் அங்கு ஒருமித்த வாழ்வு இருந்து வருகிறது. வகுப்புக்கு வெளியில் பள்ளிக்கூட வாழ்வைச் சாத்தியமான பூரா அளவிற்கும் உபயோகித்துக்கொள்ளுங்கள். விவாதச் சங்கங்கள் விளையாட்டுகள், சங்கீதம், பொருட்காக்ஷி, சாரணர்படை முதலியவற்றில் தான் உங்கள் குணம் அமைந்து பிரதிபலிக்கும். நான் சுயமதிப்பைப்பற்றிப் பேசுகையில், உண்மையாக உங்களுக்குள்ள மதிப்பையே குறிப்பிடுகிறேன். சிறுபிள்ளைத்தனமாகக் கோபமடைந்து பள்ளிக்கூட வேலை நிறுத்தங்களில் முடியும் அற்பகர்வத்தைக் குறிப்பிடவில்லை.

## மாணவர்களின் தேகப்பயிற்சி.

நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களின் தேகப் பயிற்சியைப்பற்றி விசாரித்து அறிவிக்கும்படி கவர்மெண்டினால் நியமிக்கப்பட்ட கமிட்டியின் யாதாஸ்தின் நகல் வரப்பெற்றோம். சென்ற வருஷம் ஜனவரி மாதத்தில் சென்னை சட்டசபையில் நிறைவேறின ஒரு தீர்மானத்தை அனுசரித்து அந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும அங்கத்தினர்களாக இருந்திருக்கிறார்கள். கமிட்டிசெய்த விசாரணை போதுமானதென்று நாம் நினைக்கக்கூடவில்லை. மாகாணத்திலுள்ள நடுத்தரப் பள்ளிக்கூடங்களின் தலைமை உபாத்தியாயர்கள் சில கேள்விகளுக்குப் பதில் எழுதி அனுப்பும்படி கேட்கப்பட்டனர். இப்படிக் கிடைத்த பதில்கள் தவிர ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயரும் ஒரு உத்தியோகஸ்தரும் கமிட்டியால் விசாரிக்கப்பட்டனர். இந்த ஆதாரங்களின் மேல்தான் கமிட்டியின் யாதஸ்து எழுதப்பட்டிருக்கிறது. சில பள்ளிக்கூடங்களின் மாணவர்களைக் கமிட்

டிநேரில் விசாரித்திருக்கவேண்டுமென்று நாம் கருதுகிறோம். தேகப்பயிற்சியின் பொருட்டு செலவிட அவர்களுக்கு அவகாசமிருக்கிறதா? எந்த விளையாட்டுகளை அவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்ற விஷயங்களைப்பற்றியாவது அவர்களைக் கமிட்டி நேரில் விசாரித்திருக்கவேண்டும். நாம் மாணவர்களைக் கவனித்திருக்கிறவரையில், அவர்கள் பள்ளிக்கூட வேலைகளைச் செய்யநேரம் போதாமல் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. கல்விகற்றல் ஒரு ருசிகரமான வேலையாக இராமல், மாணவர்களைக் கசக்கிப் பிழிவதாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு மாணவனும் ஒரு பெரிய மூட்டை "நோட்" புஸ்தகங்களைச் சுமந்து கொண்டு போகிறான். தங்களுடைய ஞாபகசக்தியைக் காட்டிலும் நோட் புஸ்தகங்களை நம்பும்படி அவர்கள் கற்பிக்கப்படுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆகையால் மாலையில் பள்ளிக்கூடம் கலைந்தும் விளையாட்டு ஸ்தலங்களுக்குப் போக அவர்கள் உற்சாகமற்றவர்களாகி விடுகிறார்கள். மாணவர்கள் படிப்பதைக் கவனிக்கும் ஒருவர் அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறையில் ஏதோ பிழை இருக்கிறதென்றும், அவர்கள் சுமக்கக்கூடாத பளு அவர்கள்மீது ஏற்றப்படுகிறதென்றும் நினைக்கவேண்டியிருக்கும். இப்படிப்பட்ட நிலைமையில் தேகப்பயிற்சியில் அவர்கள் உற்சாகமற்றவர்களாக விருப்பது சகஜமே.

தேகப்பயிற்சியைப்பற்றிக் கமிட்டி சொல்லியிருக்கிற யோசனைகள் சிலாக்கியமானவைகளே. பிள்ளைகள் கோஷ்டி கோஷ்டியாக விளையாடும்படி செய்யவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஒரு பந்தயத்தில் ஒரு மாணவன் ஜயிக்க விரும்பும்படி செய்யப்படுவதைக்காட்டிலும் அவனுடைய கோஷ்டி ஜயிக்கவிரும்பும்படி செய்யப்படவேண்டுமென்று கமிட்டி சொல்லியிருப்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அப்படி மாணவர்கள் கோஷ்டி கோஷ்டியாகப் போட்டிபோட்டு விளையாட விளையாட்டு ஸ்தலம் அவசியமாகையால் அதற்காக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் கவர்ன்மெண்டார் பணஉதவி செய்யவேண்டுமென்று கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. விளையாட்டுகளின் பொருட்டுச் சிறிது சம்பளத்தை உயர்த்தலாமென்றும், பாதிச் செலவைக் கவர்ன்மெண்டார் இனமாகக் கொடுக்கலாமென்றும் கமிட்டி இன்னொரு யோசனையையும் சொல்லியிருக்கிறது. இப்பொழுதே பள்ளிக்கூடச் சம்பளம் புஸ்தகக்கிரயம் முதலிய செலவுகளை சமாளிக்கக் கூடாமல் பல பெற்றோர்கள் திணறுகிறார்கள். விளையாட்டுச் செலவையும் அவர்கள் தலையில் சுமத்தக் கூடாது. அந்தச் செலவைக் கிரமமாகக் கவர்ன்மெண்டுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிற்காலப் பிரஜைகள் திட சரீர முள்ளவர்களாக இருக்கும்படி செய்யவேண்டியது கவர்ன்மெண்டின் கடமையே.

இப்பொழுது பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு மாணவனும் வாரத்தில் ஒரு மணிநேரம் தேகப்பயிற்சி வகுப்பில் ஆஜராகவிருக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறதாகவும் அது சரியல்லவென்றும் ஒவ்வொரு நாளுமோ அல்லது ஒன்றுவிட்டொரு நாளோ கால் மணி நேரமாவது தேகப் பயிற்சியின்பொருட்டு அவன் செலவிடும்படி செய்யப்பட வேண்டுமென்றும் கமிட்டி சொல்லியிருக்கிறது. ஆரம்பமுதல் கல்வி இலாக்கா உத்தியோகஸ்தர்கள் மேனாட்டு தேகப்பயிற்சி முறைகளில் இந்திய மாணவர்களைப் பழக்க முயன்று வந்திருப்பதாலேயே இந்த வேலை திருப்திகரமான பலன் தரவில்லை. "ஜிம்னாஸ்டிக்ஸ்" என்று சொல்லப்படும் பயிற்சி முறைகளுக்குப் பல சாதனங்கள் அவசியம். அவை ஒவ்வொரு மாணவனுக்கும் தனியாக இருக்க முடியாது. 40 பிள்ளைகளுள்ள ஒரு வகுப்பில் ஒரு மாணவனுக்கு 2 நிமிஷ நேரம் அகப்படுவது அசாத்தியமாகவிருக்கிறது. "பார்ஸ்" என்று சொல்லப்படும் சாதனங்கள் அன்னியிலேயே ஏக காலத்தில் நூறு பிள்ளைகள் தேகப்பயிற்சியை அப்பியசிக்கக்கூடிய முறைகள் ஏற்கெனவே இந்ததேசத்திலிருந்தன. உதாரணமாக தண்டால் என்ற முறையை எடுத்துக்கொள்வோம். தண்டால் செய்வதால் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையிலுள்ள ஒவ்வொரு தசைக்கும் உழைப்புண்டாகிறது. நாள் ஒன்றுக்கு ஒரு மாணவன் இரண்டு மூன்று நிமிஷநேரம் தண்டால் செய்வானானால், 6 மாத காலத்தில் அவனுடைய புஜங்கள் இரண்டு மார்பகன்று தொடை முழங்கால் முதலியன கெட்டிபட்டுவிடுகின்றன. அப்படிப்பட்ட தேகத்தை உடைய பையன் தைரியமுள்ளவனாகவுமிருப்பான். இப்படிப்பட்ட அப்பியாசங்களில் பிள்ளைகளைப் பழக்கிவிட்டால் அவர்கள் காலை மாலை நேரங்களில் அவர்களுடைய வீடுகளிலேயே இந்த அப்பியாசங்களைச் செய்து திடசரீரிகளாக விருப்பார்கள்.



1359

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி."

OFFICE ... 19 JUN 1929 ... MA...

Vol. IX.] மேமீ 1929 [இலக்கம்

## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில வருஷ சித்திரைமீ | மேமீ | சுக்கில வருஷ வைகாசிமீ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 19 | 2 20 | 3 21 | 4 22 |
| 5 23 | 6 24 | 7 25 | 8 ● அமா. 26 | 9 ※ கார். 27 | 10 28 | 11 29 |
| 12 30 | 13 31 | 14 சித். 1 | 15 2 | 16 3 | 17 4 | 18 5 |
| 19 6 | 20 7 | 21 8 | 22 9 | 23 ○ பௌர். 10 | 24 11 | 25 12 |
| 26 13 | 27 14 | 28 15 | 29 16 | 30 17 | 31 18 | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription.—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

Office of the Supdt., Kallar Reclamation, Madura, 25—3—29

**சர்க்குலர்.**

இதனால் எல்லா கள்ளர்ஸ்கூல் உபாத்தியாயர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், கள்ளர் பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டு விடுமுறை நாட்களைத் தவிர வேறு நாட்களில் எவ்வித காரணத்தாலும் மூடப்பட்டால் உடனே தாமதமின்றி அந்த ரேஞ்சு கள்ளர்ஸ்கூல் சூபர்வைசருக்கும், டிப்டி இன்ஸ்பெக்டருக்கும் கண்டிப்பாகத் தெரிவிக்கவேண்டியது. அவ்வாறு ரிப்போர்ட்டு செய்யத்தவறினால் தகுந்த கோட்மெஸ் எடுத்துக்கொள்ளப்படும்.

(Sd.) K. P. Janardhan Rao,
Superintendent K. R.

**விளம்பரம்.**

குறிப்பு:—அடியிற்கண்ட விசேஷ நாட்கள் சனிக்கிழமைகளில் வருகிறபடியால் அவைகளை 1929-ம் ஞு ஜனவரி மாதத்திய பிரமலை சீர்திருத்தனில் கண்ட விடுமுறை நாட்களின் ஜாபிதாவில் அடித்துவிடவேண்டும்.

1. மகாசிவராத்திரி—9—3—29 சனிக்கிழமை.
2. தமிழ் வருஷப்பிறப்பு--13—4—29 சனிக்கிழமை.

சூப்பிரண்டு, ஸ்பெஷல் கள்ளர்
ரெக்ளமேஷன்.

**விளம்பரம்.**

கீழே குறிக்கப்பட்டநாட்கள் R. C. கள்ளர் பாடசாலைகளுக்கு விடுமுறைநாட்களாக அறிவிக்கப்படுகிறது. ஆகையினால் அதற்குப்பதிலாக R. C. கள்ளர் பாடசாலைகள் மற்ற கள்ளர் பாடசாலைகளுக்கு தசரா விடுமுறை நாட்களாகக் குறிக்கப்பட்ட அக்டோபர் 7-ம் தேதி முதல் 10-ம் தேதி முடிய (இருநாட்களும் உள்பட) உள்ளநாட்களில் பள்ளிக்கூடங்கள் நடத்தவேண்டும்.

13உ பெப்ரவரி 1929 புதன்.
30உ மே 1929 வியாழன்.
15உ ஆகஸ்டு 1929 வியாழன்.
2உ செப்டெம்பர் 1929 திங்கள்.

சூப்பிரண்டு,
கள்ளர் ரெக்ளமேஷன்.

C. No. 35/Ed. Cn./1929.

**வேண்டுகோள்.**

நண்பர்களே, நமது பிரமலை சீர்திருத்தன் பத்திராதிபராகிய கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள் கடந்த இரண்டு மூன்று மாதங்களாக சுகவீனமாகவிருந்து கஷ்டப்பட்டார். தற்சமயம் கொஞ்சம் சுகமடைந்திருக்கிறார். இன்னும் வியாதி பூராவாகவும் குணமடைந்தபாடில்லை. ஆகையால் கனம் டாக்டர்மார்களும் வேலைசெய்ய உத்தரவுகொடுக்கவில்லை. ஆனால் களைப்பாறியிருக்கவேண்டுமென்று உத்தரவு அளித்திருக்கிறார். இன்னும் கூடியசீக்கிரத்தில் நல்ல சுகமும் பெலனும் தந்து நம்முடன் சந்திக்கத்தக்கதாகவும் நாம் எல்லோரும் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

நண்பன்.

பத்திராதிபர் அதிக சுகவீனமாயிருந்தது வாஸ்தவம்தான். ஆனால் இப்போது குணமடைந்துவருகிறது. கூடியசீக்கிரம் வேலைசெய்ய வைத்தியர்கள் உத்தரவு கொடுப்பார்கள். என்னுடைய சுகவீன காலத்தில் என்னைப் பார்க்கவந்தவர்களுக்கும், தங்களுடைய அன்பைப் பலவிதங்களில் காட்டமுயன்ற சகல நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

(பத்திராதிபர்).

**மலேரியா முதலிய எல்லா காய்ச்சலுக்கும் மருந்து.**

மனுஷனுடைய சரீரத்தைப் பரிசோதனை (chemical analysis) செய்து பார்த்ததில் 12 வகை உப்புதான் முக்கிய அம்சங்களென்றும், மேற்படி உப்புகளில் ஒன்று அல்லது சில உப்புகள் குறைந்தால் குறைச்சலான உப்புக்கும் குறைவுபட்ட உருப்புகளுக்கும் தக்க வியாதிகள் உண்டாக காரணமேற்படுகிறதென்றும் குறைந்த உப்பை அல்லது உப்புகளை பூர்த்தி செய்வதால் வியாதி சீக்கிரத்தில் குணமாகிறதென்றும் ஜெர்மன் வைத்திய சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையால் காய்ச்சலுக்கு (Sodium chloride) அல்லது சாதாரண உப்பு ரத்தத்தில் குறைவானதே காரணமானதால் சாதாரண உப்பை புது மண்பாத்திரத்தில்போட்டு இளவறுப்பாக பழுப்புநிறமாகிறவரை வறுத்து அதில் ஒரு மேஜைக்காண்டி அளவு எடுத்து அரைக்கால்படி ஜலத்தில் கலக்கி



காலையில் யாதொன்றும் சாப்பிடுவதற்கு முன் சாப்பிட்டால் 24மணி நேரத்திற்குள் சௌக்கியமாகும். பசி உண்டாகும்போது காரமானதும் விரைவில் செரிக்கக்கூடியதுமான ஆகாரத்தில் கொஞ்சம் சாப்பிடுவது நலம்.

R. D. Dhaiva Anugrahan.

**வியாசம்.**

**பொருள்: கள்ளர் சீர்திருத்தம்**

கள்ளர் என்கிற வார்த்தை சீர்திருத்தத்தின்படி மறைவாய் இருந்த பெயர். இப்பொழுது ராஜாக்களறிய இந்திரகுல தேவமாரென்று மாற்றப்பட்டிருக்கிறது.

1. எங்கள் கிராமம் பூர்வமுதல் களவிலும் கலகத்திலும் பேர்பெற்றூர் உளர்.

பக்கத்து ஊர்க்காரர் என்னைப்பார்த்து ஐயா எப்படி அந்த ஊரில் நாலைந்து வருஷங்களாக இருக்கிறீர்கள். மெத்த பொல்லாத ஊராச்சுதே என்கிறார்கள். ஆனால் ஊரைக் கவனித்துப் பார்க்கும்போது நூறுவீட்டுத் தேவமாருக்குள் நாலுபேர் கேடிகள். நூறு வீட்டுக்குள் ஐம்பது வீட்டுக்காரர் ஒரு சாரார். அவர்களில் ஒருவனுடைய தோட்டத்தில் திருடர் இரவில் நுழைந்து மிளகாய்களையும் மற்றக்காய்கனிகளையும் பிடுங்கிக்கொண்டிருக்கும்போது முதலாளி வந்தார். அவர்கள் அவசரமாகத் திருடுகிறதைப்பார்த்து: அப்பா, மேற்கே அடங்காத முள்வேலியிருக்கிறது. என்னைக்கண்டுஓடி அதில் விழுந்துவிடவேண்டாம். வடக்கே காலியிடமிருக்கிறது. நீங்கள் பிடுங்கின காய்களை அள்ளிக்கொண்டு அந்த வழியே போய்விடுங்களென்று தோட்டத்திற்குத் தென்புறம் நின்று சொல்ல அவர்கள் அப்படியே ஓடி மறைந்துவிட்டார்கள். இன்னும் சிலர் களவு கொடுக்கிறது தவிர களவு செய்கிறதில்லை. இன்னும் சுமார் இருபத்தைந்து வீட்டுக்காரர் வீரத்தனமுடையவர்கள். தங்கள் வீரியத்தால் கலகத்தை அடக்குவதும் களவு செய்கிறவர்களையும் அடக்குவதோடு தங்களை அண்டின திருடர்களுக்கும் கலகக்காரருக்கும் கைகொடுக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்.

2. எங்கும் திருடுகிறவர்கள் சிலர். அவர்களாலே நாடுமுழுவதும் கெட்டபேர் அடைகிறது. முன்னே திருடர்களுக்குக் கைகொடுத்தவர்கள் ரேகைவந்தபின் அவர்களுக்கு விரோதிகளாயிருக்கிறார்கள். திருடுகிறவர்களைக் கண்டிக்கிறதோடு அவர்களைப்பிடித்து சர்க்கார் அதிகாரிகளிடம் ஒப்புவித்து வெகுமதியும் பெறுகிறார்கள்.

3. இரவிலும் பகலிலும் நடந்த வழிப்பறிகள் நின்றுபோய்விட்டது:

ஆடுமாடுகளைத் திருடுகிறவர்களுக்குக் கைகொடுத்து ஆதரித்து வந்தவர்கள் இப்பொழுது எதிரிகளாக மாறிவிட்டார்கள்.

4. வழிப்பறிகளும், தீவைத்தலும், கலகங்களும், களவுகளும் ஏகதேசம் நடக்கிறது.

5. கல்வி நாகரீகங்கள் அதிகமாகிவிட்டது. எங்கும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு ஆண்களும் பெண்களும் படிக்கிறார்கள்.

6. உபாத்திமார் கூட்டங்கள் அதிகமாகிவிட்டது. நாடகசாலைகளும், பாட்டுக் கச்சேரிகளும் இடிமுழங்குகிறது.

பலர் உத்தியோகங்களில் நுழைந்திருக்கிறார்கள்.

7. பலர் வியாபாரிகளாகிவிட்டார்கள். வியாபாரத்தில் தேர்ச்சியடைந்துமிருக்கிறார்கள்.

8. அநேகர் கைத்தொழிலாகிய நெசவு, தச்சவேலை, கொல்வேலை முதலிய தொழில்களில் தேர்ந்துவிட்டார்கள்.

9. சிலர் கவர்ன்மெண்டு கட்டிடங்களையும் கண்மாய்களையும் ரஸ்தாக்களையும் கன்ட்ராக்ட் எடுத்து சாமர்த்தியமான வேலைகள் செய்து முடித்துக்கொடுத்து பேர்பெற்றிருக்கிறார்கள்.

10. தேக அப்பியாசங்களிலும், சுகாதார விதிகளை அனுசரிப்பதிலும் தேர்ந்து வருகிறார்கள்.

இன்னும் மேன்மையான சீர்திருத்தமாகிய தேவபக்தியிலும் மெய்த்தெய்வ வணக்கத்திலும் சிலர் புகுந்திருக்கிறார்கள். எல்லா விஷயங்களிலும் இன்னும் மேன்மேலும் வர கடவுள் கிருபை செய்வாராக.

**ஆரோக்கியம்.**

இப்பூவுலகின்கண் மானிடராய்ப் பிறந்த நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் அடைதற்கு முக்கிய கருவியாயிருப்பது நமது சரீரமே. ஆகையால் மரணபரியந்தம் நமது சரீரத்தில்

யாதொரு வியாதியும் அணுகாவண்ணம் பாதுகாப்பது நம்மேல் விழுந்த கடமையாதலால் கீழ்கண்ட முறைகளை அனுசரித்து நடக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்:—

நாடோறும் சூரியோதயத்துக்கு முன் எழுந்திருந்து திரேகம் இறுகக்கூடிய, கால் பந்து, ஓட்டம், டிரில் முதலிய தேகப்பயிற்சிகள் செய்யவேண்டும். நாம் காலந்தோறும் போஜனம் ஒழுங்காகச் சாப்பிட்டு வருவது போல அதினின்று பிரியும் மலஜலாதிகளை ஒழுங்காக மோசனம் செய்துகொண்டு வருவது அதிக ஆரோக்கியத்துக்கு இடமாகும். இன்னும் காலை, மாலை, ஆகிய இரண்டு நேரங்களிலும் மல மோசனஞ் செய்வதை நம்முடைய பழக்கத்துக்குக் கொண்டுவரவேண்டும். மல ஜலங்களை அடக்குவது வியாதிக்கு முக்கிய காரணமாதலால், இடைவேளையில் மலஜல மோசனஞ் செய்யவரினும் அடக்காமல் மோசனஞ் செய்யவேண்டும்.

துவருள்ள இலை, தூள், குச்சி முதலியவைகளினல் பல்லை நன்றாய்த் துலக்கவேண்டும். “ஆலும் வேலும் பல்லுக்குறுதி” என்றபடி துவருள்ள வஸ்துக்கள் நன்றாய் உறுதிப்படுத்துகிறது. வியர்வை நீரானது சரீரத்திலுள்ள மயிர்க்காம்புகளின் வழியாய் இரத்தத்தினின்று தடையின்றி வெளியாகும்படி நன்றாய்த் தேய்த்துக் குளிக்கவேண்டும். காலைஸ்நானமே தேக ஆரோக்கியத்துக்கு மிகவும் உசிதம். குளிர்ந்த தண்ணீர் ஸ்நானம் திரேகத்துக்கு உறுதியைத்தாக்கூடியது. ஸ்நானம் செய்துவிட்டு ஈரமான வஸ்திரத்தோடிருக்கக்கூடாது. அப்படியிருப்போமாகில் நம்முடைய திரேகத்தில் குளிர்படிந்து வியாதியை உண்டாக்கும். அதிக நேரம் ஸ்நானம் செய்யாமல் சீக்கிரம் ஸ்நானம் செய்து கொஞ்சமும் ஈரமின்றித் துடைத்துவிட்டு நனைந்த வஸ்திரத்தைக் களைந்து உலர்ந்த வஸ்திரம் தரிக்கவேண்டும்.

நாம் அணியும் ஆடையும், சயனிக்கும் படுக்கையும் எப்போதும் சுத்தமாயிருக்கவேண்டும். ஏனெனில், நம்முடைய சரீரத்தினின்று வெளியாகும் அழுக்கானது, வஸ்திரங்களிலும், படுக்கைகளிலும் பட்டு மேற்படி அழுக்கானது நம்முடைய சரீரத்தின் மயிர்த்துவாரங்களை அடைத்து வியாதியுண்டாகச் செய்கிறது.

“அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் நஞ்சு” என்பதை அறியாது போஜனம் செய்ய வேண்டிய நேரத்தில் போஜனம் செய்யாமலும் அளவுக்கு மிஞ்சிய போஜனம் செய்வதும் தேக ஆரோக்கியத்துக்கு முற்றும் மாறுனது.

அதிக சூடான அன்னமும், நன்றாய் வேகாத அன்னமும், அதிகம் குழைந்துபோன அன்னமும், பழங்கறியும், புசிக்கலாகாது. நன்றாய்ச் சமைத்த துவரம்பருப்பை பசுநெய்யுடன் சாதத்தில் கலந்து புசித்தால் ஒருபிடி அன்னத்துக்கு ஒருபிடிசதை வளரும். துவரம்பருப்பு ரசம் தேகத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். புளித்த தயிரும், உப்பும் ஆகாரத்தை ஜீரணிக்கச்செய்யும். தயிர்சாதத்துக்கும் மோர்சாதத்துக்கும் ஊறுகாய் சேர்ப்பது நலம்.

காலையிலே வெயிலில் இருப்பது தேகத்துக்குக் கெடுதல் உண்டாக்கும். மாலைவெயிலினல் வியாதிபறக்கும். குளிர்காலங்களில் நெருப்புக்காய்வதால், அதிக உஷ்ணமும், தாகமும், இரத்தக்கொதிப்பும் உண்டாகும். மழையிலும் பனியிலும் பனிக்காற்றிலும் திரிதலாகாது.

சுத்தமான ஆகாயம் உள்ள இடங்களுக்கு உலாவப்போகவேண்டும். ஏனெனில் நம்முடைய திரேகத்திலுள்ள சிவந்த ரத்தத்தில் அசுத்த ஆகாயம் படுமாயின், அது காரிரத்தமாகி வியாதியுண்டாக்கும். நாம் வசிக்கும் வீடானது, சுத்த ஆகாயம் வரக்கூடிய இடத்திலும், மேற்படி ஆகாயம் தாராளமாய் வரக்கூடிய போதுமான, ஜன்னல், கதவுகளையுடையதாயும் இருக்கவேண்டும். நாம் இருக்கும் அறையில் நன்றாய் வெளிச்சம் படவேண்டும். இருளுள்ள அறையில் வசித்தால் திரேகம் வெளுத்து வியாதியுண்டாகும். சூரியவெளிச்சம் நன்றாய்படும், மரம், செடி, கொடியானது எவ்வளவு நன்றாய் உண்டாகிறதோ, அதுபோலவே, மனிதருடைய திரேகத்தில், சூரியவெளிச்சம் படுமாயின், அவர்கள் மேற்படி செடிகளைப்போல் யாதொரு வியாதியின்றிச் சுகமாயிருப்பார்கள்.

இன்னும் நம்முடைய திரேகமானது களைத்து வியர்வை வரும்படி வேலைசெய்யவேண்டும். வேலை செய்யக்கூடாதவர்கள், சுத்தமான ஆகாயம் வரும் இடங்களில் காலை நேரங்களில் உலாவவேண்டும். நாம் தேகாப்பியாசம் தினந்



தோறும் ஒழுங்காய்ச் செய்துவரவேண்டும். நாம் ஒழுங்காகப் போஜனம் செய்யாவிட்டால் எவ்வளவு கெடுதல் உண்டாகிறதோ, அதுபோல ஒழுங்காகத் தேகாப்பியாசம் செய்துகொண்டு வராவிட்டாலும் கெடுதல் உண்டு. நாம் எந்த நேரத்திலும் நிமிர்ந்த நிலையில் இருப்பது நலம். அப்படியிருப்போமாகில் அவயவங்கள் அந்தந்த இடங்களில் இயங்கப் பெற்று அழகுடையனவாய் விளங்கும்.

சத்தமாய்ப் பாடுவதாலும், வாசிப்பதாலும் குரலுறுப்புக்கள் தேறிப் பெலமடையும், அதினின்று நம்முடைய மார்பு விரிந்தும் சுவாசப்பைகள் விசாலித்தும் நாம் தாராளமாய் ஆகாயத்தை உட்கொள்ளவும், வெளிவிடவும் ஏதுவாகும்.

மனமும் சரீரமும் தான்தான் செய்யும் வேலைக்குத் தகுந்தபடி இளைப்பாறவேண்டும். அப்படி சரீரத்தையும் மனத்தையும் இளைப்பாற்றுவது நித்திரை. ஏற்றகாலம் பகற்காலமன்றி இராக்காலமேயாகும். பகல் நித்திரையானது அநேக வியாதிகளை உண்டாக்குவதற்கு ஒரு வித்தாகும். இன்னும் பகல் நித்திரை செய்தால் இரவில் நித்திரைவராது.

இரவில் நித்திரை செய்யாவிட்டால் மந்தம் உண்டாகும். நித்திரைசெய்யாமையும், குறைந்த நித்திரையும் போலவே மிகுந்த நித்திரையும் வியாதியை விளைவிக்கும். நித்திரை வருமுன் படுக்கக்கூடாது. ஏனெனில் அப்படிப் படுத்தால் மனம் துர்விஷயத்திற் சென்று கேட்டை விளைவிக்கும். இரவில் அதிநேரம் செல்லும் முன்னுகப் போஜனம் செய்து, ஜீரணமானவுடன் படுத்து சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குள் விழித்தெழுந்துவிடப் பழகவேண்டும். உணவு ஜீரணமாகுமுன் படுக்கலாகாது.

வாரத்துக்கு இரு முறையோ, ஒருதரமோ எண்ணெய்ஸ்நானம் செய்யத் தவறக்கூடாது. நான்குமாதத்துக்கு ஒருதரம் பேதிக்குச்சாப்பிடவேண்டும். ஆறுமாதத்துக்கு ஒருதரம் இலவணமருந்து உட்கொள்ளவேண்டும்.

V. பால் ஆனந்தம்,

திருமங்கலம்.

## கல்வி.

இந்திரகுலாதிபர்களே, கடந்த பல வருடங்களாக நமது ஜாதியின் துர்ப்புத்தியை நீக்கி நற்புத்தி புகட்டும்படியும்; கல்வியறிவை யூட்டும்படியும், கைத்தொழில் பிழைப்புக்கான வழிகளைக்காட்டும்படியும், நமது காருண்ய கவர்ன்மெண்டார் ஏராளமான பணங்களைத் தாராளமாக பின்வரும் வழிகளில் செலவிட்டனர்.

அதாவது: படிப்பு, கைத்தொழில், விபசாயம் முதலானவைகளுக்கும், விபசாயம் ஊக்கமாய்ச்செய்ய அதாவது முன் கிணறு வெட்டாமல் அதினிமித்தம் கஷ்டப்படக்கூடியவர்கள், மாடு இல்லாமல் கஷ்டப்படக்கூடியவர்கள், என்னென்ன விஷயத்தில் அவர்கள் முன்னேற பணக்கஷ்டமிருக்கிறதோ அதற்கெல்லாம் வேண்டிய பணத்தை நீண்டகாலத்திற்கு சொற்பவட்டிக்குக் கொடுத்துவருகின்றனர்.

நாம் எந்தத்தொழிலில் முன்னேற பணஉதவியோ மற்ற உதவியும் கவன்மெண்டார் நமக்குச்செய்யவில்லை என்று சொல்ல நமக்கு இடமில்லை.

முக்கியமாய் படிப்பு விஷயத்தில் அதிக உற்சாகமுண்டாகும்படி பணஉதவி செய்து, கிராமங்களில் நாலு வீடு சேர்ந்து கட்டியிருந்தாலும் அதற்கும் ஒரு பள்ளிக்கூடம் கட்டி உபாத்திமார் நியமித்து உபாத்தியாயருக்குச் சம்பளமும் கொடுத்து, பிள்ளைகளுக்கு வேண்டிய புஸ்தகம், சிலேட்டு, முதலானவைகளையும் கொடுத்தும், இதில் அநேகமாய் நமது குலத்தவர்களே உபாத்தியாயர் வேலைபார்க்கத் தக்கதான ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

இவ்விதம் செய்வதற்கு கவண்மெண்டின் நோக்கமென்ன? எப்படியாவது இவர்கள் குணம், நடக்கை, பேசும் வார்த்தை, படிப்பு முதலியவைகளில் விருத்தியடைய வேண்டுமென்றே. இப்படி கவர்ண்மெண்டின் நோக்கமிருக்க நாம் தப்பான எண்ணம் கொள்ளுகிறோம். அவ்வெண்ணம் எதை ஒத்ததென்றால், ஒருசிறு குழந்தை வயிறுபசித்து அழும்போது தகப்பன் பிள்ளையின் பசியை ஆற்றும்படி வாழைப்பழத்தை உரித்து ஊட்டும்படி வாயண்டை கொண்டு போகும்போது குழந்தை இதைச் சாப்பிட்டால் பசி ஆறும் என்றதை அறியாவண்ணம் தன் தலையை இங்கும்மங்குமாகத்திருப்பிக்கொள்ளுகிறதுபோல் நாம் செய்துகொ

ள்ளுகிறோம் சமயமிது. கட்டாயப்படிப்புக் காலம் வரப்போகிறது. அப்போது நமது கையிலிருந்து பணம்போட்டுப் படிக்கவேண்டிய காலம் கூடியசிக்கிரம் வரப்போகிறது.

இதுவும் தவிர பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லை என்று ஒரு உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரன்டெண்டு துரையவர்களுக்கு ரிப்போட்டுசெய்து அங்கிருந்து அவரே (அல்லது) கீழ் உத்தியோகஸ்தர்களோ விசாரிக்க வரும்போது, பின் வருமாறு சாக்குப்போக்குகள் பஞ்சாயத்தார் சொல்லுகின்றனர்.

அதாவது; உபாத்தியாயர் சரியில்லை. அதினால் பிள்ளைகளை அனுப்பவில்லை, (அல்லது) பருத்திகாலம், அல்லது சோளக்கதிர் அறுப்புக்காலம், நெல்கதிர் அறுப்புக்காலம், அல்லது சாப்பாட்டுக்கு இல்லை, எல்லாம் கூலிவேலைக்குப் போய்விட்டார்கள் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள பிரயாசப்படுகின்றனர்.

உபாத்தியாரைக் கேட்டால் பஞ்சாயத்தாரும் கவனிக்கிறதில்லை, தாய் தகப்பனும் பிள்ளைகளை அனுப்புகிறதில்லை, நாங்கள் என்ன செய்யமுடியும் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறார்கள்.

இப்படிச்செய்வது எப்படியிருக்கிறதென்றால், தானே கனியாததை தடிகொண்டடித்தா கனியப்போகிறது? என்ற பழமொழிக் கிணங்கவும் இத்தனைகுற்றத்திற்கும் தாய் தகப்பன்மார்களே காரணர்.

இதுவுமன்றி ஆடு மேய்ப்பவன் அதிக கஷ்டப்பட்டு நல்ல புல்லுள்ள இடங்களில் கொண்டுபோய் விடலாம், ஆனால் எத்தனைபேர் வந்தாலும் அத்தனை ஆடுகளையும் மேயும்படி செய்வது கூடாதகாரியம். அந்த ஆடுகளுக்கா மனமிருந்து இங்கே நல்லபுற்களிருக்கின்றன, இதுவே ஏற்றசமயம் என்று நினைத்து மேயாவிடில் ஆட்டுக்காரன் என்னசெய்ய முடியும். இதற்கிணங்க தாய் தகப்பன்மார்களே கவர்ன்மெண்டில் பணத்தைச் செலவுசெய்து, பள்ளிக்கூடம் கட்டி உபாத்தியாயரையும், அவ்வுபாத்தியாயருக்குச் சம்பளமும் கொடுத்து, பிள்ளைகளுக்கு புஸ்தகம் சிலேட்டு கொடுத்துப் படிக்கும்படி சொன்னால், நீங்கள் பிள்ளைகளை மாத்திரம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்காவிடில் யாருடைய குற்றம், இது ஆட்டுக்காரன் குற்றமா? (அல்லது) ஆட்டின் குற்றமா? இது வாஸ்தவத்தில் ஆட்டின் குற்றம்தானென்றும் யாவரும் ஒப்புக்கொள்வார்.

இதுநிற்க, பள்ளிக்கூடத்திற்கு பிள்ளைகளை அனுப்பிவைத்தோம், ஒன்றும் தெரியவில்லை என்றும் தாய் தகப்பன் குறைசொல்லுவதுண்டு. வாஸ்தவம்; ஆனால் உன்பிள்ளையின் வந்தநாளை அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் பார்த்தால் தெரியவரும். நாலுநாள் சேர்ந்து அனுப்பிவைத்து பத்துநாள் சேர்ந்து அனுப்பாமல் நிறுத்திவிட்டால் முன் நாலுநாள் கற்ற பாடமும் மறந்துவிடுவான். இதுவும் தாய்தகப்பன் குற்றந்தான்.

கல்வி எப்படி வருமென்றால்:

சித்திரமும் கைப்பழக்கம்,
செந்தமிழும் நாபழக்கம்,
நித்தம் நடையும் நடைப்பழக்கம்

என்ற பொருளுக்கிணங்க எந்தக் காரியத்தைச் செய்தாலும் தினந்தினம் அப்பியாசித்துக்கொண்டே வந்தால்தான் நாளடைவில் முன்னேற இடமுண்டு.

தாய் தகப்பன்மார்களை உபாத்திமார் சந்தித்து, பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவை என்று கேட்டால், ஆமா! கள்ளன் படித்து பெரிய உத்தியோகம் வாங்கப் போகிறான். சும்மா போங்கையா? என்றுஞ் சொல்வதுண்டு. படித்து எல்லாரும் உத்தியோகம் செய்தால் சமுசாரிவேலை செய்வது யார்? நமது கிராமங்களில் எத்தனைபேர் கிஸ்திரசீது பார்க்கமுடியாமலும், எவ்வளவு நாட்டாமைக்காரன் வரவு வைத்திருக்கிறான், என்று மற்றவனிடத்தில்கேட்டால், அவனும் அப்பப்பா, இது பார்க்கத்தெரிந்தால்தான் நான் பெரிய கலெக்டர்வேலை கேட்பேனே என்று சொல்லிக்கொள்வதுண்டு. ஏன் இப்படி வருத்தப்படுவானேன். நீயும் நாலுவகுப்புவரை படித்திருந்தால் கஷ்டமில்லையே? இன்னும் பல கஷ்டமுண்டு.

காற்றுள்ளபோதே
தூற்றிக்கொள் என்னும் முதுமொழியை மறந்துவிடாதீர்கள் என் அன்புக்குரிய நண்பர்காள்.

(இன்னும் பின்வரும்)

T. Masillamony, Head Master,
Kavandanpatty.



## பெண்களின் மண வயது

ஆண் பெண் இரு பாலர்க்கும் உதவியாகவிருந்து பல தேசிய விஷயங்களையும், பொது நன்மைகளையும், நம் தேச முன்னேற்றத்திற்கானவைகளை, இப்பொழுது அதிக்கிளர்ச்சிடன் பத்திரிகைகளிலும் பேபர்களிலும் தினம் வெளி வருகிற விஷயமாகிய பெண்களின் "விவாக வயது சம்மத வயது" என்பவற்றைக் குறித்து எமது அறிவிற்கெட்டிய வரையில் சில எழுதப்புகுந்தோம்.

(1) பால்ய விவாகமானது, ஸ்திரீகள் கல்வி கற்பதற்கும் திடகாத்ரமான சரீரத்தை அடைவதற்கும், திடமானவும் ஆரோக்கியமுள்ளவுமான மக்களைப் பெறுவதற்கும் தடையாய் இருக்கிறதென்பது உலகோர் அறிந்த உண்மையே.

மேலும் நம்தேசபெண்கள், தகுந்த வயதை அடைவதற்குமுன் பெரிய பாரமாகிய குடித்தன பாரத்தை கைக்கொள்வதினால்தான், வாலிப வயதிலேயே விருத்தைகளைப்போல் தோன்றவும், சிலர் Hysteria, Tuberculosis முதலான வியாதிகளுக்கு ஆளாகவும் நேரிடுகின்றது. ஆனால் விவாக வயது எதுவென்றும், விவாகம் எப்படி நடத்தப்படவேண்டுமென்றும், எத்தகைய கல்வி நம்தேய ஸ்திரீகளுக்கு இன்றியமையாதது என்றும் இவ்விடத்தில் கூறுவது மிகவும் முக்கியம். விவாக வயதை 14-லிருந்து 16 ஆக மாற்றவேண்டுமெனறும், சம்மத வயதைப் பெண்களுக்கு 18 ஆக செய்யவேண்டுமென்றும் சாஸ்திர நிபுணர்களும் வைத்திய நிபுணர்களும் கூறுகிறார்கள். ஜனங்களில் சிலர் இக்கூற்றை ஆமோதிக்கிறார்கள் சிலர் மறுக்கிறார்கள். சிலர் (Age consent committee) யில் தினம் விசாரணை செய்கிறார்கள். இது கவர்ன்மெண்டு சட்டமாக வரவேண்டுமென்று சிலர் கோருகிறார்கள். நாம் இவ்விஷயத்தை தினப்பத்திரிகையில் வாசித்து வருவதால் அதை இங்கு விவரிப்பது அனாவசியம்.

நம் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியுடன் நம் ஹிந்துக்களின் விவாக சம்பந்தமாகிய ஆழ்ந்த தத்துவத்தைக் கூர்ந்து யோசிக்கின் பெண்களின் விவாக வயதைப் 14 ஆகவும் சம்மத வயதை 16 ஆகவும் மாற்றுவதே சரியென்று தோன்றுகிறது. ஏனெனில் பெண்கள் தக்கவயது அடைந்தவுடன் அவர்களுக்குத் தகுந்த மணமகனைத் தேடி அவன் கையில் ஒப்புவித்தலே தங்களுககு முக்யமானவும் பாரமானவும் பொறுப்பென்று, ஹிந்து பெற்றோர்கள் கருதி இருக்கிறார்கள். அபலைகளான ஸ்திரீகள் விவாகமின்றித் தனித்திருப்பின், தங்கள் கற்பைக்காத்துக்கொள்வது மிகவும் சிரமமென்றும், வஞ்சகமுள்ள சில ஆடவர்களால் ஏமாற்றப்படுவார்களென்றும் கருதியே அறிவிற் சிறந்த நம் மூதாதைகள், பெண்கள் தக்க பருவமடையுமுன்னரோ அல்லது அடைந்தவுடனேயோ தகுந்த கணவர்களைத் தேடி மணமுடிக்கும் வழக்கத்தை உடையவர்களாயிருந்தார்கள். மகா கல்விமான், பெரிய ராஜன், ஞானி, "ஞானஜனகன்" எனப் பேர்பெற்ற ஜனகனும் லோக மாதாவான ஜானகியை தகுந்த வயதடைந்தவுடனே அவளுக்குத் தகுந்த மணாளனைத் தேடி அவன் கையில் ஒப்புவிக்க வேண்டுமென்று கவலைகொண்டதையும்; சீதையை, சிவதனுசை ஒடித்த வீர சௌரியான ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கு பாணிக்கிரகணம் செய்து கொடுக்கும்போது மிகுந்த சந்தோஷத்துடன் ஆனந்த பரிதனாய்

"இயம் ஸீதா மமஸுதா ஸஹ தர்ம சரீதவ
ப்ரதீச சைனம் பத்ரம் தே பாணிம் கிருண்ணீஷ்வ
பாணினும்" என்று சொல்லி பாணிக்கிரகணம்செய்து

கொடுத்ததையும் ராமாயணம் படித்தவர் அறிவர்.

சிலர், பெற்றோர்கள் இப்படி பாணிக்கிரகணம் செய்து கொடுப்பது சரியானதல்ல வென்றும், இதனால் மணமக்களின் வாழ்க்கையில் இன்பம் அதிகமில்லாமல் துன்பம் மிகுந்திருக்கிறதென்றும், வரதக்ஷிணை என்னும் கொடிய நோய் பரவுவதற்கு இதுதான் காரணமென்றும், பெண்கள் தகுந்த வயது வந்தபிறகு தாங்களே தங்கள் வாழ்க்கைத்துணைவனைத் தேடிக்கொள்வதுதான் மிகவும் சிறந்ததென்றும், மேல்நாட்டார் அப்படிச் செய்வதால்தான் பல சீர்திருத்தங்களையும் முன்னேற்றங்களையும் உடையவர்களாயிருக்கிறார்களென்றும் சொல்லவும் வியாசங்கள் எழுதவும் காண்கிறோம்.

அந்தோ இது எத்தனை அறியாமையாக இருக்கிறது!! நம்மவர் வழக்க விவாகத்தில் சிலருக்கு துன்பமேற்படின் பெரும்பாலார்க்கும் இது எப்படி பொருத்தமாகும்?

பெண்களின் பெற்றோரும் பிள்ளைகளின் பெற்றோரும் உற்றாரும் உறவினரும் யோசித்து முடிக்கும் கலியாணங்களிலேயே தவறுதல் நேரிடின் அபலையான ஸ்திரீ தன் புத்தி ஒன்றைக்கொண்டு தானே முடித்துக்கொள்ளும் விவாகமானது எப்படி அதிக சிறப்புள்ளதாக இருக்கும்? மேல்நாட்டார் நாகரீகத்திற் சிறந்தவர்களாயிருப்பினும் விவாக விஷயத்தில் அவர்கள் விவாகம் மிகவும் வெறுக்கத்தக்கதாகவே இருக்கிறது.

அவர்கள் தகுந்த வயது வந்தபின்பே மணமகனைத்தேடி மணம் முடித்துக்கொண்டாலும் வெகு சீக்கிரத்திலேயே அன்பும் ஒற்றுமையும் இல்லாதவர்களாய்(Divorce) விவாகரத்து செய்துகொண்டு விடுகிறார்கள். வேறொருவனைப்பார்த்து மணம் செய்துகொள்ளுகிறார்கள். ஒரு கிழவனை அவன் பணத்திற்காகவும், ஒரு யுவனை அவன் அன்பிற்காகவும் காதலிக்கிறார்கள்!!

நம் ஹிந்து ஸ்திரீகளோ வென்றால் ஒருவனுக்கே தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்து திரிகரண சுத்தமாய் அவனையே தெய்வமாகக் கருதி உள்ளன்புடன் உபசரித்து, கணவன் எவ்வளவு அன்பில்லாதவனாய் இருந்தாலும், தன்னைக்கொடுமையாய் நடத்தினாலும், அல்லது வேறொருத்தியை மணம் புரிந்துகொண்டாலும், பொறுமையுடனும், சந்தோஷத்துடனும் இருப்பவர்களாய் விளங்குகிறார்கள்.

இதுநிற்க, ஸ்திரீகளின் கல்வி எத்தகையதாய் இருக்கவேண்டும். அவர்கள் ஆடவரின் கல்வியைப்போல் கலாசாலை (College) யில் வாசித்துப்பட்டங்கள் பெற்று உத்யோகம் செய்யவேண்டுமா? அல்லது ஸநாதன முறைப்படி வீடுகளை வைத்துக்கொள்ளவும் நன்றாய் குடித்தனம்

செய்யவும், குழந்தைகளை ஆரோக்ய முள்ளவர்களாகவும் புத்திசாலிகளாகவும வளர்க்கவும், உலக விஷயங்களேயும் ராஜாங்க விஷயங்களேயும் அறிந்து கொள்ளவும் போது மான ஆங்கில பாஷாஞானம் உடைத்தானவர்களாய் இருந்தால் போதுமா?

வியாதி அணுகாமல் ஸுகாதார முறைப்படி வீடுகளே வைத்துக்கொண்டு, வருவாய்க்குத் தகுந்த செலவுகளேச் செய்துகொண்டு சரியான உடைகள், காலக்கிரமப்படி ஆகாரங்கள் முதலியவைகளால் குழந்தைகளேப்போஷித்து, வெளியில் சென்று வேலேசெய்து களைத்துவரும் தங்கள் புருஷர்களே தக்கபடி உபசரிப்பதற்கும் உலகத்தில் நடைபெறும் பொது விஷயங்கள் அற்புதங்கள் ராஜாங்க விஷயங்கள் சட்டங்கள் இவைகளே அறிவதற்கும் போதுமான ஆங்கில பாஷா ஞானம் பெண்களுக்கு இருந்தால் போது மெனவே எமது அறிவிற் தோன்றுகிறது.

ஸ்திரீகள் பட்டம் பெற்று உத்தியோகம் செய்யப்புகில் வீட்டிலுள்ள குழந்தைகளேயும் தம் புருஷர்களேயும் தகுந்தபடி கவனிக்கத்தக்க மனுஷியர்கள் இல்லாமல்போம்; பிராமணர்கள் பிராமணரல்லதார் என்னும்இருதிறத்தாரில் B.A., M.A., M.L.C. முதலான பட்டங்கள்பெற்றும் வேலே கிடையாமல் திண்டாடும் ஆண்மக்களோடு பெண்மக்களும் போட்டிபோடப்புகின் வேலேத்திண்டாட்டம் மிகுதியாகிவிடும்! அல்லது ஆண்மக்கள் வீட்டிலிருந்து குடித்தனம் செய்து குழந்தைகளேப் பார்த்துக்கொள்ளும்படி நேரிடினும் நேரும்!!!

ஆதலால் பெண்கள் தகுந்தவயதில் மணம் முடித்துக்கொண்டு அறிவுடன் குடித்தன முறையில் விளங்குவதே மேன்மை. எல்லாம் வல்ல இறைவன் நம்தேசத்துக்கும் நம்தேச ஸ்திரீகளுக்கும் நன்மை புரிவாளுக.

(ஆனந்த போதினி.)

---

## வேர்க்கடலேயின் உபயோகம்

தாவரவர்க்கங்களிலிருந்து கிடைக்கும் லாபத்தைப் போல் வேறொ...ற்லிருந்து கிடைப்பதில்லே யெனலாம். வேர்க்கடலேயைப்பற்றி, அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஆராய்ச்சி செய்ததில், அது தேங்காயின் உபயோகத்திற்குச் சமமானதெனக் கூறுகிறார்கள். அமெரிக்காவில் விவசாய சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவரான ஸ்ரீ ஜார்ஜ் கார்வேர் என்பவர் வேர்க்கடலேயின் உபயோகங்களேப்பற்றி பலவித ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். அவர் கூறுவதாவது:—இது (வேர்க்கடலே) ஓர் உயர்ந்தஆகாரம் அநேக வழிகளில் இது மனிதர்க்குப் பயன்படக்கூடியது; ஒரு ராத்தல் மாட்டிறைச்சியில் உள்ள சத்தைப்போல் இருமடங்கு சத்து ஒரு ராத்தல் வேர்க்கடலேயிலுண்டு.

பிரான்ஸ் தேசத்தில் கிராக்ஷை ஏராளமாகப் பயிராவதற்குப் "பாஸ்டர்" என்பவர் காரணமாயிருந்ததைப்போலவே, அமெரிக்காவில் வேர்க்கடலேயின் விருத்திக்கு மேற்கூறிய புரோபஸர் கார்வர் என்பவரே காரணம். இவரது ஆராய்ச்சித் திறமையால் உலகிற்கு வேர்க்கடலேயின் உபயோகம் நன்கு விளங்கிற்று. இதனுல், அமெரிக்காவில் ஒன்றுக்கும் உதவாமல் கிடந்த அநேக நிலங்கள், இப்பொழுது வேர்க்கடலே பயிர் செய்யப்படுகின்றன. இச்செடிகள் ஆகாயத்திலுள்ள "நைட்ரஜன்" என்னும் சத்தை ஆகாயத்திலிருந்து கிரகித்து பூமிக்குச் சேர்க்கிறபடியால் நிலங்கள் அதிக உரம்பெற்று மற்றப் பயிர்களும் உற்பத்தியாக இடமேற்படுகின்றது. இதனுல் விவசாயத்திற்கும் மிகுந்த அனுகூலமேற்படுகின்றது.

### உயர்ந்த பால்.

ஒரு டன்னர் வேர்க்கடலேயிலிருந்து பசுவின்பாலேயொத்த சத்துள்ள ஒரு பயிண்ட் உயர்ந்த பால் உற்பத்தி செய்யலாம். அதைக் காப்பி, டீ முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். வேர்க்கடலேயிலிருந்து ஐந்துவித மாவுகளும் ரொட்டிகளும், கால் நடைகளுக்கு வேண்டிய நான்குவகை ஆகாரங்களும் தயார் செய்யலாமென புரோபஸர் கார்வர் கூறுகிறார். அன்றியும் மருந்துவகைகளில் அதை எவ்வளவு தூரம் உபயோகிக்கலாமென ஆராய்ச்சி செய்து வருகிறாம். வேர்க்கடலேப் பருப்பின்மேல் மூடியுள்ள மெல்லிய சிவப்புத்தோலிலிருந்து கொய்னு தயார்செய்யலாம். பசுவின்பாலில் உள்ளதைப்போல் பன்னிரண்டு பங்கு அதிகக் கொழுப்பும் அதிலுள்ள தண்ணீரில் பத்தில் ஒரு பாகம் தண்ணீரும் வேர்க்கடலேயின் பாலில் உள்ளபடியால், சாதாரணமாகப் பாலுக்குப் பதிலாக இதை உபயோகிக்கலாம். இதிலிருந்து தயிர் முதலியவற்றையும் தயார்செய்யலாம். நோயாளிகளுக்கு இத்தப்பால் மிக்க உபயோகமாயிருக்கும் என ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர்.

### பலவித உபயோகங்கள்.

ஒன்பது வகை மரச் சாயங்களும், பத்தொன்பது வகைத் தோல்சாயங்களும், மெட்டல் பாலிஷ் கொழுப்பு, சோப்பு, இங்கி, கிளிசரைன், கொயினு முதலியவற்றையும் வேர்க்கடலேயிலிருந்து செய்யலாம். மொத்தத்தில் இதனுல் மனித சமூகத்திற்கு அளவற்ற பிரயோஜனம் என்று புரோபஸர் கார்வர் கூறுகிறார்.

ஆனந்த போதினி.

---

## வர்த்தமானங்கள்.

ஆபரணம் பூண்ட ஆமை:—லண்டன் இம்பீரியல் ஆகாயப் போக்குவரவுக் கம்பெனியார் ஒரு பிரயாணி விட்டுச்சென்ற ஒரு பெட்டியைத் திறந்து பார்த்தபோது அதனுள் ஒரு ஆமை உயிருடனிருந்ததாம். அதன் முதுகோட்டில் விலேயேறப்பெற்ற நவரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தனவாம்.

---

உடம்பில் இரும்பு:—ஒவ்வொருவருடைய உடலிலும் ஒரு பெரிய ஆணியளவு இரும்பும், 2,000 தீக்குச்சிக்கான கந்தகமும், ஒரு சிறிய அறைக்கு அடிக்கக்கூடிய சுண்ணும்பும் இருக்கின்றனவாம்.

---

நாய்த் தலேயுள்ள ஆடு:—பார்செட்டில் ஆடுகளுக்கு நாய்களால் அதிகம் தொந்தரை ஏற்பட ஒரு நாய்த்தலேயுடன் பிறந்ததாம். அவ்வாடு இறந்துவிட்டதாம்.



1360

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

## பிரமலே சீர்திருத்தன்.

"வழக்குக்கு விலகுவது மனுஷனுக்கு மேன்மை

Vol. IX. ] ஜுன்மீ 1929 [ இலக்கம் 2

19 JUN 1929

## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில(வரு) வைகாசிமீ — ஜுன்மீ — சுக்கில(வரு) ஆனிமீ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 30 17 | | | | | | 1 19 |
| 2 20 | 3 21 | 4 22 | 5 23 | 6 ✻ கார். 24 | 7 ● அமா. 25 | 8 26 |
| 9 27 | 10 28 | 11 29 | 12 30 | 13 31 | 14 ஆனி. 1 | 15 2 |
| 16 3 | 17 4 | 18 5 | 19 6 | 20 7 | 21 ○ பௌர் 8 | 22 9 |
| 23 10 | 24 11 | 25 12 | 26 13 | 27 14 | 28 15 | 29 16 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணு 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## நமது சக்கரவர்த்தி.

வெகுகாலம் சுகவீனமாயிருந்த நமது சக்கரவர்த்தி நல்ல சுகமடைந்து மே மாசம் 17-ம் தேதி சுகத்திற்காக போயிருந்த கடற்கரை மாளிகையிலிருந்து வின்ட்ஸர் மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அவர் வரும்வழியில் திரள் கூட்டமான ஜனங்கள் போகும் வழிகளில் நின்று பூக்களாலும், தோரணங்களாலும், கொடிகளாலும், ராஜா சுகமடைந்த சந்தோஷத்தைக் காட்டினர்கள். ராஜாவும் அவர்களுடைய சந்தோஷத்திற்கு தன்னுடைய கரங்களினலே பதிலளித்துக்கொண்டே வந்தார்.

## ஓர் ஆஸ்பத்திரியில் நமது சக்கரவர்த்தி.

ஒருநாள் நமது சக்கரவர்த்தி தான் வியாதிப் படுக்கையில் இருந்த இடத்திலிருந்து 20 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு ஆஸ்பத்திரியைப் பார்க்கப்போனராம். அநேக வியாதியஸ்தரைப் பார்த்துக்கொண்டு வரும்போது நெடுங்காலம் வியாதிப்படுக்கையிலிருந்த ஒருவனிடம் போய் நீ நெடுங்காலம் வியாதியாயிருக்கிறுயென்று விசனமடைகிறேன். வியாதியாயிருப்பது என்ன என்று எனக்கு இப்போது தெரியும். உன்னோடு நான் அநுதாபப்படக்கூடிய நிலைமையிலிருக்கிறேன் என்று சொல்லி அவனைச் சந்தோஷப்படுத்திவிட்டுத் திரும்பினராம்.

## சக்கரவர்த்தி சுகமடைந்ததை நினைக்கும் நன்றியறிதலின் நிதி.

நமது சக்கரவர்த்தி சுகமடைந்ததை நினைத்து நன்றிக்கடையாளமாக ஒரு நிதி சேர்க்கிறர்கள். இதற்கு நம்முடைய வைஸராய் அவர்களே தலைவர். மிகுதியான பணங்கள் நன்றியறிதலான காணிக்கையாக பிரிட்டிஷ் ராஜாங்கத்திலுள்ள சகல பாகங்களிலிருந்து கொடுக்கப்பட்டுவருகிறது. இந்த பணத்தை சேர்த்து வியாதிப்பட்ட சக்கரவர்த்திக்கு கொடாமல் நமது தேசத்திலுள்ள பயங்கரமான பலவித கொடியவியாதிகளைத் தடுப்பதற்காக இப்பணம் செலவழிக்கப்படுமென்று கவர்னர்ஜெனரல் தெரிவிக்கிறர். ராஜாவின் பேரால் செய்யப்படும் பெரிய நன்றியறிதலான நிதிக்கு பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் வைஸராய் பிரைவேட் செக்ரட்டேரி, வைஸராய் மாளிகை, சிம்லா என்ற விலாசத்திற்கு நேரே அனுப்பினல் எவ்வளவு சிறு தொகை அனுப்பப்பட்டாலும், அனுப்பினவருக்கு நேராகவே பணம் பெற்றுக்கொண்டதற்குரிய ரசீது அனுப்பப்படும் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது.

## நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி சுகமடைந்தார்

என்பதை நினைந்து

### பிரிட்டிஷ் ராஜாங்கம் முழுவதும் நன்றியறிதலான சந்தோஷங் கொண்டாடும் தினம்

ஜுன் மாசம் 16-ம் தேதி குறிக்கப்பட்டிருக்கிறது. (ஜுன்மீ 16-ம் தேதி ஞாயிறு.)

ராஜபிரஜைகளான சகல தேசத்தாரும் தங்கள் தங்கள் ஆலயங்களில் கூடி நமது சக்கரவர்த்திக்கு சுகங்கொடுத்த கடவுளுக்கு நன்றி செலுத்துவார்கள். அந்தத் தினத்தில் நமது சக்கரவர்த்தியும் ஒரு ஆலயத்திற்குப் போய் தம்மை மரணத்தருவாயிலிருந்து காப்பாற்றின கடவுளுக்கு, தமது பிரஜைகளோடே சேர்ந்து நன்றி செலுத்துவாரென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலும் ராஜவிசுவாசமுள்ள அனைவரும் தங்கள் தங்கள் கிராமங்களிலுள்ள ஆலயங்களில்கூடி கடவுளுக்கு விசேஷித்த நன்றிசெலுத்துவதோடுகூட, சிறு காணிக்கை சேர்த்து அந்தந்த கிராமத்திலுள்ள கொடியவியாதியஸ்தர், ஏழைகள் முதலியவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்கான உதவிகள் செய்வார்களானல் அதுவே தனக்கு பெரிய சந்தோஷமென்று ராஜாவும் தமது விருப்பத்தைக் காட்டியிருக்கிறர்.

அந்த நாளில் தங்கள் தங்கள் கிராமங்களில் தாங்கள் செய்த காரியங்களை நமது பத்திரிகையின் பத்திராதிபருக்கு எழுதி அனுப்பினல் நன்மையாயிருக்கும்.



## இங்கிலாந்து பார்லிமென்ட் சபை.

மேமீ 10-ம்உ

மாட்சிமை தங்கிய நமது சக்கரவர்த்தியவர்களால் பார்லிமென்ட் சபை கலைக்கப்பட்டது. புது அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்க ஒவ்வொரு கட்சியாரும் முயற்சி செய்துவருகிறர்கள். இங்கிலாந்தில் இப்போது எந்தக்கட்சிக்காரர்களில் ஜனத்தார்களுக்கு நன்மை செய்யுமோ அவர்களையே தெரிந்தெடுப்பார்கள். நமது தேசத்தைப்போல எந்த கிராமத்திற்கு 100 அல்லது 200 ரூ கொடுக்கிறரோ அவர் யாராயிருந்தாலும், படிப்பறியாதவராயிருந்தாலும் "வோட்" கொடுக்கும் வழக்கம் அவர்களுக்குக் கிடையாது. இனப் சாப்பாட்டுக்காகவும் வோட் கொடுக்கமாட்டார்கள். யார் நன்மை செய்யக்கூடியவனே, தங்கள் காரியங்களை சபையில் எடுத்துப்பேசி, போராடி ஜெயம் கொண்டுவரக்கூடியவனே அவனையே தெரிந்தெடுப்பார்கள்.

வரப்போகிற எலக்ஷனில் ஏறக்குறைய 3-கோடி ஜனங்கள் வோட் செய்வார்கள். இவர்களில் 50 லட்சம் பேர் பெண்களாம். 615 ஸ்தானங்களுக்கு, 1729 பேர் போட்டியாய் நிற்கிறர்களாம். இந்த எலக்ஷன் தீர்மானங்கள் மேமீ 31-ம்உ வெளியாகுமாம். ராஜ விளம்பரப்படி ஜுன்மீ 25-ம்உ புது பார்லிமென்ட் சபை கூடுமாம்.

சைமன் கமிஷன் தீர்மானங்கள் இப்புதிய பார்லிமென்ட் சபையில் வர்திக்கப்படும். ஆனல் சுயராஜ்யத்திற்காகப் போராடும் வீரர்கள், பார்லிமென்டில் எந்தக்கட்சி உத்தியோகம் வகித்தாலும் இந்தியாவுக்கு உடனே சுயராஜ்யம் தரவா போகிறர்கள் என்றும் பேசிக்கொள்ளுகிறர்கள்.

## எல்லாராலும் விரும்பப்படுவது எப்படி?

சாதாரணமாயிரு. வெளிக்குப் பகட்டுக் காண்பிக்கிறவர்கள் யாரென்பதை ஜனங்கள் சீக்கிரத்தில் அறிந்து அப்படிப்பட்டவர்களை அரோசிக்கிறர்கள், ஆகையால் அதை விட்டுவிடு.

சுத்தமாயிரு. சுத்தமாயிருக்கும்போது மனதுக்கும் சந்தோஷமுண்டு. பெரியோரிடத்திலும், ஏழை ஜனங்களிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் நேசத்தைக் காண்பித்து அவர்களிடத்தில் அன்பாயிரு. இவையே ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தின லட்சணங்கள். இப்படிப்பட்ட லட்சணங்களை எல்லாரும் விரும்புகிறர்கள்.

நேரத்திற் கொருவிதமாயிராதே, வீண் சிந்தனைகளையெல்லாம் நீக்கிப்போடு, உன்னைச் சந்தோஷத்தோடே சந்திக்கும்படி ஜனங்கள் விரும்புவார்கள். அவர்கள் உன்னைச்சந்திக்கையில் நீ நேரத்திற் கொருவிதமாயிருப்பது அவர்களுக்குப் பிரியமாயிராது.

(ஆ. தீபிகை).

## பிள்ளைகளின் கடமை

என் அன்பார்ந்த உபாத்திமைச் சகோதரர்களுக்கும், இத்திருநல் நண்பர்களுக்கும் நான் முந்திய மாதம் எழுதிய கல்வியின் பெருமை என்னும் சிறு வியாசத்தை நன்கு உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆயினும் இம்மாதம் பிள்ளையின் கடமை என்பதை என் சிற்றறிவுக்கு எட்டியவாறு சிறிது வரையலானேன். அதையும் கவனிக்குமாறு வேண்டுகின்றனன்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனத் தன் பெற்றோரைப் போற்றியொழுகுதல் வேண்டும். (தந்தை சொல் மிக்க மந்திரமில்லை) என்ற அமுதினும் இனிய பெரியவர் மொழிக்குச் சிறிதும் இடையூறின்றித் தனது தகப்பன் கட்டளையைத் தலைமேற்கொண்டு ஆசிரியரை அடைந்து அவரைச்செவ்வனே வழிபட்டுக் கல்விகற்கவேண்டும். அந்நிலையில் ஒவ்வொருநாளும் தக்ககாலத்தில் ஆசிரியரிடம்போய் அவருக்குரிய வழிபாடுசெய்து அவரது குணத்திற்குத் தக்கபடி பழகித்தான் வரலாமென்ற ஆசிரியரது கருத்தைக் குறிப்பால் அறிந்து அவரையணுக வேண்டும. ஆசிரியர் இரு என்று சொன்னபின்பு இருந்தும், படி என்று சொன்னபின்பு படித்தும், மிக்க தாகவிடாய்கொண்டவன் நீரினிடத்துக்கொள்ளும் விருப்பம் போலப் பாடங்கேட்டலில் மிக்க விருப்பமுடையவனாக இருந்து கற்றற்குரிய நூல்களைக்கற்கவேண்டும். சித்திரத்தில் எழுதிய பிரதிமையினது அசைவில்லாத குணம்போல் மனமொழி மெய்களையடக்கிச் செவி கல்வியாகிய நீரைப்பருகும் வாயாகவும், மனம் அதைக்கொள்ளும் இடமாகிய வயிறாகவும் ஆசிரியரிடத்தில் பாடங்கேட்டு வரவேண்டும். பலமுறைகேட்ட நூற்பொருள்களைமறந்து விடாமல் தன் மனதில் நிரம்பப் பதிய வைத்துக்கொண்டு ஆசிரியர் போ என்று சொன்னபின்பு வீட்டுக்குத் திரும்பிப்போகவேண்டும்.

குளிருக்காக அனல்காய்பவன் நெருப்பைவிட்டு நீங்காமலும் அந்நெருப்பை நெருங்காமலும் இருப்பதைப் போல, தனது ஆசிரியரிடம் அச்சங்கொண்டு அவரை விட்டு நீங்காமலும் அவரை நெருங்காமலும் இருந்து வரவேண்டும். ஆசிரியர் சென்ற இடத்தையெல்லாம் நிழலைப்போல விடாது அவரைப் பின்தொடர்ந்துசென்றும், அன்பு நிரம்பிய மனதுடன் அவரைக் கூடியிருந்தும் எவ்வகையால் அவர் மகிழ்வாரோ அவ்வகையோடு அவருடன் பொருந்தி இருந்தும், தருமத்தினின்று மாறுபடாத கடத்தையுடையவனாயிருந்தும் ஆசிரியரை வழிபட்டுவரவேண்டும்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறுமறிவு

என்பதற்கேற்கச் சிறிது கற்றவனவினால் கற்றது போதுமென்று விடாமல் மேன்மேலும் கற்றற்குரிய நூல்களையே முறையே ஆசிரியரிடத்து ஐயம், திரிபு, அறியாமை என்பவைகளை நீங்கக்கற்றால் அறிவில் முதிர்ந்த விருத்தி அடைவீர்கள். தவிர தனது இருமுதுகுரவர்க்கு அடங்கியும் மன்னுயிரை தன்னுயிர்போல் மதித்தும், பெரியவர்களால் விதித்தவைகளைச் செய்தும், விலக்கியவைகளை வெறுத்தும் கடவுளிடத்து அன்பு பூண்டும்,

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆருயிர் உய்த்து விடும்

என்னும் அமுதினுமினிய தமிழ்மறைக்கிணங்க ஒழுகி வரவேண்டும் என்பதே என்முழு நோக்கத்துடன் எழுதலானேன்.

ராமகிருஷ்ணபுரம், 6—4—1929.

K. ஸ்ரீனிவாசய்யங்கார்,
கள்ளர் ஸ்கூல் உபாத்தியாயர்.

---

## கடிதம்.

நமது இந்திரகுலாதிபர் வம்சத்தில் ஜென்மித்த எனது அன்பார்ந்த பெரியோர்களே, சகோதரர் சகோதரிகளே, உங்கள் எல்லாருக்கும் எனது இருகரங்குவித்து அன்பான வந்தனம் அளித்து, சிறியோனாகிய யான் சிற்சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அவையாவன: பின்வருமாறு.

இப்பூதலத்தின்கண் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள எறும்புகடை யானைமுதல் எண்பத்து நான்கு லட்சம் ஜீவராசிகளில் மானிட வர்க்கத்தில் ஆண், பெண் என இரண்டு ஜாதிகளே முற்காலத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. பிற்காலங்களில் வேதவியாச முனிவரால் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என நான்கு வர்ணத்தார்களாகப் பிரிக்கப்பட்டு இந்நான்கு வகுப்பில், ஒவ்வொரு வகுப்பிற்கும் அநேக வகுப்பார்களாக வகுக்கப்பட்டுள்ளதை முன்னோர்களால் இயற்றப்பட்ட இந்துப்புராணங்களின் மூலமாய் நாம் தெரிந்திருக்கிறோம் அல்லவா?

இத்தகைய மேன்மை வாய்ந்த குலத்தில் நாம் ஜெனித்தும் நம் புத்தி க்ஷீணிய குறைவால் கீழான நிலைமைக்குள்ளாகி திருடரென்றும், துஷ்டரென்றும், மூர்க்கரென்றும் கொள்ளைக்கார கூட்டத்தவர்களென்றும் இழிவான பேரை அடைந்தும், நமது குலம் முன்னேற்றம் அடையும்வண்ணம் நமது இராஜாங்கத்தாரால் சி.டி. ஆக்ட் கிரிமினல் டிரைப்ஸ் ஆக்ட் என்னும் சட்டம் ஏற்படுத்தி நமது குலத்தவரை கைரேகை வாங்கியது நமது முன்னோர்கள் செய்துவந்த கிலாக்கியம் என்று நம்பவும்.

இப்புவுலகின்கண் மனிதர்களால் பிரிக்கப்பட்டுள்ள 96 ஜாதிகளில் நம் குலத்தவர்களுக்காக செய்துவரும் நமது காருண்ய கவர்மெண்டாரவர்களின் பேர் உதவியை அசட்டை பண்ணாமல் நீதியான சட்டதிட்டங்களையறிந்து உணர்ந்து அவைகளின் சட்டதிட்டங்களுக்கு ஏற்றவண்ணம் தவறாது நடந்துகொள்வதுடன் மற்ற ஜாதியார்கள் முறைமுறைப்பதைக் கவனித்து தீச்செயல்களை முற்றிலும் ஒழித்து பேரின்ப காரியங்களைக் கைக்கொள்ளும்படியாயும் தெரிவிப்பதுடன் மற்ற ஜாதியார்களுக்குமுன் முந்திக்கொள்ளவும் மற்றெந்த ஜாதியாருக்காவது இவ்விதமான மேன்மை வாய்ந்த சட்டதிட்டங்கள் உண்டா? நம் குலத்தவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கள்ளர் ஸ்பெஷல் ரெக்ளமேஷன் டிப்பார்ட்மெண்டு நீடூழிகாலம் நிலைத்திருக்கும்படி கடவுளை நோக்கிப் பிரார்த்திப்போமாக.

S. K. ராஜரத்தினத்தேவர்,
உபாத்தியாயர்,
C. S. M. கள்ளர் ஸ்கூல், காடிக்கல்.



## சிசு சம்ரக்ஷணம்.

### நோயற்ற குழந்தையின் வரலாறு.

1. எனது தாய் நன்றாய் போஷிக்கப்படுகிறாள். அவள் ரொட்டி, பால், முட்டை, பழம் முதலிய நல்ல ஆகாரங்களைச் சாப்பிடுகிறாள்.

2. அவள் சிரமமான வேலைகளைச் செய்கிறதில்லை.

3. நான் பிறந்தபொழுது மருத்துவம் செய்தது தேர்ந்த மருத்துவச்சி.

4. என் வீடு சுத்தமாயிருக்கிறது, நல்ல காற்றோட்டமுள்ளது.

5. எனக்கு வேளாவேளையில் மூன்றுமணிக் கொருதரம் சரியாக ஆகாரம் கொடுக்கிறார்கள்.

6. நான் சாப்பிடுவது தாய்ப்பால்தான். அதைவிட நல்லது வேறில்லை, சுத்தமானது, வேண்டும்பொழுது கிடைப்பது, செலவில்லாதது.

7. என் தாய் கொஞ்சநாள் சௌக்கியமில்லாமலிருக்கும்பொழுது நல்ல பசும்பாலுடன், ஆரஞ்சு அல்லது எலுமிச்சை ரஸமும் கொடுத்தார்கள்.

8. எனக்குக் கொடுக்கும் பசும்பாலை ஈ மொய்க்காமல் சுத்தமான பாத்திரத்தில் மூடிவைத்து காய்ச்சி, சுத்தமான பாலடையில் கொடுத்தார்கள். எல்லா பாத்திரங்களும் கொதிக்கும் வெந்நீரில் கழுவப்பட்டன.

9. என்னைத் தினந்தோறும் குளிப்பாட்டுவதினால் என் உடம்பு சுத்தமாய் இருக்கிறது.

10. எனக்கு உடுத்தும் உடைகள் அழுக்கில்லாமல் சுத்தமாயிருக்கின்றன.

11. நல்ல காற்றும் வெளிச்சமும் நிறைந்த விடங்களில் விளையாடுகிறேன்.

12. எனக்கு ஒருபோதும் சிரமமில்லை. நன்றாய் தூங்குகிறேன்.

13. வாயில் வைத்துக்கொள்ளும் சீப்பி முதலிய விளையாட்டுச் சாமான்களை எனக்குக் கொடுப்பதில்லை.

14. என்னை நல்ல வழிகளிலேயே பழக்கியிருக்கிறார்கள்.

என்னை இப்படி வளர்த்ததால்தான் சவுக்கியமாயும் சந்தோஷமாயும் இருக்கிறேன்.

---

### நோயுள்ள குழந்தையின் புலம்பல்.

1. என் தாய் ஆரோக்கியமான ஆகாரத்தை சாப்பிடுகிறதில்லை கார பதார்த்தமும், மிட்டாய் பக்ஷணங்களும் அவளுக்குப் பிரியம்.

2. அவள் களைத்துப்போகும்படியான வேலைகளைச் செய்கிறாள்.

3. என் தாய்க்கு மருத்துவம் செய்தது நாட்டு மருத்துவச்சி.

4. என்வீட்டில் காற்றுமில்லை, வெளிச்சமுமில்லை; எங்கு பார்த்தாலும் குப்பை.

5 நினைத்த வேளையிலும் நான் அழும்பொழுதும் எனக்கு ஆகாரம் கொடுக்கிறார்கள்.

6. எனக்குத் தாய்ப்பாலுமில்லை, பசும்பாலுமில்லை.

7. எனக்கு புட்டி (டின்) பாலும், சாதமும், தின்பண்டங்களும் கொடுக்கிறார்கள். இவை ஜீரணமாகாமல் என் வயிற்றில் கட்டிவிழுந்து அவஸ்தைப்படுகிறேன்.

8. எனக்கு சுத்தம் செய்யமுடியாத சங்குப்பாலடையில் பாலைக் கொடுக்கிறார்கள். ஆகாரத்தை மூடிவைப்பதில்லை; ஈ மொய்த்து தூசி படிந்திருக்கும் அதனால் எனக்கு வயிற்றுப்போக்கு வந்துவிட்டது.

9. என்னை தினம் குளிப்பாட்டுவதில்லை, தலையெல்லாம் பேன், உடம்பெல்லாம் சிரங்கு.

10. எனது உடை அழுக்காயிருப்பதினால் நான் சொறியால் தொந்தரவுப்படுகிறேன்.

11. காற்றும் வெளிச்சமுமில்லாமல் கிராணியினால் அவஸ்தைப்படுகிறேன்.

12. தூக்கமில்லாமல் பலயீனமாயிருக்கிறேன்.

13. வாயில் வைத்துக்கொள்ளும் சீப்பி முதலிய விளையாட்டு சாமான்களை எனக்குக் கொடுத்து வயிற்றுப் போக்கு வந்துவிட்டது.

14. என்னை நல்ல வழியில் பழக்கவேயில்லை.

என்னை இப்படி வளர்த்ததினால் அழுகைமூஞ்சியாயும் நோயாளியாயுமிருக்கிறேன்.

---

## ஜனனமரணங்கள் பதிவு செய்வதைப் பற்றி சில விஷயங்கள்,

### அநுபோகஸ்தர்கள் சொல்வது.

சுகாதார விஷயத்திலும் வியாபாரத்தைப்போல் கணக்கு வழக்குத் தேவை.

ஜனனமரணம் கணக்குப்பதிவு செய்வது டாக்டர்களுக்காக அல்ல. சுகாதாரத்திற்கு மூலாதாரமாயுள்ளது அதுதான்.

நாம் முதலில் செய்யவேண்டியது "ஸ்வீடன்" தேசத்தில் 150 வருடங்களாக செய்துவருவதுதான்—அதாவது சரியான ஜனனமரணக் கணக்கு வைத்துக்கொள்ளுதல்.

சுகாதாரத்தின் லாப நஷ்டக் கணக்கு ஜனனமரணப் பதிப்புத்தான். வியாபாரத்தில் வரவு செலவு திட்டமில்லாமல் எப்படி லாபமடைய முடியாதோ அப்படியே சுகாதாரத்திலும் ஜனனமரணக் கணக்கில்லாமல் நன்மையடைவது அசாத்தியம்.

எல்லா கணக்குகளிலும் ஜனனமரணக் கணக்குதான் மிகவும் முக்கியமானது சுகாதாரமும் ஜனங்களின் க்ஷேமமும் அதைப பொறுத்ததாகவே இருக்கிறது.

வியாபாரத்தில் எப்படி கையிருப்பு சாமான்களை அடிக்கடி கணக்கிடுகிறோமோ அப்படியே சுகாதாரத்திலும் ஜனனமரணங்களை கணக்கிடவேண்டும்.

ஜனனத்தை விட்டுவிட்டு மரணத்தை மட்டும் கணக்கெடுத்தால் வரும்படியைவிட்டு செலவைமட்டும் கவனிப்பதுபோலாகும்.

குழந்தை பிறந்ததும் தகப்பன் செய்யும் முக்கிய கடமை அந்த ஜனனத்தை சரிவர பதிவு செய்விப்பதுதான். அக்குழந்தையின் ஆயுள் முழுதும் அந்தப்பதிவுப் பிரயோஜனப்படும்,

மானிட ஜன்மம் மிகவும் மேன்மையானது ஒருவர் இறந்துபோனால் உடனே அதைப்பற்றிய விவரங்களைப் பதியவேண்டும். இறந்தவிடம், சமயம், காரணம் முதலியவற்றைக் குறிக்கவேண்டும். இப்படிச் செய்வது அனேக காரியங்களுக்குப் பிரயோஜனமாகும்.

ஒவ்வொரு இராஜாங்கத்திற்கும் ஜனனமரணக்கணக்கும், ஜனனங்களால் உண்டாகும் விருத்தியும், மரணங்களால் உண்டாகும் குறைவும், சரிவர தெரிந்திருப்பது அவசியம். ஏனென்றால் ராஜ்யத்தின் ஐஸ்வரியம், நிலத்திலுமில்லை, நீரிலுமில்லை, காசிலுமில்லை, மிருகங்களிலுமில்லை, சுரங்கங்களிலுமில்லை, வியாபாரத்திலுமில்லை— அந்நாட்டில் வசித்துவரும் புஷ்டியான ஜனங்களைப் பொறுத்திருக்கிறது.

நேயர்களே!

பிறருடைய அனுபோகத்திலிருந்து நாம் லாபமடைவோம்! அவர்கள் சொல்வது நமக்கு ஒரு புத்திமதியாக இருக்கட்டும். நாம் ஜனனமரணங்களை ஒன்று விடாமல் பதிவு செய்துவிடுவோம். உடனே செய்துவிடுவோம். தவறாமல் செய்துவிடுவோம். அவ்வளவுதான் வேண்டியது.

---

## எலி! எலி!! எலி!!!

### மூர்த்தி சிறிது, (அப) கீர்த்தி பெரிது.

இந்தக் கதை "எலி" யைப்பற்றி, பார்வைக்கு மிகவும் யோக்கியன். வீட்டில் இங்கும் அங்கும் குடு குடு என்று ஓடிக்கொண்டிருக்கிறான். வாஸ்தவந்தான். ஆனால் அவன் எவ்வளவு விஷமக்காரன் தெரியுமா?

முதலாவது ஒரு ஊரில் ஆள் ஒன்றானால் எலி இரண்டு. இது பொய்யல்ல. இதுமட்டுமல்ல. மனிதரைவிட அதி சீக்கிரத்தில் அவை விருத்தியாகின்றன. சில மாதத்திற்குள் ஒரு ஜதை எலிகள் 80 ஜதைகளாய்விடும்.

நாமும் அவை வளர்வதற்கு எவ்வளவு சவுகரியங்கள் செய்துகொடுக்கிறோம். வீட்டில் மூலை முடுக்குகளும், உடைந்த சாமான்களும், இடிந்த சாக்கடைகளும், பொந்துகளஞ்சியங்களும், குப்பைக் குவியல்களும் ஏராளமாக இருக்க எலிக்கு இருக்க இடத்திற்கா குறைச்சல்! ,ஆகாரத்திற்கோ கேட்கவேண்டாம். கண்டவிடங்களிலும், கண்ட பாத்திரங்களிலும், உணவு பதார்த்தங்களையும், தானியங்களையும் திறந்துவைத்து எலிகளை வேண்டியமட்டும் சாப்பிடச்சொல்லி அழைத்துக்கொண்டிருக்கிறோம். இத்துடன்? எலிக்கு பாவம் தாகமெடுக்கப்போகிறதே யென்று தண்ணீரும் கண்ட பாத்திரங்களில் திறந்துவைக்கிறோம். எலியோ சர்வபக்ஷணி, கம்பு, சோளம், அரிசி, கோதுமை நாம் எதை சாப்பிடுகிறோமோ அதுவே அதற்கும் திருப்தி. அதிலும் கொஞ்சமாவா! ஒவ்வொரு எலியும் ஒவ்வொரு வாரத்திலும் 5 பை விலையுள்ள தானியம் சாப்பிடுகிறது. இந்தக்கணக்கில் ஒவ்வொரு எலியும் வருஷத்திற்கு ரூ. 1-6-0 தானிய நஷ்டம் உண்டாகிறது.

இதைத்தவிர, இதர சாமான்களை பல்லால் கடித்து நாசமாக்குகிறது. இதனால் குறைந்தபக்ஷம் ஒவ்வொரு எலியாலும் வருஷம் 10 அணா நஷ்டம் உண்டாகிறது. எலியால் மொத்த நஷ்டம் எவ்வளவு? ஒவ்வொரு எலியால் ரூ. 2 நஷ்டம். எலிகளோ மனிதரைப்போல் இரண்டு பங்கு, ஆகையால் நாம் ஒவ்வொருவரும் எலியின் நிமித்தம் வருஷந்தோறும் 4-ரூபாயாவது நஷ்டம் அடைகிறோம். நம் இராஜதானியில் எலியால் வருஷந்தோறும் மொத்தம் நஷ்டம் எவ்வளவு பார்.

### முப்பது கோடி ரூபாய்!!

பண நஷ்டமட்டுமோ! ப்ளேக் என்னும் கொடிய நோயைப் பரவச்செய்து ஆயிரக்கணக்கான மரணங்களையும் அல்லவோ உண்டுபண்ணுகிறது.

இவ்வளவு நஷ்டப்படுத்தும் எலிகளுக்கு நாம் ஏன் இடங்கொடுக்கவேணடும். கீழ்ச்சொல்லியபடி செய்து எலிகளை ஒழிக்கலாமே.

---

### எலிகளை ஒழிக்க.

1. எலிகள் இருக்க இடங்கொடாதே. வீடு, களஞ்சியம், மண்டி முதலியவற்றை எலி வரமுடியாமல் கட்டு. குப்பையும், கந்தையும் குவிக்காதே. மூலை முடுக்குகளை எலி அடையாமல் சுத்தமாய் வைத்துக்கொள். சாக்கடைகளில் எலி வரவொட்டாமல் சரியாய் கட்டிவைத்துக்கொள்.



2. எலிக்கு ஆகாரமில்லாமல் செய்துவிடு. உணவு பதார்த்தங்களையும், தானியங்களையும் நல்ல பாத்திரங்களில் மூடிவை. குப்பை கூளங்களை வீட்டில் சேர்க்காமல் தினந்தோறும் அப்புறப்படுத்து.

3. ஊரில் எலிகள் ஒழியும் வரை ஓயாமல் எலிப் பொறிவைத்து ஒவ்வொரு எலியையும் கொல்லுங்கள்.

4. எலிகளை விஷம்வைத்துக் கொல்லலாம், எப்படிச் செய்வதென்பதை சுகாதார அதிகாரிகளைக்கேட்டுத் தெரிந்துக்கொள்ளலாம்.

குறிப்பு—எலி இல்லையானால் பண நஷ்டமுமில்லை ப்ளேக் நோயுமில்லை.

---

## வர்த்தமானங்கள்.

ஒரு தபால் கார்டில் 10,000 வார்த்தைகள்:—ஒரு ஜர்மானிய கலைஞர் ஒரு சாதாரணமான தபால் கார்டில் 3 மாதங்கள் கஷ்டப்பட்டு 10,000 வார்த்தைகளை ஒரு பென்சிலால் எழுதியுள்ளாராம்.

---

10-ல் ஒருபாகம் நாய்:—இங்கிலாந்தின் முழு ஜனத்தொகையில் பத்தில் ஒரு பாகம் நாய்கள் உளவாம். நாய்க் கண்காட்சிக்காக மட்டும் சமீபத்தில் நடந்த காப்ட்ஸ் கண்காட்சியில் சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரம் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தனவாம்.

---

வருஷத்தில் 1,000,000,000 டிக்கட்டுகள்:—லண்டனில் ரயில்வே ட்ராம்கார்கள் முதலியவைகளைத்தவிர 4500 பஸ்கள் இருக்கின்றனவாம். அவைகள் 200 வழிகளில் ஓடுகின்றனவாம். அவை யாவும் சுமார் 1,000 மைல்கள் ஆகுமாம். அவற்றில் 2,000,000 ஆசனங்கள் இருக்கின்றனவாம்

ஒவ்வோராண்டிலும், 1,000,000,000 டிக்கட்டுகளுக்கு அதிகமாகவே வாங்கப்படுகிறதாம். விற்ற டிக்கட்டுகளின் எடை சுமார் 560 டன்கள் ஆகுமாம் ஒவ்வொரு வருஷமும் 22,500,000 காலன் பெட்ரோல் செலவாகின்றதாம்.

---

சென்னை பிரதமநீதியதிபரின் மரணம்.—மேமீ 12 தேதி சென்னை பிரதமநீதி அதிபர் ஸர் விக்டர் மரே கௌட்ஸ்ட்ராட்டர் இங்கிலாந்து தேசத்திற்கு ரஜாவில் போகிறவழியில் கொழும்புக்கும் ஏடனுக்கும் மத்தியில் கப்பலில் மரணமானார். இவர் மகா சட்ட நிபுணர் என்றும் சகலராலும் மெச்சப்படுகிறார். அவருடைய குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலை அளிப்பாராக.

---

இந்திய ஆகாய கப்பலோட்டி.—கபாலி என்ற ஒரு இந்தியன் ஆகாயக்கப்பல் ஓட்டப் படித்து தன்னுடைய ஆகாயக்கப்பலில் இந்தியாவுக்கு, இங்கிலாந்திலிருந்து பறந்துவர உத்தேசித்திருக்கிறார். சமார்த்தியமும் வீரத்தனமுமான இத்தொழிலை முதல் முதலாக படித்திருக்கிற இவ்விந்திய வாலிபனை நாமெல்லாரும் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

---

சிசு விவாகம்.—சக்கூர் என்ற இடத்திலுள்ள முனிசிபாலிட்டி சங்கத்தார் சிசுவிவாகத்தை அதைரியப்படுத்தும் நோக்கமாக 16 வயதுக்குக்கீழே கலியாணஞ் செய்கிற மாணுக்கருக்கு 2 ரூபாய் அதிகமாக பீஸ் வாங்க தீர்மானித்திருக்கிறார்களாம்.

---

பள்ளிக்கூட விடுமுறைநாளைக் கவர்ன்மெண்ட் கண்டித்தல்.—செல்லூர் முனிசிபாலிட்டிகாரர் காலஞ்சென்ற லஜபட் ராய் அவர்களின் ஞாபகார்த்தமாக பள்ளிக்கூடம் மூடப்படவேண்டும் என்று செய்த தீர்மானத்தை கனம் கல்வி இலாகா டைரக்டர் அவர்கள், தேச பக்தர்கள் ஞாபகத்திற்காக சர்க்கார் பள்ளிக்கூடங்களைமூட அனுமதியளிக்கத்தயாராயில்லை யென்ற நோக்கத்துடன் அந்த ரஜாவை நிராகரித்து ரஜாவிடப்பட்ட நாளுக்காக மற்றொரு ரஜா நாளில் பள்ளிக்கூடம் வைத்து நடத்தவேணுமென்று டைரக்டர் அவர்கள் உத்தரவு கொடுத்திருப்பதாக அறிகிறோம்.

---

அண்ணாமலை சர்வகலாசாலை.—சிதம்பரத்தில் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் பண உதவியால் ஸ்தாபிக்கப்பட்டு அவருடைய பேராலேயே அண்ணாமலை சர்வகலாசாலை என்று பேரிடப்பட்டிருக்கிறதென்றும் நாம் அறிந்திருக்கிறோம். அதில் சங்கீத சர்வகலாசாலை யொன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாக அறிகிறோம். ராஜா சர். அண்ணாமலை செட்டியார அவர்களைப்போல பணமுடைய செல்வான்கள் இப்படி தருமவழிகளில் தங்கள் பணங்களை பிரயோகம் செய்வார்களானால் எவ்வளவோ நம்முடைய தேசம் முன்னேறு மென்பதற்குச் சந்தேகமில்லை.

---

ஒரு பெரிய மோட்டார் ஸ்டேஷன்.—லண்டன் பட்டணத்திலுள்ள பெரியரெயில்வே ஸ்டேஷனைப் போலவே மோட்டார் வண்டிகள் நிற்கிறதற்கும் ஒரு பெரிய ஸ்டேஷன் கட்டப்பட்டிருக்கிறதாம். இதில் கொட்டகை போடப்பட்ட 8 பிளாட்பாரம் உண்டு. 400 வண்டிகள் நிற்கக்கூடுமாம். 20 வண்டிகளிலிருந்து ஒரே நேரத்தில் சாமான்களை இறக்கக்கூடிய இடமும் உண்டாம். 1,000 பிரயாணிகள் தங்க வசதியுமிருக்கிறதாம். ஒவ்வொரு வண்டி வருகிற நேரத்தையும் புறப்படுகிற நேரத்தையும் குறிக்கிற மின்சாரக் கைகாட்டி உண்டாம்.

நம்முடைய நாடுகளிலுள்ள மோட்டார் வசதிகளை இதோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது எவ்வளவு தூரம் ஒப்பிடலாமென்றும் மோட்டார் வண்டியில் ஏறி செல்லுகிறவர்களே தீர்மானித்துக்கொள்வார்கள்.

---

ஜப்பான் தேசத்தில் பெருமழை.—ஜப்பான் தேசத்தில் பெருமழை பெய்ததின் பயனாக 12 பேர்கள் செத்துப்போனதாகவும், 5000வீடுகள் இடிந்துபோனதாகவும், 38 பாலங்கள் அழிந்துபோனதாகவும், ரெயில்வே போக்குவரத்திற்கு அதிக கெடுதியுண்டானதாகவும் லக்ஷக்கணக்கான திரவிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாகவும் அறிகிறோம்.

---

சென்னைக்கு புதிய நீதிஅதிபர்.—காலஞ்சென்ற சர் சௌட்ஸ் ட்ரோட்டருக்குப் பதிலாக இங்கிலாந்து தேசத்திலிருந்தே திறமை வாய்ந்த ஒரு பாரிஸ்டரை சர்க்கார் அனுப்புவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

ஆப்கான் தேசத்து அரசர்.—ஆப்கான் தேசத்தைச் சீர்திருத்தம் செய்ய முயன்றதின் பயனாக ஆப்கான் தேசத்தில் பெருங்குழப்பம் ஏற்பட்டதாகவும் அதினிமித்தம் அமனல்லாகான் என்ற அரசன் தன்னுடைய சிங்காசனத்தைவிட்டு தனது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து வெளியேறினார் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். மாஜி அரசரான இவர் தன்னுடைய சத்துருக்களை ஜெயித்து மறுபடியும் பட்டம் வகித்து தமது சீர்திருத்த நோக்கத்தை நிறைவேற்ற ஆசைப்பட்டு கொஞ்சக் காலம் முயற்சித்து வந்தார். இவரே மறுபடியும் பட்டத்திற்கு வரவேண்டுமென்பது உலகத்திலுள்ள மிகுதியான ஜனங்களுடைய ஆசை. ஆனால் திடீரென்று இங்கிலாந்து தேசத்திற்கு ராஜனும் ராணியும் புறப்பட்டுவிட்டார்களென்ற செய்தி அவருடைய ஜெயத்தை எதிர்பார்த்த நல்லெண்ணக்காரருக்கு ஒருவித அதிருப்தியே; ஆப்கான் தேசம் அமைதியான நிலைமைக்குவர எவ்வளவு காலஞ் செல்லுமென்று தெரியாது.

---

வைசிராயாகப் போகும் சென்னை கவர்னர்.—சென்னை கவர்னரான லார்டு கோஷன் பிரபு கொஞ்சக்காலம் கவர்னர் ஜெனரலாக இருக்கப்போகிறார் என்று முன்னமே தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்போது கவர்னர் ஜெனரலாயிருக்கிற லார்டு ஐர்வின் பிரபு கொஞ்சக்காலம் ராஜாங்க விஷயமாக இங்கிலாந்து தேசத்துக்கு ராஜாவின் பேரில் போகிறபடியால் நமது மாகாண கவர்னர் அவருக்குப் பதிலாக வைசிராய் ஆக இருப்பார். லார்டு கோஷன்பிரபு சென்னையைவிட்டு ஜூன் 25-ம்தேதி பம்பாயிக்கு போவாரென்றும் இங்கிலாந்து தேசத்திற்கு பம்பாய் வழியாக ரஜாவில் போகும் கவர்னர் ஜெனரலிடம் ஜூன் மாதம் 29-ம் உ வைசிராய் உத்தியோகத்தை ஒப்புக்கொள்வாரென்றும் அதே நாளில் சென்னை கவர்னர் கவுன்சில் முதல்மெம்பரான நார்மன் மாஜோரி பேங்ஸ் ஆக்டிங் கவர்னர் பதவியைப் பெற்றுக்கொண்டு கவர்னர் மாளிகைக்கு போவாரென்றும் தெரியப்படுகிறது.

சென்னை கவர்னருக்குப் பதிலாக லெப்டினெண்ட் கர்னல் ஜார்ஜ் பிரடேரிக் ஸ்டான்லி என்ற ஒரு பார்லிமெண்ட் மெம்பர் காயமான கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

மாட்சிமை தங்கிய மேரி மகாராணியின் பிறந்த தினம்.—நமது மகா ராணியாரின் 62-ம் பிறந்த தினம் அதிக ஆடம்பரமின்றி மேமீ 27-ம் தேதி தங்கள் மாளிகையில் கொண்டாடினார்களாம். ராஜகுடும்பத்தாரும் கூடியிருந்தார்கள்.

---

ஆகாயக் கப்பலில் உயர அதிக நேரம் தங்கும் சாமர்த்தியம்.—இதுவரை தரையில் இறங்காமல் 150மணி 40 நிமிஷம் 15 செக்கண்டு தான் இருந்ததாகக் கேள்வி. இப்போ ஒருவர் தான் 200 மணிநேரம் இருக்க நினைத்துப் பறந்துபோக 172½ மணிநேரம் அதாவது இரவும் பகலும் 7 நாள் தரையில் இறங்காமலிருந்தாராம்.

இவ்விதமாக நாள்தோறும் பிரதேசங்களில் நூதனங்களைச் செய்யப்பட்டிருக்கிறதாக வாசிக்கிறோம். நமது நாட்டில் முன்னேற என்ன சாமர்த்தியம் செய்கிறோம் என்றுபார்த்தால் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. வெட்டி லஞ்சம் கொடுத்து, தப்பலாம். நூதனமாக களவு செய்யலாம், அதிகாரிகளை ஏமாற்றலாம், பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளைப்படிக்க அனுப்பாததற்குப் புதுக்காரணம் கண்டு சொல்லலாம் என்ற சாமர்த்தியங்களில் தேறிவருகிறதாக பலர் சொல்லுகிறார்கள். உண்மையோ பொய்யோ என்று காரியம் தெரிந்தவர்கள் சொல்லுங்கள்.

---

100 கெஜ ஓட்டம்.—நூறு கெஜ பந்தய ஓட்டத்தில் எடி ற்றோலன் என்ற ஒரு நீகிரோ வாலிபன், பள்ளிக்கூடப்பந்தயத்தில் 100 கெஜ தூரத்தை 9⅘ விநாடியில் (செக்கண்டில்) ஓடினானாம். இவனே உலகத்தில் இவ்வளவு சீக்கிரம் ஓடினவன். என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்கன் மிஷன் "விளக்ஸ்" பிரஸ், பசுமலை—1929.

343

REG. NO.—M. 2146

THE

# Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

" செல்வம் அநேக சிநேகிதரைச் சேர்க்கும் ; தரித்திரனோ தன் சிநேகிதனாலும் நெகிழப்படுவான்."

Vol. IX. ] ஜூலை 1929 [ இலக்கம் 3

16 JUL 1929

## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில௵ ஆனி௴ | ஜூலை௴ | சுக்கில௵ ஆடி௴ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 ஆனி 18 | 2 19 | 3 ✻ கார். 20 | 4 21 | 5 22 | 6 ● அமா. 23 |
| 7 24 | 8 25 | 9 26 | 10 27 | 11 28 | 12 29 | 13 30 |
| 14 31 | 15 32 | 16 ஆடி 1 | 17 2 | 18 3 | 19 4 | 20 5 |
| 21 ○ பௌர் 6 | 22 7 | 23 8 | 24 9 | 25 10 | 26 11 | 27 12 |
| 28 13 | 29 14 | 30 15 | 31 16 | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-௱-௱-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். எ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## பிள்ளை நடத்தையைப்பற்றி சில குறிப்புகள்.

1. நான் என் பிள்ளையை பதஷ்டமாக்குகிறேனா?
2. நான் என் பிள்ளையை கீழ்ப்படியாமலிருக்கச் செய்கிறேனா?
3. நான் என் பிள்ளையை கோபியாக்குகிறேனா?
4 நான் என்பிள்ளையை அயோக்கியனாக்குகிறேனா?
5 நான் என் பிள்ளையை பயங்காளியாக்குகிறேனா?

எடுத்தவுடன் இக்கேள்விகளுக்கெல்லாம் 'இல்லை இல்லை' யென்று எல்லா பெற்றோரும் சொல்வார்கள்; சிலர் தங்களை இத்தகைய கேள்விகளும் கேட்க நேர்ந்ததே என்று விசனப்படுவார்கள். எனினும் மேற்படி துர்ச் சுபாவங்கள் பிள்ளைகளில் உண்டாவதற்கும், உண்டாகி வளர்வதற்கும் பெற்றோரே காரணமென்று பிள்ளைகளையும் பிள்ளைகள் சுபாவத்தையும் ஆய்ந்து ஆராய்ச்சிசெய்யும் வைத்தியரும் ஆத்மீக சாஸ்திர நிபுணரும் சொல்லுகிறார்கள். பெற்றோர் தம் மனப்பூர்வமாக அப்படிச் செய்கிறார்களென்றால், தம் அறிவின்மையாலே அப்படிச் செய்கிறார்கள் என்று மாத்திரம் நாம் சொல்லக்கூடும். பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உள்ள சம்பந்தம் யாது? பிள்ளை வளர்ப்பதெவ்வாறு? பிள்ளையை பூரண குணபூஷணியாக்குவதெங்ஙனம்? பிள்ளையில் காணப்படும் குற்றங்குறைகளை நிவிர்த்திப்பதெப்படி? என்று அநேகர் அறியாதிருக்கிறார்கள். இவ்வறிவின்மையால்தான் மேற்படி துர்ச்சுபாவங்கள் பிள்ளைகளில் உண்டாகி, உண்டாகி வளர்கிறது. ஐயமில்லை. துர்க்குணம் உண்டானபின் அதைத் திருத்துவதைவிட அது உண்டாகாமல் பார்த்துக்கொள்வதே எளிதான காரியம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

### 1. "பதஷ்டம்."

நான் என் பிள்ளையை பதஷ்டமாக்குகிறேனா? நானே பதஷ்டமாயிருப்பதால், என் பதஷ்டத்தைப்பற்றி அவனுக்கு சொல்லுவதால், அவன் எவ்வளவு பதஷ்டமாயிருக்கிறானென்று அவனுக்கு எடுத்துக் காட்டுவதால், அவன் எவ்வளவு பதஷ்டமாயும் விசாரமாயுமிருக்கிறானென்று அவனை வைத்துக்கொண்டே மற்றவர்களுக்குச் சொல்வதால், அவனுடைய சுகபலத்தையும் பழக்க வழக்கத்தையுங் குறித்து அவனறிய தீராக் கவலைகொள்வதால், என் கவலைகளை அவனுக்குச் சொல்லி அவனையும் கவலைப்படப் பண்ணுவதால், அவனுக்கு ரொம்ப செல்லங்கொடுப்பதால், அவனுக்கு மனோ கிரியா சுயாதீனம் சிறிதும் கொடாததால், அவனை எப்போதும் ஒரு பச்சைப்பிள்ளைபோல் நடத்துவதால், இதைச்செய் அதைச்செய்யென்று எப்போதும் கம்பும் தடியோடும் அவனை ஓட்டிக்கொண்டேயிருப்பதால்.

பால பருவமுதல் சிலர் 'பதஷ்ட'மாயிருக்கிறார்கள். இளமையில் 'தொல்லைபிடித்த'வர்களாயும், நடுமையில் 'தொட்டாற் சிணுங்கி'களாயும், கிழமையில் ஒரு வார்த்தைகூட பொறுக்கா 'முற்கோபி'களாயும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளை வளர்ப்பதற்கு திரண்ட பொறுமையும் சாந்தமும் அவசியம் வேண்டும்.

ஆனால் பிள்ளைகள் இப்படி பதஷ்டமாயிருப்பதற்கு, சாதாரணமாக அவர்கள் பெற்றோரே மூலகாரணம். உபகாரணம் பலவிருக்கலாம். ஆனால் மூலகாரணம் பெற்றோரே. மேலே குறிப்பிட்டுள்ள காரியங்களில் சிலவற்றையோ அல்லது எல்லாவற்றையுமோ அவர்கள் செய்கிறார்கள். பெற்றோர் பதஷ்டமாயிருக்கிறார்கள், அதைப் பார்த்து பிள்ளைகளும் பதஷ்டமாயிருக்கின்றன. தங்களுடைய கவலைகளையெல்லாம பிள்ளைகளுக்குச் சொல்கிறார்கள்; பிள்ளைகள் அக்கவலைகளை அதிகமாக்கிக்கொள்கின்றன. பிள்ளைகள் ஒரு சுயாதீனமான ஜீவியம்செய்ய அவர்கள் விடுகிறதில்லை. ஒன்று மட்டுக்கு மிஞ்சி செல்லம் கொடுப்பார்கள்; பிள்ளைகளை அக்கம் பக்கம் போகவிடமாட்டார்கள்; அவர்கள் மேல் ஒரு ஈக்கூட பறவாமல் பார்த்துக்கொள்வார்கள் அல்லது, பிள்ளைகளை கவனிக்கவே மாட்டார்கள்; காட்டுக் கழுதைகளைப்போல் அவை வளரும்.

சாந்தமாயிருக்கப் படி. பிள்ளையைப் பார்த்து எந்த நேரமும் முணுமுணுத்துக்கொண்டிராதே. சமாதானமாயிரு. உன் மூளையை சற்று உபயோகி. நீ சிறுவயதில் எப்படியிருந்தாய் என்று நினைத்துப்பார். ஏதாவது கவலைகளிருந்தால் அதை அவனிடம் சொல்லாதே. சொல்வதற்கு வேறு ஆள் பார்த்துக்கொள். உன் பிள்ளையைப்படி. அவனுக்கு இஷ்டமான காரியம் என்ன, அவனுடைய திறமை என்ன, அவனிடத்தில் காணப்படும் நல்ல காரியம் என்ன, கெட்ட காரியம் என்னவென்று படித்துப்பார். எல்லாவற்றிற்கும் மேலாக, நீ எவ்வளவு சாந்தமாகவும் அமைதலாகவும் இருக்கக் கூடுமோ அவ்வளவு சாந்தமாகவும் அமைதலாகவும் இரு.

### 2. கீழ்ப்படியாமை.

நான் என் பிள்ளையைக் கீழ்ப்படியாமலிருக்கச் செய்கிறேனா? புத்தியீனமான கட்டளையிடுவதால், இக் கட்டளைக்கு மாறாக நானே நடப்பதால், பயமுறுத்துவதால், பயமுறுத்தினதின்படி செய்யாததால், அவன் செய்வதெல்லாவற்றிலும் தலையிட்டுக்கொள்வதால், அவன் கேட்குமெல்லாவற்றையும் மறுத்துவிடுவதால், வாக்குத்தத்தஞ்செய்து அதின்படி நடவாததால், இவன் கீழ்ப்படிகிறானா, அல்லவா என்று பார்க்கும்படியாக கட்டளையிடுவதால், நான் என்னுடைய கடமைகளையும் உத்தரவாதங்களையும் நிறைவேற்றாததால்; அற்ப விஷயங்களை முன்னிட்டு அவனிடத்தில் சண்டைக்குப் போவதால்.

கீழ்ப்படியாமையென்றால் அதிகாரத்திற்கு இணங்காமை. ஆனால் சாதாரணமாகப் பிள்ளைகள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய விரும்புவார்கள். கீழ்ப்படிவது அவர்கள் இயற்கை. நமக்கு யாராவது ஒரு வேலை கொடுக்க மாட்டார்களோ? அதைச் செய்யலாமே என்று பிள்ளைகள் காத்திருக்கும். காரியம் அப்படியிருக்க, சில பிள்ளைகள் கீழ்ப்படியாமற் போவானேன்? காரணம் யார்? பெற்றோரே என்று எண்ணுகிறேன். தாங்கள் இடும் கட்டளைகள் எவ்வளவு மூடத்தனமும் அக்கிரமமானதாயிருந்தாலும் சரி, தங்கள் பிள்ளைகள் தங்களுக்குக்கட்டாயம் கீழ்ப்படியவேண்டுமென்று சில பெற்றோர் எதிர்



நோக்குகிறார்கள். இது நியாயமோ? நாம் நமது பிள்ளைகளுக்கு மடமடவென்று பொழியும் கட்டளைகள் பல ஒன்றிற்கு ஒன்று ஒவ்வாதிருக்கலாம்; பிள்ளைகள் பலத்திற்கு மிஞ்சியிருக்கலாம்; அல்லது, பிள்ளைகள் அவைகளை மறந்து போகக்கூடியதாக விருக்கலாம். அப்படிப்பட்ட கட்டளைகளுக்குப் பிள்ளைகள் கீழ்ப்படியும் என்று நாம் எதிர்நோக்கலாமா? அப்படிப்பட்ட கட்டளையிடுவதால் நாம் நமது பிள்ளைகளை கீழ்ப்படியாமலிருக்கச் செய்கிறோமல்லவா?

சில பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கேட்பதற்கெல்லாம் 'இல்லை, இல்லை' என்று சொல்லுகிறார்கள்; அவர்கள் செய்வதையெல்லாம் தடுக்கிறார்கள். பிள்ளைகள் சந்தோஷமாய் விளையாடும்போதோ, அல்லது துள்ளித் திரியும்போதோ பெற்றோர் அவர்கள் மீது கோபாவேசத்தோடு பாய்ந்து, 'என்ன, உன் கைகால் சும்மாயிருக்காதா, பயலுக்கு நல்ல கொழுப்புப்பிடித்திருக்குதே' என்று சீறுகிறார்கள் இப்படி நடத்தும் பெற்றோருக்கு எந்தப்பிள்ளைகள்தான் கீழ்ப்படியும்?

பெற்றோருடைய முன்மாதிரி பரிசுத்தமாயும் நேர்மையாயுமிருக்கவேண்டும். நீயிடும் கட்டளை நியாயமானதா, பிள்ளையால் சாதிக்குமாவென்று யோசித்துப்பார். பிள்ளைக்கு விளங்கத்தக்கவண்ணமாய் உன் கட்டளையையிடு. நியாயமான கட்டளையாயிருந்தால் அதற்குக்கட்டாயம் கீழ்ப்படியவேண்டுமென்று திட்டமாய்ச் சொல். பிள்ளை தன் சுயேச்சையாய்ச் செய்யும் காரியம் யாவையும் நடுநின்று தடுக்காதே. உனக்கு அற்பமாய்த் தோன்றும் காரியம் பிள்ளைக்கு முக்கியமானதாயிருக்கலாம்.

கீழ்ப்படியும் சுபாவத்தை உண்டாக்குவதற்கு இளமையே நல்ல காலம். 'இப்போது அவன் மனம்போலச்செய்யட்டும், பிறகு எல்லாம் சரியாய் வந்துவிடுவான்' என்று ஒரு நாளும் எண்ணாதே. ஆனால், கீழ்ப்படியும் சுபாவத்தை உண்டாக்கு. நீ உன் பிள்ளையைப்பயங்காட்டவேண்டிய அவசியமில்லை. நீ அவனை அதிகமாகப் பயங்காட்டினால் அவன் உன்னையும் உன் தண்டனையையும் அவமதிப்பான். உன் தண்டனை பலனற்றுப்போம். நீயும் மதிப்பிழந்தவனாவாய். நியாயமான கட்டளை கொடு. கோபத்தோடு அல்ல; அன்போடு கொடு. சாந்தமாயும் சமாதானமாயுங்கொடு. அப்போது நீ சித்திப்பாய்.

### 3. கோபம்.

நான் என் பிள்ளையைக் கோபிக்கிறேனா?

நானே கோபியாயிருப்பதால், சதா முறுமுறுப்பதால், ஓயா முணுமுணுப்பதால், கோபமாயிருக்கும்போது அவனை அடிப்பதால், எனக்குக் கோபம் வந்தால் தெரியுமா, உன்னைத் தோல் தோலாய் உரித்துவிடுவேன் பார் என்று மூடத்தனமாய்ப் பேசுவதால், நான் எவ்வளவு கோபக்காரன் என்று காட்டுவதால், எப்போதும் மாறிக்கொண்டே யிருப்பதால், அவனுக்குப்போதிய ஓய்வு கொடாததால், அவனைத் தன் மனம்போன போக்கெல்லாம் போகவிடுவதால்.

சிலர் கோபிகளாகவே பிறக்கிறார்கள், உண்மை. வேறு சிலர் தேக சுகவீனங்களினாலும் கோபிகளாகிறார்கள். எனினும், கோபிகளில் பெரும்பாலோர் தங்கள் தாய் தந்தையர் தங்களை நடத்தின வகைகளினாலே கோபிகளாகிறார்கள் எனத்தெரிகிறது. பிள்ளை, தன் தாய் தந்தையரைப் பின்பற்றாவிட்டால் பின் யாரைத்தான் பின்பற்றும். நீ ஒரு தற்பிரியனாயும், பிள்ளைமேல் எப்போதும் சீறு சீறு என்று பாய்ந்துகொண்டுமிருந்தால் பிள்ளை எவ்வளவு துக்கமாயும் முகம் விழுந்தவனாயுமிருப்பான் என்று கவனித்திருக்கிறாயா? அவர்களும் உன்னைப் போல்தான் இருப்பார்கள். தாயைப்போல்தானே பிள்ளை, நூலைப்போல்தானே சேலை. அவர்கள் உன்னைக் கவனிப்பார்கள்; உன்னைப் பின்பற்றுவார்கள்; கடைசியில் உன்னைப்போலாவார்கள். இது உண்மை.

ஏதோ ஒரு காரியத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக பிள்ளைகள் அடிக்கடி முறைத்துக்கொள்ளலாம். தனக்கு ஒரு காரியம் வேண்டுமானால் குழந்தை அழுகிறது. வளரவளர, அழுகிறதுமாத்திரமல்ல, அடிக்கடி முறைத்துக்கொள்ளும். நாளாவட்டத்தில் இப்பழக்கம் ஒரு சுபாவமாக மாறிவிடலாம். இதை எளிதில் திருத்தலாம். ஐயோ, பிள்ளை அழுகிறதே என்று இணங்கிவிடாதே. கண்டிப்பாயிரு, சாந்தமாயிரு பிள்ளைக்குக் கோபமூட்டாதே. அவனுடைய முறைப்பையும் கோபத்தையும் அசட்டைபண்ணாதே. அப்பொழுது அவன் அதை விட்டுவிடுவான். பிள்ளைக்குப் போதிய ஓய்வும், தூக்கமும், விளையாட்டும், ஆகாரமும் இருக்கிறதா என்று பார் பிள்ளை நியாயமில்லாமல் கோபப்படும்போது காசோ அல்லது ஏதாவது தின்பண்டங்களோ கொடுத்து அவனைச் சாந்தப்படுத்த முயற்சியாதே. அவன் கோபிக்கட்டும், தன் கோபத்தினால் சாதிப்பது ஒன்றுமில்லை என்று அவன் சீக்கிரம் அறிந்துகொள்வான்.

### 4. யோக்கியம்.

நான் என் பிள்ளையை அயோக்கியனாக்குகிறேனா?

நானே பொய்சொல்வதால், அவனை வைத்துக்கொண்டு மற்றவர்களிடத்தில் பொய் பேசுவதால், ஒன்றுக்கு ஒன்பது சொல்வதால், புரட்டுவதால், உருட்டுவதால்; நான் மற்றவர்களை எப்படி ஏமாற்றினேன் என்று அவனிடம் சொல்லி என்னை நானே மெச்சிக்கொள்வதால், அவன் கேட்கிறதற்கெல்லாம் 'இல்லை, இல்லை' என்று சொல்வதால், சிறு குற்றங்களுக்காக அவனை மிகுவாய்த் தண்டிப்பதால், அவன் தன் கூட்டாளிகளை ஏமாற்றினதாக என்னிடம் சொன்னால் அவனுடைய கூர்மைக்காக அவனை மெச்சிக்கொள்வதால், அவன் சிறு காரியங்களை திருடுவதை நான் பார்த்தும் அவனைக் கண்டியாததால், அவனை வைத்துக்கொண்டு அயோக்கியரை வியந்து கொள்வதால்.

பொய்ச்சொல் பழக்கம் ஒரு பிள்ளையின் சுற்றத்திலிருந்தே சாதாரணமாக உண்டாகிறது. வெகு கொடூரமாகத் தண்டிக்கும் பெற்றோர், சிறிதுக்கும் பெரிதுக்கும் வித்தியாசம் தெரியாப் பெற்றோர், கீழ்ப்படியாமைக்கும் கீழ்ப்படியப் பிரயாசப்பட்டும் ஏதோ தப்பித் தெரியலாம் செய்த பிழைக்கும் வித்தியாசம்பாராப் பெற்றோர் இவர்களுடைய பிள்ளைகள் பொய்பேசாமல் வேறு என்ன

தான் பேசும்? உண்மை பேசி கண்டனை தண்டனை அடைவதைப்பார்க்கிலும் பிள்ளை பொய்சொல்லித் தப்பவே பார்க்கும். இதற்குக் காரணம் யார்? பெற்றோரல்லவா?

இப்படிப்பட்ட பொய்களுக்கு ஒருநாளும் இடங்கொடாதே. இவை அனுவசியம். நீ உன் பிள்ளையோடு நீதியாயும் நியாயமாயும் நடந்துகொண்டால் அது உன்னிடம் பொய்பேசாது. நீ அக்கிரமக்காரன் அல்லது ஒரு பயங்கரமான மனுஷன் என்று அது பயந்தல்லவோ அது பொய் பேசுகிறது.

'இது என்னுடையது, அது உன்னுடையது' என்ற அறிவு சிறுபிள்ளைக்குக் கிடையாது. இது காலக்கிரமத்தில் அவனுக்குப் படிப்பிக்கப்படவேண்டும். சிறுவயதிலே பிள்ளை தனக்கு இஷ்டமான சாமான் எதையும் எடுத்துக்கொள்ளுகிறது. இதைத் திருட்டு என்று அழைப்பது தகாது. ஆனால் வயதுவந்தபிறகும் சில பிள்ளைகள் தங்களுடையதல்லாததை எடுத்துக்கொள்ளுகிறார்கள். இந்த வழக்கத்தைத்தான் பெற்றோர் தடுக்கவேண்டும். தங்கள் தேவைகளுக்காக, தங்கள் ஆசைகளை நிவர்த்திக்க, தங்கள் பெற்றோர்மேல் பழிவாங்க பெற்றோரோ அல்லது தங்கள் சிநேகிதரோ தங்களுக்குக் காட்டியிருக்கும் முன்மாதிரியினால், தங்களுக்கு வேண்டிய சாமான்களைப் பெற்றுக்கொள்ள வேறுவழி இல்லாமையால், அல்லது அதினால் அடையும் சந்தோஷத்தினால் பிள்ளைகள் திருடுகிறார்கள்.

### 5. பயம்.

நான் என் பிள்ளையை பயங்காளியாக்குகிறேனா? 'பூச்சாண்டி வருகிறான்' என்று சொல்வதால், 'கள்ளன் வருகிறான் கதவைப் பூட்டிக்கொள்' என்று பயங்காட்டுவதால், 'உன்னை ஒரு கை பார்த்துவிடுவேன் பார்' என்று மூடத்தனமாய்ப் பேசுவதால், பயங்கரமான பிசாசுக்கதை சொல்வதால்.

பிள்ளையை பயங்காட்டி கீழ்ப்படியச்செய்வது பெற்றோருடைய பலவீனத்தைக் காட்டுகிறது. பயங்காட்டினபடி செய்யாவிட்டால்— அது ஒருக்காலும் செய்யவுமுடியாது— பெற்றோருடைய வார்த்தைக்கு விலையற்றுப்போகிறது. 'அவர் சும்மா சொல்வார், அவருக்கு வேலை என்ன' என்று பிள்ளையாண்டான் நினைக்கிறான். முதலில் பிள்ளை பயப்படத்தான் செய்கிறது. ஐயோ, ஏதோ ஒரு பயங்கரமான காரியம் நடக்கும்போல் தோனுதே என்று அவன் நினைக்கிறான். ஆனால் பெற்றோர் சொன்ன காரியம் ஒன்றும் நிறைவேறாமற்போனவுடனே அவன் வரவர தன் பெற்றோரை அவமதிக்கிறான், அவர்களுடைய வார்த்தைகளை அசட்டை பண்ணுகிறான்.

அல்லது, அவன் ஒரு பயங்காளியாகிறான். இருட்டிலே வெளியேபோகப் பயப்படுகிறான். ஜனங்களுக்கும் மிருகங்களுக்கும் பயப்படுகிறான். வீதியிலே சிங்கம் இருக்குமென்று எண்ணுகிறான். இதற்குக் காரணம் பெற்றோரல்லவா? அவர்கள் தானே அவனைக் கீழ்ப்படியச் செய்யவேண்டியது மூடத்தனமாக அவனைப் பயங்காட்டினார்கள். இப்போது பையன் பயங்காளியும் கோழையாயுமிருந்தால் குற்றம் யாருடையது?

அவனுக்குக் கொஞ்சம் சுவாதீனம் கொடு. அவனும் யோசிக்கட்டும், அவனுக்கும் மூளையுண்டல்லவா? நீ ஏதாவது சொன்னால் அதற்கு தகுதியான காரணம் கொடு. அவனை ஜாக்கிரதையாக நடத்து. அவனைப் பயங்காட்டாதே உன்னால் செய்யக்கூடாத ஒரு வாக்குத்தத்தமும் செய்யாதே. உன்னால் செய்து முடிக்கக்கூடாத ஒரு தண்டனையையும் அவனிடம் சொல்லாதே. நீ சொல்வதை செய்துதீர். அவனுடைய குற்றத்திற்காக அவனைத் தண்டி. உன்னுடைய குற்றத்திற்காகவல்ல. முதல் ஐந்து வயது வரைக்கும் அவனைச் சரியான பிரகாரம் வளர். பிறகு உன் வேலை இலகுவாயிருக்கும். பிள்ளையிடத்தில் காணப்படும் நல்ல குணத்திற்காக உன்னை மெச்சிக்கொள்ளுகிறாயே. கெட்டகுணம் காணப்பட்டால் உன்னையே நீ கடிந்துகொள்ளாததேன்?

பெற்றோரே, நாம் படிக்கவேண்டிய ஒரு பெரிய பாடம் உண்டு நல்ல தாயாயிருப்பது எப்படி? நல்ல தகப்பனாயிருப்பது எப்படி? இதைவிட நாம் படிக்கவேண்டிய பாடம் ஒன்றுமில்லை **நாம் நமது பிள்ளைகளில் ஜீவிக்கிறோம். மரித்தாலும், நமது பிள்ளைகளில் நாம் பிழைக்கிறோம்: ஆகையால் ஜாக்கிரதையாயிருப்போமாக.**

(நிகழ்கால சத்தியம்).

---

## வன சஞ்சாரியும் கள்வனும்.

பிரஷியாவில் ஸிலீஸியா மலைகளுக்கருகேயுள்ள அடர்ந்து படர்ந்த காடுகளில் ஓர் நிர்ஜன ஸ்தானத்தில் கிரீம்ஸ் என்ற ஒரு வனசஞ்சாரி சில வருஷங்கள் முன்னிருந்தான். அவனுடைய தாயும், மனைவியும், ஏழு வயது மகளும் சுத்தாங்கக் கிறிஸ்தவர்கள்; அவனோ கிறிஸ்தவனல்ல. அவன் வேதத்தை விசுவாசிக்கவில்லை. தன் மனைவி மக்கள் ஜெபிப்பதையுங் கேலிபண்ணுவான்.

ஒரு நாள் இரவு காரிருளாயிருந்தது. கடுங்காற்று அடித்தது. மரங்களுக்கூடே காற்று இரைந்து கொண்டேயிருந்தது. அந்த இரு பெண்களும் சிறு பிள்ளையும் தங்கள் வீட்டு அடுப்பங்கரையைச் சுற்றியிருந்தார்கள். பக்கத்துக் கிராமத்துக்குப்போய் பொழுது அடையுமுன் வந்துவிடுவேன் என்று போன வனசஞ்சாரி இன்னும் வரவில்லை, அம்மூவரையும் திகில்பிடித்தது. அப்பக்கத்திலே கள்ளர் ஜாஸ்தி. அவர்களில் அநேகரை நமது வனசஞ்சாரி பிடித்து காவலிலிட்டிருந்தான். ஆனால் மிகத் தந்திரமும் பலமும் வாய்ந்த அக்கள்ளர்கூட்டத் தலைவனோ இன்னும் இவன் கைக்கு அகப்படவில்லை. அவன் மகா துஷ்டன். கல்நெ



ஞ்சன். தயை தாட்சணியம் எள்ளளவுமில்லாதவன். தன்னிஷ்டரில் பலரைப்பிடித்துக் காவலிலிட்டிருந்தமையால் அவ்வனசஞ்சாரி மீதும் பழிக்குப் பழி வாங்காது தான் சாவதில்லையென்று அக்கள்ளர்கூட்டத் தலைவன் அடிக்கடி சபதமிட்டிருந்தான். இதை இம்மூவரும் அறிவார்கள். இரவு அதிகரிக்க அதிகரிக்க பயம் அவர்களை மேலிட்டது. அவர்கள் வேறொன்றைப்பற்றியும் நினைக்கக்கூட வில்லை. எண்ணமெல்லாம் அவ்வனசஞ்சாரி மீதேயிருந்தன.

கடைசியாக, பாட்டியார் மற்றிருவரையும் நோக்கி, "நாம் இப்படிக் கவலைப்படுவதால் என்ன பிரயோஜனம்? இக்கட்டுக் காலத்தில் தேவனைத் தேடுவோமாக. அவரன்றி ஒன்றும் அசையாதே. "உங்கள் கண்ணீர்களையும், கால் நடைகளையும், தலைமேல் மயிர்களையும் எண்ணியிருக்கிறேன் என்று அவர் சொல்லுகிறாரே" என்று சொன்னாள்.

உடனே மனைவியானவள் குடும்ப வேதாகமத்தைத் திறந்து எழுபத்தோராம் சங்கீதத்தை உரக்க வாசித்தாள். அவள் வாசித்த அச்சங்கீதத்திலே அந்நேரத்திற்கேற்ற ஆறுதலான வாக்கியங்கள் பல இருந்தன. "கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும். நான் எப்போதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும், என்னை ரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர். என் தேவனே, துன்மார்க்கனுடைய கைக்கும் நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்." சங்கீதம் வாசித்தபின்,

"என்னோடிரும் என் நேச கர்த்தரே
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே"

என்ற அவ்வருமையான இராப்பாட்டைப் பாடி ஜெபிக்க ஆரம்பித்தார்கள். ஜெபம் வெகு ஊக்கமாக விருந்தது. தங்களுடைய கவலைகளையெல்லாம் தேவனுக்குச் சொன்னார்கள். பக்கத்து ஊர்போய் பொழுது அடையுமுன் வருவேன் என்று சொல்லிப்போன வனசஞ்சாரியைத் தேவன் சுகபத்திரமாய் வீடு வந்து சேர்க்க வேண்டுமென்று ஜெபித்தார்கள். சுற்றுக்கிராமங்களிலுள்ள ஏழைகளுக்காகவும் வியாதியஸ்தருக்காகவும் ஜெபித்தார்கள். கடைசியாக, அக்கள்ளர்கூட்டத் தலைவன்மேல் தேவன் இரக்கமாயிருக்கவேண்டுமென்றும் அவன் தன் இருதயத்தை மாற்றி தன் துன்மார்க்கங்களிலிருந்து திரும்பவேண்டுமென்றும் ஜெபித்தார்கள்.

ஜெபத்திற்கு 'ஆமென்' கூட போடவில்லை. அதற்குள்ளாக வனசஞ்சாரி வந்து கதவைத் தட்டினான். ஆ, அவர்களுக்கிருந்த சந்தோஷத்தை என்ன வென்றுரைக்க! இவர்கள் அவனைப்பற்றி எவ்வளவு கவலைகொண்டிருந்தார்களோ அவ்வண்ணமே அவனும், 'ஐயோ நாம் தனிமையாய் விட்டுவந்த பெண்சாதி பிள்ளைகள் எப்படி இருக்கிறார்களோ! ஒருவேளை அக்கள்ளர்கூட்டத் தலைவன் நாம் இல்லாததைத் துப்பறிந்து வீட்டினுள் புகுந்து பாவம்பழிபாராமல் அவர்களைத் தன் கூர் கத்திக்கு இரையாக்கியிருந்தால் என்செய்வது' என்று வழிநெடுக கவலைப்பட்டுக்கொண்டே வந்தான். தன் வீடு வந்து சேர்ந்து எல்லாரும் சுகபத்திரமாய் இருப்பதைப்பார்த்து அவனும் களிப்புற்றான்.

நிற்க, நேரம் ஜாஸ்தியாகிவிட்டது. எல்லாரும் படுக்கப்போனார்கள். வனசஞ்சாரியும் அவன் மனைவியும் மேல் மெத்தைக்குப் படுக்கப் போகும்போது அவள் அவனைப் பார்த்து, அவன் பிந்திப்போனதினால் அவர்கள் பட்ட கவலையையும் அவனுக்காகச் செய்த ஜெபத்தையும் சொன்னார்கள். அவன் சிரித்து 'ஏன் இப்படி வீணாய் ஜெபம்பண்ணுகிறாய்? ஜெபத்தில் நீ என்ன நன்மை கண்டாய்? என்னுடைய நாய்களும் துப்பாக்கிகளும் இருக்கும்வரை உனக்கு என்ன பயம்? என்று சொன்னான். பின்பு வீடு முழுதும்போய் கதவுகளெல்லாம் பூட்டியிருக்கின்றனவா என்று பார்த்தான், தன் துப்பாக்கிகளில் குண்டிட்டான், நாய்களை அவிழ்த்துவிட்டான். எல்லாரும் தூங்கினார்கள்.

ஒருமணி நேரத்திற்குப்பின், எல்லாரும் குறட்டைவிட்டு தூங்கிக்கொண்டிருக்கும் சமயம், ஒருமனிதன் ஒரு கட்டிலுக்குக் கீழிருந்து மெதுவாய் வெளிவந்தான். அவன்முகம் பார்க்க பயங்கரமாயிருந்தது. அவன் யாரென்று நினைக்கிறீர்கள்? அவ்வீட்டார் அதிகமாகப் பயப்பட்ட அக்கள்ளன்தான் இவன். பொழுது கருக்கும் சமயம் அவன் எப்படியோ ஒருவருக்கும் தெரியாது வீட்டினுள் நுழைந்து கட்டிலின்கீழ் மறைந்துகொண்டான். வீட்டிலே பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் அவன் காதில் விழுந்தன. என்ன வந்தாலும் சரி, வனசஞ்சாரிமீதும் அவன் குடும்பத்தினர் மீதும் பழிக்குப்பழி வாங்கவேண்

டுமென்று அவன் அங்கு வந்திருந்தான். தன் இடுப்பிலிருந்த ஒரு பெரிய கத்தியை உருவி அருகிலுள்ள மேசையில் வைத்தான். அங்குமிங்கும் எட்டிப்பார்த்தான். தன்னை யாரும் கவனிக்கவில்லை. எல்லாருக்கும் அயர்ந்த தூக்கம். மேசையிலிருந்த வேதாகமத்தை எட்டியெடுத்தான். வேதாகமம் எழுபத்தோராம் சங்கீதத்தில் திறந்திருந்தது. அச்சங்கீதத்தை நிலாவெளிச்சத்தில் வாசிக்கும்படி முயன்றான்; என்றாலும் முடியவில்லை. வனசஞ்சாரியின் மனைவி அதை வாசித்தபோது அவன் அதைக் கவனித்து கேட்டிருந்தான். சரி, இப்போதும் என்னசெய்வதென்று திகைத்தான். தூங்கினவர்களைக் குத்திவிடும்படியாக தன் கத்தியை இரண்டு அல்லது மூன்று முறை எடுத்தான். என்றாலும் மனம் வரவில்லை. கத்தியைக் கீழே வைத்துவிட்டான். அச்சங்கீதத்தின் வாக்கியங்கள் அவன் ஞாபகத்திற்கு வந்துகொண்டேயிருந்தன. மேசையிலிருந்த அக்கத்தியை மேசைமீதே வைத்துவிட்டு அவன் வேதத்தை எடுத்துக்கொண்டு வெளியேவந்தான். பின் வேலியைத் தாண்டி காட்டினுள்ளே மறைந்துபோனான்.

மறுநாள் காலை வனசஞ்சாரியும் அவன் மனைவியும் விழித்தபோது ஜன்னல் திறந்திருப்பதைக் கண்டார்கள். மேசையின்மேல் ஒரு பெரிய கத்தியிருப்பதையும் கண்டார்கள். அவர்களுக்குண்டான ஆச்சரியம் அற்ப சொற்பமல்ல. யாரோ ஒருவன் வீட்டினுள் வந்திருக்கவேண்டுமென்றும் அவன் வந்தது தங்களைக்கொல்லவேயென்றும் அவர்களுக்குப் பிரத்தியட்சமாய்த் தெரிந்தது. மனைவி தன் வேதாகமத்தைத் தேடிப்பார்த்தாள். அதைக் காணோம். நேற்றிரவு வந்த கள்ளன்தான் அதை எடுத்துக்கொண்டுபோயிருக்கவேண்டுமென்றும் தங்களை ரட்சித்தது அவ்வேதமேயென்றும் அவள் மனதில் பலமாய்ப் பட்டது. உடனே அவள் முழங்காலில் நின்று தன் தேவனை ஸ்தோத்திரித்தாள். தன்னை ரட்சித்தது தன் நாயல்ல, துப்பாக்கிகளுமல்லவென்று அவள் புருஷனும் உணர்ந்தான்.

அந்த இரவுக்குப் பிறகு அக்காட்டில் இதுவரையும் பெரிய அட்டகாசம் செய்துவந்த அக்கள்ளர் கூட்டத் தலைவனைப்பற்றி ஒரு பேச்சுமில்லை, அவனை யாரும் பார்க்கவுமில்லை. இதற்குக் கொஞ்ச மாதங்களுக்குப் பிறகு பிரெஞ்சுக்காரருக்கும் ஜெர்மானியருக்கும் ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அச்சண்டைக்கு நமது வனசஞ்சாரியும் போயிருந்தான். சண்டையிலே காயமடைந்தான். காயமடைந்து கீழே விழுந்தான். அவன் செத்துப்போனானென்று அவனை யாரும் கவனிக்கவில்லை. யுத்தம் முடிந்தது, எல்லாரும் தத்தம் வீட்டிற்குப் போனார்கள். ஆனால் நமது வனசஞ்சாரியோ போர்க்களத்திலேயே கிடந்தான். கிடந்து புலம்பிக்கொண்டேயிருந்தான். அப்பொழுது அவ்வழியே போன ஒரு செம்படவன் இவன் குற்றுயிராயிருப்பதைக் கண்ணுற்று அவனை யெடுத்து ஒரு தோணியில் அவனை ஏற்றி ஆற்றங்கரையிலுள்ள ஒரு கிராமத்துக்கு அவனை ஓட்டிக்கொண்டுபோனான். அங்கே அவன் காயங்களைக் கழுவி அவற்றுக்கு மருந்திட்டான். வனசஞ்சாரியுடைய மனைவிக்கு அவன் நிலைமையைப்பற்றி ஓர் கடிதம் எழுதினான். அவளும் அவளுடைய மக்களும் அக்கிராமத்துக்கு வந்து அவனுக்கு சுகமாகும்வரை அந்த செம்படவனுடைய வீட்டிலேயே யிருந்தார்கள். செம்படவனும் அவனுடைய மனைவி மக்களும் இம்மூவருக்கும் வெகு பட்சமாயிருந்தார்கள்.

சுகமான பிறகு அவன் தன் ஊருக்குப் போக ஆயத்தப்பட்டான். போகுமுன், தங்களுக்கு இதுவரையும் செய்துவந்த பேருதவிக்காகவும் உபகார உபசாரத்திற்காகவும் ஏதாவது வெகுமதி வாங்கிக்கொள்ளவேண்டுமென்று செம்படவனையும் அவனுடைய மனைவி மக்களையும் வற்புறுத்தினான். செம்படவனோ, அவர்களுக்குக் காட்டியிருக்கும் உபகாரத்தைவிட அவர்களே தனக்கு அதிகமான உபகாரம் காட்டியிருக்கிறார்களென்றும் சொல்லி, தன் வீட்டிலேயிருந்த ஓர் பழைய வேதாகம புஸ்தகத்தையெடுத்து அதை வனசஞ்சாரியின் மனைவிக்கு நேராக நீட்டினான். அவள் அதைப் பார்த்ததும், வெகுநாளாய்க் காணாமற்போன தன் வேதாகமமே இதுவென்று அறிந்துகொண்டாள். அப்பொழுது அச்செம்படவன் அவர்களை நோக்கி:—

"நான் யாரென்று உங்களுக்குத்தெரிகிறதில்லைபோலும். உங்கள் ஊர்ப்பக்கம் வெகுகாலம் அட்டகாசம்பண்ணின அக்கள்ளர் கூட்டத் தலைவன்தான் நான். என்னுடைய கூட்டாளிகளில் பலரைப் பிடித்து நீங்கள் ஜெயிலிலிட்டிருந்தமையால் உங்கள்மேல் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று நான் நினைத்திருந்தேன்; ஒருநாள் சாயங்காலம் நான் ஒருவருக்குந்தெரியாமல் உங்கள் வீட்டினுள் புகுந்து ஓர் கட்டிலின்கீழ் ஒளித்துக்கொண்டேன். நீங்கள் எப்போ தூங்குவீர்கள், உங்களைக் கொல்லவேண்டுமென்று காத்துக்கொண்டேயிருந்தேன். ஆனால் அப்பொழுது உமது மனைவியார் எழுபத்தோராம் சங்கீதம் வாசித்து ஜெபம்பண்ணினார்கள். நான் அதைக் கேட்கக்கூடாதென்று என் காதைப்பொத்தினேன். என்றாலும் கூடவில்லை, உங்களைக் குத்தும்படியாக மும்முறை என் கத்தியை எடுத்தேன். என்றாலும் என் மனசு வரவில்லை. யாரோ ஒருவர் என் கையைப் பிடித்துக்கொண்டமாதிரியிருந்தது. உடனே அவ்வேதாகமத்தை எடுத்துப் போய் வாசித்துப்பார்க்கவேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டானது. நான் ஒரு பாவி என்றும் இயேசுவே என் ரட்சகர் என்றும் உணர்ந்தேன். சிலுவைக்கள்ளனை மன்னித்த ரட்சகர் நீச மாபாவி என்னையும் மன்னிப்பார் என்ற திடநம்பிக்கை எனக்கு உண்டானது. நான் ஒரு புதிய ஜீவியம் ஜீவிக்கவேண்டி நான் இவ்வூருக்கு வந்தேன். என்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் என் மனைவி எனக்கோர் பேருதவியாக இருக்கிறாள். இவ்வுலகத்தில் எங்களுக்கு வேண்டிய எல்லாம் தேவன் எங்களுக்குத் தந்திருக்கிறார். எங்களுக்கு ஒன்றும் குறைவில்லை, எங்களுக்கு மறுமையில் நம்பிக்கையும் உண்டு. இந்த சந்தோஷத்துக்கும் நம்பிக்கைக்கும் காரணம் உங்கள் வேதாகமமே. வனசஞ்சாரியாக, நீர் உமது துப்பாக்கிமீதும் நாய்கள்மீதும் உமது நம்பிக்கையை வைத்திருந்தீர். ஆனால் அவைகள் உம்மை ரட்சிக்கவில்லை. உம்மை ரட்சித்தது தேவனுடைய வார்த்தையே. என் குரூரக்கத்தியைக்கொண்டு நான் உம்மை ஊடுருவக் குத்தாததற்குக் காரணம் தேவனுடைய வார்த்தையே. அதுதான் அன்று உம்மை ரட்சித்தது; போர்க்களத்தில் உம்மை ரட்சித்ததும் அதுதான். எனக்கு வந்தனம் சொல்லாதீர். உம்மையும் என்னையும் ரட்சித்த நேசபிதாவுக்கும் அவருடைய வசனத்துக்குமே ஸ்தோத்திரம் சொல்லும்" என்றான்.

[நிகழ்கால சத்தியம்.]

## துண்டு துணுக்குகள்.

கிழிந்த இடத்தை மேலே வைத்து உடுத்தினால் வயிறு உப்புகையில் இன்னும் அது கிழியும்; காலின் பக்கம் கட்டினால் அதை விட அதிகம் கிழியும். இவ்விதமே கெட்டகுடியே இன்னும் தொடர்ந்து நெருக்கத் துன்புறுகிறது.

பருத்திச் சேலை கட்டியவள் உயர்ந்தவளா? பட்டுச் சேலை கட்டியவள் உயர்ந்தவளா? என்பது கேள்வி. எவள் பதிபக்தி நிறைந்தவளோ அவளே உயர்ந்தவள்.



வீட்டின் கஷ்ட நிலையை விருந்தினன் கண்டானோ? இல்லாமையைப் பிச்சைக்காரன் அறிவானோ? பாலையில் இல்லாததைக் குழந்தை தெரிந்து மௌனப்படுமா? ஏழை விடுங்கண்ணீரை எல்லாம் உள்ளவர் உணர்வாரா?

மனைவியை அடிப்பதில் அவள் உயிர் போகாதிருப்பது கணவனின் அதிஷ்டம்! அதே அடியில் ஆவி பிரியுமோ, ஐயா உடனே சிறையே, கைதியே

மணற்சாலை:—அமெரிக்காவில் சிகாகோ என்னும் நகரில் ஹாயி இன்ஸ்டிடேட் என்னும் சங்கத்தில் மணல் சாலை ஒன்று இருக்கிறதாம். சென்ற பத்து வருஷங்களாக வெவ்வேறு தேசங்களிலிருந்து வெவ்வேறு மணல்களைக் கொண்டு வந்து சற்றேறக்குறைய மூவாயிரத்து ஐந்நூறு குப்பிகளில் வைத்து இருக்கிறார்களாம். வியின்ஸி, சுண்ணாம்பு இவைகளை நயமான ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்ததிலிருந்து இவ்வளவு விதமான மண்களைச்சேர்த்து அவைகளின் அம்சம், உருப்படும் இடம், குணங்கள், உபயோகம் முதலியவைகளைத் திரட்டி ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

பச்சோந்தி நிறம் மாறுதிருக்க அடிக்கடி தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் தன்மையுடைய பச்சை ஓந்தியின் கண்களைக் கட்டிவிட்டால் மாறுகிற தன்மையை உபயோகிக்க முடியாமல் ஒரே நிறத்துடன் இருக்குமாம்.

மூளையின் வேலை:—ஒரு மனிதனுடைய மூளை முழுவதும் ஒரே சமயத்தில் வேலை செய்யாமல் இரண்டு பாகமாய் மாறிமாறி வேலை செய்யுமாம்.

தேயிலை:—இங்கிலாந்தில் ஒருநாளைக்கு ஆறுலட்சம் பவுண்டு நிறையுள்ள தேயிலை செலவாகிறதாம்.

லண்டன் நகருக்கு வருவோர் ஒவ்வொரு நாளும் லண்டன் பட்டணத்தில் வேலை செய்து சம்பாதிக்க, ஐந்து மைல்களுக்குள் இருக்கும் சுற்றுப்புறங்களிலிருந்து மூன்று லட்சம் ஜனங்கள் காலையில் லண்டனிற்குள் வந்து திரும்பி சாயந்திரம் தங்கள் ஊர்களுக்குச் செல்லுகிறார்களாம்.

காகித உற்பத்தி:—கிறிஸ்துவுக்குப்பின் பதின்மூன்றாவது நூற்றாண்டில்தான் மூர் ஜாதியாரால் சணலிலிருந்து காகிதம் செய்யப்பட்டதாம். அதற்கு முன்னாட்களிலெல்லாம் பருத்தியிலிருந்துதான் செய்தார்களாம்.

சில நமஸ்கார வழிகள்:—ஹிந்துக்கள் பெரியவர்களைக் கண்டால் சாஷ்டாங்கமாய் பூமியில் விழுகிறார்கள். சீனர்கள் எழுந்து நிற்பார்கள். ஜப்பானியர்கள் தங்கள் செருப்புகளைக் கழற்றிவிட்டுக் கைகளைக்கட்டிக்கொண்டு எங்களைக் காப்பாற்றுங்கள் என்பார்கள். பர்மா தேசத்தவர்கள் முகத்தை முகர்ந்துபார்த்துவிட்டு வாசனை நன்றாயிருக்கிறது என்பார்கள். தெற்குசமுத்திரத் தீவுகளிலிருப்பவர்கள் குடம் ஜலம் கொட்டுவார்கள். முகமதியர்கள் குனிந்து கையால் பாதத்தைத் தொட்டு ஆதாம் என்பார்கள். கிறிஸ்தவர்கள் மண்டிக்கால் போட்டுக்கொண்டு கைகளைக் கூப்பி தலையைக் குனிவார்கள். அரபியர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி முத்தமிடுவார்கள்.

ஒவ்வொரு சதுர அடியுள்ள தேன் கூட்டில் ஒன்பதினாயிரம் சிறு அறைகள் இருக்குமாம்.

மனிதனைவிட உன் மனச்சாக்ஷிக்கு அதிகம் அஞ்சு, அப்போதுதான் சுத்தனாவாய்.

சோதிக்கும் தெய்வமே நமக்கு அனுகூலமும் செய்கிறது. அவருடைய பிரியத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து விடுவோம்.

படித்தவர்கள் பெற்றவரைப் போன்போடு மரியாதை செய்வார்கள் என்று எண்ணுவது கூடாது. அங்கேயும் ஒருசின்ன ஓட்டையுண்டு.

நம்மை அகங்காரத்துடன் ஒருவன் வலியத் தூற்றும்போது அவன் புத்தி தெளிவற்றிருந்திருக்கக்கூடுமோ வென்றும் சற்று ஆலோசிக்கக்கடவோம்.

வீட்டின் பெரியோர்களும், மற்றவர்களும் சிலாக்கித்தக்க குணபூஷணர்யே சொற்ப கல்வி கொண்டவராயினும் உத்தமியாவாள்.

தூங்குகிறவனின் தொடையில் கயிறு திரிப்பதே பேராசைக்காரர்களுடைய வழக்கம்.

பெண்கள் படித்து என்ன செய்கிறது என்ற கேள்வியைக் கேட்போர், மல்லிகை புஷ்பம் மலர்ந்து என்ன செய்கிறது என்பதற்கு பதில் சொல்லட்டும்.

இவ்வுலகின் சமுத்திரக்கரையை அளந்துகொண்டே சென்றால் மொத்தம் லக்ஷத்து முப்பதினாயிரம் மைலாம்.

ஜலத்தின்வழியாய் 45200 அடி தூரம் கேட்கும் ஒரு மணியின் சப்தம் காற்றுவழியாய் 456 அடி தான் கேட்குமாம்.

மோட்டார்வண்டிகளை வாடகைக்கு கொடுக்கிறதுபோல் லண்டன்நகரில் ஆகாயவிமானங்களை ஒரு நிமிஷத்திற்கு ஒருஷில்லிங்கு வீதம் வாடகைக்குக்கொடுக்க ஒரு பறக்கும் சங்கம் ஏற்பட்டிருக்கிறதாம்.

நீ பிறருக்குப் புத்திசொல்லும்போது நீ அவ்வாறு செய்கிறாயா? நடக்கிறாயா? என்று உன் நெஞ்சை நீயே கொஞ்சம் தட்டிக்கேள்.

நீ முறைப்படி இருப்பது சரிதான், அதற்குத்தகுந்த சாக்கும் மதிப்பும், கையிலே பணமுடிப்பும், உன்னிடம் இருக்கிறதா வென்று முதலில் யோசி.

(அமிர்தகுணபோதினி)

## வர்த்தமானங்கள்.

நமது சக்கரவர்த்தி சுகமடைந்து வருகிறார் என்று கேள்விப்பட்டு சந்தோஷமடைந்து ஜூலை௴ 16வ அவருக்கு சுகங்கொடுத்த தெய்வத்திற்கு நன்றிசெலுத்த வேண்டும் என்று தீர்மானித்ததையும் முன்சொல்லப்பட்டது. ஆனால் திடீரென்று மறுபடியும் கொஞ்சம் சுகவீனம் ஏற்பட்டு படுக்கையிலிருக்கிறதாகவும், வரவர சுகமேற்பட்டு வருகிறதாயும் செய்தி எட்டியிருக்கிறது. மறுபடியும் சுகவீனமானதால் நன்றிசெலுத்தும் ஆராதனை பின் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. சக்கரவர்த்தி சாதாரண ராஜாங்கவேலைகள் செய்துகொண்டிருக்கிறார். ராஜாவுக்கு கடவுள் சீக்கிரம் சுகமளிப்பாராக.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சங்கம் போன சஞ்சிகையில் எலெக்ஷன்-மெம்பர்கள் தெரிந்தெடுத்தல் அதிக மும்முரமாய் நடக்கிறதென்று சொன்னோம். பார்லிமெண்டில் முக்கிய மூன்று கட்சிகள் உண்டு லிபரல் (துரிதமாக சீர்திருத்தம் செய்ய விரும்புகிற கட்சி), கான்சர்வேட்டிவ் (படிப்படியாக நன்மை செய்யவேண்டும் என்கிற கட்சி), லேபர் (தொழிலாளரைப்பற்றி கவலையுள்ள கட்சி) என்று மூன்று பெலமான கட்சி. முந்தின பார்லிமெண்ட் சங்கத்தில் கான்சர்வேட்டிவ் கட்சி பெலமாயிருந்து அவர்களே மந்திரிப்பதவி வகித்து அரசாங்கத்தை நடத்தினார்கள்.

இந்த எலெக்ஷனில் முந்தின கட்சிக்காரர் தங்கள் வேலையைச் சரியாய்ச் செய்யவில்லை என்று எண்ணி தொழிற் கட்சியைத் தெரிந்து அவர்களே அதிகம் வோட் வாங்கினார்கள். அந்தக்கட்சியின் தலைவர் கனம் ராம்ஸே மக்டோனல்ட் பிரதம மந்திரியாய் இருக்கும்படி ராஜா உத்தரவிட்டிருக்கிறார். இக்கட்சி முதல் முதலாக 1924 வருஷம் உத்தியோகம் வகித்து 9 மாசத்திற்குள் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது. இந்த சமயங்கூட கொஞ்சக்காலம் உத்தியோகம் வகிப்பார்களென்று பெரியோர் எண்ணுகிறார்கள். இக்கட்சியால் இந்தியாவுக்கு என்ன நன்மை வரும் என்று இந்திய ராஜதந்திரிகள் அதிக ஆவலாய்க் காத்திருக்கிறார்கள்.

போர்டிங் பாடசாலைகள் திறப்பு. எல்லாப் போர்டிங் பாடசாலைகளும் திறக்கப்பட்டன. அநேகம் புதுப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டனர். படிப்பின்மேல் பலருக்கு ஆவலுண்டாகி வருகிறதைக் காண்கிறோம். இவர்களில் யோக்கியமானவர்களுக்கு சர்க்கார் உபகாரம் கிடைக்கிறது. இதைப் பல பெற்றோரும், மாணாக்கரும் பெரிதாக மதிக்கிறதில்லை. மூன்று, நாலு வருஷம் படிக்க வைத்து ஏதோ அற்ப முகாந்திரங்களினால் பிள்ளைகளை நிறுத்திப்போடுகிறார்கள். இதினால் பிள்ளைகள் படிப்பு சிலாக்கியம் கெட்டுப்போவதுடன் சர்க்காரில் கொடுக்கப்படும் பணமும் நஷ்டமாகிறது. இந்தப் பணம் பிரயோஜனப்படுத்தக்கூடிய மற்றவர்களுக்கு உதவுமல்லவா? இது விஷயத்தில் அந்தந்தக் கிராமங்களிலுள்ள உபதேசிமாரும் பஞ்சாயத்தாரும் பெற்றோருக்குப் புத்தி சொல்லி படிப்பு ஒழிவரும் பிள்ளைகளை உடனே அனுப்ப உதவிசெய்தால் அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு பெரிய உதவிசெய்கிறவர்களாயிருப்போம்.

இப்படி தங்கள் சிலாக்கியங்களை மதியாமல் சர்க்கார் பணத்தை துணிகரமாய் நஷ்டப்படுத்தும் பெற்றோரிடம் கனம் சூப்பிரண்டு துரையவர்கள் சில இடங்களில் செய்ததாகக் கேள்விப்படுகிறபோது, காரணமின்றி, பிள்ளைகளை பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தினால் அதுவரை அவர்களுக்குச் செலவழித்த பணத்தை வசூல் செய்ய ஒழுங்கு செய்தால் ஒடிப்போகும் தொகை குறையும் என்று சிலர் ஆலோசனை சொல்லுகிறார்கள். இது விஷயம் பெற்றோர் அதிகக் கவனமாயிருக்கவேண்டும்.

நன்றாகப் படிக்கக்கூடிய பிள்ளைகள் போர்டிங் பாடசாலைக்குப்போய்விட்டால் கிராமப் பள்ளிக்கூடங்களில் கெட்டிக்காரப்பிள்ளைகள் குறைவாயிருப்பார்கள். இது உபாத்தியாயருக்குப் பெரிய அதைரியமான காரியம். பாட்டு, அப்பியாசம் என்றால் நல்ல பையன்களெல்லாம் பள்ளிக்கூடம் போய்விட்டார்களென்று வருத்தப்படுவார்கள். அது உண்மைதான் என்றாலும் மற்றவர்களையும் அந்த நிலைமைக்குக்கொண்டு வருவதே நமது கடமையாதலால் காலதாமதமின்றி இருக்கிற பிள்ளைகளையும் அந்த நிலைமைக்குக் கொண்டுவரப் பிரயாசப்படுவோம்.

அமெரிக்கன் மிஷன் "லிஞ்சன்" பிரஸ், பசுமலை—1929.

1800

REG. NO.-M. 2149


# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.


24 SEP 1929


"சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்; அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது"

Vol. IX.] ஆகஸ்டு௴ 1929 [இலக்கம் 4


## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில௵ ஆடி௴ | ஆகஸ்டு௴ | சுக்கில௵ ஆவணி௴ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 ஆடி 17 | 2 18 | 3 19 |
| 4 20 | 5 21 | 6 22 | 7 23 | 8 24 | 9 25 | 10 26 |
| 11 27 | 12 28 | 13 29 | 14 30 | 15 ஆவணி 1 | 16 2 | 17 3 |
| 18 4 | 19 5 | 20 6 | 21 7 | 22 8 | 23 9 | 24 10 |
| 25 11 | 26 12 | 27 * கார். 13 | 28 14 | 29 15 | 30 16 | 31 17 |


*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ தைமொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## கிராமப்புனர் உத்தாரணம்.

இந்தியவில் மிகுதியானவர்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள். அரசாங்கத்தாரும் இந்தச் சத்தியத்தை உணர்ந்தவர்களாக நடக்கும் பத்து வருஷங்களிலும் கிராம சீர்திருத்தத்தையே இலக்காக வைத்து அரசு செலுத்துகிறார்கள். கிராமங்களுக்குப் படிப்பு, கிராமங்களுக்குத் தந்தி, தபால் ஏற்பாடு, கிராமங்களுக்கு ரஸ்தா ஏற்பாடு, கிராம சுகாதார ஒழுங்கு, கிராம விவசாய விருத்தி, என்பதாக கிராமம் கிராமம் என்றே சகலமும் செய்யப்பட்டு வருகிறது.

இந்துக்களான பரோபகாரிகள், புண்ணிய புருஷர்கள், இதைத் தங்கள் சிரமேற்கொண்டு உழைத்து வருகின்றனர்.

இந்த மகா பெரிய சேவையில் நாமும் பங்கெடுக்க சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

இதற்கு நாம் முதலாவதாக செய்யவேண்டிய காரியம் ஒரு கிராமத்தில் வேலைசெய்யுமுன் அதைப்பற்றிய அநேக விஷயங்களை அறிவதே. அதாவது அந்த ஊரின் ஜனத்தொகையென்ன, எத்தனை ஜாதிகள் இருக்கின்றன, என்னென்ன ஜாதியார் இருக்கின்றார்கள், எந்த மதங்களைச் சேர்ந்தவர்கள், கல்வியறிவு எவ்வளவு உண்டு, அந்த ஊரில் தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்னும் விஷயம் எந்த நிலைமையில் இருக்கிறது, அவர்களுடைய வழக்க பழக்கங்கள் என்ன, விளையாட்டுகள் என்ன, தெய்வங்கள் எவை, திருவிழாக்கள் எவை, அவர்களுடைய தொழில் என்ன, அத்தொழிலில் எவ்வளவு விருத்தி இருக்கிறது, பள்ளிக் கூடங்கள் உண்டா, பஞ்சாயத்துக்கோட்டு, அல்லது கிராமப்பஞ்சாயத்து உண்டா என்று நன்றாக அறியவேண்டும்.

இவைகளை அறிந்த பின் நாம் செய்யவேண்டிய முதலாவது வேலை கல்வி புகட்டலே. கிராமத்திலுள்ள அஞ்ஞானம் நீங்கவேண்டுமானால் இதுதான் முதலாவது காரியம். "கண்ணுடையார் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்" என்னும் குறள் இதை விளக்கும். அதில் முதலாவது சிறுவர் கல்வியைப் பற்றிக் கவனிப்போம்.

சில கிராமங்களில் எல்லாப் பிள்ளைகளும் படிக்கிறார்கள் ஆனால் சிலதாழ்ந்த ஜாதிப்பிள்ளைகள் படிக்கிறதில்லை. காரணமென்ன? அங்கே ஒரே ஒரு பள்ளிக்கூடம்தான் இருக்கிறது. அதுவும் போர்டு பாடசாலை. அதில் உள்ள உபாத்தியாயர் ஜாதி வைராக்கியம் நிறைந்த உயர்ந்த ஜாதி இந்து. இந்த பஞ்சமப் பிள்ளைகள் அங்கே வந்து படிக்கலாமென்று சட்டமிருந்தாலும் அது அநுபவத்திலில்லை. ஜாதித்துவேஷமுள்ள ஹிந்துவான உயர்ந்த ஜாதி உபாத்தியாயர் எப்படித் தீண்டா ஜாதிப்பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கவனிப்பார்? தாழ்ந்த ஜாதிப் பையன் ஒருவனுடைய கல்விக்குப் பண உதவி செய்ததற்காக ஒரு உயர்ந்த ஜாதிச் சீமான் மனைவியை எழுப்பிவிட்டு இம்சித்து அவர் அந்த உதவியை நிறுத்திவிட்டார். இப்படிப்பட்ட நிலைமையில் அங்கே படிக்க ஏதுவில்லை. படிக்க அனுப்பினால் தாழ்ந்த ஜாதியார் வீட்டில் தீ வைக்கப்படும். பண்ணைவேலை கிடையாது. ஐயோ! எத்தனை! எத்தனை! [illegible]சை.

இதற்குத்தான் [illegible]த்தி என்ன? நான் போகும்போதெல்லாம் "ஐயா எங்களுக்கொரு பள்ளிக்கூடம் வையுங்கள்" என்கிறார்கள். இந்த அழைப்பு வருகிறது. இப்படிச்செய்தால் எத்தனையோ பேருக்கு நாம் வழிகாட்டிகளாவோம்! நாம் அப்படிச் செய்யமுடியாவிட்டால் சர்க்காருக்காவது எழுதி, தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நல்லது, இனிப் பெரியவர்களுக்குக் கல்வி புகட்டும் வழியைப் பார்ப்போம். பகலெல்லாம் இவர்கள் வேலைக்குப் போய்விடுவார்கள். இராவில் அலுத்துத் தூங்கப் போவார்கள். ஆனால் விளையாட்டிருந்தால் தூக்கத்தை விட்டுவிட்டு, சடுகுடு, கும்மி, கோலாட்டம், கிளித்தட்டு முதலியவற்றை விளையாடுவார்கள். பெரியவர்கள் மேல் வாஞ்சையுள்ள எந்த ஊழியனும் தன் தூக்கத்தைப் பெரிதாய்ப்பாராமல், அவர்களுக்காக உழைப்பான். இராவில் பள்ளிக்கூடத்தில் தீபம் வைத்து, வாசலில் ஜோதி, கும்மி, கிளித்தட்டு முதலியவற்றைப்போட்டு, ஆண்களை வசப்படுத்தி, கொஞ்சநேரம் விளையாண்டபின் கொஞ்சம் கல்வி புகட்டலாம், அல்லது கல்வி புகட்டிய பின் விளையாடலாம். இப்படிச்செய்தால் ஏராளமானபேர் எழுத வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

பெண் கல்வி. பெண் கல்வியைப்பற்றி இந்த நாட்டில் இருக்கும் தப்பபிப்பிராயத்தை நீக்கவேண்டும். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு என்னத்துக்கு" என்று சொல்லுகிறார்களே. ஆண்கள் அவர்களை உற்சாகப் படுத்தியனுப்பினால் அல்லவோ பெண்கள் படிப்பார்கள்! பையன்கள் படிக்கட்டும்; நீங்கள் பிள்ளையெடுங்கள்; வீட்டுவேலை செய்யுங்கள்; இது போதும் என்கிறார்கள்.



ஆண்களும் பெண்களும் தக்கவிதமாய்ப் படித்துள்ள தேசங்களின் நாகரீகம் எவ்வளவு உயர்ந்தது என்று நாம் எடுத்துக்காட்டவேண்டும். இதுவும் கல்வி புகட்டுவதினால் தான் நடக்கும்.

பெரிய பெண்களுக்கு வேதாகம ஸ்திரீகளை ஏற்படுத்தி அவர்கள் வீடுவீடாய்ப் போய்ப் படிப்புச் சொல்லிக்கொடுக்கலாம். அத்துடன் தேவ ஊழியனுடைய மனைவி தையல், பாய் பின்னுதல், சித்திரவேலை, கூடை முடைதல் முதலிய வேலையைக் கற்றிருந்தால் அதன் மூலமாக மற்ற ஸ்திரீகளைத் தன் வீட்டுக்கிழுத்து அவர்களுக்குக் கல்வி புகட்டலாம். "கல்வியிநூக்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை" இந்த விஷயம் சித்திபெற்றால் மற்ற சீர்திருத்தம் வருவது வெகு லேசு.

இரண்டாவதாக சுகாதாரம். சில கிராமங்களில் தெருவில் மனுஷன் நுழைய முடியுமா? எங்கே பார்த்தாலும் மலம், கால் வைக்க இடமில்லையே. இப்படிப்பட்ட இடத்தில் சுகம் எப்படி இருக்கும். இந்த ஊரானது பக்கமும் நீர் சூழ்ந்த இடம். சுகத்துக்கேற்ற தல்ல அதுவுமன்றி கொசு மலியக்கூடிய குப்பைக்கிடங்குகள் ஊரைச்சுற்றியிருக்கிறது. இவற்றைத் தூரத்தில் போடும்படியான ஏற்பாடு செய்யவேண்டும்.

இதைச் செய்வதெப்படி? சர்க்கார் அதிகாரியைக் கூப்பிட்டு அபராதம் போடச் சொல்லலாமா? அப்படிச் செய்தால் அந்த ஊரில் நாம் வேலைசெய்வதெப்படி? நம்மிடம் இராவில் படிக்கவரும் ஆண்களோடு இன்னும் பெரிய மனுஷர்களைச் சேர்த்து ஒரு சுகாதாரச் சங்கம் ஏற்படுத்த வேண்டும். இவர்கள் பல இனத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டும். செல்வாக்குள்ளவர்களாயிருக்கவேண்டும். ஒவ்வொரு கும்பின் தலைவர்களே இதில் விசேஷித்த அங்கங்களாயிருக்கக் கூடுமானால் எத்தனை நலமாயிருக்கும்!

இன்னொரு வழியிருக்கிறது. அந்த வழி இதைப் பார்க்கிலும் சிறந்தது. கிராமங்களில் ஆஸ்பத்திரிகள் இல்லை. நாட்டு வைத்தியர் இருக்கிறார்கள். ஆனால் நாட்டு வைத்தியம் செய்வதில் பணம் பிடிக்குமென்று நினைக்கிற ஜனங்களுக்கு நாம் கொஞ்சம் வைத்தியம் செய்யக் கூடுமானால் நல்லது. (First aid) என்று சொல்லப்படுகிற பிரதம சிகிச்சை தெரிந்திருக்கவேண்டும். தண்ணீரில் விழுந்துவிட்டால், தீப்பட்டுவிட்டால், காயப்பட்டால், வலிப்பு வந்தால், மயக்கம்போட்டால், நாசியில் இரத்தம் வடிந்தால், விஷம் தீண்டினால், தேள் கடித்தால் இவைகளுக்கு செய்யவேண்டிய பக்குவம் தெரிந்திருக்கவேண்டும். ஸ்திரீகளுக்குள் செல்வாக்குடைய ஊழியனின் மனைவி மருத்துவம் படித்திருந்தால் அந்த ஊரில் அந்த இரண்டு போதகர் ராஜாவும் ராணியும். தங்களுடைய வேலையை வெகு சித்தியாய்ச் செய்ய ஏதுவுண்டு. இத்தனை உதவி செய்து உயிரைக் காப்பாற்றக் கூடிய புண்ணியவானும் புண்ணியவாட்டியும் சுகாதார சம்மந்தமாய்ச் சொல்லும் புத்திமதியை யார்தான் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்! அவர்கள் சொன்னபடி ஜனங்கள் ஆடுவார்கள்.

இடைக்கிடை சுகாதார இலாகா அதிகாரிகளைக்கொண்டு பள்ளிக்கூடத்தில் உபந்நியாசங்கள் நடத்தலாம். ஆஸ்பத்திரியிலிருந்து கொஞ்சம் காய்ச்சல், தலைவலி, வயிற்றுக்கடுப்பு, பேதி இப்படிப்பட்ட சில வியாதிகளுக்கு மருந்து வைத்துக்கொள்வது விசேஷம். எந்த ஜனங்களும் ஜாதிபேதம் மதபேதமின்றி அங்கே வருவார்கள்.

மூன்றாவதாக சுத்தம். சுத்தமானது சுகாதாரத்தின் ஓர் பாகமென்றாலும் அதைப்பற்றிச் சில குறிப்புகள் சொல்வது நல்லது. சுத்த தேகம், சுத்த வஸ்திரம், சுத்த பண்டபாத்திரம், சுத்தமான வீடு அவசியம்.

உபாத்தியாயர் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைத் தினம் தினம் குளித்துவரச் சொல்லவேண்டும். அப்படிக் குளியாத பிள்ளைகளைக் குளிக்கக் கொண்டுபோய்க் குளிப்பாட்டவேண்டும். வஸ்திரம் அசுத்தமாய் உடுத்தும் பையன்களையும் அப்படியே கூட்டிக்கொண்டுபோய்த் துவைக்கச்செய்யவேண்டும். உபாத்தியாயரும் அம்மாளும் பிள்ளைகளும் சுத்தமாயிருத்தலே முதலாவது விஷயம். அடிக்கடி மற்றவர்களின் வீட்டுக்குப் போகும் போதும், வீதியில் போகும் போதும் அசுத்தத்தைக் காட்டி அதைச் சுத்தப்படுத்தச்செய்யவேண்டும்.

சுத்தமான வீடு என்கிற விஷயத்தில் ஆகாயம் உட்பிரவேசியாதபடி உள்ள வீடுகளும் உண்டே. இனி என்ன செய்யலாம்? மதிலை இடித்து ஜன்னல் வைக்கச் சொல்லவேண்டும் நம்முடைய முன்னோர் காற்றோட்டம் விஷயத்தில் மிகவும் குறைவான வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். இனிமேல் கட்டும்போது குடிசையானாலும் பெரிய ஜன்னல் பெரிய நிலை வைத்துக் கட்டவேண்டும். வீடுகளின் பக்கத்தில் ஜாக்கடை தங்காதபடி பார்க்கவேண்டும்.

நாலாவதாகப் பிழைப்பு. இந்த ஜனங்கள் பிழைப்பு விஷயத்தில் எப்படியிருக்கிறார்கள். சிலருக்கு களவே பிழைப்பு. ஏன் என்றால் வானம்பார்த்த கண்மாயிலிருந்து தண்ணீர் வருகிறது. ஆயிரம் பதினாயிரக்கல நெல் விளையாமல்போகிறது. நாங்கள் களவுசெய்தால்தான் முடியும் என்கிறார்கள். காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களுக்காகக் கைத்தொழில்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் வயல்களுக்கு ஆற்றுத் தண்ணீரும் வந்தால் பிழைப்புக்குக் கஷ்டமிராது. அப்படிப்பட்ட கிராமங்களுக்குத் தண்ணீர் வசதிக்காகச் சர்க்காரோடு பேசி உதவிசெய்யக்கூடுமானால் நல்லது.

சில கிராமங்களில் சோம்பேறிகள் அதிகம். இவர்களுக்குத் தொழில் முறையைக் கற்பிக்கவேண்டும். நமது வேலைகளுக்கும் சமுசாரிவேலைக்கும் அவர்களைக் கூப்பிட்டுச் சம்பளம் கொடுத்து அவர்களைச் சுறுசுறுப்புள்ளவர்களாக்கவேண்டும்.

பெண்களுக்கு நெசவு, பாய்பின்னல், கூடை முடைதல், தையலெல்லாம் சொல்லிக்கொடுக்கலாம். ஆண்களுக்கும் தச்சு முதலிய தொழில் சொல்லித்தரலாம். நல்லது, இப்படிக் கைத்தொழிலினால் செய்யப்பட்ட பொருள்களை விற்று முதலாக்குவது எப்படி என்று கேட்கலாம். அதற்கெல்லாம் கூட்டுறவுச் சங்கம் இருக்கவேண்டும் அச்சங்கம் அத்தொழிலுக்கு வேண்டிய [illegible]மான்களைச் சேர்த்துக் கொடுக்கவும், செய்யப்பட்ட பொருட்களை விற்பனையாக்கவும் வேண்டும். கூட்டுறவுச் [illegible]கத்தைச் சரியானபடி உபயோகித்தால் சமுசாரி ஏன் கடன்படுவான்? அடித்த களத்திலேயே மிக மலிவாக விற்கிறான். ஏன் பணமில்லை? கூட்டுறவுச் சங்கமானது அச்சமயத்தில் பண உதவி செய்யக்கூடுமானால், பின்னால் அந்தத் தவசம் எறியவிலைக்கு விற்கப்படலாமே.

சமுசாரித்தனத்துக்கு ஏற்ற உரம், விதை, கலப்பை, பல்பாம்பு முதலியயாவும் விவசாய இலாகாவிலிருந்து வாங்கிக்கொடுக்கலாம். விவசாய இலாகா அதிகாரிகளைக் கொண்டு, (Demonstration) செய்து காட்டச்செய்யலாம். விவசாய இலாகாக்காரர் அச்சிடும் பஞ்சாங்கத்தை ஜனங்களுக்கு வாங்கிக்கொடுக்கலாம். வியாதிகளுக்கு மருந்து முதலியவை அதிலே இருக்கும்.

ஐந்தாவதாக அவர்களுடைய சன்மார்க்க நிலைமை. அன்றைக்கு நான் ஒரு கிராமத்துக்குப் போயிருந்தபோது சில பெண்கள் அங்கேயிருந்தார்கள். அந்த ஆண்கள் பேசின வார்த்தைகளும் அவ்விடத்தில் விளையாட்டாக நடந்த சம்பாஷணைகளும். காதினால் கேட்கக்கூடியவைகளல்ல. வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாததுபோல பேசினார்கள். வாயைத் திறந்தால் உதாசினம் தண்ணீர் பட்டபாடு. இதை நிறுத்துவதெப்படி? இத்துடன் சம்பந்தப்படுத்தி மார்க்கத்தையும் சொல்லவேண்டும். மார்க்கம் எப்படியோ, அவர்கள் தெய்வங்களின் நடக்கை எப்படியோ அப்படியே வணக்கம் செய்பவர்களும் இருக்கலாம்.

“விபசாரத்தில் மாண்ட தேவரை வணங்குவோர்
விபசாரராய் வாழலாம்
வெறி களவு, பொய், கொலைசெய்திட்ட தேவரை
வேண்டுவோர்க் கதுவாகலாம்.”

தாயை தண்ணீர்த் துறையில் பார்த்தால் பிள்ளையை வீட்டில் பார்க்க வேண்டுவதில்லை.

இயேசுகிறிஸ்துவை பாருங்கள். அவருடைய ஜீவியம் எப்படியோ அப்படியே படிப்படியாய் அவரை அண்டினவர்களின் குணமும் மாறும். ஆகவே நல்ல ஜீவியம் செய்த தெய்வங்களின் கதையைப் புகட்டப்படவேண்டும். இயேசுவின் சரித்திரத்தைப்பார்க்கிலும் மேலான சரித்திரம் எது?

களவுசெய்வது பாவமில்லையென்று எண்ணும் சகோதரருக்கு என்ன செய்யலாம்? இயேசுவின் உபதேசமே அவ்வெண்ணத்தை மாற்றும் மருந்து. சில நாட்களுக்கு முன் நான் ஒரு வாலிபனைச் சந்தித்தேன். அவர் கள்ள ஜாதியிலிருந்து கிறிஸ்தவனானவர். இவரைப்போல் தேவபக்தியும் உண்மையும் உள்ள [illegible]யனை நான் பார்த்ததில்லை என்று ஒரு போதகர் சாட்சி கொடுத்தார்.

ஆறுவதாக ஒடுக்கப்பட்ட ஜாதியார். நம்முடைய நாட்டிலே இந்த ஜனங்கள் படும் கஷ்டத்தைச் சொல்ல முடியாது. ஊழியம் என்கிற விஷயமும் இந்தியர் யாவரும் சகோதரர் என்கிற விஷயமும், மற்ற தேசங்களில் இந்தக் கொடுமையில்லை என்கிற விஷயமும் இந்தியாவை அடிமைப்படுத்திக் கொண்டிருப்பது இந்தக் காரியமே என்பதும் உணர்த்தப்படவேண்டும். இதெப்படியாகும்? கல்வி புகட்டுவதினாலேதான்.

ஏழாவதாகச் சில துர்ப்பழக்கங்கள். விசேஷமாகக் குடிவெறியை நான் சொல்லவேண்டும். சில கிராமங்களில் குடிவெறி அதிகம். இதைப்பற்றி மதுவிலக்கு ஒளிச்சித்திரப்படம் காட்டலாம். கிராமத்தில் மதுவிலக்குச் சங்கம் ஏற்படுத்தலாம். காங்கிரஸ்காரரைக் கொண்டு உபந்நியாசம் செய்ய வைக்கலாம். இந்த விஷயத்தில் கிராமத்திலுள்ள ஜாதிச் சங்கங்களின் மூலமாக வேண்டிய வேலைசெய்யலாம்.



கிராமத்தில் செய்யப்படவேண்டிய வேலை விரிவும் விஸ்தாரமுமாயிருக்கிறது. இந்திய மாதா,

“ எந்தன் விர்ப்பந்தம் பாரும் என் மக்களே
இரங்கமனமில்லையோ” என்று ஓலமிடுகிறாள்.

இந்த ஓலத்தைக்கேட்டு அம்மாதாக்கு ஆறுதல் கொண்டுவர இதோ நமக்கு ஏற்ற சமயம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நாம் இராப்பகலாய் விழிப்போடு இந்தச் சிறந்த ஊழியத்தை நம்மால் கூடியமட்டும் செய்யப்பிரயாசப்படுவோமாக.

L. Ponnuswami.

(From Seminary Quarterly)

---

## கல்வி

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப்பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். செல்வப்பொருள், பங்காளிகள், கள்வர், வலியவர், தீ, [illegible]சர், என்னும் இவர்களாலே பறித்துக்கொள்ளப்படும். செல்வப்பொருளோ, வெள்ளத்தாலாயினும், அழியும், கல்விப்பொருளோ.

வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது
வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழிய குறைபடாது
கள்ளர்க்கோமிகவரிது காவலோ மிக வெளிது
கல்வியென்னும் உள்ளத்தே பொருளிருக்க
உலகெல்லாம் பொருள்தேடி உழல்வதேனோ
என்றபடி

கல்விப்பொருளோ ஒன்றாலும் அழியமாட்டாது. செல்வப்பொருளோ, பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைந்து கொண்டே வரும் கல்விப்பொருளோ பிறருக்கு கொடுக்குந்தோறும் பெருகிக்கொண்டே வரும். செல்வப்பொருளோ, சம்பாதித்தல், காப்பாற்றல் இழத்தல் என்னும் இவைகளாலே துன்பம் பலரையும் பகையாக்கும் கல்விப்பொருளுடையவர் இம்மையிலே சொற்சுவை, பொருட்சுவைகளை அனுபவித்தாலும், பின்னே தருமத்தையும், முத்தியையும், அடைதலாலும், இடையறாத இன்பத்தை அனுபவிப்பர். நன்றாய்ப் படித்து தேர்ந்த பெரியோரிடம் சேர்ந்து அறியாதவைகளையெல்லாம் தெரிந்துகொண்டு அவரிடத்து அன்புடையவராவார். ஆதலினாலே, செல்வப் பொருளினும் கல்விப்பொருளே, சிறப்புடையது.

நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழிருப்பவனே, என்றபடி
உயர்குலமும், அழகும், செல்வமும் உடையவராயினும் கல்வியில்லாதவர் முருக்கம் பூவுக்கு சமானமாவர்.
மன்னனும் மாசறக்கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத் தன் தேசம் அல்லால் சிறப்பில்லை. கற்றோர்க்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

அரசனுக்கு அவர் தேசத்தில் மாத்திரம் மதிப்பு. கற்றறிந்தவர்களுக்கு அவர்கள் சென்ற, சென்ற, தேசங்களிலெல்லாம் மதிப்பு. ஆதலால் அரசர்களிலும் கற்றறிந்தவர்களே, சிறப்புடையவர். அழுக்குப்படியாத வஸ்திரத்தில் சாயம் நன்றாய்ப்பிடிக்கும். அழுக்குப்படிந்த வஸ்திரத்தில் சாயம் நன்றாக பிடிக்கமாட்டாது. சிறுபிராயத்திலே கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப்படியும். முதிர்ந்த வயதிலே கற்றாலும் அநேக இடையூறுகளால் கல்வி நன்றாக புத்தியிலே பதியமாட்டாது. ஆதலினாலன்றோ இளமையிற்கல், என்ற வாக்கியத்தை ஔவையார் அருளிச்செய்தார். சிறுவயதிலேயே கல்வி கற்பது நல்லது. இந்திரகுல சகோதரர்களே நம் குழந்தைகள் படித்து மேன்மையடைவதற்கு நம் காருண்ய கவர்மெண்டார் ஒவ்வொரு கிராமங்களிலும் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி குழந்தைகள் படிப்பதற்கு, புஸ்தகம், சிலேட், பென்சல், (பெரிய ஸ்கூலில் படிக்கும் பிள்ளைகளுக்கு) வஸ்திரம் சாப்பாடு, முதலியவைகள் கொடுத்தும், இனமாக படிப்பு சொல்லிக் கொடுக்கச் செய்கிறார்கள். அப்படி செய்தும் பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு சரியாய் அனுப்ப இஷ்டமில்லை. அதாவது: வலியவரும் சீதேவியை காலால் உதைத்து தள்ளுவதுபோல் இருக்கிறது, கல்வியே கண்கள் என்றும் மூதறியுடையோர் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் சிறுவயதிலேயே கல்வி கற்பது நல்லது, என நினைத்து பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு சரியாய் அனுப்பி நன்றாய்ப்படித்து மேன்மையடைவார்களென்று நம்புகிறேன், நம் காருண்ய கவர்ன்மெண்டார் நீடுழிவாழ்க.

G. குருசாமி கவண்டர்,
ராஜதானி.

---

## “இந்திரகுலாதிபர் முன்னேற்ற சங்கம்”.

திருமங்கலம் தாலூகா சாத்தங்குடி கிராமம் அம்மன் சன்னிதியின் முன்பாக அமைந்திருந்த சாலையில் 30-6-29 சாயரக்ஷை 7 மணிக்கு திருமங்கலம் கனம் போலீஸ்டிப்டி சூப்பிரின்டென்டெண்டு அக்கிராசனத்தின் கீழ் சங்கம் கூடிபெற்றது. கனம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், டாக்டர், முனிசிபல் சேர்மன் முதலியவர்கள் ஆஜராயிருந்தனர்.

பேசப்பட்ட பொருள் பின்வருமாறு:—

1. மதுபானம் கனம் A. K. மரியகுசை உபாத்தியாயர்.
2. பள்ளிக்கூட ஒழுங்கு, கனம் காரியதரிசி முத்து மாணிக்கத்தேவர்.

3 நாகரீகம், கனம் சோ. வி. வேதநாயகத்தேவர்.

4 சங்கத்தின் நோக்கமும் பஞ்சாயத்தின் கடமையும், கனம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

மதுபானத்தைப்பற்றி தகுந்த உதாரணக் கவிகளுடன் மானம், மரியாதை, அடக்கம் முதலியவைகள் நீவிர்த்து நீங்குக்கு நீங்கிழைத்தல், காரணமின்றி எதிர்த்தல், புத்திகெட்டு பொல்லாங்கு பேசுதல், கேவலமான வழிகளைத் தேடிக்கொள்ளல், திரேகத்தைக் கெடுத்துக்கொள்ளல் முதலிய காரியங்களை விளைவிக்கிறதுமல்லாமல் உண்டான திரவியத்தைச் செலவுசெய்து கடைசியாக மனைவி கழுத்திலிருக்கின்ற தாலியையும் ஆவிழ்த்துக் குடித்து "ஊர் வாயைமூட உலைமூடி இல்லை என்றும் போன்று யாவரும், யாவரும் பார்த்து நகைத்து கேவலமாய் தூஷிக்கத்தக்கவாறு தெருக்களிலும், குப்பைகளிலும் அலங்கோலத்துடன் சுய மரியாதை கெட்டுக் கிடக்கத்தக்க வழியைக்கொண்டுவந்துவிடும். அதுவுமல்லாது 'குடிகாரன் வீடு விடியாது' என்ற பழமொழியை ஒத்தாற்போன்று குடிகாரன் வீட்டில் படும்பாடு மெத்த. இது புதுமையல்ல யாவரும் அறிந்த விஷயமே. இப்பேர்கொற்ற பித்தச் சொற்களைக் காசு கொடுத்து வாங்கும் பித்தர்களை நாம் என்னென்றெண்ணுவது. பரிதாபம் அப்பேர் கொத்த செயல்களை உடையவர்களாய் எவர்களாகிலும் இருப்பார்களாகில் இன்றே ஒழிக்கவேண்டுகிறேன் தேசாபிமானியும் குலாபிமானியுமாயிருப்பவர்கள் இதை நமது நண்பர்களுக்கு புகட்டுமாறு வேண்டுகிறேன் என்று முடிக்க.

பள்ளிக்கூட விஷயத்தைப்பற்றி நம் குலத்தாருக்கு இதுவரை கருணை சர்க்கார் செய்துவந்த நன்றிக்காக, நன்றி செலுத்த வேண்டுமென்றும், கண்டிபபாக ஆண் பெண்களை பள்ளிக்கு அனுப்பவேண்டுமென்றும் பெண்களை பள்ளிகக்கு அனுப்புவது மிக்க அவசியமென்றும், ஏனெனல் பிள்ளைகளை வளர்ப்போர் குடும்பத்தில் ஈடுபடும் தாய்மார்கள். அவர்கள் படித்திருப்பார்களாகில் பிள்ளைகளை வளர்க்கும் விஷயமும், படிப்பிக்கும் விதமும், கணவர்களுக்குச்செய்யும் மரியாதையும் தெரியும். நமது மூதாட்டியாகிய ஔவையார்

"இல்லாளகத்திற்காக வில்லாததொன்றில்லை
யில்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலி கிடந்த மாற்ற முரைக்கு மேலவ்வில்
புலி கிடந்த தூறாக விடும்." என்று

சொன்னதுபோல பெண்ணொருத்தி கற்றவளாயிருப்பாளாதலின் அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்றுமில்லை. கற்றறியாதவளா யிருப்பாளாதலின் இல்லாத தொந்தரவுகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் அடுக்கடுக்காய்த் தொடுத்திருக்கும்

முரட்டாட்ட காட்டு மிருகங்கள் தங்கிய புதர்போன்று இருள் அடைந்த வனமாகி விடும்.

சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறியில்.

காதன் மனையாளும் காலனுமாறின்றி
நீதிலொரு கருமஞ் செய்யவே. என்று

கூறியது போல் குடும்பம் ஒன்று நல்வாழ்க்கையாய் இருக்கவேண்டுமாயின் படித்த பெண்கள் இல்வாழ்க்கைக்கு உதவியாகிய பேரின்ப வாழ்க்கைக்குரிய நாவல்களை வாசிப்பது நல்லது. வாசித்தால் கதாநாயகிகள் எவ்வாறு மாமன், மாமிகள், கணவன், முதலியோரிடத்தில் அடக்கம், மானம், மரியாதை, வணக்கம் உள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றும், பிள்ளைகளை வளர்க்கும் விதத்தில் எவ்வளவு சித்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதையும் வெகு தெளிவாய் நடந்து காட்டுகிறார்கள். தெய்வத்தைத் தொழும் விஷயத்திலுண்டான பக்தி விசுவாசத்தையும் பார்க்கலாம். உள்ளதைக்கொண்டு நாகரீகத்தைக் கையாடுகிறார்கள். நாகரீகம் என்றுசொல்லுங்கால் நடை, உடை, பேச்சு முதலியவைகளைக் குறிக்கின்றது. தாயின் பழக்கமே பிள்ளைகளும் பழகத்தக்கது. உதாரணத்திற்கு அறிகுறியாக தற்சமயம் நல்ல குணத்துப் பெண்கள் திருமங்கலம், மதுரை முதலிய இடங்களுக்குப்போய் படித்து வருகிறார்கள். அவை பின்பற்றத்தக்கது. ஆகபெண்களை பள்ளிக்கு அனுப்பி அதனால் உண்டான ஆனந்தத்தை நம் குலம் அடைந்து களிப்புற வேண்டுமென்று வற்புறுத்தி பேசினார்கள்.

அவைபத்து நீட்டோலை வாசியா நின்றான்
குறிப்பறியமாட்டாதவன் நன் மரம். என்ற

முதுமொழிக்காளாகாது யாவரும் கற்றறிதலவசியம். இச்சங்கம் மாதமொருமுறை நடைபெறவேண்டும் குலாபிமானிகள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகவேண்டும். தங்களுக்குண்டான குறைகளையும் சங்கத்தில் தெளிவாகச் சொல்லித்தெரிந்து கொள்ளலாம். ஜாதி முன்னேற்றத்தைப்பற்றியோ ஜாதிக்கட்டைப்பற்றியோ பஞ்சாயத்து விஷயங்களைப்பற்றியோ பேசிக்கொள்ளலாமென்று பஞ்சாயத்தாருக்கு, குலத்தைப்பற்றி ஏறக்குறைய சர்வ அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. தாங்களே குற்றங்களை விசாரிக்கலாம். தகுந்த தண்டனை இடலாம். அடங்காதோரை போலீஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும். யோக்கியர்களுக்கு ரேகை எடுபடுமென்று கனம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பேசி முடிக்க:—

கனம் போலீஸ் டிப்டி சூப்பிரின்டென்டென்ட் அவர்கள் மனிதர்களுக்கும் பிராணிகளுக்குமுள்ள தம்மியம் என்னவென்றும் எந்த விதங்களில் மனிதர் மேலானவர்களென்று எவ்விதத் தத்துவங்களை உடையவர்களாயிருக்கிறார்களென்றும், எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்றும், தத்துவ ஞானம் உடற்கூறு சாஸ்திரம், சடத்துவ சாஸ்திரம் பூகோள சாஸ்திரம், சமஸ்கிருதம் முதலிய சாஸ்திரங்களிலிருந்து வெகு தெளிவான உதாரணங்களைக்கொண்டு விளக்கி மனிதர் பகுத்தறிவு உடையவர்களாயிருப்பதால் ஞானமுடையவர்களாய் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும் என்றும், மூதாதியோர்களின் கவிகள் அநேகத்தைக் கொண்டு விளக்கி, கூடிய காலத்தில் யோக்கியதை அடைந்து தற்போதுண்டான ஆக்கினையிலிருந்து நீங்கி எல்லாரைப் போன்று தாமும் மேலான நிலைமையிலிருக்க வேண்டும் என்றும், சீக்கிரத்



தில் ரேகையை (C. T. act.) நீக்குவதற்கு முயற்சி யெடுப்பதாய் பேசி மகா நாடொன்று கூட்டவேண்டுமென்று அமுலுக்குக் கொண்டுவர சங்கத்தில் ஆமோதிக்கப் பெற்றது. பின் ஜாக் கோஷத்துடனே 9.30 மணிக்கு சங்கம் கலைந்தது.

நிருபர்:— முற்கூறிய சங்கம் சாத்தங்குடியில் மாத்திரம் நடத்துவது போதாது. குலம் முன்னேற வேண்டுமாயின ஒவ்வொரு கிராமங்களிலும் இச் சங்கம் நடந்தேறவேண்டும். சங்கம் நடை பெறுமாயின், பலவித காரியங்களைப் பற்றி தர்க்கித்து முன்னேறுவதற்கு ஒரு வழியாகும். இவ்விதக் காரியங்களைத் துவக்கவோ, இன்னும் தேவையான பல காரியங்களை எடுத்துக் கூறவோ, எமது சங்கத் தொண்டர்கள் தயாராயிருக்கின்றனர். எச்சமயம் தேவையோ அக்காலத்தில் நேரிலோ கடிதங்களின் மூலமாகவோ தங்களது விருப்பங்களை எமது சங்கத்திற்கு கூறி விடை பெறலாம். இப்படியே நம் குலத்தார் சிறத்தை எடுப்பார்களாயின் கூடியகாலத்தில் கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு வரலாம். பின்னும் இதர குலத்தாரைப் போன்று நாமும் விளங்கலாம் என்பதற்கு ஐயமில்லை. கடந்த மூன்று வருஷங்களில் நடத்திய சங்கங்களில் பேசிய பொருள்கள் பல, ஆராச்சியும் மெத்த. இப்படியே ஒவ்வொரு கிராமத்திலும் நடத்தி மகாநாடு ஒன்று கூட்டப் பிரயத்தனம் செய் வேண்டும். என்று எம் சங்கம் முடிவுக்குக் கொண்டுவந்ததை தெரிவித்துக் கொள்கிறேன்.

D. சாமுவேல்,
சாத்தங்குடி.

---

## உபாத்திமார்களின் கவனிப்பு.

கல்விச் சிறப்பும் கனமும் வாய்ந்த என்போன்ற உபாத்திமார்களை நான் என் சிற்றறிவிற்கு எட்டியவாறு சொல்லும் செய்தியாவது: கள்ளர்களுக்கு மகா ௱ ௱ ஸ்ரீ கனம் கள்ளர் ஸ்பெஷல் சூப்பிண்டெண்டு துரையவர்கள் முன்னிலையில் காணப்பட்ட கடவுளாகத்தோன்றி ஷை யார்களுக்கு அஞ்ஞானம் என்றது ற்செய்கை நீக்கி மெய்ஞ்ஞானம் என்ற நற்செய்கை யுண்டாக்கச்செய்து அச்செய்கையினால் அவர்கள் மேன்மையடையவும் கருதி பஞ்சாயத்தும் ஷை யார்களுடைய பிள்ளைகள் சீர்திருத்தமடைய அவர்களுக்குச் சொந்தமாக ஸ்கூலும் ஏற்படுத்தி அதில் நம்மை நியமித்து நமக்குத் தகுதியான சம்பளம் கொடுத்து பிள்ளைகளுக்கும் நமக்கும் புஸ்தகம், காகிதம் சிலேட்டுப்பென்ஸல், படங்கள், மைக்கூடு, பிளாட்டிங்பேப்பர் முதல் இன்னும் சில சாமான்களும் மேஜை, நாற்காலி, ரிக்கார்டு பெட்டியும், கொடுத்து காப்பாற்றுவதோடு ஷை யார்களுக்காக, மேலாபீஸர்கள் ஒற்றுமைக்கும் வழிகளில் நடக்கும் ஒருபாகமாகக்கருதி. பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் விஷயத்தில் முக்கியமாகவும் கவனிப்போடும் கருதுதல் அவசியம். அப்படிக் கருதாத விஷயத்தில் நமக்காகக் கொடுக்கும் சம்பளம் நல்வழியில் லபிக்காமல். கடவுளின் குணநோக்கத்தினால் மாயமாய் மறைந்துவிடும். இது நிற்க.

ஒரு குடியானவன் ஒரு தோட்டத்தில் உழுது நிலத்தைப் பண்படுத்தி தருணத்தில் விதைத்து நீர்பாய்ச்சி சமயாசமயம் களைபிடுங்கி அதேகவனமாகக் கருதுவானாகில் கடைசியில் அதன் பலனை அன்புடன் அடைகிறான். இதுபோல் நம்முடைய கவனிப்பும் ஒன்று. ஆகையால் விடாமுயற்சி வெற்றியுண்டாக்கும். என்ற பழமொழிக்கிணங்க: நாளுக்குநாள் கருதி ஷை பிள்ளைகளை சிறத்தையோடு கல்வியில் தேர்ச்சி பெறச்செய்து: நாம் மகா-௱-௱-ஸ்ரீ கனம் கள்ளர் ஸ்பெஸல் சூப்பிரண்டண்டு துரையவர்களிடத்திலும் மகா-௱-௱-ஸ்ரீ கனம் கள்ளர் ஸ்கூல்ஸ், சூப்பிரவைஸர் எஜமானிடத்திலும் மேன்மையான நற்கீர்த்தியடையக் கடவுளைப் பிராத்திப்போமாக.

K. சுப்புராம் ஆசாரி,
தம்பிநாயக்கன்பட்டி.

---

## கவண்டன்பட்டி

### பயனுபசாரக் கூட்டம்.

உசிலம்பட்டி பாஸ்ற்றரோட் கவண்டன்பட்டியிலிருக்கும் கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயாவர்களின் மூன்றாவது தம்பியாகிய கனம் ஜேம்ஸ் அநுகூலம் B.A., L.T. இத்துதேச கல்வியை முடித்து மேற்குதேசத்து உயர்தர கல்வியயிலும்படி. விரும்பியதை அறிந்த நமது நாட்டினர் அநேகர் கூடி அன்னவரின் நோக்கத்தை மேன்மைப்படுத்தும்படி 6—7—29-ல் மாலை 3 மணிக்கு அநேக உபாத்திமார்களாலும் டவுன் வியாபாரிமார்களாலும் இன்னும் பல பெரியோர்களாலும் அன்னவரைக் கனப்படுத்தி மேளதாளத்துடன் ஊர்வலம் வரச்செய்து ஷை மிஷன் பங்களாவில் ஒரு கூட்டம் நடந்தேறியது.

இக்கூட்டம் பசுமலை போதனாமுறை தலைமை உபாத்தியாயராயிருக்கும் கனம் R. மைக்கல் உபாத்தியாயரின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது.

அப்போது அன்னவரின் படிப்பையும் அவரின் வேலைத் திறமையையும் கொடைக்கானலில் துரைமார்களுக்கு தமிழ் கற்பித்துக்கொடுத்து துரைமார்களால் நன்கு மதிக்கப்பட்டதும் பசுமலையில் உயர்தர வகுப்பில் படித்துக் கொடுத்து பெரியவர்களால் நன்குமதிக்கப்பட்டதும், உசிலம்பட்டி பான்றறரோட்டில் வந்து சமயாசமயங்களில் அவர் வேலைசெய்து வந்ததையும் மதித்து இன்னும் இவர் அதிக கல்வியயின்று வருவாரானல் நமது நாட்டிற்கும் பிரயோஜனமுள்ளவராயிருக்கக்கூடும் என்பதை யுணர்த்தி பெரியவர்கள். அன்னவருக்கு பயன உபசாரப் பத்திரம் வாசித்து தங்கள் நன்றியைக் காட்டும்படியாக 160 ரூபாய் பணமுடிப்பை நன்கொடையளித்தனர்.

பின்னர் கவண்டன்பட்டி பள்ளிப்பிள்ளைகள் அன்னவரின் மனது குதுகூலம் அடையும்படியான பாட்டுகள் பாடி மலர் தூவினர்.

பின் பெரியோர் அநேகர்கூடி அன்னவரின் மனதையும் மற்றவர்களின் மனதையும் ஆனந்த சாகரத்தி மூழ்கிவித்தனர். இன்னும் தங்கள் நன்றியைக் காட்டும்படி பாதம்வரை விழத்தக்கதான ரோஜா மாலைகளையும் சூட்டினார்.

பின்னர் அக்கிராசனாதிபதியாகிய கனம் R. மைக்கல் உபாத்தியாயரவர்கள். கனம். அனுகூலம் அவர்களின் தாயார் தகப்பனாரின் சிறுவயது தொடங்கி பெரியவர்களாகி தங்கள் வேலையை முடித்ததுவரையும் சொல்லிய அதிக அச்சியத்தையும் குதுகூலத்தையும் கொடுத்தது இது மாத்திரமல்ல கனம் அனுகூலம் அவர்களின் வேலைதிறமையையும் விசேஷமாய் அவர் சிறுவயதுள்ளவராய் பெரிய கலாசாலையில் உபாத்தியாயர் வேலை ஒப்புக்கொண்டு அவரின் வேலையை பெரியவர்கள் மெச்சத்தக்க நடத்தியதையும் பெரியவர்முதல் சிறியவரிடத்திலும் நடந்த மாதிரியைப்பற்றியும் பள்ளிக்கூடத்தில் பாடங்கள் விஷயமாய்ப் புதுமாதிரியைக் காட்டியதையும் பேசிமுடித்தார்.

பின் கனம் அனுகூலம் அவர்கள் படிப்பின் பெருமைக்காகவும் மதிப்புக்காகவும் அதிக சம்பளமான உத்தியோகத்திற்கு வாலாமென்றும் போகவில்லை.

நமது நாட்டின் அஞானத்தையும் படிப்பில் முன்னேற்றமடையும் வழியையும் கண்டுபிடிக்கவும், அவ்விதமான குறைகளை ஒழிக்கவேண்டிய தாயிருப்பதினால் அக்குறைவுகளை நீக்க தனக்கு அதிக ஞானம் வேண்டியிருப்பதினால் தான் மேற்கு தேசத்தாரிடத்தில் அதிகம் பழகினதினால் இன்னும் அவர்கள் தேசமே சென்று கல்வி பயின்றுவந்தால், ஒருவாறு நீக்கக்கூடுமென்றும் உத்தேசித்து புறப்பட்டதாகவும் கூறினதுமன்றி

தன்னை இவ்வளவு நன்றியதலோடு நினைத்தும் மதித்தும் செய்த இந்த நன்றியை என் ஜீவியத்தில் மறவேனென்றும், நான் கடவுளின் உதவியைக்கொண்டு படித்து வந்தால் நமது நாட்டிறகு அதிக நன்மையைக் கொண்டுவருவே னென்றும், தன்னை இவ்வளவு தூரம் நடத்திய தாய் தகப்பனாரையும் சகோதரர்களையும் சகோதரிகள் மற்ற சிநேகிதர்களுக்கும் நான் மிகுந்த நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேனென்று கண்ணீர் சொரிந்து உட்கார்ந்தார்.

அதன்பின் Rev. R. A. டட்லி துரையவர்கள் கனம் அனுகூலம் அவர்களின் நடத்தையும் முன்னேற்றமடைந்த வழியையும்பற்றிப் பேசினார்.

பின் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டு புகைப்படம் எடுக்கக் கூட்டம் கலைந்தது.

T. மாசிலாமணி

---

## கல்வியின் பெருமை.

ஒருவன் தேடத்தகுரிய பொருள்கள் கல்விப்பொருள், செல்வப்பொருள் என இரண்டாம், அவற்றுள் கல்விப் பொருளே உயிருக்கு உயிரானது, அப்பொருளை எவ்வுயிர்க்கும் உறுப்பாற்குறந்த கண்ணே போல் போற்றத் தக்கது.

> எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
> கண்ணென்ப வாழுமுயிர்க்கு

என்னும் பொய்யில் புலவன் பொதுமறை மொழியால் உயிர்க்கு அஃது இன்றியமையாததென்று நன்கு விளங்குகின்றதல்லவா? கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப் படுவார் கற்றவரே. மற்றைக் கல்லாதவர் முகத்தின் கண் இரண்டு புண்ணுடையர், (கண்ணிலர்) ஒருவனுக்கு அழிவில்லாத செல்வமானது கல்வி; அஃதொழிந்த மணியும் பொன்னும் முதலாலயின செல்வமல்ல கல்வியினால் விளையும் நன்மைகளை

> அறம் பொருள் இன்பம் வீடும்பயக்கும்
> புறங்கடை நல்லிசையும் நாட்டும் உறுங்கவலொன்
> றுற்றுழியும் கை கொடுக்கும் கல்வியினூங்கில்லை
> சிற்றுயிர்க் குற்றதுணை.

என்று மூதறிவோர், புகழ்ந்துரைத்தனர் கல்வியினும் சிறந்ததொரு செல்வம் உயிர்க்கு யாண்டுமில்லை என்பது எல்லாரும் நன்கு அறிவர். (மேலும்)

> வெள்ளத்தாற்போகாது வேந்தனால்
> வேகாது வேந்தாலும்
> கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
> நிறைவொழியக் குறைபடாது
> கள்ளர்களோ மிகவரிது காவலோ
> மிக வெளிது கல்வியென்னும்
> உள்ளத்தே பொருளிருக்க வுலகெல்லாம்
> பொருள்தேடி யுழல்வதேனோ

என்பதனால் நேடற்பாலன வரிய செல்வம் இரண்டினுள்ளும் கல்வியே கருத்தனமாகக் கருதப்படும் சிறப்பினையுடைத்தது. செல்வப்பொருள், சம்பாதித்தல், காத்தல், இழத்தல் என்னும் இவைகளாலே துன்பம் விளைவித்துப் பலரையும் பகையாக்கும். கல்விப்பொருள் உடையவர், இளமையில் சொற்சுவை பொருட்சுவைகளையநுபவித்தலாலும், பின்னத்தருமத்தையும் முத்தியையும் அடைதலாலும் இடையறாது இன்பத்தையநுபவிப்பார். அறிவுடையொருவனை அரசனும் விரும்பும், என ஆன்றோர் கூறியபடி பொருளுடையோனும் கல்வியுடையோனைக் காதலிக்கின்றான் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் என்ற அறிவுடையோர் மொழியே கல்விப்பொருள் உயர்ந்ததென்பதற்குப் போதிய சான்றாகும். (மற்றும்)

> ஒருமைக்கட்டான் கற்ற கல்வியொருவற்
> கெழுமையும் மேமாப்புடைத்து

என்பதனால், கல்வியைப்போல் ஒருவனுக்கு எழுபிறப்பிலும் உதவியாக நிற்பது வேறொன்றும் இல்லை என்பது செவ்வனே தெரிகிறது. ஆதலின் என் அருமைச் சகோதரர்களே தம் அருமைப்புதல்வர்களை இந்த இளம்பருவத்திருந்தே கல்வி கற்கச்செய்யவேண்டும். ஆகையால் இந்திர குலாதிபர்களே தங்கள் குழந்தைகளை காலங்கடத்தாமல் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவீர்களென்று நம்புகிறேன்.

K. சீனிவாசய்யங்கார்,
பெரியகுளம் ரேஞ்.



945

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

15 NOV 1929 MADRAS

"சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்; அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றும் கிடையாது"

Vol. IX.] செப்டம்பர் 1929 [இலக்கம் 5

## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில வரு ஆவணி மீ | செப்டெம்பர் மீ | சுக்கில வரு புரட்டாசி மீ | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 / 18 | 2 / 19 | 3 / 20 | 4 / 21 | 5 / 22 | 6 / 23 | 7 / 24 |
| 8 / 25 | 9 / 26 | 10 / 27 | 11 / 28 | 12 / 29 | 13 / 30 | 14 / 1 புரட். |
| 15 / 2 | 16 / 3 | 17 / 4 | 18 / 5 | 19 / 6 | 20 / 7 | 21 / 8 |
| 22 / 9 | 23 / * கார். 10 | 24 / 11 | 25 / 12 | 26 / 13 | 27 / 14 | 28 / 15 |
| 29 / 16 | 30 / 17 | | | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி

மானேஜர்.—கனம் ஆர். எ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

"உன்னைப்போல் பிறனையும் நேசி"

பிறத்தியாரை நேசிக்கவேண்டியதவசியமா? என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டு ஆராய்ந்து அறிவது அத்தியந்த அவசியம். உலகத்தில் பிராணிவர்க்கங்களில் முதன்மைபெற்ற மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏழைகளானாலும்சரி, தனவந்தர்களானாலும்சரி, அறிவாளிகளானாலும்சரி, அறிவீனர்களானாலும்சரி, பலமுள்ளவர்களானாலும்சரி, பலவீனர்களானாலும்சரி ஒருவரையொருவர் தழுவி பிறத்தியாருடைய உதவியைத் தேடி ஜீவிக்கவேண்டுமே அல்லாது ஒருவன் தன் சுயபலத்தைக்கொண்டோ, சுய அறிவைக்கொண்டோ, தன் ஆஸ்தியைக்கொண்டோ மற்றவர்களின் உதவியின்றி ஜீவிக்க முடியாதென்பது நிச்சயம்.

தன் முழுமனதோடும் நேசிப்பதொன்று, வெளிவேஷத்திற்காக நேசிப்பதொன்று. இவ்வுலகத்தில் எத்தனையோ உத்தியோகஸ்தர்களும், எத்தனையோ ஆஸ்திக்காரர்களும் ஏனைய ஏழைகளை நேசிக்கிறதில்லையென்பது சொல்லாமலே விளங்கும். யாராவதொருவர் ஒரு காரியத்தினிமித்தம் உத்தியோகஸ்தர்களிடமாவது, ஆஸ்திக்காரர்களிடமாவது செல்வார்களேயாகில் அச்சயகலப் புலிகள் ஏறிட்டுக்கூடப் பார்ப்பதில்லை. ஐயோ! எத்தனை பரிதாபம். உத்தியோகப் பெருமையும், ஆஸ்தியின் அகங்காரமும் பிறத்தியாரை நேசிப்பதற்கு இடங்கொடுக்கிறதில்லை. இது பற்றியே,

செல்வம்வந் துற்றபோது
தெய்வமும் சிறிது பேணார்
சொல்வதை யறிந்து சொல்லார்
சுற்றமும் துணையும் பேணார்
வெல்வதே கருமம் அல்லால்
வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை பாவம் பாரார்
மண்ணின்மேல் வாழு மாந்தர்.

எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய மாந்தர் உலகத்திலிருப்பார்களேயாகில் ஏழைகளின் கதி அதோகதிதானென்பதற்கு ஐயமில்லை. ஒருவன் எவ்வளவு மேலான பதவியிலிருந்தபோதிலும் ஏழைகள் காரியத்தினிமித்தம் தங்களிடம் வரும்பொழுது சமத்துவமாக எண்ணி அவர்களின் கஷ்ட நஷ்டங்களை நிவிர்த்திக்க முன்வருவார்களேயானால் மிகுந்த நன்மை பயக்குமென்பது எனது துணிபு.

எளியவர்கள் சமயத்தில் தங்களுக்கு வரும் கஷ்டநஷ்டங்களை, ஆஸ்திவந்தர்களிடமாவது, உத்தியோகஸ்தர்களிடமாவது சொல்லி முறையிடும்போது கடிந்து பேசியும், இப்போ பிறகென்று காலங்கடத்தியும் விடுகிறார்கள். எத்தனை எளிய ஜனங்கள் தங்கள் கஷ்டங்களை நிவிர்த்திசெய்ய வகையறியாது திரிந்தலைகிறார்கள். அவர்களை அன்போடு ஆதரித்து ஆறுதலையளிப்பார்களேயாகில் ஜனசமுதாயத்திற்கும், தேசமுன்னேற்றத்திற்கும் ஏதுகரமாயிருக்குமன்றோ?

இதுபற்றியே

மங்குலை ஐம்பதினாயிரம் யோசனை
மயில் கண்டு நடமாடும்
தங்கு பானூறாயிரம் யோசனை
தாமரை முகம் விள்ளும்
திங்களாவதற் கிரட்டியோசனையுறச்
சிறந்திடும் மலராம்பல்
எங்கணுயினும் அன்பாயிருப்பவர்
இதயம் விட்டகலாரே.

என்ற பிரகாரம் மேகத்தைக்கண்டு மயில் நடனமாடுகிறது, சூரியனைக்கண்டு தாமரை மலர்கிறது, சந்திரனைக்கண்டு செவ்வல்லி மலர்ந்து சந்தோஷமடைகிறது. அதுபோல ஒவ்வொருவருடைய இருதயத்திலும் அன்பு குடிகொண்டிருக்குமேயாகில், ஒருவர் மற்றொருவரை முழு மனதோடு நேசித்து பிறத்தியாருடைய கஷ்டங்களையும், சமாதானக் குறைச்சலையும் நிவிர்த்திசெய்ய ஏதுவாயிருக்கும்.

நம்முடைய ரக்ஷாபெருமான் இவ்வுலகத்தில் வந்தபோது ஆஸ்திக்காரர்களையும், உத்தியோகஸ்தர்களையும், பலமுள்ளவர்களையும், ஞானவான்களையும் தேடிவரவில்லை. பாவிகளையும், ஏழைகளையும், அநாதைகளையும் தேடி ரக்ஷிக்கும்படி இவ்வுலகத்தில் வந்து அவர்கள்மேல் முழுமனதோடும் அன்பு பாராட்டி தன் ஜீவனையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் பாவிகளை ரக்ஷிக்கும்படி தன் ஜீவனைக் கொடுக்கவில்லையா? நம்முடைய பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்காகவும் சிலுவையில் அறையப்படவில்லையா? அப்படியிருக்க அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியிருக்கிற எல்லோரும் இன்னும் இதை வாசிக்கும் நேயர்களும் அருமை ரக்ஷகர் பாவமில்லாத ஜீவியம் செய்ததுபோல நம்முடைய ஜீவிய நாட்களிலும் நம்முடைய இருதயத்தை அவருக்கு ஒப்புக்கொடுத்து ஓரே ஐக்கிய சங்கிலியால் கட்டுண்டவர்களாக ஜீவிப்போமானால் நம்மைச் சுற்றியிருக்கும் புறமதஸ்தர்களுக்கு முன்மாதிரியும், பிரயோஜனமுமுடையவர்களாயிருப்போமென்பதற்குச் சந்தேகமில்லை.

இவ்வநித்யமான உலகத்தில் ஒருவரையொருவர் முழுமனதோடு நேசித்து அன்பென்னும் ஆயுதத்தை அணிந்தவர்களாக ஜீவித்து ஜெய வீரர்களாய் எழும்பத்தக்கதாக கடவுள் தாமே கிருபை செய்வாராக.

M. S. David,
Headmaster,
Kallar School,
Kombay.

---

## மறவர் ஜாதியாரின் தற்கால நிலைமை.

(திரு. ச. சண்முகசுந்தரம் அவர்கள்)

(பாண்டியன் பத்திரிகையிலிருந்து எழுதியது)

முந்தின சஞ்சிகையில் மறவர் ஜாதியாருக்குள் ஏற்பட்ட குறைகள் சிலவற்றை எடுத்துக்கூறினேன். இனி, மேற்கூறிய ஜாதியாரிடத்தில் காணப்படும் சில குருட்டு நம்பிக்கைகளையும், மூட பழக்கவழக்கங்களையும் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.



மறவர்களுட் பெரும்பாலோர் தங்களைப் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்களென்றெண்ணி இறுமாந்திருக்கின்றனர். முன்னாளில் தென்னாட்டுக்கு அதிபதிகளாயிருந்த பாண்டிய அரசர்களில் மறவர் ஜாதியைச் சேர்ந்தவர், யாரேனும் உண்டோ இல்லையோ நானறியேன். அவ்விஷயம் நாட்டின் வரலாறு நன்குதெரிந்தவர்கள் எடுத்துச் சொல்லவேண்டிய ஓர் முடிவாகும். ஆனால் இதுவரையும் சரித்திர சம்பந்தமாய்க்கிடைத்த சான்றுகளில் இவ்விஷயம் தெளிவாய் விளங்கவில்லை. சரித்திர உண்மை எப்படியிருந்தாலும், மறவர்களுட் பெரும்பாலோரிடத்தில் இந்நம்பிக்கைமட்டும் பலமாக வேரூன்றியிருக்கிறது.

ஒருவன் தன்னை உயர்ந்தவன் என்றும், தேவேந்திரனுடைய திருக்குமாரன் என்றுஞ் சொல்லிக்கொள்வதில் எவ்வித குறையுமில்லை. அங்ஙனங்கூறுவதை ஒருவரும் ஆக்ஷேபிக்கவுமாட்டார்கள். ஆனால் ஒருவன் தன்னை உயர்ந்தவன் என்றெண்ணித் தன்னுடைய நிலைமைக்குத் தகாத காரியங்களை, முன்பின் யோஜனையின்றிச்செய்ய முற்படுவானாகில் அதனால் அவன் தனக்கும் பிறருக்கும் விளையும் கஷ்ட நஷ்டங்கள் பலவுண்டு. மறவர்ஜாதியார் தங்களைப் பாண்டிய வம்சத்தினர் என்று வாய்ப்பறையடிப்பதை ஒருவரும் தடுக்கமாட்டார்கள். அரசகுடும்பத்தினர் என்றெண்ணிக்கொண்டு அன்னார் அரசதோரணையை அடுத்தவரிடத்தில் காட்டும் பொழுதுதான் பெருங்கஷ்டங்கள் உற்பவிக்கின்றன. பிறர் வருந்திச் சேகரித்த பொருளைத் தம்பொருளென்றெண்ணுவர் அரசகுடியினர். பிறர், பாடுபட்டுத்தேடக் கடமைப்பட்டவர் தாங்கள் அதில் பங்குபோட உரிமையுள்ளவர் என்று அன்னார் கருதுவர். நாட்டிலுள்ள நானாவிதப் பொருள்களும் தங்களுக்கே உரியன என்று சொந்தம் பாராட்டும் சுபாவமுள்ளவர் அப்பெரியோர்கள். மறவர் ஜாதியாரோ, தங்களைப் பாண்டியவம்ச பரம்பரையினர் என்றெண்ணியதின்பலனாக, நாட்டிலுள்ள சகல பொருள்களும் தங்களுக்கே உரியன என்னும் தப்பபிப்பிராயங்கொண்டிருக்கின்றனர். பெரிய மனதாய்த் தாங்கள், மனம் பொறுத்திருக்குமட்டிலுமே, நாட்டிலுள்ள மற்றச்சாதியார்கள் எப்பொருளையும் வைத்தாளும் உரிமையுடையவரென்ற குருட்டுக்கொள்கையைக் கொண்டிருக்கின்றனர்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றிருந்த ஒருகாலத்தில் இவ்வித விநோதக்கொள்கைகளுக்கு இடமிருந்திருக்கலாம். நிலையான அரசாங்கமும் நேர்பட்டவழியுமில்லாத ஒருகாலத்தில், சஞ்சலமடைந்த ஜனங்கள், உயிரைத்திரணமாக மதிக்கக்கூடிய ஒரு கூட்டத்தாரைப் பின்பற்றி, அவர்களால் தாங்களடைந்த ஒரு சிறு நன்மையைக்கருதி அவர்களைப் பாண்டியர்களென்றும், பண்புடைய குடிப்பிறப்புள்ள வீரர்களென்றும் புனைந்துரை செய்வது இயல்பே. அவ்விதம் அக்காலத்தில் காத்தருளிய பெரியோர்களுக்குச் ஜனங்கள் சிந்தைகனிந்து, தாங்களே முன்வந்து சன்மானங்கள் வழங்குவதும் சகஜமே. அப்பால் அந்நியர் பயமும், அரசாங்க மாறுதல்களும் அடிக்கடி ஏற்படவே, ஜனங்கள் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் ஒன்றும் நேரிடாதபடி பாதுகாத்த ஒரு கூட்டத்தாருக்கு, என்றும் கடப்பாடுடையவர்களென்றெண்ணி சன்மானம் வழங்கும் பழக்கத்தை நெடுங்காலமாக கையாண்டு வந்தார்கள். இதையே காவல் சுதந்தரம் என்று பிற்காலத்தார் பெயரிட்டார்கள். நீடித்த காலமாக வழக்கத்திலிருந்துவரும் ஒரு தன்மையை மட்டும் கவனித்துக்கொண்டு, காலவேற்றுமைப் பாடுகளைக் கொஞ்சமேனும் கருதாது மறவர்சமூகத்தாரிருந்தால் என்னபயனையடைவர்? ஒருகாலத்தில் ஒருகாரணத்தின் பொருட்டு வழங்கப்பட்டுவந்த சன்மானத்தை எந்தக்காலத்திலும், எச்சாதியாரும் தங்களுக்குக்கொடுக்கக் கடமைப்பட்டவர்களென்று மறவர்ஜாதியார் எண்ணிவிட்டார்கள் என்ன காரணத்தின்பொருட்டு ஒருஜாதியார் மற்றொரு ஜாதியாருக்குக் கட்டணம்கட்டக் கடமைப்பட்டவர்களென்று, மறவர்களில் யாரையேனும் கேட்டால் அவர் மறவர்களே பாண்டிய பூமிக்குச் சுவான்தா களென்று, பாண்டியநாடு ஒருகாலத்தில், மறவர்கள் முன்னோர்களான பாண்டிய பூபதிகளின் ஆளுகையிலிருந்ததென்றும், ஆகவே, பாண்டியர், வழித்தோன்றலாகிய மறவர்களுக்கு, அவர்களுக்குரிய பூமியைப் பி அனுபவிப்பதால், அதற்குரிய கட்டணத்தைக் கட் வேண்டுமென்று மகா கர்வத்துடன் மார்புதட்டி ஆர ரஞ்செய்வார்.

மறவர் மஹாஜனங்களே! என்னே உங்கள் பேதைமை ஏனோ உங்களுக்கு இந்த போலிப்பெருமை? ஏனோ இந்த வீண் ஆரவாரம்? எதற்காகவோ இந்த பயனற்ற பிடிவாதம்? சற்று சாவதானமாகச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தற்காலம் அடைந்திருக்கும் கேவல நிலைமைக்கெல்லாம், மேலே கூறிய குருட்டு நம்பிக்கையன்றோ காரணம். அம்மாயக் கொள்கையிலீடுபட்ட நீங்கள் மீளா மயக்கத்தி லாழ்ந்துவிட்டீர்கள். இக்கொள்கையை நீங்கள் பின்பற்றியதால் விளைந்த கேடுகளை ஒவ்வொன்றாய் விவரித்துச் சொல்லுகிறேன்.

முதலாவதாகப் பாண்டியர் என்ற பட்டம் புனையப்போய் உங்களில் அநேகர் அட்டத்தரித்திராகிவிட்டார்கள். உங்களில் ஒருவேளை உணவிற்கு வகையுள்ளவர்களின் தொகை வெகுசொற்பம். உடம்பை உழைத்துப் பாடுபடுவதென்றால் உங்களுக்குப் பெருங்கேவலம். உழுதுண்டு வாழும் பெருங்குடியானவனும், நெசவுத்தொழில், வியாபார முதலிய கைத்தொழிலைக் கைக்கொண்டவனும், உங்கள் கண்ணில் மனிதனாகமாட்டான். மேற்கூறியவர்களோடு எந்தச்சாமான்ய மறவனும் தன்னை ஒப்பிட இசையமாட்டான். ஒரு தொழிலுஞ்செய்யாமல் ஒரு முயற்சியும் கைக்கொள்ளாமல், சும்மாவிருந்து வீணே காலத்தைப்போக்கும் சோம்பேறிகளைச் சுத்த வீரர்கள் என்றெண்ணும் ஜாதியாரை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? மறவர்களில், எத்தனை பேர், காவல்சுதந்தரத்தை மட்டும் நம்பி தங்கள் வாணாளை வீணாக்குகிறார்கள். நன்றாயுழைத்துப் பாடுபடும் திராணியிருந்தும், பாடுபட்டுப் பொருள்தேடியவரடையும் சுகத்தையும் பெருமையையும் பார்த்திருந்தும், பாண்டியர் என்கிற பட்டத்தைமட்டும் தலையில் சுமந்து

கொண்டு, பிச்சையிடுவதுபோல், ஒருவன் மனம்நொந்து பயந்து கொடுக்கும் அற்பப்பொருளிற்கு ஆசைப்பட்டு, காலத்தையெல்லாம் வறிதேபோக்கும் சுபாவம் இச்சாதியாரிடத்து மட்டிலுமே அமைந்திருக்கிறது. குடியிருப்பது, ஒரு மழைகூடத்தாங்காத ஓலைக்குச்சில், பெயர்மட்டும் பங்களாப் பாண்டியன். உடுத்துவது கந்தை, பெயர்மட்டும், பூலோக பரிபூரண நாச்சியார். கிடப்பது பட்டினி, கூப்பிடுவது அன்னபூரண நாச்சியார். ஐந்து வயதுப்பிள்ளை முதல் அறுபது வயதுக்கிழவன்வரை எல்லோரும் அடுத்தவனிடம் பிச்சையை நம்பி வாழ்ந்தால் இவர்களைக் கொண்ட சமூகம் எங்ஙனம் முன்னேற்றமடையும்? கடவுளால் படைக்கப்பட்ட உயிர்ப்பிராணிகளில் எறும்புமுதல் யானையீறாகவுள்ள ஒவ்வோர் உயிரும், அரைக்கணமேனும் சும்மா சோம்பேறித்தனமாக இருப்பதில்லை என்பதை யாருமறிவர். ஒரு முயற்சியும் செய்யத் தேவையில்லாத அவ்வளவு பெருஞ்செல்வம் படைத்த பிரபுக்களும் இராஜகுடும்பத்தார்களுங்கூட தற்காலத்தில் மேலும் மேலும் புதிய முயற்சிகள் செய்துகொண்டிருப்பதை பத்திரிகை வாயிலாக அறிகிறோம். உலகமெலாம் ஒன்றினைப்பற்றி ஒன்று விரைவாய் ஊக்கத்துடன் சென்றுகொண்டிருப்ப, பாண்டியர் என்று மட்டும் தங்களைப் பிறர் சொல்லுவதால், பெரிய கௌரவம் கிடைத்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்து இறுமாந்து, ஒரு வேலையுஞ் செய்யாது, நீராத்தரத்தில் மூழ்கியிருப்பது ஆச்சரியத்தினுமாச்சரியமன்றோ?

இனிக்காவல் சுதந்தரத்தை நம்பிக் காலம் கழிப்பதால் விளையும் மற்றொரு கெடுதியைக் கூறுகிறேன். காவல் சுதந்தரத்தைக் கைக்கொண்டதால் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மதிப்புக் கேட்டையும் மானபங்கத்தையும் உங்களில் யாரேனும் கவனித்திருக்கிறீர்களா? கவனித்திருந்தால், ஒருகணமேனும், இப்பழக்கத்தை விரும்ப மாட்டீர்கள். என்ன காரணத்தால் அச்சுதந்தரம் ஒரு காலத்தில் உங்களுக்கு வழங்கப்பட்டதோ, அந்தக்காரணத்தால், அச்சுதந்தரம் உங்களுக்குக் கொடுபடவில்லை. அந்தக்காலத்தில் உங்களுடைய அரியசெயலுக்காகவும், உங்களிடம் ஜனங்களுக்கிருந்த உயர்ந்தமதிப்புக்காகவும், ஊரார் எல்லோரும், மனமகிழ்ந்து, வற்புறுத்தி உங்களுக்குச்சுதந்தரம் கொடுத்தார்கள். இக்காலத்தில், நீங்கள் மேற்சொன்ன காவல் சுதந்தரத்தைப் பெறுவதற்காக கையாடு முறையைக் கவனித்தாலிதைவிட ஒரு கேவலம் உங்களுக்கு வேண்டியதில்லை.

பெரும் பணக்காரனுயிருந்து உங்களுடைய சிறு சேஷ்டைகளை அடக்கியாளும் திறமுடையவனுயிருந்தால், உங்களை இழிவான தொழிலைச்செய்யும் காவல்காரன் என்றெண்ணி, தலைவாசலுங் கப்பால் நிறுத்தி, ஊரில் நடக்கும் ஒவ்வொரு தற்செயலுக்கும் உங்களை உத்தரவாதம் செய்யும்படி சொல்லி இரவும் பகலும் கால்முளை தேயும்படி அலைத்துப் பிச்சைகொடுப்பதுபோல கொஞ்சம் பொருளை வழங்குகின்றான். ஒரு நாளைக்கு நாலணுக் கூலிவேலை செய்யுஞ் சாமான்ய வேலைக்காரனுக்கூட, தனக்குச் சேரவேண்டிய பொருளைக் குறித்த நேரத்தில் கொடுக்காது மறுநாள் வரும்படி சொல்லுவானுகில் கரகைக் கீழே வைத்துவிட்டு மற்றையக் காரியங்களைப் பார்க்கப்போகலாம் என்று உதாரமாகப் பேசுவான். காவல் சுதந்தரத்தை நம்பிய பாண்டிய பாரம்பரையினராகிய நீங்கள், பல்லெல்லாம் தெரியக்காட்டி பருவால் முகத்திலகூட்டி, சொல்லெல்லாம் சொல்லி நாட்டி, துணைக்கரம் விரித்துக்கூட்டி, மல்லெலாம் அகலவொட்டி, மானமென்பதை முற்றிலுமிழந்து, பயல் என்றும், பறட்டை என்றும் கூறும் ஒவ்வொரு இழிவான சொல்லையும், அமுதமூட்டும் குமுதவாய் மொழியென்று எண்ணுவது பரிதபிக்கத்தக்கதன்றோ? உங்களுக்கிடுவது பிச்சை என்று ஒருவன் எண்ணும்பொழுது உங்களுக்கும் பிச்சைக்காரனுக்குரிய மதிப்பையே அவன் கொடுப்பான். ஒரு சிண்டுசொல்லைக் கணமேனும் பொறுக்கமுடியாத வீரம்பொருந்திய நீங்கள், மாசுமறுவில்லாத குலத்தில் தோன்றிய நீங்கள், இழிசொல்லைக் கேட்ட மாத்திரத்திலே, இரத்தம் கொதிக்கும் குணமுள்ள நீங்கள், பாழான வயிற்றை நம்பி, அடுத்தவனிடம் பிச்சையை ஒரு பெரிதென்றெண்ணி, உலகத்தில் மதிப்புடன் பிழைக்கும் வழிகளை எல்லாம் விட்டுவிட்டு ஊதாரித்தனமாகத்திரிந்தால் உங்களை யார் மதிப்பார்கள்?

[பிரமலே நாட்டாருக்கும் இது பொருத்தமன்றோ?]

(பத்திராதிபர்)

---

## (பத்திரிகையின் பயன்)

1. ஆடையில்லாதவன் அரைமனிதன் என்பது ஒரு பழமொழி. அப்படியே பத்திரிகை படியாதவனும் பாதி மனிதனென்று சொல்லலாம். மேலும் இந்தப் பழமொழியில் மிகுந்த உண்மை அடங்கி இருக்கிறது.

2. பத்திரிகை அங்கங்கு நடக்கும் விஷயங்களைத் தெரிவிப்பதுமன்றி பல நீதி நியாயங்களையும் தெரிவிக்கின்றன. மதம், ராஜாங்கம், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், நல்லொழுக்கம் முதலிய விஷயங்களைப்பற்றிப் போதிக்கின்றன. தக்க ஆசிரியர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளை சிறந்த நண்பனாகவும், உயர் குருவாகவும் கொள்ளலாம். அவைகளில் பிரமலையர்களின் அபிவிர்த்தியைக் கோரியும், அவர்களுக்காக ஏற்பட்ட எலிமென்டரிப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியை அமுலுக்குக் கொண்டு வரும் ஆரம்ப ஆசிரியர்கள், ஊக்கமது கைவிடேல் என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க அன்னவர்கட்குத் தூண்டுகோலாய் வெளிவரும் நமது பிரமலைச் சீர்திருத்தன் ஒன்று.

3. மத சம்பந்தமான விஷயத்தையோ, ராஜாங்க சம்பந்தமான நீதியையோ, இன்னும் கைத்தொழில், விவசாயம், வியாபாரம், கல்வி, நல்லொழுக்கம், சிநேகம் முதலியவைகளுக்கடுத்த அறிவையோ இப்பத்திரிகை மூலமாக அறிந்துகொள்ளலாம்.

4. பத்திரிகை மூலமாய் மனிதன் அடையக்கூடிய பலவகை நன்மைகளை ஒரு சிறிய வியாசத்தில் எழுதுவது சாத்தியமல்ல. சுருங்கச்சொன்னால் பத்திரிகை மூடனை ஞானியாக்கக்கூடும். ஞானக்குறைவு உள்ளவனை ஞானத்தில் தேர்ந்தவனுகச் செய்யும். இப்பிரமலை சீர்திருத்தனை நமக்கு ஒரு வரப்பிரசாதமாகக் கூறலாம்.



OFFICE OF ... 15 NOV 1929 MADRAS

5. சிலர் பத்திரிகையால் நமக்கு என்ன பலன் உண்டு, இதற்கு ஏன் வீணுக ரூபாயைச் செலவுசெய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். இது முற்றும் பிசகு. ரூபாயைப் பெரிதாக எண்ணலாமா? இப்பத்திரிகையை வாசித்து அதனுல் வரும் பலனை அடைவது எவ்வளவோ மேலான காரியமென்று எண்ணிப் பாருங்கள். இவ்விஷயத்தைத் தன் மனதில் பதியவைக்காது மேல் கூறியவாறு நினைக்கிறவர்களே முதல் பாராவில் கூறப்பட்ட அரைமனிதர்களாகும். இதில் அடங்கிய மூன்ருவது பாராவில் சிநேகம் என்னும் வாக்கியத்திற்கு பின்னுல் வெளிவரும்.

மொ. சு. சாமுவேல் உபாத்தியாயர்

கள்ளர்ஸ்கூல்

கரையாம்பட்டி

போடிநாயக்கனூர் போஸ்ட்டு

---

## C. S. M. விருதுநகர் இந்திரகுல மாணவர் தம் குரு கனம் C. O. R. அம்மையப்பபிள்ளை அவர்களுக்குச் செய்த மரியாதை.

கனம் தங்கிய குருவானவர் எங்கள் மத்தியில் சுமார் 2 வருஷ காலம் C.S.M. டவுன் ஸ்கூலில் வேலை பார்த்தார். இவர் மிகவும் நல்லவர். பிள்ளைகளை அதிக அன்புடன் நடத்தினர். இவர் பிள்ளைகளுக்கு ஒரு தகப்பன் போல் விளங்கினர். நமது மாணவர்கள் போல் அழியாத அன்பு வைத்தவர். இவர் எங்கள் ஸ்கூலில் வேலைபார்த்து அதிக புகழ் உண்டாக்கினவர். இவரை திடீர் என்று மதுரை C.S.M. ஹைஸ்கூலுக்கு மாற்றிவிட்டனர். அதினுல் மாணவர்களுக்கு அதிக துக்கம் பிறந்தன. சிலருக்கு அவர் மேலான இடத்திற்குப் போவதினுல் சந்தோஷம் இருந்தாலும் அவர் பிள்ளைகள் மேலிருந்த அன்பான குணத்தாலும் அவரை விட்டுப் பிரிய மனமில்லை. தாயிழந்த கன்றுபோல் அதிக துக்கத்தில் மூழ்கினார்கள். பிறகு மாற்றின குருவை நல்ல மரியாதையோடு அனுப்ப 4—2—29 ல் மாலை $4\frac{1}{2}$ மணிக்கு ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் கனம் டேவிட் உபாத்தியாயரவர்கள் துவக்கும் ஜெபம் செய்தார். பிறகு மாலை சூடுவதற்காக அவருடைய மாணுக்கன் S. பெருமாத்தேவன் என்பவர் அவருக்கு சில பாடலை சுயமாக பாடினதை, மாணிக்கம், தேவநேசன், தங்கையா மூவரும் பாட, M. சிவனாண்டி என்பவர் மாலை சூடினர். பிறகு பெருமாத்தேவர் என்பவர் அவருக்கு மாணவர் ஞாபகத்திற்கு சிற்சில பொருளைக் கொண்டுவந்து அவர்முன் வைத்தார்கள். பிறகு கனம். எட்மாஸ்டர் அவர்கள் தன்னிடத்தில் வேலை பார்த்த அன்புள்ள சிநேகன் தன்னைவிட்டுப் பிரிவதைப்பற்றியும், அவர் இவ்வருஷம் தன் ஸ்கூலில் அதிக புகழ்பெறச்செய்ததையும், அவருடைய குணங்களையும் இன்னும் சில விஷயங்களையும் சுமார் $\frac{1}{4}$ மணி நேரம் எடுத்துப்பேசினர். பிறகு மாறின குரு கனம்: அம்மையப்பபிள்ளையவர்கள், தன்னுடன் வேலைபார்த்த உபாத்தியாயரவர்களுக்கும், தன் அருமை மாணவர்களுக்கும் அவர் சொன்னதாவது: என்னை இவ்வளவு மரியாதை செய்த உங்களுக்கு நான் என்றைக்கு பதில் செய்வேன். ஏன் அதிக சந்தோஷத்தோடும் துக்கத்தோடும் உங்கள் எல்லாருக்கும் என் அன்பான வந்தனம் என்றும், கர்த்தரானவர் உங்களுடன் இருப்பாராக என்றும் சொல்லி தன் ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு மங்களம்பாட கனம். எட்மாஸ்டர் அவர்கள் முடிக்கும் ஜெபம் செய்தார். பிறகு தாம்பூலம் சந்தனம் அளிக்கப்பட்டன. பிறகு மாணவர்கள் கனம். மாறின குருவுக்கு வந்தனம் செய்து தங்களிடங்களுக்குப் பிரிந்து போனார்கள்.

இப்படிக்கு,

இந்திரகுல மாணவர்கள் C.S.M. விருதுநகர்.

S. பெருமாத்தேவன்—M. அய்யம்பட்டி.

M. சிவனாண்டி—நல்லபிள்ளைபட்டி.

R. சொக்கலிங்கம்—திருமாணிக்கம்.

---

## துண்டுதுணுக்குகள்.

மழையறிவிக்குங்கோழி சுத்த வெண்ணிறமான பெட்டைக்கோழிக்கு கொஞ்சம் கெயிம் பெப்பர் என்ற வஸ்துவைக் கலந்து கொடுத்தால் கொஞ்ச நாளில் அக்கோழியின் [illegible]மெல்லாம் மலரான ரோஜா புஷ்பத்தின் நிறத்தை [illegible]இருக்கும். மழை வருவதாயிருந்தால் சற்று நேரத்திற்கு முன்பே ரோஜா நிறமுள்ள இறகுகள் நல்ல சிவப்பு நிறமாக மாறிக்கொண்டு வரும். இரத்தச்சிவப்பு நிறம் ஏறிவிட்டால் திட்டமாக காற்றும் மழையும் வரலாமென்று எதிர்பார்க்கலாம்.

லெறன்றி போர்டு. அமெரிக்காதேசத்தில், போர்டு மோட்டார் கம்பெனியின் சொந்தக்காரரும் கோடீஸ்வரப் பிரபுவுமான லெறன்றி போர்டென்பவர் ஒருநாள் தன்னிடத்தில் ஸ்டாம்பு வாங்குவதற்கு பணமில்லாமல் கெயின்லர் என்பவரிடம் (1 அணு) கடன் வாங்கினராம். அக்கடனைத் தீர்ப்பதற்கு நெடி செயின்லான் என்பவர் பேருக்கு ஒரு செக்கு எழுதிக் கொடுத்தாராம்.

பிரைட்டன் போலீஸ் கோர்ட்டில் நாய் ஒன்று பள்ளிக்கூடத்திற்குப் போகும் பெண்பிள்ளைகளையும் மற்றுஞ் சில மனிதர்களையும் கடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டதாம். அப்போது கோர்ட்டிலிருந்த சொந்தக்காரன் ஓவென்று அலறி, நீதிபதியை நோக்கி, வேறு எந்த அபராதம் விதித்தாலும் கொடுக்கத் தயாராகவிருப்பதாகவும், மரணதண்டனையை நீக்கவேண்டுமென்றும் மன்றாடினன். என்ன சொல்லியும் நீதிபதி இரங்கவில்லையாம்.

திமிங்கல வேட்டை. நார்வே தேசத்து இன்ஜினியர் ஒருவர், திமிங்கல வேட்டைக்காக எலக்டிரிசிட்டியுள்ள நூதன யந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இவ்வியந்திரத்தால் மலைக்குன்றம் போலிருக்கும் திமிங்கலங்களை க்ஷணப்பொழுதில் கொன்றுவிடலாம்.

சேனி இந்தியர்கள். அமெரிக்கன் இந்தியர்களில் சேனி இந்தியர்கள் என்ற வகுப்பார் குதிரையோடு பந்தயம் போட்டு 100 மைல்தூரம் ஓடி ஜெயிப்பார்களாம். உலகத்தில் ஓட்டத்தில் பேர் பெற்றவர்கள் தாராகுமார் இந்தியர்கள். இவர்கள் 170 மைல் நிற்காமலே தொடர்ந்து ஓடும் சக்திவாய்ந்தவர்கள்.

(பாண்டியன்)

## சென்னை புத்தகாலயப்ரசார சங்கம்.

### சென்னை ஹைகோர்ட்டு, டிரான்ஸ்டேலர் எஸ். கலியாண சுந்தர ஐயர் அவர்கள் எழுதியது.

(பெயர்த்தெழுதப்பட்டது)

இப்பெயர் உள்ள சங்கம் ஒன்று, சென்னை அட்வொகேட் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களைத் தலைவராகக்கொண்ட பலவான்களுடைய ஆதரவில் சென்ற ஒன்றரை வருஷகாலமாக நடைபெற்று வருகின்றது. நாட்டின் எல்லாபாகங்களிலுமுள்ள ஜனங்களுக்கு கல்வறிவைபுகட்டி நல்வழிப்படுத்த வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கத்துடன் அநேக முக்கிய இடங்களில் புத்தகசாலைகளை ஏற்படுத்தி அவற்றின் மூலக்கல்வியறிவை விருத்திசெய்து வருகிறார்கள். இன்னும் என்ன என்ன சாதனங்களால் அறிவை விருத்திசெய்யலாமோ அதைப்பற்றியும் ஆலோசித்துவருகிறார்கள் இந்தமுயற்சி யாவராலும் பாராட்டத்தக்கது.

ஒருவருக்கு கல்வியறிவைக்காட்டிலும் சிறந்த தனம் வேறொன்றில்லை. பொருட்செல்வம் அழிந்துபோம், கல்விச்செல்வம் அழியாது. பொருள் பிறருக்குக்கொடுக்க்கொடுக்ககுறையும். கல்வி பிறருக்குக் கொடுக்கக்கொடுக்க விருத்தியாகும். ஒருவனுக்கு பலவகையான செல்வங்களிருந்தாலும் கல்வியறிவு இல்லையானால் அவற்றிற் சிறிதும் பிரயோசனமில்லை. தேடியபொருள்களைக் காப்பாற்றுவதற்கும், அதை விருத்திசெய்வதற்கும், நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்வதற்கும், புண்ணிய பாவங்களைத்தெரிந்துகொள்வதற்கும், புண்ணிய பாவங்களை உணர்வதற்கும் கல்வியே தக்க கருவியாகும். ஒருவனுடைய அங்கங்களுள் கல்வியே முதன்மையானது. மற்ற எல்லாப்பொருள்களும் கல்வியைமூலமாகக்கொண்டே உண்டானவை ஆதலின் கல்வியறிவைப்பரவச்செய்வதே எல்லாத்தானங்களிலும் உத்தம தானமாகும். உலக அனுபவத்தைக்கொண்டு சில விஷயங்கள் கீழே தெரிவிக்கப்படுகின்றன. சென்னை புத்தகாலய சங்கத்தார் அவற்றைக் கவனித்து தங்களுக்கு உசிதமாகத்தோற்றுவனவற்றை ஏற்றுக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

உலகத்தில் பல வேறுஜாதியார் இருந்தாலும் எல்லோரையும் படித்தார் படித்தாரென்றே இரண்டுவகையில் அடக்கிவிடலாம்.

இளமையிலேயே கல்வியறிவுஏற்படுவது மிகவும் அவசியம். கல்வியறிவு ஏற்படுவதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது.

இக்காலத்தில் படிப்புவிஷயமாக மிகுதியான பொருள் செலவாகிறது. கவர்மெண்டாரும், டிஸ்ட்ரிக்ட்போர்டாரும், லோக்கல் போர்டாரும், முனிஸ்பால்டியாரும் பல துறைகளில் பணத்தை நல்ல நோக்கத்துடனேயே செலவிடுகிறார்கள் ஆனால் படிப்பு முன்போல் முறையாக விர்த்தியாகவில்லையென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளாமலிரார். பணத்தைச்செலவிடுவோர்மேல் ஒரு விதமான குற்றமுமில்லை. அந்தந்தவகையில் அமைந்திருப்பவர்கள் சரியான முறைகளை, அறிந்து, கல்வியைப்பரவச்செய்யாமல் இருப்பதுதான் காரணமாகும் முற்காலத்தில் அதிகப்பொருள்செலவில்லாமல் ஜனங்கள் படித்துமேன்மையடைந்து செல்வப்பொருள்களையும் தேடியிருக்கிறார்கள். இக்காலத்திலோ அநேகம் குடும்பத்தினர் தங்கள் பிள்ளைபடிப்பித்தலில் பொருளைச்செலவிட்டு வறுமையடைந்திருக்கிறார்கள். பாடப்புத்தகங்கள் வாங்குவதிலும், சம்பளங்கள் கொடுப்பதிலும் நோட்டுபுத்தகங்கள் வாங்குவதிலும், கருவிப்பெட்டிகள் வாங்குவதிலும், பிறைவேட்டிடூட்டர்களுக்குக் கொடுப்பதிலும், பணத்தைச்செலவிடாத குடும்பங்கள் இராது. கற்றுக்கொள்ளும் விஷயம் மாத்திரம் செலவிடும் பணத்திற்கு ஏற்றபடியில்லை,

உணவு வகைகளிலும் உடை வகைகளிலும் ஒழுக்கங்களிலும் முன் இருந்த வழக்கங்களெல்லாம் அடியோடே மாறிப்புதிய புதிய கொள்கைகள் ஜனங்களுக்குள் உண்டாகி இருக்கின்றன.

அவற்றால் ஜனங்கள் பலவிதமான நோய்களுக்குள்ளாகிறார்கள். வைத்தியர்களும் அதிகரிக்கிறார்கள். புதிய புதிய பெயர்களோடு வியாதிகளும் அதிகரிக்கின்றன. பரம தரித்திரன்கூட மிக்கசெல்வானைப்போல் தன் குடும்பவாழ்க்கையை நடத்தவேண்டுமென்ற அபிப்பிராயத்தோடிருக்கிறான். சிலர் அனாவசியமான காரியங்களில் பொருள்களை கண்டபடிசெலவுசெய்கிறார்கள். நல்வாழ்க்கைக்கு உபயோகமானவழிகளில் மனதைச்செலுத்தி தங்கள் தங்கள் குடும்பத்திற்கும் தேசத்திற்கும் நல்ல புகழைபுண்டாக்குவதற்கு ஜனங்கள் பாடுபடவேண்டும். இளமையிலேயே நல்லபழக்கம் ஏற்படவேண்டும். பால்யத்தில் எது மனதில் நன்றாகப் பதிகிறதோ, ஆயுள் பரியந்தம் அது நீங்குவதில்லை. படிப்பவர்கள் எல்லோரும் ஒரே வகையில் படித்து உத்தியோகம் பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறார்களேயல்லாமல் உலகவாழ்க்கைக்குப்பயன்தரக்கூடிய கல்வித்துறையிற் காலத்தைப்போக்குகிறார்களில்லை.

ஒருவன் விவசாயியாகவோ, வியாபாரியாகவோ, தொழிலாளியாகவோ, இருந்து காலத்தைக்கழிப்பான். அவனுடைய பாரம்பரையில் முன்னோருடைய பாரம்பரையைஅனுசரித்து அந்தப்பழக்கத்தை விருத்தி செய்தால் அவனுடைய குடும்பம் ஒருநாளும் மெலிவு அடையாது. ஆனால் முன்னோர்கள் அனுசரித்துவந்த முறையையும் மேற்கொண்டு வந்தமுயற்சியையும் பின்னவர்கள்பின்பற்றுமல் வேறுவகையாகப்பொருள்தேடலாமென்று தவறுக எண்ணங்கொண்டு மனதை பலவிதமானவழிகளில்செலுத்துவதினாலேதான் நஷ்டம் அடைகிறார்கள். பழையன கழிதலும் புதியனபுகுதலும் விதி என்பதையவர்கள் ஆதாரமாக எல்லோருக்கும் எடுத்துக்காட்டுகிறார்கள்.

முற்காலத்தில் கிராமங்களில் ஒரு சிறுவனுக்கு ஐந்தாவது பிராயத்தில் அச்சரப்பியாசம் செய்வித்தால் அவன் பத்துப்பன்னிரண்டு பிராயத்திற்குள் கணிதசாஸ்திரத்திலும் இலக்கண இலக்கிய நூல்களிலும் நீதிமார்க்கத்திலும் விசேஷமான பாண்டித்தியத்தை அடைந்து விடுவான். அதற்குக்காரணம் அப்போதிருந்த படிப்புமுறையே. இவ்வளவு படிப்பிற்கும் அவனுக்கு ஏற்பட்ட செலவோ மிகக்குறைவாயிருக்கும். தேகதிடனும் நன்றாகஇருக்கும். இக்காலத்திலோ ஆயிரக்கணக்கான ரூபாய்செலவிட்டாலும் ஒருவனுக்கு அவ்வளவுபடிப்பு ஏற்படுமென்று சொல்லமுடியாது. முன்னே நாட்படிப்பு உலக



வாழ்க்கைக்கு உபயோகமான, பறந்த ஞானத்துடன் கூடியதாக இருந்தது.

விவசாயிகள் தங்கள் நிலங்களைத்தங்கள் கிராமங்களிலிருந்து, பண்படுத்தி விருத்திக்குக் கொண்டுவராமல் தங்கள்கிராமங்களை விட்டு நீக்கிக்குடும்பத்துடன் நகரங்களில் வசிக்கத்தொடங்கி தங்கள் நிலங்களை அயலார் மேற்பார்வையில் வைத்துவிட்டு விட்டு வரவு வகையை இறைத்துக்கொண்டு செலவுவகையை விர்த்திசெய்துநாள் அடைவில் துன்பத்தையடைகிறார்கள்.

இப்பொழுதும் எல்லோருக்கும் சுயேச்சையாக இருக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. மனிதராய்ப்பிறந்த எல்லோரும் சமமானவர்களே. ஒருவன் உயர்ந்தவன் ஒருவன் தாழ்ந்தவனென்ற அபிப்பிராயமேகூடாது என்ற கொள்கை நாட்டின்மூலை முடுக்குகளிலும் பரவி வருகின்றது.

இதுமிகவும் தவறானகொள்கை. ஜனங்களாக ஏற்படுத்திக்கொண்ட முறையன்று. அது ஒழுக்கம் படிப்புஞானம் முதலான காரணங்களினாலேயே உயர்வு தாழ்வு ஏற்படுகின்றன.

தெய்வம் என்பது. ஒன்றில்லை எல்லாவற்றையும் தாங்கள் சாதித்துவிடலாமென்ற எண்ணமும் சிலருக்கு உண்டாகின்றது. அது மிகவும் தவறானது. தெய்வத்தை காம்நேரில் காணவிட்டாலும் புகையைக்கொண்டு நெருப்பிருப்பதைப்போல மனுஷனுடைய சக்தியைக்கடந்த சில அசாத்தியமான காரியங்கள் நிகழ்வதைக்கொண்டு தெய்வம் இருப்பதை நிச்சயமாகக் கொள்ளவேண்டும். கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் முதலியோர் குறிப்பிட்ட தினங்களில் அவரவர்களுக்குரிய ஆலயங்களுக்குச்சென்று சிறிதுநேரமாவது தெய்வத்தைத் தொழுதுவருகிறார்கள். மற்ற மதத்தார்களில் பெரும்பாலோர் அவ்வழக்கத்தை விட்டுவிட்டார்கள்.

மதாசாரங்களிலும் விவாகம் முதலிய சுபகாரியங்களிலும் இப்போது ஜனங்கள் பண்டைகாலத்தோர் மேற்கொண்டுவந்த அனுஷ்டானத்தை விட்டு விட்டு தங்களுடைய இஷ்டப்படி விவரீதமான முறைகளை அனுஷ்டித்துவருகிறார்கள். அவற்றை அனுஷ்டிக்கும் காலத்தில் அவை சந்தோஷத்தை விளைவிப்பனவாக தோன்றினாலும் நாளடைவில் அவற்றால் உண்டாகும் துன்பங்கள் பல. அவை மாற்றிக்கொள்வதற்கு அசாத்தியமுமாகின்றன. வேலைக்காரர்களுக்கு எஜமானர்களிடத்தில் ஒருவகையான மரியாதையும் அன்பும் நன்றியறிவும் முன்பு இருந்து வந்ததுண்டு. இப்போது பெரும்பாலும் அவ்வாறில்லை. தங்களுடைய உழைப்பினாலேயே தங்களுடையஎஜமானர்களுக்கு நன்மையும் லாபமும் உண்டாகின்றன வென்றகொள்கையுடன் அவர்களுக்கு விரோதமாக கீழ்ப்படியாமலும் நடந்து வருகிறார்கள் ஒரு கடையின் முதலாளியிடத்தில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள் முதலாளிக்கு கிடைக்கும் லாபத்தைக்கண்டு பொறாமை கொண்டு தாங்களே தனியாகத்தொழில் நடத்தலாமென்ற எண்ணத்துடன் சிறிதுகாலம் தொழிலை தனியாகநடத்தி விசேஷமான நஷ்டத்தையும், அடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு பின்னும் சவுகரியங்கள்செய்து கொடுக்கவேண்டுமென்று எஜமான்களைக் கேட்டால் அவர்கள் அவசியம் செய்துகொடுப்பார்கள். அவ்விதம் கேட்டுக்கொள்ளாமல் தங்கள் எஜமானர்களிடம் வேலை செய்வதில்லையென்று கட்டுப்பாடாக வேலைக்குப்போகாமல் நின்றுவிடுகிறார்கள். இவ்வகையாக இருக்கவேண்டுமென்று இவர்களை தூண்டுவோரும் சிலர் உண்டு. இதனால் வேலைக்காரர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் நஷ்டம் ஏற்படுகிறதேயல்லாமல் முதலாளிக்கு நஷ்டம் உண்டாகிறதில்லை. இதை ஒவ்வொருவரும் நன்றாக உணரவேண்டும்!

வியாபாரவழியில் ஜீவிப்பவர்கள் அயல்தேச சரித்திரங்களையும் பூலோக சாஸ்திரங்களையும் நன்றாகத்தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு தெரிந்துகொண்டால் இன்ன இடத்தில் இன்ன சாமான்கள் விலை சகாயமாயிருக்கிறதென்றும் இன்ன இடத்தில் விலை அதிகமாயிருக்கிறதென்றும், இன்ன இடத்தில் இன்ன பொருள்கள் விசேஷமாகக்கிடைக்குமென்றும், இன்னயிடத்தில் இன்னதொழில் நடத்தலாமென்றும் இன்ன இடத்தில் ஜனங்களுக்கு இன்ன பொருள் தேவையென்றும் தெரிந்துகொள்ளலாம்.

முற்காலத்தில் ஒவ்வோர் குடும்பத்திலும் உள்ள பெரியோர்கள் நோய்களாகி, தலைவலி ஜுரம் வயிற்றுவலி முதலியவற்றை மிகவும் சுலபமான வீட்டு மருந்துகளாலும், ஔஷதங்களாலும் ஆகாரப்பக்குவங்களாலும், போக்கிவந்தார்கள். அந்தவிஷயத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட செலவும் மிகவும் குறைவாகவிருக்கும். இப்பொழுதோ மிகவும் சிறிய நோய் ஒன்றுகண்டாலும் பெரியடாக்டர்களிடம்போய் ஆலோசிக்கிறார்கள். நோய் இன்னதென்றுகண்டுபிடிப்பதே பலநாள்களாகின்றது. சில சமயங்களில் நோயும் விர்த்தியாகின்றது. இதற்கு காரணம் சுதேசவைத்திய சாஸ்திரத்தை முறையாகத்தெரிந்து கொள்ளாமையே. ஆனாலும் இப்போது சில கனவான்களுடைய நன்முயற்சியில் இந்தியவைத்தியசாஸ்திரங்களை பின்பற்றி அநேக ஔஷதசாலைகள் ஆங்காங்கு ஏற்பட்டு வருகின்றன.

சிறு தொழிலாளிகள் முதல் பெரியோர்கள் வரையில் செட்டாக காலச்சேபம்செய்யவேண்டுமென்ற நோக்கமேயில்லை. மாதம்பத்துரூபாய் சம்பாதிப்பவன் 1ரூபாயாவது மிகுத்துவைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் காலச்சேபம் செய்யவேண்டும். பெரும்பாலோர் அவ்விதமாக நடந்து வராமையால் அவர்களுடைய குடும்பங்கள் பலவிதமான துன்பங்களுக்குஉடன்படுகின்றன. எந்தெந்த வகையில் குறைத்துக்கொள்ளலாமென்று ஒவ்வொருவரும் தீர்க்க ஆலோசனைசெய்து குடும்பத்தின் நன்மையை உத்தேசித்து கூடுமானவரையில் பொருளை மிகுத்துவைத்து வைப்பதற்கு முயற்சிசெய்யவேண்டும்.

கலியாணம் என்பது ஒரு சந்தோஷமான காரியமாக இருந்தாலும் எல்லோரும் ஒரேவிதமாக நடத்தவேண்டுமென்ற முறையே மேற்கொண்டு வருவதால் சில குடும்பங்கள் மிகவும் சீர்கேடான நிலைமையை அடைந்து வருகின்றன. அவரவர்கள் நதுதிக்கும் செல்வத்துக்கும் ஏற்றபடி காரியங்களை நடத்திவந்தால் இவ்விதமான துன்பம் உண்டாகாது.

அற்பவிஷயங்கள் காரணங்கள்விஷயமாக அநேக இடங்களில் பெரிய பெரியகலகங்களும் விவகாரங்களும்உண்டாகின்றன. அவைகாரணமாக அவர்கள் நீதிஸ்தலங்களில்

பொருள்களைசெலவிட்டு வேறுவேலைகளையும் கவனியாமல் காலத்தையும் போக்குகிறார்கள். அவ்விதம் செய்யாமல் தங்களுக்குள்ளாகவே சமாதானம் செய்துகொண்டால் இருதிறத்தாருக்கும் சௌகரியமுண்டு. கோபத்தையடக்கி பொறுமையை மேற்கொள்ள வேண்டும். பிறர்செய்யும் குற்றத்தை பொறுத்துக்கொள்ள வேண்டும். அதனால் பொறுத்துக்கொள்கிறவர்களுக்கு ஒரு நஷ்டமும் உண்டாகாது.

சிலர் காரியங்களை உத்தேசித்து பிறரிடத்தில் வஞ்சகமாகப்பழகி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குணங்களை அறிந்துகொண்டு அவர்களுடைய பழக்கத்தைநீக்கிவிடவேண்டும்;

சில சில ஜனங்களுக்கு சில சில கெட்டபழக்கங்கள் தலைதத்துவமாக ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் மற்றவர்களுடன் பழகும்போது அந்தப்பழக்கங்கள் அவர்களுக்கு அதிருப்தியாக இருக்குமென்பதை உணர்ந்து அவர்கள் முன்னிலையில் அப்பழக்கங்களை அனுசரிப்பதை நிறுத்தவேண்டும். ஒருவருக்குப்பிரியமாக உள்ளது மற்றொருவருக்கு அப்பிரியமாகயிருக்கலாம். எனக்குபிரியமாகவுளதென்ற காரணத்தைக்கொண்ட ஒரு வழக்கத்தை அனுசரிக்கவேண்டுமென்று ஒருவன் மற்றவர்களை வற்புறுத்தக்கூடாது. மற்றவர்களிடத்தில் காணப்படும் நற்குணங்களை ஒருவன் மேற்கொள்ளவேண்டுமேயல்லாமல் அவர்களிடமுள்ள தீயகுணங்களை பின்பற்றக்கூடாது. சில சில சிறுவர்களுக்கு சில சில விஷயங்களிலேதான் புத்தி செல்லும். ஒருவனுக்கு படிப்பில் புத்திசெல்லும், ஒருவனுக்கு சங்கீதத்தில் புத்திசெல்லும், ஒருவனுக்கு வியாபாரத்தில் புத்திசெல்லும், ஒருவனுக்கு சித்திரவேலைகளில் புத்திசெல்லும், யார் யாருக்கு எந்தெந்ததுறையில் அவர்களைபயிற்றுவிக்கவேண்டுமேயல்லாமல் அவர்களுடையமனத்துக்கு ஒவ்வாத் துறைகளில் பயிற்றுவிக்கலாகாது. அங்ஙனம் செய்தால் பொருள் நஷ்டப்படுமேயன்றி பயன் ஒன்றும் ஏற்படாது.

இன்னும் வரும்.

---

சங்கை டட்லிதுரையவர்கள் எழுதியது.

## பிரமலே நாட்டில் கால்நடைகளை எப்படி விருத்தி செய்வது.

இம்மாதத் துவக்கத்தில் பெங்களூருக்கு 25 மைலுக்கு தெற்கேயுள்ள ஒசூர் என்ற இடத்திலுள்ள சர்க்கார் கால்நடை வளர்க்கும் பண்ணையைப் பார்வையிட சிலாக்கியம் கிடைத்தது. அங்கே 544 கால்நடைகளுண்டு. ஓங்கோல் மாடுகள் பெரிதும், பால் கொடுப்பதிலும், வேலை செய்வதிலும் கெட்டியாயிருக்கிறது. கன்றுகத் தீனி கொடுத்தாலன்றி அவைகளை வளர்ப்பது மிகவும் கஷ்டம். சிந்தி மாடுகள் பால் கொடுப்பதற்கு பேர்போனவைகள், ஆனால் வேலை செய்யக்கூடிய மிருகங்களல்ல. காங்கயம் மாடுகள் அதிகப்பால் கொடுக்கின்றன. வேலைசெய்வதில் மிகவும் கீர்த்தியானவைகள். சர்க்கார் இந்த இடத்திலிருந்து சென்னை ராஜதானி முழுமைக்கும் பொலிகாளைகளை விற்றுவருகின்றார்கள். ஆனால் அவர்களிடம் கொஞ்சமான பொலிகாளைகளே வைத்திருக்கிறார்கள்.

சர்க்கார் இப்படிப்பட்ட பொலிகாளைகளை வைத்து வளர்த்து வருகிறவர்களுக்கு ரூ. 100 வரை வருஷாந்தர பணச்சகாயம் செய்தும் வருகிறார்கள். ஒரு சமுசாரி இப்படிப்பட்ட சகாயம்பெற விரும்பினால் பின் வரும் நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும்.

குடியானவர்களிடம் வளரும் நல்லஜாதிப் பொலிகாளைகளுக்கு ஸர்க்காரால் அளிக்கப்படும் பண உதவியின் நிபந்தனைகள்.

1. காளை முதல்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொலிவுக்காக அனுப்பப்படும்பொழுது வயதில் 2½ வருஷத்திற்குக் குறையாமலிருக்க வேண்டும்.

2. அப்படியாகத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் காளையைத் தகுந்தபடி தீனிபோட்டுக் காப்பாற்றவேண்டும்.

3 காளையால் பலனடைந்த பசுக்களின் ஜாப்தா ஒன்று கீழ்கண்ட விஷயங்களைக் காப்பாற்றுமாறு, எப்பொழுதும் எழுதிக்கொண்டு வரவேண்டும்.

(1) பசு காளையால் மிதிக்கப்பட்ட தேதி.
(2) பசுவின் சொந்தக்காரருடைய பெயர்.
(3) சௌகரியப்பட்டால் ஷை பசுவிற்குப் பிறந்த கன்றின் ஜாதி (காளையா கிடாரியாவென்பது), நிறம் முதலிய விபரங்கள்.

ஒரு வருஷத்தில் காளையால் பலனடைந்த பசுக்களின் தொகை 40-க்கு குறையாமலும் 70-க்கு அதிகப்படாமலுமிருக்கவேண்டும்.

(மற்றும் விபரங்கள் கிராமவாசியின் பஞ்சாங்கம் 1929—30—78-ம் பக்கமுதல் 81-ம் பக்கம் வரை பார்க்கவும்.

இவைகளை வாங்க சர்க்கார் ரெவினியூ டிப்பார்ட்மெண்ட் மூலமாகவும், தேவமார்களுக்கு மகா-ா-ா-ஸ்ரீ கன்னர் ஸ்பெஷல் சூப்பிரண்டு துரை மூலமாகவும் ரூ. 150 வரை கடனாக வாங்கி பொலிகாளைகள் வாங்கலாம்.

மேல உறப்பனூரைச்சேர்ந்த பல்லக்காபட்டியில், மதியாரி என்பவர் இப்படிப்பட்ட ஒரு காங்கயமாடு வாங்கி கடந்த 3 வருஷமாக வைத்திருக்கிறார். இதுவரை ரூ. 250 வரை சர்க்காரிடம் ஷை மாட்டை வளர்ப்பதாகப் பெற்றிருக்கிறார் அந்த மாடு இப்போது பெரிதாகி வேலைக்கு உபயோகித்து வருகிறார்கள்.

ஆற்காடு ஜில்லாவில் இப்படிப்பட்ட ஒரு மாடு 3வருஷம் உபயோகித்து வந்ததைப் பார்த்தேன். இங்கேயும் சர்க்கார் இந்த மாட்டின் வளர்ப்புக்காகப் பணம் கொடுத்து உதவியிருக்கிறார்கள். இந்த மாட்டிற்குப் பிறந்த பல கன்றுகளைப் பார்த்தேன்.

திருமங்கலம் தாலுகாவில் பலர் இப்படிப்பட்ட மாடுகள் வாங்க அதிக ஆசையாயிருக்கிறார்கள். இவர்கள் சீக்கிரம் வாங்கி உபயோகித்தால் நமது நாட்டு மாடுகள் அதிகமாக விருத்தியடையும்.

சர்க்காரில் அளிக்கப்படும் இப்படிப்பட்ட சிலாக்கியங்களில் பங்குபெற விரும்புகிறவர்கள் எதாவது ஆலோசனை வேண்டுமானால் எனக்கெழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. A. டட்லி துரை,
திருமங்கலம்.



---

946

REG. NO.-M. 2146
15 NOV 1929
MADRAS


# THE Piramalai Reformer

# பிரமலே சீர்திருத்தன்.

"சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்; அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது"

Vol. IX. ] அக்டோபர் 1929 [ இலக்கம் 6


## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில ஹு புரட்டாசிமீ 18 | அக்டோபர்மீ | சுக்கில ஹு ஐப்பசிமீ 18 | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 18 | 2 ●19 | 3 20 | 4 21 | 5 22 |
| 6 23 | 7 24 | 8 25 | 9 26 | 10 27 | 11 28 | 12 29 |
| 13 30 | 14 1 ஐப்பசி | 15 2 | 16 3 | 17 4 | 18 ○5 | 19 6 |
| 20 *7 | 21 8 | 22 9 | 23 10 | 24 11 | 25 12 | 26 13 |
| 27 14 | 28 15 | 29 16 | 30 17 | 31 18 | | |


*Patron.*—M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

மாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## எல்லோருக்கும் கல்வி கற்பித்தல்

### ஒரு சிறிய ஏற்பாடு

மதுரை கவர்ன்மெண்டு உதவி இன்ஜினீயர் ராவ் சாஹிப். எஸ். கனகசபைப்பிள்ளை அவர்கள் எழுதியது.

*பிரிட்டன் நாட்டில் கல்வி விஷயத்தில் பெரிய பிரமாண கர்த்தாவான ரையிட் ஆனரபிள் பிஷர் எழுதியதாவது:—*

இளைஞர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் கல்வி கற்பை முதலாவதாகவும் சம்பாத்தியத்தை இரண்டாவதாகவும வைத்துக்கொண்ட ஜனசமுகம் ஏற்படவேண்டுமென்று தைரியமாக பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். இஃது ஒரு வகுப்பாருக்கு மாத்திரமன்று, எல்லாச்சிறுவர்களுக்குமேதேவை. இக்காலத்தில் பணக்காரர்கள்படிக்கிறார்கள், ஏழைகள் உழைக்கிறார்கள். கல்வி கற்பித்தலே முதியோர்கள் இளைஞருக்குச் செய்ய வேண்டிய நிரந்தரமான கடமையாகும். சிறுவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள் என்றாவது பணக்காரர்களாயிருக்கிறார்களென்றாவது நாம் கவனிக்கத் தேவையில்லை. அவர்களுக்குக் கல்விகற்பிப்பது நமது கடமை. அவர்கள் எந்தக் கல்வியைக்கற்க முடியுமோ நாம் எந்தக் கல்வியைக்கொடுக்க முடியுமோ அந்தக் கல்வியை நாம் கற்பிக்கவேண்டும்.

முன்னுரை:—படிப்பில்லாத எல்லோருக்கும் கல்வி கற்பிக்கும் பேரெண்ணம் இங்கு இல்லை. முக்கியமான ஆரம்பப்படிப்பை விரைவில கிரகிக்கக்கூடிய சிலருக்கு கல்வி புகட்டுவதே நம்முடைய நோக்கம். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்ற பழைய பெரியவாக்கை அனுசரித்து எடுத்த தமிழ் புத்தகங்களையும் அறிவையும் சாதாரணமாக கிராமத்தில் தேவையா? வேலை செய்யும் கூலி தானியவிற்பனை சில்லறைவட்டி முதலிய கணக்குகள் போடும்படியான ஞானத்தையும் பள்ளிக்கூடத்திற்குப் போய் படிக்க முடியாதவர்களுக்குப் போதித்து அவர்கள் கண்களைத் திறப்பது இந்த ஏற்பாட்டின் நோக்கம். படிக்கவேண்டுமென்று ஆசையுள்ள 14-முதல் 21 வரையுள்ள ஆண்பிள்ளைகளையும் ஒருவாறு 28 வயதிற்குட்பட்டவர்களையுமே இந்த ஏற்பாட்டில் சேர்த்துக்கொள்ள முடியும். இவர்கள் ஊக்கமும் உற்சாகமும் உள்ளவர்களுமானதாலும் தாங்கள் படிக்கவேண்டுமென்ற ஆசையாலும் சேர்வதால் நாம் கற்றுக்கொடுக்கப் போவது சாதாரணமான கல்வியானதாலும் இவர்கள் சொற்பகாலத்தில் தேர்ச்சியடைவார்கள் என்று நிச்சயமாய் நம்புகிறோம். மே, ஜூன் மாதங்கள் பள்ளிக்கூடங்களுக்குக் கோடைக்காக ஓய்வுநாளானதாலும் கிராமங்களில் பயிர் முதலிய வேலை அநேகமாக இராததாலும் இம்மாதங்களே கிராமாந்தரங்களில் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கு ஏற்றகாலம். பள்ளிக்கூட விடுமுறை நாளில் வரும் பிள்ளைகளைக்கொண்டும் பால்ய உபாத்தியாயர்களைக் கொண்டுமே இந்த நமது பள்ளிக்கூடங்கள் நடைபெறும். இக்காலத்து பாலியர்கள் அதிகமான தியாகபுத்தியாயும், மானமும் மரியாதையும் உள்ளவர்களானதால் காரியமும் ஒழுங்காக நடைபெறும் என்றும் சம்பளம் வாங்காமல் அவர்கள் தர்ம சிந்தையில் உழைப்பார்களானதால் பணக்கஷ்டம் அதிகமில்லாமல் இக்கோடைப் பள்ளிக்கூடங்கள் கூடிவருமென்றும் நம்புகிறோம். எட்டுவாரம் பகல் இரவு இரண்டு மணி நேரமும் படிக்க முடியாதவர்கள் எட்டு மாதத்தில் இராப்பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளலாம். பகல் பள்ளிக்கூடத்துக்குப் போக முடியாதவர்களையே நாம் சேர்த்துக்கொள்ளுவோம். முக்கியமானதையும் தினந்தோறும் வேலையில் உபயோகமாகக் கூடியவைகளையும் சொல்லிக்கொடுப்பதுமே நமது நோக்கம். அநேகர் இவ்விதம் சொற்பகாலத்தில் கல்வி கற்பிப்பது முடியாது என்று எண்ணலாம். ஆனால் சீனதேசத்தில் வார்த்தைஒவ்வொன்றும் சிக்கலான எழுத்துக்களையுடையது. அவ்விதம் ஆயிரம் (1000) எழுத்துக்களை அறிந்துகொள்ளவேண்டியிருந்தும் பல தொழிலில் அமர்ந்துள்ள 646 பிள்ளைகளும் மற்றவர்களும் சேர்ந்தது 6-வயதுமுதல் 42-வயதுவரையிலுள்ள 1200 மாணாக்கர்கள் நாலுமாத அளவில் இராப்பள்ளிக் கற்றுக்கொண்டார்கள். நமது தமிழ் பாஷையோ 250 எழுத்துக்களுக்குள் அடங்கியுள்ளது. எவ்விதமான சிக்கலும் இல்லாதது. பள்ளிக்கூட ரிட்டையர்டு இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் யஸ். ஜி. டானியேல் அவர்கள் தம் அனுபோகத்தினால் எழுதப்படிக்க தாம் கற்றுக்கொடுப்பதாகவும் ஆறு வாரத்தில் சாதாரணமாக கற்றுக்கொடுக்க முடியும் என்றும் சொல்லுகிறார். இதைச் சுலபமாகக்கற்றுக் கொடுக்கக்கூடிய சில நிழல் படங்களை (Magic Lantern Slides) வைத்திருக்கிறார். இவ்விதமான படக் காட்சியால் படிப்பது மனதில் நன்குபதியும் அன்றியும் இவ்விதமான படங்களைக்கொண்டு அநேக மாணாக்கர்களும் ஒரே காலத்தில் சொல்லிக்கொடுப்பதும் சுலபம்.

அமைப்பு.— எந்தக் கிராமத்தில் அதைச் சேர்ந்த பெரியோர்கள் மிராசுதாரர்கள் மடாதிபதிகள் தர்மகர்த்தர்கள் தர்மசீலர்கள் முதலான ஜனங்கள் இம்மாதிரிப் பள்ளிக்கூடம் வைக்க விரும்புகிறார்களோ அங்கே அப்படிப்பட்ட பெரியோர்களில் இருவரும் பள்ளிக்கூடம் நடத்தும் உபாத்தியாயரில் பெரியவர் ஒருவருமாகச் சேர்ந்த மூன்றுபேரைக்கொண்டு ஒரு பஞ்சாயத்து நியமிக்கலாம். பிள்ளைகள் சேருவதற்குத் தக்கபடி உபாத்தியாயர்களை நியமித்து இப்பஞ்சாயத்தார் மூலமாக முன்னதாகக் கிராமத்தில் அறிக்கை செய்யவேண்டும்.

மாணாக்கர்கள்.— சாதி மதம் என்ற வித்தியாசம் இல்லாதபடி 14 முதல் 21 வரை பிராயமுள்ள ஆண்பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கப்படும். 21-முதல் 28-வரை வயதுள்ளவர்களை பஞ்சாயத்தார்கள் பிரயோஜனப்படுவார்கள் என்று எண்ணினால் சேர்க்கலாம். உபாத்தியாயர்களுக்கு அடங்கி நடப்பதாகவும் விடாமல் எல்லா நாட்களிலும் பள்ளிக்கூடத்திற்கு வருவதாகவும் ஒப்புக்கொள்பவர்களையே சேர்த்துக்கொள்ளவேண்டும். மற்றப்பகல் பள்ளிக்கூடத்திற்குப் போகாதவர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் உண்மையில் படிக்கவேண்டுமென்று ஆசையுள்ளவர்களே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஒவ்வொரு பிள்ளையும் தான் பணங்கொடுத்து (1) தமிழ் பாடபுஸ்தகம், (2) கணக்குப்புஸ்தகம், (3) ஸ்லேட்டும்



பென்சிலும், (4) 100 பக்கம், (5) 100 புளியங்கொட்டைகள், (பாக்கு, பின்னங்கொட்டைகள் (ஏதாவது) இவற்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

உபாத்தியாயர்கள் — 18 வயதுமுதல் 28 வயதுவரையுள்ள பாலியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்கள் உற்சாகத்தோடு தேச சேவை செய்பவர்களாகவும், அற்ப அசௌகரியங்களை பொருட்படுத்தாதவர்களாகவும், படிக்கும் பிள்ளைகளைத் தங்கள் சகோதரர்களாகப் பாவித்து நடக்கக் கூடியவர்களாயும் இருக்கவேண்டும். 30 வயதுக்குக் கீழ்ப்பட்ட இக்கால பாலியர்களுக்குப் புது எண்ணங்களும், புது நோக்கங்களும், அதிகமான யோசனைகளும், ஐக்கிய புத்தியும் நிறைந்து இருக்கின்றன. உபாத்தியாயர்களுக்குச் சம்பளமில்லை. அவர்களுக்குத் தங்கள் ஊரிலிருந்து வரப்போகச் செலவும் இனாமாகச் சாப்பாடும் வசதியும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

படிப்பின் விவரம்:— பின் சொல்லியிருக்கிறவைகளில் பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படும்.

தமிழ்ப் பாஷை

1. சாதாரண இளநடையிலான தமிழில் ஏற்படும் பாட புஸ்தகத்திலுள்ளவை.
2. அதிகமான கூட்டெழுத்தும் கடினமும் இல்லாத கையெழுத்துப் பிரதிகளிலிருந்து படித்து எழுதுதல்.
3. பாட புஸ்தகத்தில் உள்ளதும் இல்லாததுமானவைகளிலிருந்து சொல்வதைக் கேட்டு எழுதுவது.
4. உலகத்தில் அறிந்த காரியங்களைப்பற்றிச் சிறு வியாசம் எழுதுதல், பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் கடிதம் எழுதுதல், தன் தொழிலைப்பற்றி கடிதம் எழுதுதல், தபாலில் மணியாடர், ரிஜிஸ்டர் இன்ஷியூர் முதலியவை செய்தல்.

கணக்கு.

1. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் 4 ஸ்தானம் வரை போடவேண்டியது.
2. வீசம், அரைக்கால், முதலிய பின்னங்களின் உபயோகத்தை இங்கிலீஷ் தமிழ் கணிதப்படி அறியவேண்டியது.
3. பெருக்கல் வாய்ப்பாடு 12×12 வரை மனப்பாடமும் அவற்றின் உபயோகமும்.
4. சாதாரணமாக வழக்கத்திலுள்ள அளவை நிறை காலம் பணசம்பந்தமான வாய்ப்பாடுகள் மனப்பாடமும் அவற்றின் உபயோகமும்.
5. தினசரிவாழ்க்கையில் ஏற்படும் கொள்ளல், கொடுத்தல், கூலி கணக்குப்பார்த்தல், சில்லறைவட்டி கூட்டுதல் முதலியன.

இவ்வேற்பாட்டிற்கு எல்லோரும் சகாயம் செய்யக்கூடும். பணக்காரர்கள் பணம் கொடுத்தும் சௌகரியம் செய்தும் புத்திசாலிகள் ஆலோசனைகளைத் தெரிவித்தும் பாலியர்கள் சேவை செய்தும் எல்லோரும் இதைப்பற்றி நினைத்தும் பிறருக்குச் சொல்லியும் சகாயம் செய்யலாம்.

(சென்னை புஸ்தகாலயப் பிரசார சங்கம்)

(பெயர்த்தெழுதப்பட்டது)

## சென்னை புத்தகாலயப்ரசாரசங்கம்.

சென்னை ஹைகோர்ட்டு டிரான்ஸ்லேடர் எஸ். கலியாண சுந்தர ஐயர் அவர்கள் எழுதியது.

(பெயர்த்தெழுதப்பட்டது)

38-ம் பக்கத் தொடர்ச்சி.

முற்காலத்தில் கிராமங்கள்தோறுமிருந்த திண்ணைப்பள்ளிக்கூடங்களில் கணக்கும் எழுத்தும் மாணவருக்குக் கற்பித்துவந்ததல்லாமல் பல பெரியோர்களுடைய சரித்திரங்களையும் ராமாயணம், மகாபாரதம் முதலிய நூல்களிலிருந்து கிளைக்கதைகளையும் உசிதமான பழமொழிகளையும் மிகவும் நன்றாகச் சொல்லிவந்தார்கள். தவிரவும் அந்தந்த வகையினங்கள் தத்தமக்கு ஏற்பட்ட புராணங்களையும் இதிகாசங்களையும் கதைகளையும் பொதுவான இடத்தில் அறிந்தவர்களைக்கொண்டு சொல்வித்தும் பக்தியையும் அறிவையும் தரக்கூடிய காலக்ஷேபங்களையும் செய்வித்தும் கேட்டும்வந்தார்கள். ஒவ்வோர்வீட்டிலும் முதியோர்களான ஆண்பாலரும் பெண்பாலரும் தங்கள் தங்கள் பேரன் பேத்திகளை மாலைக்காலத்தில் கூட்டி வைத்துக்கொண்டு விநோதமும் அறிவையும் வளர்பனவாகிய கதைகளையும், பாட்டுகளையும்சொல்லி அவர்களுக்கு ஊக்கத்தைஉண்டாக்கிவந்தார்கள். உண்பிக்கும் காலத்தும், தூங்குவதற்கு முன்பும் இவ்வாறேசெய்துவந்தார்கள். அவை உலகபழக்கத்திற்கு ஒவ்வொருவருக்கும் பிற்காலத்தில் மிகவும் உபயோகமாய் இருந்துவந்தன. அப்பழக்கங்களை மறுபடியும் சிறுவர் அப்பியசிக்கும்படி செய்யவேண்டும். விஷயங்களை கிரகித்துக்கொள்வதற்கு ஒவ்வொருவனுக்கும் அவனவனுடைய தாய்பாஷைதான் மிகவும் உபயோகமானது. ஒருவன் வேறுபாஷைகளில் எவ்வளவு பாண்டித்தியம் உடையவனாயிருந்தாலும் அவன் ஒரு விஷயத்தை தாய் பாஷை மூலமாக எவ்வளவு சுலபமாக அறிந்துகொள்வானோ அவ்வளவு வேறுபாஷைகளில் அறிந்துகொள்ளமாட்டான்.

சில முக்கியமான சந்தர்ப்பங்களில் வோட் கொடுக்கும்படி ஜனங்களை நிர்பந்திக்கிறார்கள். தகுதியுள்ளவர்கள் இன்னாரென்று தாங்களே தெரிந்துகொண்டு வோட்கொடுக்கும் சுதந்திரம் ஜனங்களுக்கு இருக்கும்படி செய்யவேண்டும்.

அறியாமை மிகுந்திருப்பதால் நம் நாடு சிறப்புறாமல் சீர்குலைந்து போகிறதென்பது அறிவாளர் ஒப்புக்கொண்ட விஷயம். சிலஜனங்களுக்கு சிறு வயதில் தேச பாஷையைப்படிப்பதற்கு மார்க்கமில்லாமல் பால்யத்திலேயே வேலைசெய்து பிழைக்கும்படியான நிர்பந்தம் உண்டாகின்றன. சிறு வயதிலேயே கல்விகற்க வேண்டியது அவசியமானாலும் அதற்கு சௌகரியங்கள் இல்லாமல் வேலை செய்து பிழைத்துவரும் பிராயம் முதிர்ந்தவர்களுக்கும் கல்வியறிவு புகட்டவேண்டுமென்பது அவசியம்.

சிறு சிறு கிராமங்களில் ஞானத்தை விளைவிக்கக்கூடிய புத்தகசாலைகளை அமைப்பது மிகவும் அவசியமான காரியம்.

எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள் அவற்றால் பயன் அடைவார்களேயல்லாமல், எழுத்து வாசனையில்லாதவர்கள் அவற்றால் பயன் அடைய மார்க்கமில்லை. ஆதலால் முக்கியமாக தோன்றுமிடங்களில் இராப்பள்ளிக்கூடங்களுக்கு கல்வியைப்புகட்டும்படி செய்யலாம். பிராயம் முதிர்ச்சியால் சிலருக்கு அவற்றை கிரகித்துக்கொள்ளும் சக்தியில்லாமல் போகும். அப்படிப்பட்ட நிலைமையில் உள்ளவர்களுக்கு உபந்நியாசங்கள் மூலமாக மேலே கூறிவந்த விஷயங்களையெல்லாம் அவர்கள் மனதில் நன்றாயப்படும்படி போதிக்கச் செய்யலாம். சங்கீதத்திலும் பொழுது போக்கும்படி செய்யலாம். பகல் முழுதும் வேலைசெய்து களைத்தவர்களுக்குசங்கீதம் ஆறுதலைக்கொடுக்கும். மாதம் ஒருமுறையோ இருமுறையோ அவர்களைக்கூடும்படி செய்து அவரவர்களுக்குள்ள குறைகளைக்கேட்டு அவற்றை நீக்கிக்கொள்ளவேண்டிய இதமான உபாயங்களைக் கற்பிக்கலாம்.

இப்பொழுது சிறுவர் சிறுமிகளுக்காக ஏற்பட்டிருக்கும் பாடப்புத்தகங்கள் அவர்களுடைய தகுதிக்கேற்றதாக இல்லை. அந்த விஷயத்திலும் கூடியவரை கவனத்தைச்செலுத்தித்தகுதியான பாடப்புத்தகங்களை தேசபாஷைகளில் எழுதிப்பதிப்பிக்கச் செய்யலாம். இத்தப்புஸ்தகசாலையொன்று ஏற்படுத்தினால் எழுதின புஸ்தகங்களை வெளிப்படுத்துவதற்கும் பத்திரிகைகளை பிரசுரம் செய்வதற்கும் அநுகூலமாயிருக்கும்.

உபந்நியாசங்கள் மூலமாக விஷயங்களைச் சொல்வதோடு நல்லொழுக்கங்களை நாடகரூபமாகவும் கற்பிக்கலாம்.

> கண்ணுடைய ரென்பர் கற்றோர்—முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லாதவர்.

---

## இயற்கையின் மருந்துப்பெட்டி

(எல். எச். ஹான்சன் எம். டி.)

(ஆரோக்கிய நூதிகையிலிருந்து)

வியாதியில் விழும் அநேகர் யாதொரு மருந்து வைத்தியமும் சிகிச்சையுமில்லாமல் சுகமாகுகிறதை நாம் பார்க்கும்பொழுது ஏதோவொரு சொஸ்தசக்தி அவர்கள் சார்பாகயிருந்து வேலை செய்கிறதென்று தெள்ளெனத்தெரிகிறது. வியாதியில் விழும் 100பேரில் 70பேர் அப்படி சுகமாகுகிறார்கள். அவர்கள் சார்பாகயிருந்து வேலை செய்யும் அச்சொஸ்த சக்தியெது? இயற்கையே அது. இயற்கையே நமது பெரிய வைத்தியர். மனிதனுக்கு ஜீவன் கொடுக்கும் இயற்கைக்கு அவன் வியாதியில் விழுந்தால் அவனுக்கு குணம் கொடுக்கும் தத்துவமும் உண்டு. தேவனே அவ்வல்லமையை இயற்கை பிரமாணங்களில் வைத்திருக்கிறார்.

ஆகையால் ஒரு வியாதிக்காரன் தான் இயற்கை நெறியில் எங்கிருந்து தவறி விழுந்தானோ அங்கேயே மறுபடியும் ஏறிக்கொள்வானேயானால் அவன் சுகமடைவான். அவனாவது அவனுடைய பெற்றோராவது இயற்கை தருமங்களில் எதையாகிலும் எப்போதாகிலும் மீறியிருக்கவேண்டும். அதுதான் அவன் வியாதியாயிருக்கிறான். ஏனெனில், காரணமில்லாமல் ஒரு வியாதியும் வருகிறதில்லை.

ஒவ்வொரு வியாதிக்கும் ஒருகாரணம் இருப்பதினாலே அக்காரணத்தைப் போக்கினாலொழிய அவ்வியாதி ஒருபோதும் சுகப்படாது. ஆகையால் ஒரு வியாதிக்குச் செய்யவேண்டிய சிகிட்சையின் முதல் காரியமென்னவென்றால், அவ் வியாதி வந்த காரணத்தைக் கண்டுபிடித்து அதையே முதலில் போக்கவேண்டும். காரணம் என்னவென்று கண்டறிவது எப்போதும் ஒரு சுலுக்கான காரியமல்ல. கைதேர்ந்த வைத்தியர் தானும் சில சமயங்களில் சில வியாதிகளுக்கு காரணம் சொல்லக்கூடாது போகிறார்கள். ஆனால் 100ல் 75 வியாதிகளுக்குக்காரணங் கண்டறிவது அவ்வளவு கடினமல்ல. சாதாரணமாக, அக்காரணம் வரிசைதப்பிய ஜீவியமாகவேயிருக்கும்.

வியாதியின் காரணத்தைப் போக்குவதென்பதின் அர்த்தமென்னவென்றால், இயற்கை தர்மங்களை மீறுவதைவிடுத்து அவைகளை அனுஷ்டிக்க ஆரம்பிப்பதேயாம். இங்கே ஒரு பெரிய சீர்திருத்தமாகவேண்டும். எந்த ரூபத்திலும் புகையிலை குடிக்கக்கூடாதென்று அது அர்த்தப்படும். ஒரு சரியான ஆகாரக்கிரமத்தை அனுசரிக்கவேண்டும், சுகத்துக்கேற்ற வுடைகளை உடுக்கவேண்டுமென்றும், போந்த ஓய்வும் தூக்கமும் வேண்டுமென்றும் அது அர்த்தப்படும்.

இயற்கைக்குத் தன் சொந்த மருந்து சாக்குகள் உண்டு. அதற்குப்பதிலிகள் எங்கும் கிடையா. சரியான ஆகாரமில்லாமல் ஒருவன் கஷ்டப்படுவானேயானால் அவனுக்கு எவ்வித மாத்திரையும் லேகியமும் குணம்தராது. நமது கடைகளிலும் காரியாலயங்களிலும் உட்கார்ந்து அதிகமான மனோவேலைசெய்து அதனால் வரும் துர்பலத்தினால் கஷ்டப்படுகிறவர்களுக்கு எவ்விதமான சஞ்சீவியும் குணம் தராது. க்ஷயத்துக்கு மருந்து ஓய்விலும் சுத்த ஆகாயத்திலும் நல்ல ஆகாரத்திலுமேயிருக்கிறது.

சுத்த ஆகாயமும், நல்ல ஜலமும், சரியான ஆகாரமும், போந்த ஓய்வும், வியாயாமமும், சூரிய வெளிச்சமும் சுகஜீவியத்திற்கு அவசியமானதென்றும் இன்றியமையாததென்றும் சொல்கிறதினாலே அவையனைத்தும் முதற்தரமான மருந்துகளென்றும் சொல்லலாம். அவைகளே சரியான மருந்துகள். அவைகள் இயற்கையின் மருந்துகள்.

வியாதியாயிருக்கிற நாட்களில் சுத்த ஆகாயத்தின் சொஸ்தசக்தி ஒரு விசேஷித்த விதமாக அவசியமாயிருக்கிறது. சரீர சுகமானது நல்ல இரத்தத்திலும், இரத்தோட்டம் நாம் உட்கொள்ளும் ஆகாயத்திலும் சார்ந்திருப்பதினாலே நாம் சுத்தமான ஆகாயம் சுவாசிக்கிறோமாவென்று நாம்கவலையெடுத்துக்கொள்ள வேண்டும். இரத்தத்திற்கு பிராணவாயு அவசியம். சுவாசாசயங்கள் நிரம்ப ஆழமாக மூச்சு எடுப்பது இரத்தத்தை சுத்திசெய்வது மட்டுமன்றி முகத்திற்கு வசீகரமும் பொலிவும் கொடுக்கிறது அப்படி சுத்தி செய்யப்பட்ட இரத்தம் போகுமிடமெல்லாம் புத்துயிர் உண்டாகின்றது.



39
15 NOV 1929
MADRAS

சுத்தாகாயம் உட்கொள்ளுவதற்கும் சுவாசாசயங்களிலுள்ள கழிவுகள் வெளியேறுவதற்கும் சரியான காற்றோட்டந்தேவை. கட்டுப்பட்டகாற்று அசுத்தம். அதுசெத்த காற்று. அதற்கு சுகமும் ஜீவனும் கொடுக்க ஏலாது. காற்றோட்டம் காற்றோட்டம் என்று சொல்வது விளையாட்டுப் பேச்சல்ல. அது உண்மையாகவே அவசியமான ஒரு காரியம். பொதுவாக எல்லாருக்கும் சிறப்பாக வியாதிக்காரருக்கு அது அவசியம் வேண்டும். சாத்தியப்படுமானால், அவர்கள் எப்போதும் திறந்த வெளிகளிலேயே ஜீவிக்கவேண்டும்.

ஜலம் ஒரு மருந்து. வைத்தியத்தில் அது ஒரு உயர்ந்த ஸ்தானத்திலிருக்கிறது. அதுஒரு சர்வரோக நிவாரணியல்ல, ஆனால் அநேக வியாதிகளுக்கு அது குணஞ்செய்யும். பற்பல ரூபங்களிலும் பற்பல உஷ்ணக்கிரமங்களிலும் அதை உபயோகிக்கலாம்.

ஜல சிகிச்சை செய்வதற்கு நல்ல அறிவும் அனுபோகமும் தேவை. ஏனெனில் தப்பான வழிகளில் அதைப் பிரயோகித்தால் அது மிகுந்த தீவினை விளைவிக்கக்கூடியது.

சுகமாயிருந்தாலும் சுகவீனமாயிருந்தாலும், எப்போதும் ஜலம் அருந்தவேண்டும். ஒரு நாளைக்கு 3-6 பைண்ட் ஜலம் குடிக்கவேண்டும். பழச்சாறும் மிகவும் நல்லது. ஆனால் சீனி அதிகம் சேர்க்கக்கூடாது.

சிகிச்சை செய்வதில் கவனிக்கப்படவேண்டிய இன்னொரு விசேஷித்த காரியம் ஆகாரக்கிரமம். சரியான ஆகாரம் அவசியம், அது இன்றியமையாதது. அதற்குப் பதிலில்லை. ஏனெனில் நமது தேகக்கட்டும் சுகமும் நாம் உண்ணும் உணவையே பெரும்பாலும் பொறுத்திருக்கிறது. அநேக வியாதிகளுக்குக்காரணம் சரியான ஆகாரமில்லாமையே.

சூரிய வெளிச்சமும் அப்படியே. வியாதி தடுப்பிலும் தவிர்ப்பிலும் அதற்கு நிகரான ஒரு சக்தியில்லை. அது ஒப்புயர்வற்றதோர் சக்தி. சுகம் தருவதற்கு இயற்கை தன்னுடைய மருந்துப்பெட்டியில் வைத்திருக்கும் சாக்குகளில் இதுவும் ஒன்று. நாம் அதிகமான நேரம் சூரியவெளிச்சத்தில் நிற்கவேண்டும்.

போந்த ஓய்வும் தூக்கமும் சகலமானவர்களுக்குங்கிடைக்கிற ஒரு காரியமல்ல. ஒழிவு காலத்தில் உண்மையாகவே ஓய்ந்திருந்து தூங்கும் நேரத்தில் உண்மையாகவே தூங்குகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் சரீரசுகத்தைப் பெறுவார்கள். நெப்போலியனைப் போல சில இராத்திரிகளில் 3 மணி நேரமும் மற்றை இராத்திரிகளில் ஒரே மூச்சாக 16 மணிநேரமும் தூங்குவது நல்லதல்ல. ஒரு நாளில் குறைந்தது எட்டு மணி நேரமாவது தூங்கவேண்டும். சரியான தூக்கமில்லாமல் வியாதிப்பட்டவர்களும் நித்திரையடைந்தவர்களும் (மரித்தவர்களும்) அநேகர்.

---

## ஓர் உத்தம சிறுமி[illegible]

ஜானி கதவினண்டையில் நின்று வெளியே மழைத்துளிகள் விழுவதைக் கவனித்துக்கொண்டிருந்தாள். "ஆ இப்பொழுது எனக்கு ஒருடாலர் இருந்தால் எவ்வளவோ நல்மாக இருக்குமே" என்றுஎண்ணி தனக்குள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள்.

நாளையத்தினம் ஜானியினுடைய தாயின் பிறந்தநாள், ஆகையால் ஒருநல்ல பொருள்வாங்கி அதைத்தன்தாய்க்கு பிறந்தநாள் வெகுமதியாகக்கொடுக்க வேண்டுமென்று விரும்பினாள்.

"ஆ நமது தாய் பிறந்தநாளான இன்றையத்தினம் இத்தனை எளிமைத்தனத்திலிருப்பது எத்தனைபரிதாபம்" என்று எண்ணி அவள் விசனப்பட்டாள்.

ஜானிக்குப்பாங்கில் 10பென்னிகள்மாத்திரமிருந்தன. ஆனால் உலகத்திலுள்ள எல்லாத்தாய்மார்களை பார்க்கிலும் அதிக அன்புள்ள தன் தாய்க்கு ஒரு வெகுமதி வாங்கிக் கொடுக்க இந்த சிறியதொகை எம்மாத்திரம்?

அப்பொழுது "ஓ சிறியபிள்ளையே" என்று ஒரு சத்தம் பிறந்தது.

ஜானிதெருவில் எட்டிப்பார்த்து ஒரு கருப்புக்குதிரை ஒரு மஞ்சள் வண்டியை இழுத்துக்கொண்டு போனதை பார்த்தாள். குதிரையை ஓட்டுகிறவன் ஜானிக்கு சைகைகாட்டினான். அவன் பெயர்ஜோ, ஜோவும் அவனுடைய குதிரையும் ஜானியின் சிநேகிதர். ஜானிக்கு அழகின்மேல் மெத்தப்பிரியம் உண்டு. ஆகையால்இந்த அழகிய கருப்புக்குதிரையை அவள் மிகவும் நேசிப்பாள் அதின்மேல் ஏறிச்சவ்வாரிசெய்ய அவளுக்கு மெத்தப்பிரியம் உண்டு. ஜோ அவளைக்குதிரையின்மேலேற்றி அவளுடைய ஒருகையில் சவுக்கையும் மறுகையில் கடிவாளத்தையும் கொடுத்து அவளை குதிரையை ஓட்டும்படிசெய்வான். அப்பொழுது குதிரை மெதுவாகஓட ஆரம்பிக்கும், குதிரையின்மேல் உல்லாசமாக வீற்றிருக்கும் அவளுக்கு அதிக சந்தோஷமாக இருக்கும். இப்படியாக, அவள் தன் நாட்களை சந்தோஷமாககழிப்பாள். ஆனால் இன்றைக்கோ அவள் முகத்தில் சந்தோஷமில்லை. தன் தாயாருக்கு வெகுமதி வாங்கிக்கொடுக்க தன்னிடத்தில் ஒருகாசும் இல்லையே என்று அவள் அதிகமாக நினைத்துத்துக்கப்பட்டுக்கொண்டிருந்தாள்.

சிலநேரம்சென்று தாய் அவளைக்கூப்பிட்டு "கடைக்குப்போய்வா" என்றார்கள். அப்பொழுது அவள் குதித்தோடினாள், தன் தாய் சொன்னபடி யெல்லாம் செய்வதற்கு அவளுக்கு மெத்தசந்தோஷம். அவள் வெளியே வந்தபோது அவளுக்குக்குளிருண்டானது, மழைத்துளிகள் தன் குடையின்மேல் பட படவென்று அடித்ததைக் கேட்டாள், கொஞ்சநேரத்துக்குள் கல்மழையும் பெய்தது ஜானி ஒதுக்கிடம்தேடி ஒரு மரத்தின்கீழ்போய்நின்றாள், அவள் நின்று கவனித்துக்கொண்டிருக்கும்போது, ஒரு குதிரை ஓடிவரும் சத்தம் அவள் காதில் விழுந்தது. அவள் பார்த்தபோது, தான் நேசித்த கருப்புக்குதிரை கல்மழைக்குத்தப்ப ஓடிவருவதைக்கண்டாள். அது வண்டியில் கட்டப்பட்டிருந்தது மெய்தான், ஆனால் வண்டி ஓட்டுகிறவனோ இல்லை.

உடனே "ஓ! ஜோ இழேஎப்படியோ தவறிவிழுந்து செத்துப்போனுன்" என்று ஜானி புலம்பினுன், அவன் சத்தமிட்டுக்கொண்டே குதிரை ஓடினமார்க்கமாய் விரைந்து ஓடினுன் மழையும் நின்றபாடில்லை.

பின்பு குதிரை திரும்பவேண்டிய பாதையில் வந்தபோது, அதுமெதுவாய்ஓட ஆரம்பித்தது, அப்பொழுது ஜானி அதைத்தொடர்ந்து சென்ருன்.

அவன் சத்தமிட்டுக்கொண்டே வந்ததை குதிரை அறிந்து நின்றுவிட்டது. ஜானி குதிரையின் கிட்டத்தில் வந்து அதின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டான். பின்பு அவன் தன்னைச்சுற்றிலும் திரும்பிப்பார்த்தான் ஒருவரும் இல்லை. அவன் குதிரையைக்கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டான். ஆனுல் அதின்மேல்ஏறி உட்காரவோ அவனால் முடியவில்லை.

இச்சமயத்தில் ஜோ பாதைமார்க்கமாய் வந்து கொண்டிருந்தான், அவன் ஜானி கிட்டத்தில் வந்ததும் அவன் "நீங்கள் குதிரையை விட்டு விட்டீர்கள் அது மழையில் நனைந்துபோயிற்று என்று சொன்னுன்"

உடனே ஜோ "ஆ என்ன கல்விறுயி என்ன தைரியமான பிள்ளை என்றுசொல்லி அவன் கையைப்பிடித்துக் குலுக்கின சமயத்தில் ஏதோ ஒன்றை அவன் உள்ளங்கையில் வைத்தான் ஜானி உடனே தன் கையைத்திறந்து பார்த்தபோது, ஏதோஒன்று வட்டமாகவும் கடினமாகவும் காணப்பட்டது. அவன் அதைஉற்று நோக்கினுன், அது மூன்று ரூபாய்பெறுமான ஒரு டாலராயிருந்தது. "இல்லை, இல்லை, இந்தடாலரை உங்களிடமிருந்து நான் வாங்கவே கூடாது என்று ஜானிசொல்ல அவன் "அப்படியல்ல நீ இந்த குதிரையையும் இந்த வண்டியையும் காப்பாற்றின படியால் எனக்கு எத்தனையோ டாலர் மீதமாயிற்று" என்றுசொல்லி அந்தடாலரை அவன் கட்டாயமெடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னுன்.

ஜானி சந்தோஷப்பட்டு அந்த டாலரை கையில் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு, வீட்டுக்கு விரைந்துசென்று "தன் வரலாற்றையெல்லாம் தன் தாயினிடம் சொல்லி, அந்தத்தொகைக்கு ஒரு நல்ல வெகுமதி வாங்கி, அவர்களுடைய பிறந்தநாள் வந்ததற்காக அதை அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறதாகச் சொன்னுன். அப்பொழுது தாய்க்குண்டான ஆச்சரியத்திற்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை, சிறுவர்களே நீங்கள் இத்தனைக்கதிகமாய், உங்கள் பெற்றோரை நேசிக்கிறீர்களா?

---

## வர்த்தமானங்கள்.

### பேசும் படக்காட்சி

சென்ற சில ஆண்டுகளுக்குள் நமது மக்களின் ஊக்கத்தையும் உள்ளத்தையும் கொள்ளைகொண்டு ஆக்கிரமித்து வரும் விநோதப் பொழுதுபோக்குச் சாதனம் சினிமா படக்காட்சி என்பது யாவருமறிந்தது. இது தனித்த ஒரு தொழிலாகவும் மாறிவிட்டது. சமீபகாலத்தில் வெறும் படக்காட்சியேயன்றி நடித்தலும் பேசுதலையும் சேர்ந்து அழகுடன் நடைபெறுமாறு அமெரிக்கர்கள் செய்தார்கள். இப்படக்காட்சி தயாரிக்க லக்ஷக்கணக்கான பவுன்கள் செலவாகின்றன. நகரங்கள் நெருப்பிடிக்கவும், தீக்கிரையாகவும், தீவிரமாய்த்தண்ணீரில் குதிக்கவும், மலை உச்சிகளில் ஏறவும், தோட்டங்களும் வனங்களும் சிங்காரத்தோப்புகளும் மாளிகைகளும் திருமணச்சாமும் அவற்றை வேண்டியபோது அழிக்கவோ சிதைக்கவோ செய்யவும் நேரிடுகிறது. இவற்றிற்குத்தக்க வருமானமும் வருகிறது. அமெரிக்கர்களைப் பின்பற்றி ஒவ்வொரு தேசத்திலும் இத்தொழிலில் ஊக்கத்துடன் உழைத்துவருகின்றனர். இந்தியாவிலும் பம்பாய் கல்கத்தா சென்னை முதலிய இடங்களில் பழகிவருகின்றனர். பேசும் படக்காட்சி வெகுநுட்பமானது சிக்கலானது என்பது உண்மையே. இது விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியின் விருத்தியால்தான் சாத்தியப்படுகிறது. இத்துறையில் முதல்முதல் இறங்கினது அமெரிக்காவாகும். இப்போது இங்கிலாந்து போட்டியாய் நிற்கிறது. பேசும் படக்காட்சி தயாரிப்பதில் அமெரிக்காவைக் காட்டிலும் பன்மடங்கு சாமர்த்தியமாகவும் குறைந்தசெலவிலும் இங்கிலாந்தில் சாத்தியமாகிறதாம்.

தீயில் நடக்கும் இந்தியர்—டப்ளினில் உள்ள ஒருவர் தீயில் நடக்கும் சக்திபெற்ற இந்தியர் அடங்கிய ஒருகூட்டத்தை ஆஸ்திரேலியச் சுற்றுப் பிரயாணத்துக்காக கேப்டவுனில் அமர்த்தியிருக்கின்றார். மாரிட்ஸ்பர்க்கில் தீக்குளிக்கும் விரதம் சென்ற முப்பத்தொரு வருடங்களாகப் பழக்கத்திலிருந்து வருகிறதாம். அங்குள்ள இந்துக் கோயிலில் தீக்குளிக்கும் விழா நடைபெற்றதைக் கண்ணுற்ற ஒரு ஆஸ்திரேலியன் ஆறு இந்தியர்களை அமர்த்தித் தன் தேசத்திலும் இக்காட்சியைக் காட்ட முயன்று வருகின்ருன். இவர்களுக்கு வாரத்துக்கு நான்கு பவுன் வீதம் சம்பளம் கொடுக்கப்படுமாம். இக்கூட்டத்தில் ஒரு புரோகிதரும் இருக்கின்ருராம். அவருடைய வேலை மந்திரம் ஜெபித்து சடங்குகள் நடத்துவதாகும். இக்கூட்டம் ஆஸ்திரேலியாவில் செல்வாக்குப் பெற்றுவிட்டால் இக்குழுவை இங்கிலாந்துக்கும் ஐரோப்பாவுக்கும் கொண்டுபோவதாக உத்தேசமாம். தீ எவ்விதம் சுடாமலிருக்கிறதென்று ஒரு இந்தியனைக் கேட்டபோது, மனம் வாக்கு காயங்களில் பரிசுத்தமாயிருப்பதும், மதுமாமிசங்களை உட்கொள்ளாதிருப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாக நம்பிக்கையுடனிருப்பதுமே காரணங்களெனக் கூறினுனும்.

ஒலியின் சக்தி—மனிதர்களால் கேட்கமுடியாத மிகவும் பெரியசப்தத்தைக் கொண்டு பிராணிகளைக் கொன்றுவிடலாம். இந்த சப்தத்தைக் கேட்டவுடன் பிராணிகளின் இரத்தக்குழாய் வெடித்து மின்னல் தாக்கினுல் வீழ்வது போல் அந்தக்ஷணமே பிராணிகளின் உயிர் விடுகின்றனவாம். ஆச்சரியமான சக்தி சில சப்தங்களுக்கு உண்டு. ஒலியினுல் நெருப்பை அணைக்கலாம். இந்த உண்மையை சின்னுட்களுக்கு முன்பு ஒரு அமெரிக்க நிபுணர் விளக்கிக் காட்டினுர். சில ஒலிகள் பெரிய கட்டிடங்களையும் தகர்த்து விடுகின்றன. இன்னெரு அற்புத சக்தி என்னவென்ருல், ஆகாயவிமானம் கீழே இறங்கும் பேரொலியால் 400 ஏக்கர் நிலம் வெளிச்சம் பெறுகிறதேயாகும்.



கப்பல் தூக்கி யந்திரம்—ஜர்மெனியில் பெரியகப்பல்களையும் கூட உயரத்தில் தூக்குவதற்காக ஒரு யந்திரம் கண்டுபிடித்துச் செய்துகொண்டிருக்கிருர்கள். அது உலகிலுள்ள தூக்கு யந்திரங்களைக் காட்டிலும் பெரியது. ஆயிரம் டன் நிறையுள்ள கப்பல்களை பூமிக்குமேல் நூறு அடி உயரம் வெகு எளிதாகத்தூக்கிவிடும் சக்திஉள்ளதாம். யந்திரம் செய்து முடிக்க 15 லக்ஷம் பவுன் செலவாகும். இவ்வாண்டில் அவ்வேலை முடிந்துவிடுமாம்.

இந்திய ராஜப்பிரதிநிதியாகிய இர்வின் பிரபு அவர்களும் லேடி இர்வினும் லண்டனை விட்டு அக்டோபர் மீ 10௳ புறப்படுவார்கள். மார்ஸேல்ஸ் வழியாக பம்பாய் வந்து சேருவார்கள்.

உப்பில்லாத உணவினுலும் வேறு சில உணவு முறைகளாலும் பலவகை க்ஷய ரோகங்களையும் குணப்படுத்திவிடலாமென்று ஜர்மென் வைத்தியர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிருர்.

ஹென்ரி போர்டு 35 வயதுக்கு மேல் அறுபதுக்குட்பட்டவர்களை மட்டும் தனது தொழிற்சாலையில் வேலையாட்களாகச் சேர்க்கவேண்டுமென்றும், ஏனெனில் அவர்களுக்குத்தான் பொறுமையும் அனுபவமும் இருக்கிறதென்றும் ஒரு பத்திரிகையில் வரைகிருர்.

குதிரை பந்தயச் சூது ஒழிந்தது—நேற்று சென்னை சட்டச்சபையில் குதிரை பந்தயக் கிளப் மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டது.

குதிரைப் பந்தயத்துக்குப் பணம் கட்டுவதற்காக எவராவது கிளப்போ வீடோ வைத்திருந்தாலும், வைக்கும்படி அனுமதித்தாலும், அவ்வித கிளப் திறந்து வைத்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ 600 அபராதம் விதிக்கப்படவேண்டும்.

குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுகிறவர்களுக்கு 500 ரூ அபதாரம் தவறினுல் ஒருமாதம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கவேண்டும் என சர் உஸ்மான் சாகிப் ஒரு திருத்தம் கொண்டுவந்தார். இதற்கு ஜனுப் ஹமீதுகான் பின்வரும் திருத்தத்தைக் கொண்டுவந்தார்.

சர்உஸ்மான்சாகிப் பின்திருத்தத்தில் முதல் பாகத்தில் பின் வரும் வார்த்தைகளைச் சேர்க்கவேண்டும் இச்சட்டத்துக்கு விரோதமாக கிளப்களைத் திறந்து வைத்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் 500 ரூ அபராதம் அல்லது 3 மாதம் கடுங்காவல்தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து விதிக்க வேண்டும்.

இதுசபையில் ஏகமனதாய் நிறைவேற்றியது மசோதாவைச் சட்டமாக்கவேண்டுமென்று சர் உஸ்மான் பின்னர் பிரேரபித்தார். இது நிறைவேறியது.

குடியரசு—நமது தேசத்து ஜனங்களில் 60000000 பேர் தீண்டா ஜாதியாருக்குள் இருக்கிருர்கள். கொஞ்சகாலத்திற்கு முன் வெளியான ரிப்போர்ட்டில் பின் வருமாறு கண்டிக்கிறது. பதினைந்து வயதுக்குள்ளான புருஷர் 3000000 பேரும் மனைவிமார் 8,500000 பேரும் ஐந்து வயதுக்குள்ளான புருஷர் 110,000 பேரும் மனைவிமார் 218,000 பேரும் ஐந்திலிருந்து 10 வயதுள்ள புருஷர் 575,000 பேரும் மனைவிமார் 2,106,000 பேரும் பதினைந்துவயதுக்குக்கீழ்ப்பட்ட விதவைகள் 4000,000 பேரும் அவர்களுக்குள் 5 வயதுக்குட்பட்டவர்கள் 15,000 பேரும் ஐந்திலிருந்து 10 வயதுக்குள்ளானவர்கள் 102,000 பேரும் இப்பொழுதிருக்கிருர்கள்.

உலகத்திலுள்ள பெரிய கலாசாலைகளில் ஒன்று கெய்ரோவிலுள்ள எல் அசார் (El. Azhar) என்பதுதான். இதில் 14,000 மாணுக்கர் வாசிக்கிருர்கள். ஆனுல் இதில் உள்ள மாணுக்கர் சம்பளம் கொடுக்கிறதுமில்லை, உபாத்திமார் சம்பளம் பெற்றுக்கொளுகிறதுமில்லை. உபாத்திமார் தங்களுக்கு ஒழிந்த நேரங்களில் வெளியே படித்துக்கொடுத்து தங்கள் ஜீவனத்துக்குரியவைகளை சம்பாதிக்கிருர்கள். மாணுக்கர் குருவை ஒப்பித்தும் பழைய பிரதிகளை எழுதிக்கொடுத்தும் இவ்விதமாக தங்கள் ஜீவனத்துக்குரியவைகளை சம்பாதிக்கிருர்கள். மேலும் இது இஸ்லாம் மதகலாசாலையாயிருப்பதால் எல்லாப்பாடங்களையும் குருனுக்கு ஒத்துவரத்தக்கதாக போதிக்கிருர்கள். இனி மாணுக்கர் தொகையும் 5,000க்கு மேல் அதிகரிக்ககூடாதென்று யோசித்திருக்கிருர்கள்.

பணத்தை ஜாபிதா செய்யவும் கணக்கு விபரங்களை சரியாய்க் குறிப்பிடவும் தக்கதான ஓர் யந்திர சூழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலைகளில் கொண்டுவரப்படபோகிறதாம். இந்த சூழ்ச்சியைக் கண்டு பிடித்தவர் நார்வேயிலுள்ள ராவ் ஆப்கார்ட் (Rolf Hofgard) என்பவர்தான். அவருடைய தகப்பனர் செவிடர் குருடர் ஊமையர் இவர்களுக்கென்று வைக்கப்பட்டிருக்கும் கலாசாலைக்கு மேலதிகாரி. இந்த புது யந்திரமானது கணக்குகளைத் திட்டமாய்க் குறிப்பிடுகிறதென்றும், இதை ஒரு பாங்கில் வைத்திருந்தால் பாங்கில் உள்ள அத்தனை பேர்கள் செய்யும் வேலையில் பத்தில் ஒன்பது பாகத்தை இது செய்து முடிக்கக் கூடுமென்று சொல்லுகிருர்கள்.

---

## சமாசாரத்திரட்டு

1. பற்பல ஜாதியாரின் ஓய்வுநாள்—The Sabbath. கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும், கிரேக்கர்களுக்குத் திங்கட்கிழமையும், பார்சிகளுக்குச் செவ்வாய்க்கிழமையும், அசீரியருக்குப் புதன்கிழமையும், எகிப்தியருக்கு வியாழக்கிழமையும், துருக்கியருக்கு வெள்ளிக்கிழமையும், யூதர்களுக்குச் சனிக்கிழமையும் விசேஷித்த ஓய்வுநாட்களாம்.

2. அரசர்பெருமான் சுணமடைந்ததற்காகச் சேர்க்கப்படும் நிதி—Thanksgiving Fund. ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் சுணமடைந்ததற்காக இராஜப்பிரதிநிதி ஆரம்பித்திருக்கும் வந்தனுபசார நிதிக்கு நாலு லட்சம் ரூபாய்க்குமேல் சேர்ந்திருக்கிறதாம்.

3. கன்னனூரில் பெண்களுக்கான கல்லூரி—Girls' College at Cannanore. கன்னனூரில் பெண்களுக்கென்று ஒரு கவர்ன்மெண்டு காலேஜை ஏற்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

4. சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்புக்கூட்டம்—கடந்த ஆகஸ்டு மீ" த்தில் நடைபெற்ற சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்புத் தினமன்று ஆயிரக்கணக்கான மாணவரும் மற்றோரும் கூடிவந்த கான்வொக்கேஷன் என்னும் மகாப் பெரிய கூட்டத்தில் சென்னை லார்டு பிஷப்பான மகா கனம் ரைட் ரெவரண்டு வாலர் அவர்கள் சிறந்த உபந்நியாசம் செய்து பட்டம்பெற்றோருக்குப் புத்திபோதனை கூறினார். "பட்டங்கள் பெறுவதிலும் பரீட்சைகளில் தேறுவதில்மாத்திரம் பிரயோசனமில்லை. உண்மைக்கல்வியைப்பெற்று உலக வியவகாரங்களில் அதை உபயோகிக்க வேண்டும். விவசாயம், சுகாதாரம், வைத்தியம், தொழில்விருத்தி முதலிய சகல இந்திய விஷயங்களிலும் சர்வகலாசாலைகளில்தான் ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கவேண்டும். பட்டங்கள் ஜீவனோபாயமாக மாத்திரம் கருதக்கூடாது. தற்கால முறையில் ஜீவனோபாயத்திற்குப் பரீட்சைகளில் தேறி இருப்பிடங்களிலிருந்து வெளியேறி வேலையில்லாமல் வருந்துவது சகஜமாகிவிட்டது. அவ்விதமில்லாமல் உலகவாழ்க்கைக்கு அநுகுணமாகவும் ஒவ்வொருவரும் தேசமுன்னேற்றத்தைச் சரிவரச் செய்யும்படிக்கும் சர்வகலாசாலைகள் மாணவர்களைத் தயாரிக்கவேண்டும்" என நல்லாலோசனை கொடுத்தார்.

---

5. உயர்தரப் பயிற்சியடைந்த பெண்கள்— சென்னையிலுள்ள மேரி இராணிப் பெண்கள் கல்லூரியில் 1928-1929-ஆம் ஆண்டில் 155 பெண்கள் உயர்தரப் பயிற்சி அடைந்திருக்கின்றனர். இவர்களுள் பார்ப்பனரல்லாத வகுப்புப் பெண்கள் 48 பேர்களும், பார்ப்பனப் பெண்கள் 36 பேர்களும், முஸ்லீம் பெண்கள் 8 பேர்களும், ஆங்கிலோ இந்தியர்கள் 24 பேர்களும், இந்தியக் கிறிஸ்தவர்கள் 49 பேர்களும், மேனாட்டுப் பெண்கள் 19 பேர்களும், பாரசீகப் பெண் ஒருவருமாவர். நமது இந்திய கிறிஸ்தவப்பெண்கள் அதிகமாய்ப் பயிற்சிஅடைந்து தேறுவதற்காக நம் சகோதரிகளை நாம் வாயார வாழ்த்துகின்றோம்.

6. சிசு விவாக கண்டனம்.—நமது இந்தேசத்தில் சிசு விவாகத்தால் வந்த தீமைகள் பல. மிஸ் மேயோ எழுதிய புஸ்தகத்தில் இது அதிகமாய் கூறப்பட்டிருக்கிறது. இத்தீமையை நீக்கும்படி டெல்லி சட்ட நிரூபண சங்கம் ஓர்சட்டம் ஏற்படுத்தி, சக்கிரவர்த்தியின் அங்கிகாரம் பெற்றிருக்கிறது. பெண்கள் 14 வயதுக்குமுன் விவாகம் பண்ணக்கூடாது. ஆண்கள் 18 வயதுக்குமுன் விவாகம் செய்யக்கூடாது. அடுத்தவருஷம் ஏப்ரில் மாசத்திற்குப்பின் அப்படிச் செய்கிறவர்கள் அபராதம் அல்லது சிறைச்சாலைக்கு உட்படுவார்கள். "சத்தி" என்னும் துர்வழக்கம் நீங்கியவாறு இப்பழக்கமும் நமது நாட்டைவிட்டகல ஜெபிப்போமாக.

---

7. சாது சுந்தர் சிங்.—கடந்த ஜூன் மீ" சாது சுந்தர்சிங் என்பவர் திபேத்து தேசத்திற்குப் போனதாகவும், போனவர் இன்னும் திரும்பி வாராததால், அவர் உயிரோடிருக்கிறாரோ என்னவோ என்னும் சமுசயம் ஏற்படுகிறது. அவரோடு வேலை செய்துவந்த கன். T. E. ரிட்ல் ஐயரும், கன். J. C. டேய்லர் ஐயரும் அவரைத் தேடிப்போய் பார்த்தும், காணாமல் திகைத்துத் திரும்பி விட்டார்களாம்.

(ஐக்கிய சபைத் தூதிகை.)



1468
OFFICE OF THE REGISTRAR No. 17 DEC 1929 MADRAS

REG. NO.- M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

"சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்: அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது"

Vol. IX. ] நவம்பர் 1929 [ இலக்கம் 7

## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில ஹு ஐப்பசி மீ" 19 | நவம்பர் மீ" | சுக்கில ஹு கார்த்திகை மீ" 18 | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ● 1<br>19 | 2<br>20 |
| 3<br>21 | 4<br>22 | 5<br>23 | 6<br>24 | 7<br>25 | 8<br>26 | 9<br>27 |
| 10<br>28 | 11<br>29 | 12<br>30 | 13<br>1 கார்த்திகை | 14<br>* 2 | 15<br>3 | 16<br>○ 4 |
| 17<br>5 | 18<br>6 | 19<br>7 | 20<br>8 | 21<br>9 | 22<br>10 | 23<br>11 |
| 24<br>12 | 25<br>13 | 26<br>14 | 27<br>15 | 28<br>16 | 29<br>17 | 30<br>● 18 |

*Patron.*—M. R. Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## உபாத்திமாரே!

### முதல் வகுப்பைக் கவனியுங்கள்.

அநேக நாட்களுக்கு முன்னே போதகுசிரியர் அதிக அனுபவமுள்ள ஒரு உபாத்தியாயரிடம் பேசிக்கொண்டிருக்கையில் அவர் சொன்னது: ஒரு பள்ளிக்கூடத்தின் வளர்ச்சியை மூன்றும், நான்காம் வகுப்புகளிலிருந்து காணலாம். எல்லாப்பிள்ளைகளும் முதலாம் இரண்டாம் வகுப்புகளிலிருந்தால் உடனே பள்ளிக்கூடத்தால் பிரயோஜனமில்லையென்று காணலாம் என்றார்.

சமீபத்தில் மிஷனிலுள்ள கிராமப்பாடசாலைகளிலுள்ள 5- 15 வயதுள்ள பெண் பிள்ளைகளின் கணக்கைக் கவனமாய்ப் பார்த்தேன் இப்படிப்பட்ட வயதுள்ள பெண் பிள்ளைகள் 1005 உண்டு. அவர்களில் முதல் வகுப்பில் 540, 2-ம் வகுப்பில் 214, மூன்றும் வகுப்பில் 103, நான்காம் வகுப்பில் 62, 5-ம் அதற்குமேல் வகுப்புகளில் 86, இந்தக்கணக்கில் வீட்டிலிருந்து போய் பெரிய பள்ளிக்கூடங்களில் படிக்கும் பெண்களின் தொகையும் சேர்ந்திருக்கிறது. இதிலிருந்து நாம் அறிகிறது என்னவென்றால் பெண்கள் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டு போகிறதில்லை. ஒன்று அவர்களுக்குள் படிப்புத் தேர்ச்சியில்லை அல்லது பெற்றோர் சீக்கிரம் பள்ளிக்கூடங்களை விட்டு எடுத்துப்போடுகிறார்கள்.

அதோடு நாங்கள் 5—15 வயதுள்ளவர்களும் பள்ளிக்கூடத்திற்குப்போய் நின்றவர்களுடைய கணக்கையும் பார்த்தோம். அவர்கள் 237. 164 முதல வகுப்பிலும், 79 இரண்டாம் வகுப்பிலும், 23 மூன்றும் வகுப்பிலும், 16 நான்காம் வகுப்பிலும், 5 ஐந்தாம் வகுப்பிலுமிருந்த பள்ளிக்கூடத்தை விட்டிருக்கிறார்கள். இங்கேயும் ஏதோ காரணத்தையிட்டு மேல்வகுப்புகளுக்குப் போகத் தடைப்பட்டிருக்கிறார்கள்.

நமது கள்ளர் நாட்டிலுள்ள பாடசாலைகளில் மிகுதியாக முதல் வகுப்பில் 12, இரண்டாம் வகுப்பில் 6, மூன்றும் நான்காம் வகுப்புகளில் 2 அல்லது 3 பேர் இருக்கக்காணலாம். இதற்குப் பற்பல காரணங்களிருக்கலாம் ஆனால் நான் இதை எழுதுவதின் முக்கிய நோக்கம் நம்முடைய பள்ளிக்கூடங்களிலுள்ள முதல் வகுப்பிலுள்ள பிள்ளைகள்மேல் முக்கிய கவனம் செலுத்தவேண்டும் என்பதே.

அவர்கள் அதிக வயதாகுமுன்னும், அதைரியப்பட்டுப் போகாதபடிக்கும் ஒரே வருஷத்தில் முதல் வகுப்பை முடிக்கும்படி பிரயாசப்படவேண்டும்.

பின் வரும் குறிப்புகளைக் கவனித்தால் நல்லது.

1. ஒவ்வொரு பிள்ளைக்கும், புஸ்தகம், சிலேட், பென்சில் இருக்கும்படி பார்ப்பதோடு அவசியமானபோது அவைகளை உபயோகிக்கவும் பழக்கவேண்டும்.

2. குச்சிகள், சோளத்தட்டை கற்கள் புளியவிதைகள் முதலியவைகள் எப்போதும் குறைவில்லாமல் பள்ளிக்கூடங்களில் சேகரித்து வைத்திருப்பதோடு பிள்ளைகளைத்துப்போகும்போது அவைகளைக்கொண்டு மறைவில் எழுத்துக்கள், சித்திரம் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்,

3. கரும்பலகையை நல்ல உபயோகம் செய்து எழுதவாசிக்கவேண்டியவைகளை அவைகளில் எழுதிப் போடவேண்டும்

4. சிறு அட்டைகளில் எழுத்துக்கள் வார்த்தைகளை எழுதி பிள்ளைகள் கண்முன் காட்டி மறைத்து அவைகளை என்ன என்று கண்டுபிடிக்கப்பழக்கவேண்டும். இதே விதமாக கூட்டல் கழித்தல் கணக்குகளும் செய்யப்பழக்கலாம்.

5. கூட்டல் கழித்தல். கரும்பலகையில் கடிகார வட்டப்போல் வரைந்து 1112 நம்பர்கள் போட்டு மத்தியில் ஒரு நம்பர் போட்டு கூட்ட கழிக்கச் செய்யலாம். மத்தியில் 5 போட்டு வட்டத்திலுள்ள ஒன்றைக்கூட்டினால் 5 × 1 = 6 என்று படிப்பிக்கலாம். இப்படி ஒவ்வொரு பிள்ளையும் மாறிமாறிப்படிப்பதோடு கரும்பலகையில் உத்தரவும் எழுதச்சொல்லலாம். உபாத்தியாயர் மற்ற வகுப்புகளில் கவனம் செலுத்துகையில் பிள்ளைகள் தங்கள் வேலையைச் செய்யக்கூடும்.

6. சிறு பிள்ளைகளுக்கு பாடங்களை ஒவ்வொரு 15 அல்லது 20 நிமித்திற்கும் மாற்றவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் களைத்துப்போவார்கள். உபாத்தியாயர்மேல் வகுப்புகளுக்குப் படித்துக்கொடுக்கையில் அடிக்கடி முதல் வகுப்பை வந்து கவனிக்கவேண்டும்.

மேலே சொன்ன ஆலோசனைகள் புதிதல்ல, ஆனால் அவைகளை ஒழுங்காகப் பின்பற்றினால் நிச்சயமாகவே முதல் வகுப்பில் வளர்ச்சியிருக்கும். அதுவே பள்ளிகூடத்தில் முக்கியமான வகுப்பு.

நான் அமெரிக்காவில் முதலில் படித்த பள்ளிக்கூடத்தில் 20 பேருக்கு ஒரு உபாத்தியாயர். பிள்ளைகள் 18 வகுப்புகளில் படித்தார்கள். அப்படிப்பட்ட பள்ளிக்கூடத்தை நடத்துவது லேசாய் நான்கு வகுப்புகளை மட்டும் அதிக பிரயாசமும் தேர்ச்சியுமில்லாதவர்கள் நடத்துவது இலகுவல்ல. எந்த விதத்திலும் முதல் வகுப்பை அதிகம் கவனித்து அதற்காகப் பிரயாசப்படுவார்கள்.

R. A. டட்லி துரை
திருமங்கலம்

---

## மதுரை ஜில்லாவிலுள்ள சாரணர்களின் வருஷாந்தரக்கூட்டம்.

இக்கூட்டம் மதுரைப்பட்டணத்தில் நடந்தேறியது மதுரைஜில்லா ஸ்கவட் கவுன்சில் மெம்பர்களும், ஜில்லா ஸ்கவுட் அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து இதை ஏற்படுத்தினார்கள். இத்தீர்மானத்தின் பயனாக இக்கூட்டத்திற்கு வேண்டிய காரியங்களைச் செய்து அப்பியாசிக்கும்படியாக, மதுரை ஜில்லாவிலுள்ள எல்லா சாரண சிறியருக்கும் முதலாவது விளம்பரம் அனுப்பப்பட்டது. இவ்விளம்பரம் வந்ததின் பேரில் சாரணப்படையுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், கிராமங்களிலும் இதற்கென்று அதிக முயற்சியுடன் அப்பியசித்து வந்தார்கள். விளம்பரத்தில் 1919ஞ அக்டோபர் மாசம் 19-ம் தேதி காலை 7மணிக்கு ஆஜராக இருக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வரக்கூடியவர்கள் 18-ம் தேதி சாயந்திரம் வந்தால் அவர்களுக்கு அன்றிரவு ஆகாரம் கொடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

18-ம் தேதி வந்த சாரணப்படைகளுக்கு ஆகாரத்துடன், படுக்க, உடுக்க மதுரை காலேஜ் சபாமண்டபத்திலும், சேதுபதி ஹைஸ்கூலிலும் இடவசதி செய்யப்பட்டது. 19உ காலை ஆகாரத்திற்குப் பின்பு ஒரே மாதிரியான உடைகளைத் தரித்து தங்கள் தங்கள் படையின் நாமத்தையும் அப்படையின் உட்பிரிவின் நாமத்தையும் எழுத்துக்களினாலும் படத்தினாலும் காட்டிக்கொண்டு 7½மணிக்கு இராமநாதபுரம் ஜில்லா போலீஸ் கிரவுண்டில் பலதுளி பெருவெள்ளம் என்பதுபோல் 8 திக்கிலிருந்தும், கோழி தன் குஞ்சுகளைக் கூப்பிடும்போது குஞ்சுகள் பல திசையிலிருந்து வேகமாக வருகிறதுபோல வந்து கூடினார்கள். இப்பாலிய சேவகர் சேனைகள் வருமுன்னே ஜில்லா சாரணதிகாரி (டிஸ்டிரிக்ட் ஸ்கவுட் கமிஷனர்) யும், கே. யஸ். ஒ. வும், ஜில்லா சாரணப்படையின் தலைவரும், ஜில்லா ஜட்ஜ்உம் இன்னும் முதலிய சாரணதிகாரிகள் அங்கு வந்திருந்தார்கள். வந்துகொண்டிருந்த சாரணர்களைப் பார்த்தால் பூர்வகாலத்தில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கருக்கு சேதுபதி ஒரு சேனையை அனுப்பினாராம் அச்சேனையை ஒத்திருந்தது. கூடினபின் ஜில்லா சாரணதிகாரி கட்டளையிட்ட பிரகாரம் முதலில் (கப்ஸ் குட்டிகளும்) பின்னர் சாரணர்களும் அதற்குப்பக்கத்தில் அந்தப்படையின் சாரணசிரியருமாக மதுரைப்பட்டணத்தை மகா கெம்பீரத்தோடும் சத்தத்தோடும் ஆரவாரத்துடனும் நாலு நாலுபேராக நின்று சுற்றி புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். போகும்போது சுமார் இரண்டு பர்லாங்கு ரோட்டில் இடத்தை அடக்கினார்கள்.

இச்சேனையைப் பார்த்தவர்கள் வேறு எங்கும் சென்று சேனையைப் பார்க்க வேண்டியதில்லை. பார்த்தவர்கள் எல்லாம் தங்கள் வாயில் கையை வைத்தார்கள். சுற்றி வரும்போது கூட்டத்தை மேல்மாடியிலிருந்து படம் பிடிக்கப்பட்டது. முன்னே போனவர்கள் கருப்பு நிறத்தினாலாகிய உடையை அணிந்திருந்தார்கள் மீதமானவர்களின் உடையோ காக்கி நிறமாயிருந்தது. தலை சீராக்கள், கழுத்து துணிகள், தோள்பட்டைத் துணிகள் கண்களைக் கவரத்தக்க வர்ணங்களால் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வேஷத்துடன் சென்றது பாண்டிய ராஜாக்கள் காலத்தில் மதுரையில் மழைபொழியவந்த கார்மேகம் போலவும், பின்படைகள் முந்தின மேகம் மாரியை அளித்தபின் மற்றொரு மேகம் மழைபெய்ய ஆயத்தமாய் வருகிறது போலவும் தலையில் அணிந்த சீராக்களும், கழுத்து துணிகளும் மழைபெய்தவுடன் வானத்தில்தோன்றும் வானவில் போலவும் தோள்பட்டைகளில்அணிந்த பட்டைத் துணிகள் நடக்கும்போது காற்றினால் வளைந்து ஆடி மறைந்தது மாரிபெய்யுமுன் தோன்றின மின்னல் போலவும் தோன்றினது. சுமார் 800 பேர்கள் வந்தார்கள். நகரத்தில் உள்ள ஜனங்கள் இப்படைகளைக் கண்டதும் தங்கள் இல்லங்களில் செய்த வேலையை நிறுத்தி வேடிக்கையாகப் பார்த்து சித்திரபதுமைபோல் நின்றார்கள்.

பின்பு சாரணப்படை புறப்பட்ட இடம் வந்து பகுதி பகுதியாக உட்கார்ந்தார்கள். அச்சமயம் எல்லாருக்கும் சிற்றுண்டி கொடுக்கப்பட்டது. மேற்கூறிய உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு பகுதியையும் சந்தித்து அவர்களுடன்பேசி உற்சாகப்படுத்தினாகள். பின்பு பகுதி பகுதியாக தங்கள் இருப்பிடம் சென்று போனார்கள்.

பின்பு காலேஜ் சபாமண்டபத்தில் ஜில்லா சாரணர்களின் வருஷாந்தரக்கூட்டம் கனம் உல்லியம் என்பவரின் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பெட்ரோல், சிஸ்டம் இன்னும் சாரணர் படைகளை நடத்தும் வகையிலுள்ள குறிப்புகளில் இனிய, உபநியாசங்கள் செய்யப்பட்டன. இந்த வருஷத்திற்கு வேண்டிய சாரண அதிகாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். பின்பு இராஜ வாழ்த்துதல்பாடி கூட்டம் முடிவுபெற்றது.

மதிய ஆகாரத்திற்குப் பின்பு சாரணப்படைகளுக்கு 4மணிக்கு சிற்றுண்டி கொடுக்கப்பட்டது.

4மணிக்கு எல்லாப்பகுதிகளும் தல்லாகுளத்தில் தமுக்கம் பார்க்கில் காலையில் ஆஜரான வண்ணம் இங்கேயும் கூடினார்கள். அப்போது கடவுள் பக்தியோடு, ராஜ தேச பக்தி உடையவர்கள் என்பதைக் காட்ட முதலில் கப்ஸ் (cubs குட்டிகள்) குதிரை லாடம் போல நின்றும், பின்பு சாரணர்களும் அவர்களின் ஆசிரியரும் குதிரை லாட வடிவக் கோட்டில் ஆரக்கால் வடிவமாக நின்றும் ஜில்லா சாரணத்தலைவர் ஆடர்கொடுக்க ஐக்கிய கொடியை வணங்கினார்கள். பின்பு ஒவ்வொரு பகுதியும் கட

ந்துகொண்டு போகும்போது அதின் பக்கம் திரும்பி மரியாதை செய்து சென்றார்கள். பிறகு அந்தந்த பகுதிகள் பார்க்க இன்பமாக இருக்கக்கூடிய விளையாட்டுகளும் கேட்கஇனிய குரலோசையுடன் கூடிய கும்மியும், பாட்டும் பாடினார்கள். இன்னும், சிலர் கண்களைக் கவரத்தக்க காட்சிப்பொருள் வைத்திருந்தவர்கள் பசுமலை சாரணப்படை பகுதிக்காரர்களே. பின்பு அக்கூட்டம் முடிவு பெற்றது. அச்சமயம் (விஸ்ட்டர்ஸ்) விசாரிக்க வந்தவர்களுக்கு கனம் முத்துச்செட்டி ஜமீந்தார் அவர்கள் சிற்றுண்டி கொடுத்து உபசரித்தார்கள். பின்பு சாரணப்படையின் முக்கிய உத்தியோகஸ்தர் நியமிக்கக் கூட்டங்கூடி நியமிக்கப்பட்டபின் கூட்டம் முடிவுபெற்றது.

சாயந்தரம் சேதுபதி ஹைஸ்கூலில் கேம்ப்பையர் (அதாவது கூடாரமுடித்து அங்குள்ள கழித்த பொருள்களை சந்தோஷமாக நெருப்பில் சுடுதல்) ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு விதமான ஆடல், பாடல், விளையாட்டு தேகஅப்பியாசம், சந்தோஷப்படக்கூடிய பேச்சு, வேடிக்கை முதலியவைகள் செய்தார்கள். அப்பியாசம் செய்கிறவர்களின் ரூபம் மாறியிருந்தது. ஆஜரான எல்லா சாரணர்களும் அவர்களின் தலைவரும் சந்தோஷப்பட்டு களிகூர்ந்தார்கள். இரண்டு கொடிகள் வைக்கப்பட்டது. அக்கொடியில் ஒன்று ஸ்கவுட்டிற்கும் மற்றொன்று கப்ஸ்க்குமாக வைத்திருந்தார்கள். இது எவருக்கு பகிருகிறதென்றால் காலை முதல் மாலைவரை பெரியவர்களுக்குத் திருப்திகரமாக செய்திருக்கிறவர்களோ அவர்களுக்கே பகிரவேண்டுமென்பது பெரியவர்களின் கோரிக்கை. கோரிக்கையின்பிரகாரம் உசிலம்பட்டிஸ் கவுட்ஸ்க்கும் கப்ஸ்க்கு என்று வைத்தகொடி மதுரையிலிருக்கும் ஷ்விடிஸ் மிஷன்ஸ்கூல் மாணவர்களுக்கும் அளித்தார்கள். அன்று இரவுடன் கூட்டம் முடிவுபெற்றது. சிலர் 20-ம் தேதி தங்கள் இல்லங்களுக்குச் சென்றார்கள். சிலர் மதுரையை சுற்றிப்பார்க்காததினால் அந்தநாள் இருந்து பூகோளசரித்திர சம்பந்தமான காரியங்களைப் பார்த்துவிட்டு 20-ம் தேதி சாயந்திரம் தங்கள் தங்கள் இருப்பூர் எய்தனர்.

பாலியசேவகர் அல்லது சாரணச்சிறுவர் என்பதை முதலாவது ஆட்ரிக்கா கண்டத்தில் பேடன் பவுல் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சேர்ந்து படிப்பவர்களுக்கு நல்லொழுக்கம் படிக்கும் மாணவர்கள் என்றே கூறவேண்டும். உடை, பெருமை இவைகளுக்காகச் சேர்ந்தால் யாதொரு நன்மையும் விளையா. இச்சேனையைச்சேர்ந்த ஒவ்வொருவனிடத்திலும் இராஜவிசுவாசமும் தன் கௌரவத்தைக் காத்துக்கொள்ளவேணும் என்கிற எண்ணத்தையும், ஊருக்கு உழைக்கும் ஆசையும், கடவுளுக்கும், அரசனுக்கும், பெற்றோர்க்கும், பெரியோருக்கும் செய்யவேண்டிய கடமைகளையும் சரிவரச் செய்யவேண்டும். தன் பேரும், தன் பாடசாலையின் பேரும், தன் சேனையின் பேரும் கெட்டுப்போகாதபடி வாக்கு நாணயமுள்ளவனாக நடந்துகொள்ள வேண்டும். ஜாதி மத பேதமின்றி எல்லாரிடத்திலும் அன்பு வைத்துக்கொண்டு பிரதி பலனை எதிர்பாராமல் சந்தோஷத்துடன் அவனுக்கு உதவி செய்யவேண்டும். நடை, உடை பாவனையில் சுத்தமுள்ளவனாகவும், தைரியமுள்ளவனாகவும், வீண்செலவு செய்யாதவனாகவும், முகமலர்ச்சியுள்ளவனாயும் இருக்கவேண்டும். எல்லா சமயங்களிலும் தன்னால் இயன்ற உதவி செய்ய பலமுள்ளவனாக இருக்கவேண்டும். மேல் காட்டிய குறிப்பை தன் அகத்தில் எண்ணி இப்பாலிய சேவகர் சேனையில் சேர்ந்தால்தான், நமதுதேசம் மென்மேலும் நற்காரியங்களில் வளரும். அத்துடன் அவ்வுதவி செய்கிறவர்களும் மேன்மையான பதவியை அடைவார்கள். இப்படிப்பட்ட எண்ணத்துடன் சேருகிற கூட்டத்தார் நம் நாடு தேசத்தில் வளர்ந்திவர அமலன் அருள்புரிவாராக இப்படிப்பட்ட கூட்டத்தார் நம்தேசத்தில் பெருகும்படி நம்பெருமானை நாள்தோறும் பிரார்த்திப்போமாக.

D. ஜேம்ஸ் மாயாண்டி, போர்டிங்ஸ்கூல்,
திருமங்கலம்.

---

## தோட்டம்

எங்கள் பள்ளிக்கூடத்துப் பையன்களாய்ச் சேர்ந்து நாற்பது செண்டு நிலத்தை மண்வெட்டியால் வெட்டிப் பண்படுத்தி பாத்தியாகக் கட்டினோம். பிற்பாடு நிலக்கடலை உடைத்து பையன்களும் பிள்ளைகளும் விதை போட்டோம். அதற்குத் தண்ணீர்விட்டு இரண்டு மூன்று நாளைக்கொருதரம் களை எடுத்து வந்தோம்.

பிற்பாடு இருபது செண்டு போல் வெட்டி கீரை விதைத்து அதுவும்பெரிதாகி கீரையை சமையல் செய்து சாப்பிட்டோம். இன்னும் கொஞ்சம் தக்காளிச் செடியும் நட்டுப் பயிர் செய்து வருகிறோம். அதற்கு ஒழுங்காய்த் தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். காய் கறிக்காக சுரை, பீர்க்கு, வெண்டை, சீனியவரை, கத்தரிச் செடியும், பூசனி முதலிய செடிகளும் ஆமணக்கு விதையும் போட்டிருக்கிறோம். மழையைக் காணவும் அவைகளுக்கு இருந்த சந்தோஷமும் முகமலர்ச்சியும் பார்ப்பவர்களுக்கு



17 DEC 1929 MADRAS

மிக்க வியப்பைக் கொடுத்தது. எங்களுடைய வகுப்பு அறைகளைச் சுற்றி நிலத்தை வெட்டிக் கொத்தி பண்படுத்தி பல பூச்செடிகளாகிய சூரியகாந்தி ஜினியா கேந்தி முதலியவைகளின் விதைகளும் போட்டு தண்ணீர் ஊற்றுகிறோம். பிற்பாடு மூங்கில் தப்பைவைத்து அடித்து தோட்டத்தைச் சுற்றி வைத்திருக்கிறோம். அதினால் படருகிற செடிகள் அதிலே படருகிறது. மேலும் மார்னிங் குளோரி என்று சொல்லப்பட்ட ஓர் அழகிய பூஞ்செடியின் விதையைப் போட்டோம். அது வளர்ந்து மிக்க கோர்த்தியான பூ பூத்து காலையில் அதிக மகிமையாய்க் காணப்படுவதைப்பார்த்து நாங்கள் மிகுந்த ஆனந்தம் அடைகிறோம். சமுசாரியின் பிள்ளைகளாகிய எங்களுக்கு தோட்டத்தைக் கவனிப்பது அதிக சந்தோஷமாயிருக்கிறது.

தோட்டங்களைப் பார்க்கும்போது சிருஷ்டிகார்த்தாவை அதிகமாய் நினைக்கும்படியாக ஏவப்படுகிறோம்.

சுப்பையன்.

## தச்சுவேலை

நான் திருமங்கலம் போர்டிங் பாடசாலையில் படிக்க வந்த நாள்முதல் தச்சுவேலை என்னும் ஓர் கைத்தொழிலும் பழகி வருகிறேன். எங்கள் பாடசாலையில் இக்கைத்தொழிலை ஸ்தாபித்திருப்பது எங்களுக்கு மெத்த சந்தோஷம். தச்சுவேலைக்காக ஓர் உபாத்தியாயர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். அவர் எப்பொழுதும் தச்சுவேலை செய்யும் பட்டறையில் இருப்பார். எங்கள் பள்ளிக்கூட மாணவர்கள் அரை மணி நேரத்திற்கு ஓர் வகுப்பாக மாறி மாறி தச்சுவேலைக்குப் போய்க் கொண்டிருப்போம். வகுப்பு நேரத்தில் அல்லாமல் காலையிலும் மாலையிலும் அவ்வேலை நடக்கும்.

நாங்கள் மேஜை, நாற்காலி, பெஞ்சு, ஸ்டூல், பீரோ முதலிய சாமான்களும் உபாத்தியாயரின் உதவியைக் கொண்டு செய்து முடிப்போம். கடந்த செப்டெம்பர் மாதத்தில் நாங்கள் இரண்டு நாற்காலிகளும் மூன்று மேஜைகளும் 5 பெஞ்சுகளும் செய்து முடித்தோம். நாங்கள் செய்த சாமான்களில் சிலவற்றை மதுரையில் கூடின செப்டெம்பர் கூட்டத்துக்குக் கொண்டுபோனோம். அங்குள்ள சில பெரியோர்கள் பார்த்து எங்கள் பாடசாலையின் தொழில் விர்த்தியைப்பற்றி புகழ்ந்து கொண்டாடினார்கள். இத்தொழில் நிச்சயமாகவே பிற்கால ஜீவியத்தில் எங்களுக்கு அதிகப் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறோம். இக்கைத்தொழில் அதிகமதிமாக விர்த்தியடைய வேண்டுமென்று நாங்கள் ஆவலோடு காத்திருக்கிறோம். எங்கள் பாடசாலையைப்போல் மற்ற பாடசாலைகளிலும் இத்தொழிலை ஸ்தாபித்தால் அங்குள்ள மாணவர்களும் இதனால் பிரயோஜனம் அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

பி சீனி

## பாய் பின்னல்

மாணவர்களாகிய நாங்கள் பாய்பின்னல் வேலை பழகும்படியாக எங்கள் பள்ளிக்கூடத்தில் 6 பாய் தறிகள் இருக்கின்றன. தச்சு உபாத்தியாயர்தான் பாய்பின்னலும் கற்றுக் கொடுப்பார். முதலில் உபாத்தியாயர் பின்னும் விதத்தைக் காண்பிப்பார். பிற்பாடு நாங்கள் தன்னாலே நெசவு செய்வோம்.

பாய் பின்னுவதற்கு வேண்டிய சாமான்களாவன: பெரிய கயிறு, சிறிய நூல் கயிறு, கோரைக்கட்டுகள், கோரை ஊறப்போடும் வாளி அச்சுகள் அமுக்குகிறதற்குக்கட்டை மூங்கில் முதலியவைகள். ஒரு கட்டுக்கோரை $3\frac{1}{2}$ ரூ. வீதம் கட்டுகள் வாங்கித் தருவார்கள். பிற்பாடு பின்னி முடித்து வேண்டியவர்களுக்கு விலைக்குக் கொடுப்போம். நாங்கள் பின்னிய பாய்கள்தான் எங்கள் பள்ளிக்கூடத்தில் அதிகமாய் உபயோகித்து வருகிறோம்.

ஒரு வாரத்திற்கு ஏறக்குறைய எட்டுப்பாய்கள் முடிவடைகிறது. இந்தப்பாய் நெசவு வேலையும் எங்களுக்கு அதிகப் பிரயோஜனமான வேலைதான். நாங்கள் இங்கே பழகுகிறது மாத்திரமல்ல எங்கள் ஊர்களிலேயும் அத்தொழிலை விர்த்தி செய்யப் பிரயாசப்படுகிறோம். இனிமேல் இப்போ செய்கிறதைவிட பார்வைக்கு அழகாயும் பல வர்ணங்களும் வித்தியாசமான மாதிரியுமாய் செய்ய யோசித்திருக்கிறோம்.

யோசேப்பு.

## கோழி வளர்த்தல்.

பெண்களாகிய நாங்கள் கல்வி கற்று வருவதோடு எங்கள் பள்ளிக்கூடத்தில் leghorn கோழிகளும் வளர்த்து வருகிறோம். செப்டெம்பர் மாதத்திற்கு முன்னே ஏறக்குறைய ஏழு பெட்டைக்கோழிகளும் பதினொரு சேவல்களும், இருபது குஞ்சுகளும் இருந்தன. அதை பிள்ளைகளாகவே கவனித்து வருகிறோம்.

செப்டெம்பர் மாதத்தில் மதுரையில் நடந்த கூட்டத்திற்குக் கொண்டுபோனோம் அங்கே அநேகர் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அதற்குப் பின் இக்கோழிகள்

நாடெங்கும் பரவச்செய்யும்படி எங்கள் துரை பல இடங்களில் விற்றுப்போட்டார். இப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்தில் சில கோழிகள் முட்டை இடுகிறது.

எழு சேவல்கள் இருக்கின்றன எங்கள் பள்ளிக்கூடத்தில் பொதுப் பணம் சேர்பதில் இது ஒரு வேலை. தினசரி இடும் முட்டைகளை அன்றன்று தேதிபோட்டு வைத்து முட்டை கேட்போர்களுக்கு ஒரு முட்டை இரண்டு அணு வீதம் கொடுத்து கோழியின் தீனி முதலிய செலவு போக மீதத்தைப் பொதுப் பணமாக வைத்து பக்தி முயற்சி சங்கக்கூட்டத்திற்கு செலவு செய்யும்படி சேர்த்து வருகின்றோம். கோழி அடைக்கும்பெட்டி அசுத்தமாயிருந்தால் வியாதி வந்துவிடுமென்று கோழி அடைக்கும் பெட்டியை தினந்தோறும் சுத்தம் செய்துவிடுவோம்.

இவ்வேலை ஏறக்குறைய ஆறு வருடங்களாக நடைபெற்று வருகின்றன. இன்னும் அதிகஊக்கமாய் நடத்திக்கொண்டு வருகிறோம். இப்படியாக எங்கள் பள்ளிக்கூடத்தின் நன்மைக்கென்று பிரயாசப்பட்டு செய்து வருகிறோம். இம்முயற்சி நாளுக்கு நாள் முன்னேறி வருமென்று நம்புகிறோம். இதை வாசிக்கிற யாவரும் இக்கோழிகளை வளர்த்து நல்ல லாபமடையலாமென்பதை பின்னால் அறிந்துகொள்வார்கள்.

சிட்டம்மாள்.

இந்த சங்கதிகள் திருமங்கலம் போர்டிங்ஸ்கூல் மாணவர்களால் பிரசுரப்படுத்துகிற மாணவர் தூதன் என்னும் நூதன பத்திரிகையிலிருந்து எடுத்து எழுதப்பட்டது. மாணவர் தூதன் என்னும் பத்திரிகை வேண்டுபவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். மாத பத்திரிகை நூதன சங்கதிகளும் இதில் வெளிவரும். சந்தா தொகை வருஷம் ஒன்றுக்கு ரூ 1.

ரிவரென்ட் ஆர். எ. டட்லி.

திருமங்கலம் போர்டிங்ஸ்கூல் மானேஜர்.

திருமங்கலம்.

நமது தாலுகாவின் தலைமைப்பட்டணமாகிய திருமங்கலத்தில் கடந்த இரண்டு மாதங்களில் பெய்த மழையின் அளவு.

| செப்டெம்பர் மாதத்தில் | அக்டோபர் மாதத்தில். |
|---|---|
| 9.88 அங்குலம் | 7.86 அங்குலம் |

## கதை, அபிநயப்பாட்டு கற்பிக்கும் முறை.

கிராமப் பாடசாலையில் படித்துவரும் சிறுவர்களுக்கு கதையின் மூலமாக பலவிதத்திலும் அறிவைக்கொடுக்கலாம் என்பதாகவே கதை கற்பித்தல் என்னும் பாடமானது கிண்டர்கார்டன் முறையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. சிறு கதைகளைக் கேட்பது சிறுவர்களுக்கு மிகவும் பிரியம் என்பது நம்மெல்லோருக்கும் தெரியுமாயினும் அக்கதையை சொல்வதற்கும், ஒருமுறையை ஆசிரியர் யாவரும் கையாடுவது அவசியமாகும். அவ்விதம் சரியான முறையைக்கையாடி நாம்இப்பாடம் நடத்துவோமானால் சிறுவர்கள் பலவிதத்தில் விருத்தியடையவழிகள் திறக்கப்படும். கிராம உபாத்தியாயருடைய முதல்நோக்கம் சிறுவர்கள் சரியாய் ஒருவாக்கியத்தில் தாங்கள்நினைப்பதை அல்லது அறிந்ததை வாய்திறந்து பேசும்படி பழக்குவிப்பதேயாகும். இத்தோடு அவர்கள் தாங்கள் சொல்வதை தைரியமாகவும், மற்றவர்களும் அதைக்கேட்டு அறியும்படி பேசப்பழக்குவிப்பது கிராம ஆசிரியருடைய கடமையாகும். ஆகவேநாம் இச்சிறுவியாசத்தில் கதை சொல்லுதல் எவ்விதம் என்பதைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

திறமையுடைய ஆசிரியர் கதையைத் தெரிந்துகொள்வதில் அதிக கவனத்தைச் செலுத்தவேண்டும். அவ்விதம் ஆயத்தம்பண்ணப்படும்பொழுது அவர் பின்வரும் குறிப்புகளைக் கவனிப்பது மிக அவசியமாகும்.

1. சிறுவர்களுக்குச் சொல்லப்போகும் கதை அதிக நீண்டதாயிராமல் குழந்தைகள் எவ்வளவு மாத்திரம் ஞாபகத்தில் சிரமமில்லாமல் வைத்துக்கொள்ளக்கூடுமோ அம்மட்டும் இருத்தல் போதுமானது.

2. அதன் விஷயம் சிறுவர்களுக்கு இலகுவில் புலப்படக்கூடியதாகவிருக்கவேண்டும்.

3. அதில் வரும் பிராணிகளின் பெயர் அல்லது பொருள்கள் அவர்களால் பார்க்கப்பட்டதாயிருந்தால் மிகவும் நல்லது.

4. எவ்வித பயங்கரமான செய்கையும் கதையில் வரலாகாது.

5. உண்மை, சுத்தம், தைரியம், முதலிய நல்லொழுக்கங்களை பாராட்டுவதாயிருந்தால் நல்லது.

இவ்விதமாக ஒரு சிறு கதையைத் தெரிந்துகொண்டபின் எவ்வித முறையைக் கையாடி கதையைச் சிறுவர்கள் மனதில் பதிப்பது என்பதைக் கவனிப்போம். கதை யாவரும் சொல்லக்கூடிய ஒரு காரியமேயாயினும் சிறுவர்களுக்கு கதை சொல்வது கொஞ்சம் சிரமமான விஷயமே அதாவது திறமையுடன் கதை கற்பிக்கும் கிராம ஆசிரியர் தன்னையும் ஒரு சிறுவனாக எண்ணி தனக்கும் அக்கதை அதிகப் பிரியமாக இருப்பதுபோல் நடித்து தானும் அக்கதையிலிருந்து புது விஷயங்களை அப்போதுதான் கண்டுபிடித்ததுபோல் காட்டினலொழிய சிறுவர்களுக்கு அக்கதையில் எவ்வித பிரியமும் ஏற்படாது. இது உபாத்தியாயருடைய விஷயத்தைப் **பொறுத்ததாக இருக்க, இனி அவர் செய்யவேண்டியது என்ன என்பதாகப் பார்ப்போம்.**



தாம் தெரிந்துகொண்ட கதையை எவ்விதம் சிறுபாகங்களாகப் பிரிக்கமுடியுமோ அவ்விதம் பிரித்து ஒவ்வொரு பிரிவையும் காட்டும் படம் ஒன்று வரையவேண்டும். இவ்விதமாக எக்கதையையும் 4 பிரிவுக்குள் படுத்தலாம். அந்த நான்கு பிரிவுகளையும் ஒரு பெரிய கடுதாசியில் 4 படங்களாகக் காட்டவும். இப்போது இவ்விதம் செய்வாரானல் உபாத்தியாயர் கதை சொல்பவராக இராமல் கதை கட்டுபவராக இருக்கிறார். அது மாத்திரமல்லாமல் உபாத்தியாயர் கொஞ்சமாகவும் சிறுவர்கள் அதிகமாகவும் பேசும்படி சமயம் கிடைக்கிறது. இங்கு ஆசிரியர் செய்யவேண்டிய காரியம் சொற்பம்.

பிள்ளைகள் தங்கள் கவனத்தை செலுத்தும்படியாகச் செய்து அவர்கள் ஒவ்வொருபிரிவில் பார்க்கும் பொருள், பிராணி அல்லது மனிதர்செய்யும் பாவனையைப்பார்த்துச் சொல்லும்படி செய்யவேண்டும் இதை வருவித்தபின் அவர்களே அப்படம் எதைக்குறிக்கிறதென்பதை யோஜித்துச் சொல்லும்படி செய்யவேண்டும். இவ்விதம் அவர்களே யோஜித்துச்சொல்வதில் தப்பிதமான விதமாக அக்கதையைச் சிறுவர் சொல்லலாம். ஆனல் அநேகர் கொஞ்சமாவது கதை எதுவாக இருக்குமோ அதைச் சார்ந்தே சொல்வார்களென்பது நிச்சயம். ஆகவே அவ்விதச் சிறுவர் விடையிலிருந்து உபாத்தியாயர் கதையைச் சப்படுத்தி ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் யோசனையாகக் கொடுத்த வாக்கியங்களிலிருந்தே கதையை அவர்களே உண்டுபண்ணினதுபோல் காட்டுவது நலம். பின்படத்தைவைத்துவிட்டு ஒவ்வொருவரும் தாங்கள் பார்த்தபடத்தில்வரும் கதையை கொடுக்கும்படிசெய்து அதில்வரும் நல்லொழுக்கத்தையும் எடுத்துக் காட்டவேண்டும். இதுவே கதைசொல்வதின் சரியான முறையாகும். இவ்விதம் சொல்லப்பட்ட கதையை சிறுவர்கள் ஒருவரும் மறந்துபோகமாட்டார்கள் இதுமாத்திரமல்லாமல் இப்பாடத்தில் சிறுவர்களுடைய ஐம்புலன்களுக்கும் வேலை கொடுக்கப்படுகிறது. இப்பாடத்தோடு சித்திரம் வரைதல்ஆகிய இவையும் சேர்க்கப்படலாம்.

இங்கு நாம் இப்பாடத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு அபிநயப்பாடலை எவ்விதம் கற்பிக்கலாம் என்பதாக மாத்திரம் பார்க்கலாம். அபிநயப்பாடலைக் கற்பிப்பதின் நோக்கம் யாதெனில் சிறுவர்களின் அவயவங்களுக்கு வேலைகொடுப்பதும், சப்தம் சரிப்படும்படியாகச் செய்வதும், வகுப்பு முழுவதும் ஏகோபித்து ஒரு விஷயத்தைச் செய்யும்படி பழகுவதும் ஒவ்வொருவரும் தாம் நினைப்பதை செய்கையில்காட்டி அவ்விதம் மனமும் தேகமும் ஒரேசமயத்தில் வேலைசெய்யும்படி செய்வதுமேயாகும் இதைநாம்மறந்து **கதைக்குப்பின் பாட்டு கற்றுக்கொடுக்க வேண்டும்** என்ற சட்டத்திற்கு கீழ்ப்படிவதுபோல் தம்வேலையைச் செய்கிறார்கள். இது சரியல்ல உபாத்தியாயர் தம்வேலையின் சரியான நோக்கத்தையறிந்து அந்நோக்கம் நிறைவேறவேண்டும் என்று ஆலோசித்தாலொழிய அவர்வேலை பிரயோஜனமற்றுப்போகும். ஆகவே அபிநயப்பாடலைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் பின்வரும் குறிப்புகளை கவனித்தல் மிகவும் அவசியம்.

1. அதிக சிறு பாலரையும், சற்று பெரிய வகுப்பு குழந்தைகளையும் ஒன்றாக விட்டுக் கற்பிக்காமல் இவ்விரு நிலைமையுள்ளவர்களையும் இரு பிரிவுகளாக பிரித்து கற்பிக்கவேண்டும்.

2. அபிநயப்பாட்டு துவக்குமுன் இவர்களுக்கு இடையில் எவ்வித இடையூறும் ஏற்படாத விதமாக தங்கள் வேஷ்டிகளை நன்றாகக் கட்டிக்கொள்ளும்படி பார்க்கவேண்டும். திடீரென்று வேஷ்டி அவிழ்ந்து போதல் அல்லது குனியும்போது அவர்களுடைய உடையில் தடை ஏற்படுவது முதலியவை இல்லாமல் துவக்கத்தில் பார்க்கவேண்டும்.

3. இப்பாடத்திற்கு ஒருவட்டமாய் அல்லது அரைவட்டமாக பாடசாலையின் விஸ்தீரணத்திற்கு தக்கதாக ஒழுங்காக நிற்கும்படி செய்யவேண்டும்.

4. சிறுவர் ஒவ்வொருவரும் வாயைத்திறந்து பாடலை, தெளிவாகப் படிக்கின்றார்களாவென்றும் அவ்விதம் படிக்கும் விஷயத்தை அவயவங்களால் நடித்துக் காட்டுகிறார்களாவென்றும் பார்க்கவேண்டும். இதில் உபாத்தியாயர் ஆள், ஆளாக தம் கவனத்தைச் செலுத்தி சீர்படுத்தவேண்டும்.

5. அபிநயத்தில் எல்லா மாணவரும் ஒரு செய்கையை ஒன்றுபோல் செய்யும்படி பார்க்கவேண்டும். உதாரணமாக: கை தட்டும்படி வருமானல் அச்செய்கை ஒருவரால் செய்யப்படாதுபோல் காணப்படவும் கேள்க்கப்படவும் வேண்டுமேயொழிய பாலர்சேர்ந்து செய்வதுபோல் தெரியக்கூடாது.

6. எல்லாவற்றிற்கும் மேலாக மாணவர் தாம் சொல்லுவதை செய்கிறோமென்றும் அறிவு அவர்களுக்கு உண்டாகும்படி உபாத்தியாயர் பழக்கி வைக்கவேண்டும்.

இவ்விதம் கற்பிக்கப்படும் அபிநயப்பாட்டுகள் உற்சாகத்தையும் தெளிந்த அறிவையும் பாடசாலையில் ஒரு விருப்பத்தை கொடுப்பது மாத்திரமல்லாமல் தங்கள் வீடுகளிலும் அவர்கள் கற்றுக்கொண்ட கதைகளையும் பாட்டையும் கொண்டு பெற்றோரையும் சந்தோஷப்படுத்தும்படி தூண்டுகிறது.

இதுமாத்திரமல்லாமல் இப்பாடத்தை சித்திரத்தோடு சம்பந்தப்படுத்தி கதையிலும் பாட்டிலும் அவர்கள் கற்றுக்கொண்ட பாடத்தைச் சித்திரமாக வரைந்து எவருடைய சித்திரம் திறமையாகச் செய்யப் பட்டுள்ளதோ அதைப் பள்ளிக்கூடத்தின் சுவரில் அடித்து வைக்கப்படுமானல் சிறுவர்களுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுக்கும். இவ்விதம் வரையப்படும் சித்திரம் இயற்கைப்பாடத்திற்கும் உபயோகப்படலாம். இதுமாத்திரமல்லாமல் மற்ற வகுப்பு சிறுவருக்கும் இதன்மேல் பிரியம் இயற்கையாக உண்டாகி கற்றுக்கொள்வதில் பிரியத்தை உண்டாக்குகிறது. எனவே நாம் இச்சிறு வியாசத்தை கிராம ஆசிரியர் கவனித்து பிரயோஜனப்படுத்தும்படி, முடிவில் கிராம பாடசாலையில் போதிக்கக்கூடிய ஒரு சிறு கதையும் அதைச்சார்ந்த அபிநயப்பாட்டு ஒன்றும் கொடுத்திருக்கிறோம்.

## இரு மூடர்கள்.

ஒரு பட்டணத்தில் நடந்த கலியாணத்திற்கு விருந்தாளியாக இரு பட்டியிலுள்ளவர்கள் வந்தார்கள். இந்த இருவரும் மங்கள வீட்டில் நடந்த மேள வாத்தியங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அதன் சப்தத்திற்கு காரணம் யாதென யோசித்தார்கள். சற்று நேரம் சென்றபின் நன்றாக சமைக்கப்பட்டிருந்த ஆகாரத்தை திருப்தியாக சாப்பிட்டபின் மேளவாத்தியம் முன் கேட்ட இடத்தை வந்துபார்த்து அங்கு யாரும் இல்லாதிருக்கக் கண்டார்கள்.

ஆனால் அங்கு வைக்கப்பட்டிருந்த மேளமானது முன் சப்தத்தைக் குறித்து யோசித்த காரியம் மனதுக்கு வாராதபடியால் மேளத்திற்குள் இருந்து சப்தம் கொடுப்பவனை பிடிக்க எண்ணி இருவரும் பக்கத்துக்கு ஒருவராக நின்று இருபக்கங்களிலும் துளை செய்து கையை உள்ளே விட்டார்கள். இவ்விதம் இருவரும் ஒருவன்கையை மற்றொருவன் பிடித்துக்கொண்டு உள்ளே இருப்பதாக தாங்கள் நினைத்தபடி சப்தம் கொடுப்பவனை பிடித்து விட்டதாக சந்தோஷங்கொண்டு சப்தம் செய்தார்கள்.

இதைக்கேட்ட மேளகாரன் ஓடிவந்து என்னவென்று பார்க்க ஆச்சரியப்பட்டு கலியாண வீட்டுக்காரனிடம் தன் மேளத்தை உடைத்துப்போட்ட இருவரிடமும் அதன் விலையை வாங்கிக் கொடுக்கும்படி கேட்டான்.

அப்படியே அதன் கிரயம் அவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு மேளகாரனுக்கு கொடுக்கப்பட்டது. பட்டியிலிருந்து வந்தவர்கள் பணம் கொடுக்கும்படியாக நேரிட்டது மாத்திரமல்லாமல் அங்கு இவர்களைக்கண்ட ஜனங்கள் யாவரும் இவர்களுடைய செய்கையைப் பார்த்து நகைத்தார்கள்.

இன்னும் வரும்

---

## மதுவிலக்கு
### அல்லது
### கள்ளுண்ணாமை.

மானிடராய் நம்மைக் கடவுள் நன்மைக்கென்றே சிருஷ்டித்தார் என்பது பின் வரும் காரணங்களால் தெரியவரும். அதாவது நமது சத்திய வேதத்தில் மனிதனைத் தன் சாயலாகப் படைத்ததாகவும், இன்னும் மகம்மதியரின் பெரியார் குணங்குடியார் படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தன்னை வணங்குவதற்கென்ற பிறிது மதங்களிலிருந்தும் தெரியவருகிறது. நம்மை நம் ஆண்டவர் நல்ல வழியில் செல்ல சிருஷ்டித்திருக்கும்போது நாம் நம் வாழ்நாட்களைத்தம சாத்தானுக்கிணங்கி அவன் கள், காமம், சூது, களவு முதலிய துர்க்குணங்களைப் பிடித்து ஒழுகுமாறு நம்மைத் தூண்டி விடுகிறான். அவ்வழியில் நாம் பிரவேசிப்போமானால் நாம் நம் பரம பிதாவைக் கிட்டிச் சேரவே முடியமாட்டாது. எவ்வாறெனில் ஒருவன் கள் குடி என்னும் துர்ப்பழக்கத்திலிருந்து வந்தால் அவன், பொய், கொலை, பிறரை ஏமாற்றல் முதலிய பாதகங்களுக்கிணங்கி தீயவழியில் நடந்து பாவத்திற்கு ஆளாகிறான். (உ-ம்.) ஒருவன் கள் குடியிலே தீய பழக்கமுள்ளவனாயிருந்தால் அவன் பொருளில்லாதபோது பொய் சொல்ல வேண்டியிருக்கிறதுமல்லாமல் களவு செய்ய வேண்டியிருக்கிறது. ஒருவன் குடிகாரனாகிறதற்குக் காரணம் அவன் செயற்கையினாலேயே உண்டாகும். ஒருவன் குடிப்பானாகில் அவன் உடம்புகெட்டு விடும். கள் போன்ற புளித்த வஸ்துக்களில் ஒருவித விஷம் ஆல்கஹால் இருக்கிறது அது உடம்புக்கு கெடுதலை உண்டுபண்ணுமென்று பெரிய ரசாயன சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒருவன் குடிகாரனாயிருந்தால் அவனுக்கு யோசிக்கும் தன்மை கெட்டு அற்பத்தனத்திலேயே புத்தியைச் செலுத்துகிறான். குடிப்பதுக்கு உடம்பில் பலமிருக்காது. குடிக்கிறவர்கள் எவ்விடத்திலிருக்கிறார்களோ அவ்விடங்களில்தான் முதல்முதல் காலரா முதலிய தொத்து வியாதிகள் பரவும். இப்போப்பட்டவர்களுக்கு வியாதி வந்தால் அவனுக்குக் குணம் உண்டாகாது என்பது திண்ணம். இதை சீதோஷ்ண மண்டலங்களிலிருக்கிறவர்கள் உபயோகித்தால் நலம் என்று மேல்நாட்டுக்காரர்கள் சாப்பிடுகிறார்கள். நம் உஷ்ண மண்டலத்திருக்கிறவர்களுக்கு குடி என்னத்திற்கு அவசியமில்லை. மேல்நாட்டில் வழக்கமாகச் சாப்பிடுகிறவர்கள்கூட ஒரு வீதிட்டு வைத்திருக்கிறார்கள். அதற்குமேல் சாப்பிட்டால் குடிகாரர்கள் என்று ஏளனஞ் செய்வார்கள். அவ்வாறிருக்க நம் நாட்டில் மிதமிஞ்சி பழக்கத்திற்கு கொண்டுவந்துவிட்டார்கள். இதைப் போக்குவதற்கு நமது மகானுபாவன் மகாத்மா காந்தியடிகள் மதுவிலக்கு பிரசாரஞ்செய்து வருகிறார்கள். நம் நாடு தரித்திர திசையிலிருப்பதற்குக் காரணம் குடி ஒரு காரணமென்றே சொல்லலாம். இதை நம் காருண்ய கவர்மென்டார் சிரத்தையெடுத்தார்களானால் நிறுத்தமுடியும் அவர்களும் நம்மேல் கிருபை வைத்து நடத்த ஆண்டவர் அருள் புரியப் பிராத்திப்போமாகவும். இவ்விதம் மதுபானம் ஏராளம் நடந்துகொண்டிருந்த அமெரிக்காக் கண்டத்தில் அக்கவர்மென்டார் அதை நிறுத்துவதற்குப் பிரயத்தனப்பட்டு அதை நிறுத்திவிட்டார்கள். அந்த நாடு பணத்திலும் ஊக்கத்திலும் சிறந்து விளங்குவதற்கு இது ஓர் காரணமாகும்.

மதுபோன்ற துர்ப்பழக்கங்களைப்போல நம் மாணவர்களிடம் சில துர்ப்பழக்கங்களிருக்கின்றன. அவைகளாவன சிகரட்டு, பீடி, சுருட்டு, பொடி முதலிய துர்ப்பழக்கங்களைப் படிக்கும்போதே நாம் உபயோகப்படுத்தி பின்பு அதன் மேல்படியான குடி என்னும் தொழிலைக் கையாட முன் நாம் அனுபவித்தவைகள் ஏதுகாமாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. முதலில் நாம் பீடி, சுருட்டு, பொடி முதலிய அற்ப விஷயத்தை நாம் நிறுத்த முடியாதுபோனால் பெரிய விஷயங்களை நாம் எப்படி நிறுத்தமுடியும். நாம் சிறுவயதிலேயே இத்துர்ப்பழக்கத்திலிருந்து நீங்கி நல்லவழியில் நடக்கப் பிரயத்தனப்படவேண்டும். நாம் வாசிக்கிறவர்கள் இவ்வாறு செய்தால் நாம் படித்தும் முட்டாள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் மேற்கூறிய துர்ப்பழக்கங்களை விட்டு நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடக்க நம் பராபரன் கிருபை பொழிவாராகவும்.

M. டேவிட் சின்னச்சாமி,
கார்மல் ஸ்கூல், திருமங்கலம்.

அமெரிக்கன் மிஷன் லினுக்ஸ் பிரஸ், பசுமலை—1929.

494

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

0 JAN 1930 MADRAS

"கோபக்காரனுக்குத் தோழனாகாதே ; உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே."

Vol. IX. ] டிசம்பர் 1929 [ இலக்கம் 8

## பஞ்சாங்கம்.

1929 | சுக்கில வருஷ கார்த்திகைமீ 16 | டிசம்பர்மீ | சுக்கில வருஷ மார்கழிமீ 17 | 1929

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 16 | 2 17 | 3 18 | 4 19 | 5 20 | 6 21 | 7 22 |
| 8 23 | 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 28 | 14 ✻29 |
| 15 1 மார்கழி | 16 ○2 | 17 3 | 18 4 | 19 5 | 20 6 | 21 7 |
| 22 8 | 23 9 | 24 10 | 25 11 | 26 12 | 27 13 | 28 14 |
| 29 15 | 30 ●16 | 31 17 | | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

C. No. 558/29.

Office of the Supt. Kallar Reclamation, Madura.
Dated 30th June 1929.

## சர்க்குலர்.

இனிமேல் ஒவ்வொரு காலபாண்டன் விலும் கள்ளர் ஸ்கூல் உபாத்தியாயர்களும், சூப்ரவைசர்களும், மிஷன் மானேஜர்களும் தலைப்பில் அந்தப்பள்ளிக்கூடம் அல்லது பள்ளிக்கூடங்களுடைய நம்பர்களைத் தவறாமல் எழுதவேண்டும். அவ்வாறு நம்பர்கள் தெரியாதபோனால் ஆபீஸிலிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

சூப்ரவைசர்களுக்கு அவர் அவர்கள் ரேஞ்சுக்குட்பட்ட கள்ளர் ஸ்கூல்களின் நம்பர்கள் உள்ள லிஸ்டு அனுப்பியிருக்கிறது.

(Sd.) K. P. ஜனார்த்தன் ராவ்,
கள்ளர் சூப்பிரண்டு.

---

**Hearty Greetings from M.R.Ry. Rao Bahadur K. P. Janardhan Rao Avl., B.A., Superintendent, Kallar Reclamation, Madura, to the Piramalai Kallars of the Madura and Ramnad Districts.**

---

I take this opportunity of sending to you all, my sincere greetings for a very happy and prosperous New Year and many more returns of the same.

I am glad to acknowledge the hearty co-operation and assistance rendered by you in the working of the Kallar-Reclamation scheme. What has been achieved so far, though commendable, is nothing when compared to what can be achieved in the future. I hope you will continue to co-operate and give assistance in a greater degree this year so as to achieve lasting results.

I would like to take this opportunity to again impress upon you some of your shortcomings which, I hope, you will rectify this year. On the educational side, it is essential that all of your children are sent to school and also attend regularly. On the Co-operative side, it is quite necessary that you should utilise the loans only for productive purposes and that you maintain your credit by repaying the loans by the stipulated period. In the Revenue and Darkhast side, you should avail yourself of the facilities offered to you to a greater extent and provide yourself with wells for your lands as a safeguard against the failure of monsoon. And lastly you should pay particular attention to the working of the Panchayats and a strict adherence to the conditions of the Panchayat agreement. It is only by such means that you will, in course of time, be able to remove the stigma attached to your community and become one with the several communities.

In conclusion, I wish you all again a very Happy and prosperous New Year and many returns of the same.

---



## நவ வருஷ வாழ்த்துதல்கள்.

மகா-ராா-ஸ்ரீ ராவ் பகதூர் K. P. ஜனார்த்தன் ராவ், மதுரை, ராமநாதபுரம் ஜில்லா கள்ளர் ரேக்ளமேஷன் சூப்பிரண்டு துரையவர்களின் அன்பான வாழ்த்துதல்.

---

இவ்வருஷம் உங்களுக்கு அதிக சந்தோஷமும் பாக்கியமுமான வருஷமாயிருக்கவேண்டுமென்று உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துதலை இச்சமயம் அனுப்புகிறேன்.

கள்ளர் முன்னேற்ற விஷயமாய் நீங்கள் என்னோடு ஒத்து உழைத்து வந்ததையறிந்து நான் சந்தோஷிக்கிறேன். இதுவரை நாம் அடைந்தோம் என்று எண்ணக்கூடியது மெச்சத்தக்கவையானாலும் இனி அடையவேண்டிய இலக்ஷகோடு ஒப்பிடும்போது இவையெல்லாம் ஒன்றுமில்லாமல் காணப்படும். இவ்வருஷத்தில் நாம் நிலையான பலன்களை அடையும்படி நீங்கள் முன்வருஷங்களைக் காட்டிலும் அதிக ஒத்துழைப்புக் காண்பிப்பீர்களென்று நம்புகிறேன்.

இவ்வருஷத்தில் நீங்கள் திருத்தத்தக்கதாக இச்சமயத்தில் உங்களிடம் காணப்படும் சில தவறுதல்களை வற்புறுத்திக் காட்ட விரும்புகிறேன்.

கல்வி விஷயமாக:— பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடிய எல்லாப் பிள்ளைகளையும் அனுப்புவதோடுகூட ஒழுங்காயும் அனுப்பிவரவேண்டும்.

கோவாப்பரேட்டிவ் சங்கம்:— விஷயமாய் நீங்கள் வாங்கும் கடன்களை லாபகரமான விஷயங்களுக்கு மாத்திரம் உபயோகிக்க பழகுவது அதிக அவசியம். அத்துடன் நீங்கள் குறிக்கப்பட்ட காலத்தில் அக்கடன்களைச் செலுத்திவிடவும் முயற்சி எடுக்கவேண்டும்.

ரேவினியு தர்க்காஸ்து:— விஷயமாய் உங்களுக்குக் கிடைக்கப்பட்டிருக்கும் சகல உபகாரங்களையும் சற்பிரயோகம் செய்து, மழை தவறும் காலங்களில் கவலைப்படாதிருக்கும்படி நல்ல கிணறுகளை வெட்டி நிலங்களை சீர்திருத்தவேண்டும்.

கடைசியாக பஞ்சாயத்தார்:— கவனித்து நடக்கவேண்டிய சட்ட திட்டங்களை அதிகக் கண்டிப்பாய் கவனித்து காரியாதிகளை ஒப்புக்கொண்ட தீர்மானப்படி நடத்திவரவும் வேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களைக் கவனித்து வந்தால் மட்டும் படிப்படியாய் வளர்ந்து உங்களைப்பற்றி வசைச்சொல்லையகற்றி மற்ற அநேகரைப்போல் மேன்மையடையலாம்.

மறுபடியும் இப்புதுவருஷம் உங்களுக்கு சந்தோஷமும் பாக்கியமுமான வருஷமாயிருக்கும்படி உங்களை வாழ்த்துகிறேன்.

---

## நமது பத்திரிகையின் மானேஜர் சங்கை R. A. டட்லி துரையவர்கள் அனுப்பும் புதுவருஷ செய்தி.

---

பிரமலை நாடு கடந்த பத்து வருஷங்களில் முன்னேற்றமடைய அதிகமான உதவியடைந்திருக்கிறார்கள். பஞ்சாயம், கடன்கள், புது ரயில்பாதையும் கிடைத்திருக்கிறது. வரப்போகிற வருஷத்தில் நாமெல்லாரும் பிரயாசப்படக்கூடிய மூன்று அல்லது நான்கு வழிகளை உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்.

1. நமது பாடசாலைகளிலும் போர்டிங் பள்ளிக்கூடங்களிலும் அநேக பெண்பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனால் பள்ளிக்கூடத்திற்குப் போகாத ஆயிரக்கணக்கான பெண்கள் இன்னும் உண்டு. இவ்வருஷத்தில் அவர்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி மூன்றும் வகுப்பு வரைக்குமாவது படிக்கும்படி செய்வோம். நம்முடைய பள்ளிக்கூடங்களில் அதிக பெண்பிள்ளைகள் படிக்கும்படி பிரயாசப்படுவோம்.

2. கொக்கிப்புழு விஷயமாய் உழைக்கும் வைத்தியர்கள் சில வருஷங்களாக நமது நாட்டில் வேலைசெய்துவருகிறார்கள். கிராமத்தா

ரும் ஒத்துழைத்தால் இன்னும் அநேக கிராமங்களில் அப்படிப்பட்ட கக்கூசுகள் கட்டித் தர ஆயத்தமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கக்கூசுகளை உபயோகிப்பதினால் கொக்கிப்புழு நோய்மட்டுமல்ல வயிற்றுக்கடுப்பு, விஷபேதி இன்னும் மற்ற வியாதிகளையும் போக்குவதற்கு வழியாகும். வியாதி நீங்கும்போது சுகமும், செல்வமும் வரும். நாம் இப்படிப்பட்ட கக்கூசுகள் கட்ட இடம் தருவோமாக.

3. சர்க்கார் பொலி காளை வாங்கி வளர்த்து வருகிறவர்களுக்கு வருஷத்திற்கு ரூபாய் 100 மாட்டுத் தீவனச் செலவுக்காகத் தருவார்கள். அநேக தேவமார் இப்படிச்செய்ய ஆயத்தப்பட்டு வருகிறார்கள். கள்ளர்நாட்டில் இப்படிப்பட்ட 20 காங்கயம் மாடுகள் முக்கியமான இடங்களில் இருந்தால் நல்லது. இப்படிப்பட்ட நல்ல காளைகளையே பலுகுவதற்கு உபயோகப்படுத்தவேண்டும். இப்படிச் செய்வோமானால் 10 வருஷத்தில் நமது நாட்டிலுள்ள கால்நடைகள் அதிக விருத்தியடைந்திருக்கும். நல்ல பொலிகாளைகளை வளர்த்துவருவோமாக.

4. ரூபாய் 500 முதல் ரூபாய் 700 வரை விவசாய காரியங்களுக்குத் தண்ணீர் இறைக்கக்கூடிய இன்ஜின், குழாய் முதலியவைகள் வாங்கலாம். நமது நாட்டில் இப்படிப்பட்ட சில இன்ஜின்களும் இருக்கும்படியாகப்பார்க்க வேண்டும். இரண்டு கமலைகளுக்கு கோடை காலத்திலும் வற்றாத நல்ல கிணறுகள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கிணறு இருந்தால் அறுப்புக்கு 15 நாட்களுக்குமுன் தண்ணீர் வற்றிப்போனாலும் 15 ஏக்கர் நிலத்தை என்ஜின் மூலமாய்த் தண்ணீர் இறைத்துக் காப்பாற்றலாம். கோடைகாலத்தில் 15 ஏக்கர் நிலத்தில் கேழ்வரகும் நடுவதற்குஉதவியாகும். இப்படிப்பட்ட இன்ஜின்களும் நமது நாட்டில் இருக்கவேண்டும்.

இப்புதுவருஷம் இதுவரை பார்த்திராத நன்மையும்பாக்கியமுமான வருஷமாயிருப்பதாக.

R. A. டட்லி துரை.

## சங்கை L. L. லார்பீர் துரையவர்கள் அனுப்பும் புதுவருஷ செய்தி.

1930 வருஷம் பிரமலை நாட்டிலுள்ள சகலத்தாருக்கும் பாக்கியமும் சந்தோஷமும் நிறைந்த வருஷமாயிருப்பதாக. சந்தோஷம், நன்மைசெய்வதின்பலனாக வருவது. அநேக ராஜாக்கள் துக்கமாயிருப்பதற்குக் காரணம் மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தங்களையே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அநேக கூலி ஜனங்கள், நிலமில்லாமலும், ஒழுங்கான வேலையற்றிருந்தாலும் சந்தோஷமாயிருப்பதற்குக் காரணம் மற்றவர்களுக்கு உதவி செய்வதினால். பொய் சொல்லுகிற, திருடுகிற மனிதன் தான் கண்டுபிடிக்கப்படுவேன் என்ற பயத்தோடிருக்கிறான். அவன் சந்தோஷமாயிருக்கமுடியாது. யோக்கியமும் உண்மையுமுள்ள மனிதன் தான் பயப்படாதிருப்பான். ஏனென்றால், அவன் மனச்சாட்சி அவனை வாதிக்கிறதில்லை. ஆனால் நன்மை செய்வதற்கு நம்மைத் தூண்டும் ஒரு சக்தி அவசியம். அந்த சக்தி அல்லது வல்லமை பக்தி கடவுள்பேரில் காட்டும் அன்பு. அது நமது இருதயத்தில் குடிகொண்டிருக்கவேண்டும். ஒரு ரயில் இஞ்ஜின் இல்லாமல் ஓடாது. நமக்குள் கடவுளின் அன்பாகிய அந்த இஞ்ஜின் உள்ளிருந்து நெருக்கி ஏவாவிட்டால் நாம் நன்மைசெய்ய முடியாது. இந்த வல்லமையால் நாம் ஒவ்வொருவரும் 1930-ம் வருஷம் ஒவ்வொரு நாளிலும் ஏவப்பட்டு நம்மை சுற்றியிருக்கிறவர்களுக்கு நன்மைசெய்வதால் மெய்யான சந்தோஷத்தைப் பெற்று அனுபவிப்போமாக.

---

## பத்திராதிபர் குறிப்புகள்.

---

எனதன்பார்ந்த பிரமலை நேசர்களே! மறுபடியும் ஒரு வருஷத்தை முடித்து 1930-ம் வருஷத்தின் துவக்கத்தில் வர கடவுள் கிருபை செய்திருக்கிறார்.



20 JAN 193

எத்தனையோ பேர் இந்த வருஷத்தைக் காண ஆசைப்பட்டும் கூடவில்லை. இன்னும் கடவுள் நமதுமேல் பொறுமையுள்ளவராக இந்த வருஷத்திலாவது நாம் நல்லவர்களாகி கடவுளுக்குப் பிரியமுள்ளவர்களாக ஜீவிக்க இன்னுமொரு வருஷம் தவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருஷத்தில் நாம் செய்யாது விட்ட கடமைகள் எத்தனையோ உண்டு. மனிதருக்கும், கடவுளுக்கும் வருத்தமுண்டாக்கத்தக்கதாக நடந்த சமயங்களுண்டு. இப்புது வருஷம் புதுக்காரியங்களைச் செய்யக்கூடிய வருஷமாயிருப்பதாக. எத்தனையோ நற்சிலாக்கியங்களைப் பெற்ற நாம் அவைகளை நல்ல வழியில் உபயோகிக்கப் பழகுவோமாக. முன்னேற வேண்டும், வளரவேண்டும் என்ற வாஞ்சை நமது நாட்டார் எல்லாருக்குள்ளுமிருப்பது அவசியம். நமதுவளர்ச்சியைக் கவனித்துவருகிறவர்கள் எத்தனையோபேருண்டு. வளரவேண்டிய அளவு வளர்ந்திருக்கிறோமா என்பதை யோசிக்கவேண்டும். காருண்யகவர்ன்மெண்டாரும் அவர்களுடைய முகாமைக்காரரும் எவ்வளவோ பிரயாசம் எடுத்திருக்கிறார்கள். அத்துடன் நமது மிஷனெரி துரைமார்களும் பலவிதங்களில் நமக்கு உதவிபுரிந்து பல ஆலோசனைகள் சொல்லிவருகிறார்கள். இவைகளை நமது சொந்த ஜீவியத்தில் கைக்கொள்ள முயலுவோம்.

போனவருஷத்தில் பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பும் விஷயமாய் கனம் ரூப்பிரண்டு துரையவர்கள், காரியஸ்தர்கள் அதிகமாய்ப் பிரயாசப்பட்டதையறிந்து அவர்களை வாழ்த்துகிறோம். இவ்வருஷத்தில் இன்னும் அதிகமான உதவி கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

நமது பத்திரிகைக்குப் பிரயோஜனமான விஷயங்களை அடிக்கடி யோசித்து எழுதும் நண்பர்கள் அவசியம் தங்கள் கிராமங்களில் தாங்கள் செய்துவரும் சீர்திருத்த விஷயங்களை எழுதியனுப்பினால் மற்ற கிராமத்தாருக்குப் பிரயோஜனமாயிருக்கும்.

கிராமத்திலிருக்கிற மற்ற ஜனங்களும் பஞ்சாயத்தாரும் பத்திரிகையைப் படிக்கும்படிக்கான முயற்சிகளை உபாத்திமார்கள் எடுத்தால் அதிகப்பிரயோஜனமாயிருக்கும்.

கடந்த வருஷத்தில் நமது பத்திரிகைக்கு விஷயதானம் புரிந்த பல நண்பர்களுக்கும், பத்திரிகை முன்னேற்றத்திற்காக பலமான கவலையெடுத்து உதவிபுரிந்துவரும் மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் K. P. ஜனார்த்தன் ராவ் ரூப்பிரண்டு துரையவர்களுக்கும், பத்திரிகையின் மானேஜரவர்களுக்கும், பத்திரிகையின் வாழ்வை விரும்பி உழைத்துவரும் மற்றெல்லா நண்பர்களுக்கும் இப்பத்திரிகையின் மூலமாய் நன்றி கூறுகிறோம்.

இப்புதுவருஷம் சகல விஷயத்திலும் நமக்கு பாக்கிய வருஷமாயிருப்பதாக. இம்மாதப் பத்திரிகையில் மகா-ள-ள-ஸ்ரீ ரூப்பிரண்டு துரையவர்களும், சங்கை லார்பியர் துரையவர்களும், சங்கை டட்லி துரையவர்களும் எழுதியுள்ள புதுவருஷ செய்திகளை கவனத்தோடு வாசித்து அதின்படி நமது கிராமத்தார் நடக்கத்தக்க முயற்சியெடுக்கப் பிரயாசப்படுவோமாக.

உங்களெல்லாருக்கும் புதுவருஷ வாழ்த்துதல்.

---

## RURAL SANITATION CAMPAIGN.

### கிராம சுகாதார பிரோ.

### பாடசாலைகளில் வாசிக்கும் மாணவர்களுக்கு நேரிடும் அபாயங்கள்.

உங்களுடைய குழந்தைகள் யாராவது பாடசாலைகளில் வாசித்துவருகிறார்களா? அப்படியானால், அவர்கள் பலத்தை நாளடைவில் குறைத்து சுகத்தைக் கெடுத்து இறுதியில் வியாதிப்படுத்தும் சகல காரியங்களுக்கும் விலகியிருக்கிறார்களா என்று, யோசித்துப் பார்த்ததுண்டா?

அனுபோகத்தில் பார்க்குமிடத்து பாடசாலையில் படித்துவரும் குழந்தைகளில் 100-க்கு 75-க்கு மேல், கொக்கிப்புழு (Hook Worm) என்றழைக்கப்படும் புழுக்கள் அவர்கள் குடல்களில் இருப்பதாகத் தெரியவருகிறது. அப்புழுக்கள் அவர்கள் ரத்தத்தைக்குடிப்பதுமல்லாமல், அதைக் கெடுத்து பலத்தைப் போக்கி மற்ற வியாதிகளும் எளிதில் தாக்கும்படி செய்கிறது.

இப்புழுக்களினால் உண்டாகிற விஷம் அவர்களின் வளர்ச்சியைத் தடுத்து புத்தியைக் கெடுத்து பலத்தைக் குறைத்து கடைசியாக அவர்களுடைய வாழ்நாட்களையும் குறைத்துவிடுகிறது.

உங்கள் குழந்தைகள் இப்பேர்ப்பட்ட நோய்களுக்கு நீங்கி நல்ல சுகத்துடனும் பலத்துடனும் வளர்ந்துவரவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறதில்லையா? நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்து, திடகாத்திரர்களாய், உங்கள் கிழவயதில் உங்களை ஆதரிக்கவேண்டுமென்று, நீங்கள் ஆசைப்படுகிறதில்லையா? அவர்கள் சுகமாய் குழந்தைகளைப் பெற்று சந்தோஷமாக உலகில் வாழவேண்டுமென்று நீங்கள் கருதுகிறதில்லையா? அவர்கள் கல்வியில் தேர்ந்து நிபுணர்களாக வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறதில்லையா ?

இவ்வித ஆசைகளெல்லாம் உங்கள் குழந்தைகள் நோய்கொண்டிருந்தால் நீங்கள் எதிர்பார்க்கவே முடியாது. ஆகையால், முதலாவதாக அவர்களின் ரத்தத்தைக் குடித்து பலஹீனப்படுத்துகிற இந்தக் கொக்கிப்புழுவினின்றும் அவர்களைக் காப்பாற்றவேண்டும். இதை வைத்தியர்களால் வெகு சுலபமாக சிகிச்சை செய்யக்கூடும்.

ஆனால் சுகப்படுத்துகிறது மட்டும் போதாது. அப்புழுக்கள் மறுபடியும் அவர்களைப் பற்றிக்கொள்ளாதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

நீங்கள் மலஜலம் கழிக்க சரியான கக்கூஸ்கள் ஏற்படுத்துவதாயிருந்தால் இப்புழுக்கள் அணுகமாட்டா. ஏனென்றால் இப்புழுக்கள் மலத்திலேயே உற்பத்தியாகி மண்ணோடு கலந்து பரவிவருகிறது. கக்கூஸ்கள் கட்டி உபயோகப்படுத்தினால் இது பரவுவதற்கு வழியிருக்கமாட்டாது.

ஆகவே நகரங்களிலும், கிராமங்களிலும் சர்க்காரால் ஆமோதித்தபடி கக்கூஸ்களைக் கட்டி அவைகளையே மலஜலம் கழிக்க உபயோகித்து வரவேண்டியது மிகவும் அவசியம். இதைப் பொது ஜனங்கள் கவனித்துவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இன்னும் இதைப்பற்றி அதிக விஷயம் விரும்புவோர் மதுரை கிராம சுகாதார ஆபீசர் (Rural Sanitation Health Officer, No. 1, Maninagaram, Madura) அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

---

## குழந்தைகளின் நேசன்.

இப்பூவுலகில் சிறு பிள்ளைகளை அதிகமாய் நேசித்தவர் யார்? சிறு பிள்ளைகள் என்னிடத்திற்கு வருகிறதற்கு இடம் கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், பரலோக இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது, என்று புகன்றவர் யார்? உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கவந்த திரியேக பரம்பொருள் அல்லவா? ஆம் உண்மையிலும் உண்மை. தற்சமயம் சிறு பிள்ளைகளை அதிகமாய் நேசிக்கக்கூடியவர் யார்? ஆரம்ப ஆசிரியர்களாகிய நாமே. சிறுவர்களை ஏன் நேசிக்கவேண்டும்? அவர்களால் நமக்கு யாது பயன்? சிறிதன்றிப்பெரிதல்ல, குழந்தை அன்றி மனிதரல்ல, இப்பொழுது குழந்தைகளாய் இருக்கும் பாலியர்களே பின்னால் இந்திய தேசத்தின் வீரராவர். அவர்களே நம்மை ஆளும் அதிபதியாவர். அவர்களே கடவுளின் சிறந்ததொண்டராவர். அதுகாரணம் பற்றியே, பூலோக



ரக்ஷாபெருமான் அவர்களை அதிகமாய் நேசித்தார். அப்படிப்பட்ட பெரிய உத்தரவாதத்தை இப்போது உபாத்திமாராகிய நாம் வகித்திருக்கிறோம். அப்படியாயின் நாம் என்ன செய்யவேண்டும். காலை 8 மணி முதல் 11 மணி வரைக்கும், மாலை 2 மணி முதல் 5 மணி வரைக்கும் பாடசாலைக்கு வந்து மணி ஆகிவிட்டதா, பொழுது சாய்ந்துவிட்டதா என்ற கேள்விகளையே கேட்டுக்கொண்டிருந்து வீட்டிற்குப் போவதினால், நாம் குழந்தைகளின் நேசன் ஆகக்கூடுமா? ஒருக்காலும் முடியாது. கடவுள் நம்மை விசேஷித்த பிரகாரமாக இந்தத் தொழிலில் அமைத்திருப்பதின் நோக்கம் என்னவென்றால் நாம் கடைசிகாலத்தில் முக்தியடையும்படிக்கே. ஆகையால் காருண்ய கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் பாடங்களைக் கற்றுக்கொடுப்பதைப் பார்க்கிலும், விசேஷமாய் அவர்களின் பின் வாழ்வுக்குரிய தெய்வபக்தி, இராஜபக்தி, குருபக்தி, தேசபக்தி, பெரியோரிடத்தில் மரியாதை, நற்குணம் முதலிய நன்னடக்கையில் வளர்க்கவேண்டும். இப்படிப்பட்ட பழக்கவழக்கங்களில் பழக்கிக்கொண்டுபோனால் பாடங் கற்பிப்பது அசாத்தியமாகுமே என்று சிலர் நினைக்கலாம்; ஆனால் முற்றிலும் அதன்மூலம் பாடங்களுக்கு ஊனமுண்டாகாதபடி கவனித்துக்கொள்ளவேண்டும். சம்பளத்திற்கென்று உழைக்காமல் கடவுள் நம்மை உண்டுபண்ணின நோக்கம் இன்னதென்றும், நாம் எப்படிப்பட்ட தொழிலைக் கைப்பற்றியிருக்கிறோம் என்றும் நன்குணர்ந்து, கடைசிகாலத்தில் நாம் ஏற்ற கணக்கு ஒப்புவிக்கும்படியாக குழந்தைகளை நேசத்துடனும், ஒழுக்கத்துடனும் படிப்பிக்கவேண்டும். பிள்ளைகள் தாவரங்களுக்கு ஒப்பாயிருக்கின்றனர். எப்படியெனில் தாவரங்கள் முதலாவது ஆகாரங்களை சில ஏதுக்களின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளுகின்றன (get) பின்பு வளருகின்றன (grow) பின்பு கொடுக்கின்றன (give) அதுபோல நாம் கொடுக்கும் போதனையைப் பெற்றுக்கொண்டு அப்போதனையில் வளர்ந்து போதனையை பல நன்மையான விஷயங்களில் பலருக்கும் புகட்டக்கூடிய சக்தியுடையவர்களாய் இருக்கிறார்கள். "நல்ல மரம் நல்ல கனிகளைக்கொடுப்பது" போலவும், "கெட்ட மரம் கெட்ட கனிகளைக் கொடுப்பது" போலவும் எப்போதனையைக்கொடுக்கிறோமோ அதையே அவர்களும் திரும்பக்கொடுக்கிறார்கள். ஆக, குழந்தைகளின் உண்மையான நேசனாகவேண்டுமானால் அவர்களை சற்குணத்திலும், நற்குணத்திலும் வளர்க்கவேண்டும். அப்படியானால் பரலோக நன்மை நமக்கு நிச்சயமாய் உண்டு.

சுபம்! சுபம்!!

(தொடரும்).

P. V. Chinniah, Head master,
Kallar Boys School,
Thevaram.

---

## மை.

மை என்ற பதத்தை எடுத்துக்கொள்வோமானால் அதில் அநேகவிதமான மைகளுண்டு. அவைகளாவன:— அருமை, உரிமை, வறுமை, பெருமை, பொறுமை, ஒற்றுமை, நன்மை, தீமை, இம்மை, மறுமை எனப் பலவகைகளுண்டு. அவைகளில் பொறுமையைப்பற்றி மாத்திரம் நினைப்பூட்ட அவாவுள்ளவனாயிருக்கிறேன்.

இவ்வுலகத்தில் ஜனித்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தைகளும் பற்பல சுபாவமுடைத்தாயிருப்பது சகஜமே. அவ்விதமிருப்பினும் யார், யார் பொறுமை என்னும் மையைக் கடைப்பிடித்துக்கொள்ளுகிறார்களோ, அவர்கள் தரித்திரமான நிலைமையிலிருந்தாலும், அல்லது ஆணவமில்லாதவர்களென்று மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டபோதிலும் அவர்களுடைய பின்னான ஜீவியமானது மே

லான நிலைமையடையுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதுபற்றியே "பொறுத்தார் அரசாள்வார் பொங்கினர் காடேரைவர்" என்ற நீதிவாக்கியம் உரைக்கப்பட்டிருக்கிறது.

இம்மையில் சிலர் தங்களுக்கு நிகரில்லை என்ற ஆணவமுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்களில் சிலர் தங்களின் பலத்தைக்கொண்டும், சிலர் தங்களுக்கிருக்கும் ஆஸ்தியைக்கொண்டும் இப்படிப்பட்ட குணத்தை அடைந்திருக்கிறார்கள். வித்வான் என்று பெயர் வாய்ந்த கம்பரும் ஒருதினம் மாட்டுக்காரப் பையனால் ஏமாற்றப்பட்டார். அநேகம் நீதிகளைப்போதித்த ஒளவையாரும் ஒரு பையனால் ஏமாற்றப்பட்டாள். அதுபோல பிறத்தியாரை ஒருபொருட்டாக நினையாது தன் சுயபலத்தைக்கொண்டும், தன் ஆஸ்தியைக்கொண்டும் ஜீவிக்கும் மாந்தர்கள் பிறரால் வெட்கப்படவேண்டிய காலம் சம்பவிக்குமென்பதற்கு ஐயமில்லை.

மாயமான இவ்வுலகத்தில் ஒவ்வொருவரும் இன்பத்தையும், துன்பத்தையும் அடைவது சர்வசாதாரணமென்பதைச் சொல்லத்தேவையில்லை. ஒருவன் இன்பத்தின் ருசியை அறியவேண்டுமானல் துன்பசாகரத்தில் மூழ்கி அழுந்தினவனுக்கே இன்பத்தின் ருசி நன்ருய்த் தெரியவரும். துன்பத்தை அடைகிற ஒவ்வொருவரும் தங்களுக்கு வரும் கஷ்டநஷ்டங்களைப் பொறுமையோடு சகித்தல் வேண்டும். அப்படிச் சகித்துக்கொள்ளுகிறவர்கள் பொறுமையின் பலனை அடையாமலிருக்கமாட்டார்கள். நிற்க சிலருக்கு துன்பம் வந்தவுடன் ஆகா நம்மை ஏன் கடவுள் இவ்விதம் சோதிக்கிறார். பாழும்பயல் தெய்வத்துக்குக் கண்ணில்லையா? நம்மை நல்ல நிலைமையில் வைக்காமல் இப்படியெல்லாம் நமக்கு துன்பத்துக்கு மேல் துன்பம் வரும்படி செய்கிறது என்று பலவாராக வாய்க்கு வந்தபடியெல்லாம் உழறி முறுமுறுக்கிறதைக் கண்ணாரக் கண்டும், காதாரக்கேட்டுமிருக்கிறோம். இன்பத்தை அனுபவிக்கும்போது தெய்வம் எங்கிருக்கிறதென்றுகூட நினைக்கிறதில்லை. இன்பத்தை அனுபவிக்கும் மாந்தர்கள் துன்பத்தையும் அனுபவிக்கவேண்டியது அவசியமல்லவா? அப்படியிருக்க தெய்வத்தை நொந்து கொள்வதினலே வந்த துன்பம் விலகியோடிவிடுமா? இல்லை, இல்லை, இன்பத்தை அடையும் காலம் வருமளவும் திடமனதுடன் பொறுமையோடு சகித்தாலல்லவோ அதின் பலனை அதிசீக்கிரம் அடையலாம்.

யார் யார் தெய்வத்தினிடத்தில் நெருங்கி சகவாசம் செய்ய எண்ணி முயற்சிக்கிறார்களோ அவர்களுக்கே அடிக்கடி துன்பம் வருவது வழக்கம். அப்படி அவர்கள் துன்பத்தைச் சகித்து பின்வாங்காமல் தாங்கள் கொண்ட நோக்கத்தைச் சரிவர பொறுமையோடு நிறைவேற்றுகிறார்களோ அவர்கள் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் மேன்மையடைவார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

பாவிகளை ரக்ஷிக்கக்கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். பாவிகளாகிய நம்மை மீட்கும்படி வந்த அவர்தாமே அனுபவிக்கக்கூடாத துன்பத்தையெல்லாம் பொறுமையோடு அனுபவித்து நமக்கு முன்மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். ஆகையால் அவரைப் பின்பற்றியிருக்கும் ஒவ்வொருவரும் நமக்கு நல்வழி காட்டவந்த அவர் துன்பத்தை அனுபவித்ததுபோல நாம் அதைப்பார்க்கிலும் இரட்டத்தனையாய் துன்பத்தை அனுபவிக்கவேண்டியது அவசியம். அப்படி அனுபவித்தபோதிலும் பொறுமை இல்லாவிடில் பிரயோஜனமில்லை. பொறுமையோடு எல்லாம் தெய்வசித்தம் என்று கடவுளின்மேல் பாரத்தை வைத்து நம் இரக்ஷாபெருமானை முழு மனதோடும் பற்றிக்கொள்வோமாகில் இம்மையில் நற்கனி கொடுக்கிறது மாத்திரமல்ல, மறுமையிலும் கடவுளின் வலதுபாரிசம் வீற்றிருக்கத் தக்க சிலாக்கியத்தை அடைவோம்.

எவ்வித கஷ்டநஷ்டம் வந்தபோதிலும் பொறுமையோடு சகிக்கத்தக்க தைரியத்தைக் கொடுக்கும்படி கடவுள்தாமே கிருபை செய்வாராக.

M. S. டேவிட், ஹெட்மாஸ்டர்,
கள்ளர் ஸ்கூல்,
கோம்பை.